
AL 3005



எழும்பூர், சென்னை-600008.

# தமிழரசு




மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 11.9.89 அன்று தூத்துக்குடியில் சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. பொன்முடி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. கனகசபாபதி இ.ஆ.ப. ஆகியோரும் உடனிருக்கின்றனர்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 12.9.89 அன்று, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் பாளையங்கோட்டையில், பல்வேறு அரசுத் திட்டங்களைத் துவக்கி வைத்து, நலிந்தோர்க்கு அரசு நலத் திட்டங்களின் கீழ் உதவிகளை அளித்தார். விழாவில், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி, திரு. வை. கோபாலசாமி, எம்.பி., மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். இராசரெத்தினம் இ.ஆ.ப. ஆகியோரும் உடன் உள்ளனர்.




**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2020

சுக்ல ஆண்டு - புரட்டாசி - 15

மலர்:20 1-10-1989 இதழ்:7


## உத்தமர் காந்தியார் ஒருவருக்கேதான் உண்டு!

**நா**ட்டை மீட்க ஒரு ரணகளச் சூரரையும், நல்லாட்சி அமைக்கப் பல கலைவாணரையும், மக்களை நல்வழிப்படுத்த அறநெறி கூறுவோரையும் நாடியாக வேண்டும். எந்த நாட்டிலும் அனைவரும் ஏககாலத்தில் கிடைக்க மாட்டார்கள். ஒரு தலைமுறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான்; மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி நல்லாட்சி அமைப்பார்; பிறிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டுவார்.

உத்தமர் காந்தியாரின் உள்ளம், இந்த மூன்று பண்புகளையும் ஏககாலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத அளவில் கொண்டு இருந்தது. மூன்று தலைமுறைகள், மூன்று தனித்தனித் தலைவர்கள் கொள்ள வேண்டிய குணத்தை அவர் கொண்டிருந்தார். உலக வரலாற்றிலே இதற்கு வேறு ஈடு கிடையாது.

விடுதலை வாங்கித் தந்தவர்கள் உண்டு, போர்த் திறனால்; நல்லாட்சி நிறுவியவர்கள் உண்டு, அறிவின் மேம்பாட்டினால் மக்களை நல்லவர்களாக்கியவர்கள் உண்டு, தூய்மையினால். மூன்று அரும் பணிகளையும் ஒரு சேரச் செய்த ஒப்பற்ற சிறப்பு உத்தமர் காந்தியார் ஒருவருக்கேதான் உண்டு!

-பேரறிஞர் அண்ணா

## இந்த இதழில்...


காவல் துறையினர்க்கு விருது வழங்கும் விழா ... 2
வளம் பெறும் வடஆர்க்காடு மாவட்டம் ... 3
வட ஆர்க்காடு சம்புவராயர் மாவட்டம் ... 6
வெண்பாப் போட்டி ... 8
எளியோர் வாழ்வில் ஏற்றி வைத்த தீபம் ... 9
ஏழைகளை வாழவைக்கும் திட்டம் ...11
தமிழ்நாட்டில் மாதம் ஒரு தொழிற்சாலை ...13
சேலம் மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ...15
கன்னியாகுமரி மாவட்டத்தில் முதல்வர் கலைஞர் ...17
தீண்டாமை வேண்டாமே! (கவிதை) ...19
கல்வியே அழியாச் செல்வம் (இலக்கியவிருந்து) ...20
அந்திவேளை (சிறுகதை) ...24
கல்லில் கலைவண்ணம் ...30
இந்தியாவிலேயே முதலாவதாகத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் ...33
அறிஞர் அண்ணா பிறந்தநாளில் இலவச அரிசி வழங்கும் விழா ...37


## சாதிக் கொடுமைகள் வேண்டாம்!

தீண்டாமை என்பது நுட்பமான பல ரூபங்களில் நம்மைப் பிரித்து வைத்திருக்கிறது. அதனால் வாழ்க்கை இன்பமற்றதாயும், கஷ்டமுடையதாகவும் இருந்து வருகிறது. இந்த நிலை மாற நாமெல்லாம் பாடுபட்டாக வேண்டும்.

– காந்தியடிகள்

இந்தியாவில் பல்லாயிரக் கணக்கான சாதிகளும் மூடத்தனங்களும் இருந்து கொண்டிருக்கும் காலம் வரை, நாம் மற்ற நாடுகளின் முன்பாகத் தலை நிமிர்ந்து வாழ முடியாது; வெட்கித் தலை குனிந்து வாழும்படியான நிலைதான் இருக்கும். சாதியை அஸ்திவாரமாக வைத்துக் கொண்டு செய்யப்படுகிற எந்தக் காரியமும் உருப்படவே உருப்படாது; அதனால் அழிவே ஏற்படும்.

-டாக்டர் அம்பேத்கார்

மனிதனுக்கு மனிதன் சமம். ஒருவரையொருவர் சுரண்டக் கூடாது; ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும். ஒருவரையொருவர் வருத்தக் கூடாது. தீண்டாமை ஒழிய வேண்டுமானால் சாதி ஒழிய வேண்டும்.

-தந்தை பெரியார்

மனத்தில் மாசு, மதவெறி, சாதி ஆணவம், சுயநலம், இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும். அப்போதுதான் நம்நாடு முன்னேறும்.

-பேரறிஞர் அண்ணா

காலகாலமாக, கௌதம புத்தர் காலத்திலிருந்து மகாவீரர் காலத்திலிருந்து, அடுத்து உத்தமர் காந்தியடிகள், அம்பேத்கார், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், மற்றும் சமுதாயத்தினுடைய மாபெரும் தலைவர்களெல்லாம், 'ஒரு சாதி மக்கள் இன்னொரு சாதி மக்களைச் சகோதரர்களாகப் பாவித்து அமைதியை நிலை நாட்ட வேண்டும். அந்த உறவை நிலை நாட்ட வேண்டும்' என்று போதித்து வந்திருக்கிறார்கள்! அதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

-முதல்வர் கலைஞர்

12-1989

காவல் துறையினருக்கு

# விருதுகள் வழங்கும் விழா!



காவல் துறையில் சிறந்த சேவை செய்தோர்க்கும், தீரச்செயல் புரிந்தோர்க்கும் முதலமைச்சரின் விருதுகள் வழங்கும் விழா பேரறிஞர் அண்ணா அவர்களின் 81-வது பிறந்த நாளான 15-9-'89 அன்று சென்னை எழும்பூர்-இராஜரத்தினம் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு காவல் துறையினருக்கும், தீயணைப்புப் படையினருக்கும், சிறை மற்றும் ஊர்க்காவல் படையினருக்கும் 1987 மற்றும் 1989-ஆம் ஆண்டில் தீரச் செயல் புரிந்தவர்கள், சிறந்த சேவை செய்தோருக்கான விருதுகளை வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்.

முன்னதாக, காவல் துறையின் பாண்டு இசை முழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். பின்னர், தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு. பி.பி. ரங்கசாமி விழாவுக்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

"அண்ணா அவர்கள் போதித்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இந்த மூன்றும் காவல்துறைக்கு மிகவும் தேவையானவை என்ற அடிப்படையில், அண்ணா பிறந்த நாளில் காவல்துறையினருக்கு ஊக்கமும் ஆக்கமும் தரும் வகையில் அவர்களின் சிறப்பான, வீர, தியாக உணர்வோடு கூடிய சேவையைப் பாராட்டி கடந்த 1969-ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதன் முறையாக இந்த விருது வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்டது. தொடர்ந்து பல ஆண்டுகள் இந்த நிகழ்ச்சி நடைபெற்று வந்திருக்கிறது. இடையில் தொய்வு ஏற்பட்டு, 1987-ஆம் ஆண்டிற்கும் சேர்த்து, இந்த ஆண்டு விருதுகளை வழங்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

"இருபது ஆண்டுகளுக்கு முன், முதன் முதலாக போலீஸ் கமிஷன் ஏற்படுத்தப்பட்டு, அதன் பரிந்துரையை 90 விழுக்காடுக்கு மேல் அரசு ஏற்றது. மீண்டும் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போது திரு. சபாநாயகம் தலைமையில் போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது.

"இருபது ஆண்டுக்காலம் இடையிலே ஓடிவிட்டது என்றாலும், முதல் தடவையாக போலீஸ் கமிஷன் அமைத்ததும், நான். இரண்டாவது தடவையாக – அந்த கமிஷனுடைய பரிந்துரைகள் எப்படி நடைமுறைப்படுத்தப் படுகின்றன என்பதை ஆராய-இரண்டாவது கமிஷன் அமைக்கும் வாய்ப்பும் எனக்கே கிட்டியது என்பதில் நான் பெருமை அடைகிறேன்.

"சமீபத்தில், தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற காவல்துறை அதிகாரிகள் கூட்டத்தில் காவல் துறையின் பல்வேறு கோரிக்கைகளை என் முன் வைத்தார்கள். தற்போது, அமைக்கப்பட்டுள்ள போலீஸ் கமிஷன் அளிக்கும் பரிந்துரையின் அடிப்படையில், காவல் துறையினர் ஊக்கத்துடன் பணியாற்ற இந்த அரசு நிச்சயமாக உதவி செய்யும்."

"தமிழ்நாட்டில் கடந்த 1973-ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியில் பெண் காவலர் அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு இதற்குள் இன்னும் பெரிய அளவில் வளர்ந்திருக்க வேண்டும். எந்தக் காரணத்தினாலோ பெண் காவலரின் எண்ணிக்கை அதிகரிக்கவே இல்லை. இந்த எண்ணிக்கையை அதிகப் படுத்துகிற அளவுக்கு அரசும், காவல் துறை அதிகாரிகளும் சேர்ந்து செயல்படுவார்கள்."

"தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ, காவல் துறையினர் செயல்பட வேண்டும். கடமையில் உயிரை இழந்து தியாக தீபங்களாக விளங்கியவர்களையும், வீர, தீரச் செயல்களைப் புரிந்து பதக்கம் பெறுபவர்களையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன். அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

விருதுகள் வழங்கப்பட்ட பின், தேசியகீதத்துடன் விழா இனிது முடிவுற்றது.



# வளம்பெறும் வடஆர்க்காடு மாவட்டம்

நிர்வாக வசதிகளை முன்னிட்டு, தமிழகத்தில் பெரிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, புது மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

அந்த வரிசையில், தற்போது வட ஆர்க்காடு மாவட்டம் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் என்றும், வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் என்றும் இரு மாவட்டங்களாக மலர்கிறது.

வட ஆர்க்காடு மாவட்டம், பலவேறு துறைகளில் பாங்காய் வளர்ந்து வருகிறது. தொழில் வளர்ச்சி மற்றும் சமுதாய நலத் திட்டங்கள் முனைப்போடு செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

வட ஆர்க்காடு மாவட்டத்தைத் தொழில் மயமாக்கும் நோக்கில், 1979-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மாவட்டத் தொழில் மையம் வேலூர் நகரில் உருவாக்கப்பட்டது. இம் மையம் ஆரம்பித்த பின் சிறுதொழில்கள் எண்ணிக்கை 1,773-லிருந்து 9,403-ஆக உயர்ந்துள்ளது. 56,418 பேர்க்கு இம் மையம் வேலைவாய்ப்பு நல்கியுள்ளது.

மூங்கில் பொருட்கள் தயாரித்தல், ஜரிகை வேலைப்பாடு அமைந்த பட்டு நெசவு, கல் சிற்பத் தொழில், மரச் சிற்பங்கள் செய்தல் ஆகிய தொழில்களில் 4,927 கைவினைஞர்கள் பயன் பெற்றுள்ளனர். மட்பாண்டங்கள், கயிறு திரித்தல், தென்னை ஓலை முடைதல் ஆகிய குடிசைத் தொழில் சான்றுகள் 2,836 வழங்கப் பட்டுள்ளன. 23,289 கிராம மக்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1983 முதல் 1989 மார்ச் முடிய 9,508 நபர்கள் கடன் பெற்றுள்ளனர். இவ்வாண்டு 1,050 நபர்களுக்கு வங்கிக் கடன் வழங்கப் படும்.

இம்மாவட்டத்தில் பாரத கனரக மின்னியல் நிறுவனம், தமிழ்நாடு வெடி மருந்து தொழிற்சாலை, தென்னக இரயில்வே பொறியியல் தொழிற்சாலை, என்பீல்டு இன்டியா, வேலூர், ஆம்பூர் மற்றும் திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், அரியூர் கூட்டுறவு நூற்பாலை, இராஜேஸ்வரி மில்ஸ், திருமகள் மில்ஸ், இலட்சுமி



—மா. சத்தியமூர்த்தி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
வடஆர்க்காடு மாவட்டம்

சரஸ்வதி மில்ஸ், திருப்பத்தூர் தெற்குப்பட்டு கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சந்தன எண்ணெய் தயாரிக்கும் ஆலை போன்ற பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் 80 அளவில் உள்ளன. ஆம்பூர், வாணியம்பாடி, பேர்ணாம்பட்டு, உதயேந்திரம் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் தோல் மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் 516 தொழிற்சாலைகள் இந்திய நாட்டின் ஏற்றுமதியில் அறுபது சதவீதம் பங்கேற்று தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்க்கின்றன.

தமிழக அரசு செய்யாறு வட்டத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்றையும், வேலூர் வட்டத்தில் மின்சாரம் மற்றும் மின்னியல் தொழிற்பட்டறை ஒன்றையும் தொடங்கி, பணிகள் நடந்து வருகின்றன.

## 1989-90 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள்

### 1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்

சமுதாயத்தில் பெண்களின் நிலையை உயர்த்தவும், படிக்கின்ற ஆர்வத்தை ஊக்குவிக்கவும் கொண்டு வரப்பட்ட திட்டம்தான் இது. இதன்மூலம் 1,080 பெண்கள் பயனடைகின்றார்கள். இத்திட்டத்திற்காக ரூ.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்

18 வயதுக்கு மேற்பட்ட ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த கருவுற்ற பெண்கள் அனைவரும் இதன் மூலம் பயன் பெறுகிறார்கள்.

இத்திட்டம், அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் மற்றும், கிராமச் சுகாதாரச் செவிலியர் ஆகியோரின் ஒத்துழைப்புடன், மாவட்டச் சமூகநல அலுவலரால் செயற் படுத்தப்படுகிறது. 1989-90-ஆம் ஆண்டு இலக்கு ரூ. 36.00 இலட்சம்.

### இலவசத் தையல் இயந்திரம் வழங்குதல்

ஏழை மகளிர்க்கு இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் மூலம், 20 முதல் 40 வயதான விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட மகளிர், திருமணமாகாத ஆதரவற்ற பெண்கள் ஆகியோர் 76 நபர்கள் பயன்பெறுவர்.


### விதவைகள் திருமணம்

விதவைகள் மறுமணத் திட்டத்தின் மூலம் 18 முதல் 35 வயதுள்ள விதவைகளின் மறுமணத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ரூ.5,000 வீதம் தேசிய சேமிப்புப் பத்திரங்கள் மூன்று இணைகளுக்கு வழங்கப்படுகின்றன.

### விதவை மகள் திருமணம்

விதவையின் மகளுக்குத் திருமணம் செய்திட ரூ.1,000 நிதிஉதவி வழங்கப்படுகிறது. இதன்படி இம்மாவட்டத்தில் 76 நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

அனாதை ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு ரூ.1,000 வழங்கப்படவுள்ளது. 9 மற்றும் 10-ஆம் வகுப்பு +1 +2 பயின்று வரும் (விதவைகளின்) குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள்; 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை




பயிலும் 220 ஏழை மாணவ, மாணவியர்க்கு நோட்டுப் புத்தகங்களும் இலவசமாக வழங் கப்படுகின்றன.

**சத்துணவுத் திட்டம்**

ஒவ்வொரு ஆண்டும், தமிழ்நாடு அரசின் சத்துணவுத் திட்டத்தின்கீழ், ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயின்று வருகின்ற 6.5 இலட்சம் மாணவ, மாணவியருக்கு இலவசச் சீருடைகள் வழங்கப்படுகின்றன. 2,500 மகளிர், சீருடைகள் தைத்தல் மூலம் வருமானம் பெறுகின்றனர்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 14.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசால்' கான்கிரீட் தொகுப்பு வீடுகள் கட்ட கூடுதலாக ரூ.184.72 இலட்சமும், கடந்த ஆண்டு இறுதியில் தொகுப்பு வீடுகளுக்காக கூடுதல்நிதி ரூ.108.528 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள் ளன. 4,618 தொகுப்பு வீடுகளும், ஆதி திராவிட மக்களுக்கான ஜீவன்தாரா கிணறுகள் 180-ம் அமைக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் ரூ.598.458 இலட்சம் நிதி செலவு செய்யப்பட்டு, 37.429 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1989-90-ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத் தின் கீழ், 87.5 இலட்சம் ரூபாய் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட் டுள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள 18,318 குடும்பங்களை மேம்படுத்த, நடைமுறை ஆண்டு 1989-90-க்கான ஆண்டுத் திட்டம் ரூ.470-53 இலட்சத்தில் தயார் செய்யப் பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



கிராமப்புற இளைஞர்கள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வட்டாரத்திலும் 35 கிராமப்புற இளைஞர் களுக்குச் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி அளிப்பதற்காக, நடப்பு நிதி ஆண்டிற்கு ரூ.28.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டது. இதில் ரூ.8.93 இலட்சம் செலவு செய்யப்பட்டு, 780 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலேயே, இம்மாவட்டத்திற்குத் தான், அதிகப்படியாகப் பயனாளிகளுக்கு மானியத் தொகை வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வட ஆர்க்காடு மாவட்டம், மாவட்ட அளவில் பரவலான வேளாண் மைத் திட்டத்திற்குச் சிறப்பாகத் தேர்ந்தெடுக் கப்பட்ட ஒரே மாவட்டமாகும்.

சிறப்பு உணவுத் தானிய உற்பத்தித் திட்டம் 1.15 கோடி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம் மாவட் டத்திற்கென நடப்பு ஆண்டில் நிர்ணயம் செய்த 6.75 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி அடைவதற்கு, எக்டருக்கு 3 மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி என்ற குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 1988-89-ஆம் ஆண்டு எக்டருக்குச் சராசரி 2.885 மெட்ரிக் டன் அரிசி உற்பத்தித் திறன் கிடைக்கப் பெற்றது.


வடார்க்காடு மாவட்டத்தில் கிராமங் களில் உள்ள குடிநீர்க் கிணறுகளில் வறட்சி யால் நீர்மட்டம் குறைந்து கொண்டு வந்த தால், போர்க்கால அடிப்படையில் கிணறு களை ஆழப்படுத்த வேண்டிய நிலை ஏற் பட்டது.

உடனடியாக ஆழப்படுத்த வேண்டிய கிணறுகளை நிலநீர் இயலாளர்கள் ஆய்வு செய்து, 2,226 கிணறுகளுக்கு நில நீர் சான்று அளித்துள்ளனர். மேற்படி கிணறு களை ஆழப்படுத்த முன் அளவுகள் எடுக்கப் பட்டு, 2,083 கிணறுகளில் ஆழப்படுத்தும் வேலை ஆரம்பிக்கப்பட்டு இதுகாறும் 1,586 கிணறுகள் முடிக்கப்பட்டன.

பேரூராட்சிகளில் கிணறு ஆழப்படுத்தும் திட்டத்தின் கீழ் 81 குடிநீர்க் கிணறுகள் எடுக்கப்பட்டு, இதுவரை 80 கிணறுகள் ஆழப்படுத்தும் வேலை முடிக்கப்பட்டது. நகராட்சிகளில் உள்ள குடிநீர்க் கிணறுகளில் 57 குடிநீர்க் கிணறுகள் எடுக்கப்பட்டு,

இதுவரை 46 குடிநீர்க் கிணறுகள் ஆழப் படுத்தும் வேலை முடிக்கப்பட்டது.

1989-ஆம் ஆண்டு குடிநீர் வடிகால் வாரியத்தின் (Contingency Plan) திட்டத் தின் கீழ் 400 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, ரூ.73.50 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.



குடிநீர் ஆதாரமே இல்லாத குடியிருப்பு களில் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் திட் டத்தின் கீழ், 921 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு இதுவரை 406 ஆழ்துளைக் கிணறுகளுக்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, 376 ஆழ்துளைக் கிணறுகள் முடிக்கப்பட்டன.

ஊராட்சிகளில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளைச் சுத்தப்படுத்தும் திட்டத்தின் கீழ், 366 ஆழ்துளைக் கிணறுகள் எடுக்கப் பட்டு இதுவரை 343 ஆழ்துளைக்கிணறுகள் சுத்தம் செய்து முடிக்கப்பட்டன.

பேரூராட்சிகளில் 24 ஆழ்துளைக் கிணறுகள் ரூ.35,000 செலவில் சுத்தம் செய்து முடிக்கப்பட்டன. நகராட்சிகளில் ஆழ்துளைக் கிணறுகள் சுத்தப்படுத்தும் திட்டத்தின்கீழ் 46 ஆழ்துளைக் கிணறுகள் எடுக்கப்பட்டு இதுவரை 42 ஆழ்துளைக் கிணறுகள் ரூ.3.50 இலட்சம் செலவில் சுத்தம் செய்யப்பட்டன.

வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் புதிய கிணறுகளை அமைப்பதற்காக ரூ.6 இலட்சம் ஒதுக்கீடு வரப்பெற்றது. இத்திட்டத்தின் கீழ் 20 புதிய கிணறுகள் அமைக்கத் திட்டமிடப் பட்டு இதுவரை ரூ.37,250 செலவு செய்யப் பட்டது.

வடார்க்காடு மாவட்டத்தில் 6,867 கைப்பம்புகளும், 2,005 விசைப் பம்புகளும் உள்ளன. இதில் 45 கைப்பம்புகளும், 29 விசைப்பம்புகளும் பழுதடைந்துள்ளன. மற்ற 6,822 கைப்பம்புகளும், 1,976 விசைப் பம்புகளும் இயங்கி வருகின்றன.

அரசு பல நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்துச் செயலாற்றி வருகிறது. நலிந் தோர் குடும்பநல உதவித் திட்டம், விபத்து நிவாரணம், முதியோர் உதவித்தொகைத் திட்டம், சாலை விபத்து நிவாரணத் திட்டம் போன்றவை அவற்றுள் அடங்கும்.

இம்மாவட்டத்தில் 30.4.'89 முடிய 31,226 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை தலா ரூ. 35 - வீதம் வழங்கப் பட்டது. 1.5.'89 முதல் இத்தொகை விகிதத்தை ரூ. 50 - ஆக உயர்த்தியதுடன், நாளது தேதி வரை காத்திருப்போர் பட்டி யலில் உள்ள அனைத்து நபர்களுக்கும் உதவித் தொகை வழங்க ஆணையிடப்பட்டு உள்ளது. இத் திட்டத்தின் கீழ் 37,914 நபர்கள் பயன் பெறுகின்றனர். முன்பு கோட்டாட்சியரிடம் இருந்த அதிகாரம் பரவ லாக்கப்பட்டு, தனி வட்டாட்சியர்களுக்கும் இவ்வதிகாரத்தை வழங்கியுள்ளது. இதனால் வீண் கால தாமதம் தவிர்க்கப்படுவதுடன், உடனடியாக நிவாரணமும் மக்களைச் சென்றடைகிறது. மேலும் 5,212 நபர்கள் உடனடியாக உதவித் தொகை வழங்கப் பெறத் தகுதி பெற்றிருக்கிறார்கள்.

இம்மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப் பட்ட 915 கிராமங்களில் விவசாயிகளுக்கு நிலவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. செய்யார், வந்தவாசி, திரு வண்ணாமலை, ஆரணி ஆகிய வட்டங்களில் உள்ள 627 கிராமங்களில் கடும் வறட்சி ஏற்பட்டு, விவசாயிகள் சாகுபடி செய்யாமல் பெரும் அவதிக்குள்ளானார்கள். இந் நிலையை உணர்ந்த அரசு, இக்கிராம விவ சாயிகளுக்கு ரூ. 36,27,367/க்கு வரி விலக்களித்து உத்தரவிட்டுள்ளது.

வேலூர், ஆர்க்காடு, வாலாஜா, அரக்கோணம், செங்கம், போளூர் ஆகிய வட்டங்களில் பருவமழை தவறியதால், கிராமங்களில் விளைச்சல் பாதிப்பு ஏற்பட்டு ரூ. 10,09,397 அரசு தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

வீடற்ற நபர்களுக்கு மனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை நடப்பு நிதி ஆண்டில் 8,720 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று, நிலமற்ற விவசாயிகளுக்கு இதுவரை 522 நபர்களுக்கு 607 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஆதிதிராவிடர் பழங்குடியினர் விவ்சாயி களுக்கு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 45.00 லட்சம் செலவில் 180 பாசனக் கிணறு களுக்குப் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் வடஆர்க்காடு மாவட்டம், வளமும் வளர்ச்சியும் பெற்று வருகின்றது. ஏழை எளிய மக்கள் ஏற்றம் பெறவும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் அரசு பல உதவிகளை வழங்கி வருகிறது. அதன் மூலம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் தொடர் கின்றன, மக்கள் நலவாழ்வுத், திட்டங்களும் செவ்வனே நடைபெறுகின்றன.

# திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்



-பெ. கோலப்பன் இ.ஆ.ப.,
தனி அலுவலர்,
திருவண்ணாமலை-
சம்புவராயர் மாவட்டம்

நிர்வாக வசதிகளை முன்னிட்டுத் தமிழகத்தில் பெரிய மாவட்டங்கள் சிறிய மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுப் புது மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் என்றும், வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் என்றும் இரு மாவட்டங்களாக மலர்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் 30.9.89 அன்று இந்த மாவட்டங்கள் துவக்கி வைக்கப்படுகின்றன. பழம் பெருமை வாய்ந்ததும், சரித்திரப் புகழ் பெற்றதும், சைவ நாயன்மார்களால் பாடப்பெற்ற "நினைத்தாலே முக்தி தரும்" பஞ்ச பூதத் தலங்களில் ஜோதீர்ஸ்தலமாய்ப் புகழ் பெற்றதுமான திருவண்ணாமலை நகரைத் தலைநகராகக் கொண்டது "திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்".

பல்லவ மரபு வழித் தோன்றல்களான சம்புவராயர்கள் பல்வேறு கால கட்டங்களில் சோழ சிற்றரசர்களாகவும், ஒரு கால கட்டத்தில் "படைவீட்டைத்" தலைநகராக்க் கொண்ட சுதந்திர மன்னர்களாகவும், செங்கோலோச்சியுள்ளனர். இக்குல மன்னர்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தின் பல பகுதிகளைச் சிறப்புற அதிகாரம் செலுத்தி அரசாட்சி செய்துள்ளனர். பெரும்பாலும் இவர்கள் சோழப் பேரரசர்களின் பெயர்களைத் தங்கள் பெயர் முன்பு வைத்துக் கொண்டுள்ளனர். இவர்கள் சோழ மன்னர்களின் புகழ்மிக்க படைத்தலைவர்களாகவும், நெருங்கிய உறவுமுறை கொண்டவர்களாகவும் இருந்தனர். இவர்கள் திருநல்லம், பிரமதேசம், முள்ளூர், அச்சிறுபாக்கம், திருவங்கரை, மேல்சோளூர், எண்ணாயிரம், சீயமங்கலம், திருவோத்தூர், மடம், மதுராந்தகம், திருவண்ணாமலை, பழுவூர், பொய்கை (விரிஞ்சிபுரம்) முதலிய ஊர்களில் உள்ள சிவன், திருமால் கோயில்களுக்கும், சிற்றாமூரிலுள்ள சமணக் கோயில்களுக்கும் மத பேதம் கருதாது சேவை செய்தவர்களாவர்.

இந்தப் புதிய மாவட்டத்தில், திருவண்ணாமலை, செங்கம், போளூர் தாலுக்காக்களைக் கொண்ட திருவண்ணாமலை, செய்யாறு, ஆரணி, வந்தவாசி தாலுக்காக்களைக் கொண்ட செய்யாறு ஆகிய வருவாய்க் கோட்டங்கள் இருக்கும். மேற்சொன்ன ஆறு தாலுக்காக்களும் தொழில் துறையில் மிகவும் பிற்பட்டதென அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது. விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில சொற்பத் தொழிற்சாலைகளைக் கொண்ட இப்புதிய மாவட்டத்தில் பல புதிய தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்படும்.

வேளாண்மையையே தொழிலாகக் கொண்ட மக்கள் வசிக்கும் இப்புதிய மாவட்டத்தில், விவசாயிகளுக்காகப் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களைத் துரிதமாய்ச் செயல்படுத்த ஆவன செய்யப்படும். கல்வித் துறையிலும், இம்மாவட்டம் பின் தங்கிய நிலையில் உள்ளது. அரசு கலைக்கல்லூரிகள் இரண்டைத் தவிர குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனங்கள் இம்மாவட்டத்தில் இல்லை. தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையான "பிராட்கேஜ்" இருப்புப் பாதையும் இம்மாவட்டத்தில் இல்லை. செய்யாறு, வந்தவாசி, செங்கம் தாலுக்காக்களில் இருப்புப் பாதை வசதியில்லை. பலவகைகளில் வளர்ச்சி குன்றிய இப்பகுதியை வளப்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக முடுக்கி விட முயற்சிகள் மேற்கொள்ள இம்மாவட்டப் பிரிவவினை உறுதுணையாய் அமையும். ஏற்கெனவே சிறப்பு அடைந்துள்ள ஆரணி பட்டு நெசவு, வந்தவாசி பாய்முடைவு, மற்றும் கீழ்க்கொடுங்காளூர், நெடுங்குணம் கைத்தறி நெசவு முதலிய கிராமக் கைத்தொழில்கள் மேலும் சிறப்படைய ஆவன செய்யப்படும்.

"காரிருளை நீக்கி ஒளிதரும் கதிரவன்" போல் தொழில் துறையில் தீப ஒளியேற்றி அனைவருக்கும் வெளிச்சம் கிடைக்க ஆவன அரசு செய்யும் என்ற நம்பிக்கையை நம் மனதில் ஏற்படுத்துவோம். புதைந்து கிடைக்கும் வளங்களைத் தோண்டியெடுத்து இப்பகுதி மக்கள் புத்துயிர் பெறப் புதிய பாதையில் இறங்குவோம். "ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்" என்ற பாரதியார் பாடலுக்கேற்பக் கரும்பு ஆலைகள் அமைப்போம்; அதனின்று வரும் சக்கையைப் பயன்படுத்திக் காகித ஆலை செய்ய முனைவோம். மலை வாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டங்களை மேலும் மேம்படுத்தி, அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் மேலும் மேம்பட அனைத்து உதவிகளும் செய்ய அரசு முன்வரும்.

மக்களுக்கு அனைத்து வகையிலும் சிறப்பாகப் பணியாற்ற மாவட்ட நிர்வாகத்திற்கு அனைத்துப் பிரிவு மக்களும் மதம், மொழி, அரசியல் வேறுபாடின்றி ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக் கொள்கிறேன். ஆன்மிகத் துறையில் "குன்றின் மேலிட்ட, விளக்காகத்" திகழும் இம்மாவட்டம் வளர்ச்சித் துறையிலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. உதயமாகும் புதிய மாவட்ட மக்களுக்கு எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.





## திருச்சி மாவட்டத்தில் ரூ. 30 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்

திருச்சி மாவட்டத்தில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 7.9.89 அன்று குமுழூரில் அமையவிருக்கும் வேளாண்மைக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார். சுமார் 30 கோடி ரூபாய் மதிப்பிற்கு 8 இலட்சம் பேர் பயன் பெறும் வண்ணம் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.


மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தமது பேருரையில் "திருச்சி மாவட்டத்தில் செயற்கை வைரத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் 30 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் ஏற்றம் பெறும் வண்ணம் சமயபுரம் அருகே உள்ள இருங்களூரில் 200 ஏக்கர் நிலத்தில் செயற்கை வைரத் தொழிற் பயிற்சி மையம் ஒன்று துவங்கப்படும்" என்று குறிப்பிட்டார்.

விழாவில் சமூக நலத்துறையின் மூலம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 385 பேருக்குத் தலா ரூ.5,000 வீதம் ரூ.19.25 இலட்சமும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு இலவச நிதியுதவித் திட்டத்தின் கீழ் 106 பேருக்கு ரூ.212 இலட்சமும், ஆதரவற்ற விதவை நிதியுதவித் திட்டத்தின் கீழ் 100 பேருக்கு ரூ.1 இலட்சமும், 16 பேருக்கு 24 ஆயிரம் ரூபாய் செலவில் இலவச மூன்று சக்கர வண்டிகளும், 91 பேருக்கு 91 ஆயிரம் ரூபாய் செலவில் இலவசத் தையல் இயந்திரங்களும், 199 ஊனமுற்றோர்க்கு ரூ.1.99 இலட்சம் செலவில் இலவசக் காலிப்பர்களும், 1,287 பேருக்குக் கண்ணொளி வழங்கப்பட்டு, இலவச மூக்குக் கண்ணாடிகளும், வருவாய்த்துறையின் மூலம் முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 5,500 பேருக்கு உதவித் தொகையும், 12,615 பேருக்கு மனைப்பட்டாக்களும், 2,844 பேருக்கு வீட்டு மனைப்பட்டாக்களும், ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் 16 கலப்புத் திருமணத் தம்பதியர்களுக்குப் பரிசுகளும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நலிந்தோர்க்கு மான்யத்துடன் கூடிய கடன்களும் வழங்கப்பட்டன.

இந்த அரசு விழாவிற்கு மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் தலைமையேற்றார். மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு. துரைசாமி, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் டாக்டர் கே. சந்திரசேகரன், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு ஆகியோரும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

முன்னதாக விழாவிற்கு வந்திருந்தவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம்.எச். ஜலால் வரவேற்றார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ஆ.சு. சீவரத்தினம் நன்றி கூறினார்.

தகவல்: சி.பி. இராமநாதன்.
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சி



நாமெல்லாம் அண்ணன் தம்பிகள்தான். ஆண்டவன் படைப்பில் எந்தவிதமான சாதி வித்தியாசமும் இல்லை. அந்த சாதி வித்தியாசங்கள் கல்வித் துறையிலே, வேலை வாய்ப்பிலே இட ஒதுக்கீடு பெறுவதற்குப் பயன்பட வேண்டுமேயல்லாமல் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்வதற்குப் பயன்படக் கூடாது.

-முதல்வர் கலைஞர்

# வெண்பாப் போட்டி

## 3. அண்ணாவே சொன்னார் அறிந்து

''நெசவாளர் துன்பத்தை நேசமுடன் தீர்க்க
வசமுடனே கைத்தறி வாங்கி- வசையொழிப்பீர்
துன்பும் குறைத்திடுவீர்; தோற்றோடும் பஞ்ச''மென
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-த. புஷ்பலதா, சென்னை-21.

''கோடிபொருள் கொட்டுகின்றீர் கோயில் குளமெனில்!
வாடிமனம் நொந்தவர்கள் வந்துநின்றால்- சாடுகின்றீர்
எண்ணுவீர்! ஏழை சிரிப்பில் இறைவனுள்ளான்''
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-கவிஞர் கனகமணியன், கரூர்

''முத்தமிழ் நாட்டினில் மும்மொழித் திட்டமா?
குத்தாதோ முள்ளாய்க் குலைதனில்? - நித்தமும்
வண்ணத் தமிழ்பேணின் வாழும் தமிழ்ச்சாதி''
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-க. மாரியம்மாள், முதலிபட்டி.

அபேட்சகர் யாரென அன்போடு கேட்கவே
வேட்பாளர் நாளென்று தம்பிதான்- செப்பிய
வண்ணத் தமிழ்அமுதை மெல்லப் புகுத்தவே
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-ச. திருப்பதி, தைலாபுரம்.

ஆண்டான் அடிமை அறமில்லாப் பொய்வாழ்வு
தீண்டான் இவனென்னும் தீநலிய - பெண்மயிலே
கண்டேன் இறையவனை ஏழை சிரிப்பிலென
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-புலவர் கு. அருணாசலம், சங்கீதமங்கலம்

எதையுந்தான் தாங்கிடும் எண்ணந்தான் வேண்டும்;
அதையும் அழகாக அந்நாள்-விதைத்தாரே
எண்ணத்தில்; தன்வாழ்வில் எப்பொழுதும் கொண்டுணர்ந்து
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-புலவர் சேது. கோவிந்தசாமி, திருவொற்றியூர்

''பதவியெலாம் மக்களுக்குப் பண்புடனே சேவை
உதவிடவே வந்த உயர்ச்சி-நிதிதேடிக்
கண்ணியத்தைக் கொல்லும் கயமைதான் கூடா தென்(று)''
அண்ணாவே சொன்னார் அறிந்து!

-சிவ. கிருஷ்ணன், கணியூர்

''நெஞ்சில் வலுவிருந்தால் நீடு புகழ்வெற்றி
தஞ்ச மெனவந்து நம்மைக் - கொஞ்சு''மென
எண்ணத் தெழுத்தாலே யெம்முன்னர் வாழ்ந்துயர்ந்த
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-சொ. சேதுபதி, கிருங்காக்கோட்டை

கம்பனைப் போல்கவிஞர்; கன்னித் தமிழ்போல
அம்புவியில் வேறுமொழி; அண்ணாபோல் - தம்பிகளை
எந்நாளும் போற்றியவர் இல்லையென் றென்பெரிய
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-பழையூர் மு. கோபால்

''வாழுமெதிர் மாற்றானின் மல்லிகைக்கும் வாசமுண்டு;
ஏழை சிரிப்பில் இறைவனுண்டு - தோழமைசேர்
உண்மை உழைப்பால் உயர்வே;'' உணர்கவென்று
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-புலவர் கோம்பைச்சீரான், கருளிப்பட்டி

''மாற்றானின் தோட்டத்து மல்லிகைக்கும் வாசமுண்டு;
தூற்றாதே மாற்றாரை; தொண்டுசெய்வாய் - வேற்றுமை
எண்ணாதே; வெம்பகையும் ஓடி மறைவு''மென
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-பொ. செல்வத்துரை, கடையாலுருட்டி

''நன்மையே செய்யுங்கள் நாடாது துன்பங்கள்;
அன்பே விதைத்திட ஆக்கமுறும் - மண்ணுலகில்
உண்மை ஒருநாளும் ஓயாது! நம்புங்கள்''
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-எஸ்.ஆர். சின்னமணி, கடையாலுருட்டி

''மன்னுயிர் காப்பவர்; மாண்புறு கொள்கைக்கு
இன்னுயிரும் ஈபவர் எம்தம்பி - என்றென்றும்
வண்டமிழின் காப்பாளர் வண்கலைஞர்'' என்றேதான்
அண்ணாவே சொன்னார் அறிந்து''

-புலவர் எஸ். வரதராசன், கல்லணை

தாழ்ந்த தமிழகம் தான்நிமிர்ந்து ஏற்றமுற
வீழ்ந்த புகழனைத்தும் மீண்டுவர - சூழ்ந்தபகை
மண்ணாகும், நம்ஆட்சி மாட்சியுறும்'' என் றறிஞர்
அண்ணாவே சொன்னார் அறிந்து.

—கொட்டப்பட்டு ப. சக்திவேலன்

நாணயம் நம்பிக்கை நீதிதன் மானமுடன்
காணும் மதபேதம் காணாது - ஆணொடு
பெண்ணும் புவியிதனில் பெற்றியுடன் வாழ்கவென்(று)
அண்ணாவே சொன்னார் அறிந்து!

—கவிஞர். மு. முத்துக்கிருட்டிணன், கொங்கணாபுரம்.

(மீதி அடுத்த இதழில் வெளிவரும்)



திருமண உதவித் திட்டம்

# எளியோர் வாழ்வில் ஏற்றி வைத்த தீபம்

அந்தத் தாயோ வறுமையில் உழன்று தவித்துக் கொண்டிருந்தாள்.

தன்னுடைய அருமை மகளுக்குத் திருமணம் செய்து வைக்க வழி இல்லையே என ஏங்கிக் கொண்டிருந்தாள்.

அவளது கண்ணீரைத் துடைக்க வந்தது ஒரு உதவிக் கரம்.

அதுதான் - மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி அறிவிக்கப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்.

குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பும் அதற்கு மேலும் படித்த 18 வயது நிறைவேறிய ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களின் திருமணச் செலவுக்கு, ரூ.5,000 நிதியுதவி வழங்குவது தான் இந்த அரிய திட்டமாகும். பழங்குடிப் பிரிவைச் சேர்ந்தவர்களாய் இருந்தால், ஐந்தாவது வகுப்புத் தேறி இருந்தால் போதுமானது.

அந்த வகையில் அரசின் உதவி பெற்று, தம் அருமை மகளின் திருமணத்தை முடித்து, ஆனந்தக் கண்ணீர் வடித்த ஒரு ஏழைத் தாயின் மகளைச் சந்திக்கிறோம்.

அவர்தான் பெரியார் மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வி. மேட்டுப் பாளையத்தில் வசிக்கும் திருமதி இளையம்மாளின் மகள் பாப்பாத்தி குமாரசாமி. அவர் கூறுகிறார்:

''அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டத்தின் மூலமா எங்களுக்கு ஐயாயிரம் ரூபா உதவி கெடச்சுது. அதைக் கொண்டு என் தாய் எனக்கு நகை மற்றும் பாத்திரங்கள் எல்லாம் வாங்கிக் கொடுத்து என்னோட கல்யாணத்தை நல்லபடியா நடத்தி வைச்சாங்க. 'பொண்ணோட திருமணத்தை எப்படிச் செய்யறது'ன்னு ஏங்கிக்கிட்டு இருக்கிற ஏழைத்தாய்மார்களின் வயிற்றில் பாலை வார்க்கிற திட்டம்தான் இது என்பதிலே சந்தேகமே இல்லை.''

இவர், பத்தாவது வரை படித்துள்ளார். இவரது கணவர் நெசவுத் தொழிலாளி. இவரது விதவைத் தாயான திருமதி இளையம்மாள், இந்தத் திட்டம் பற்றிக் கூறுகையில்-



திருமதி பாப்பாத்தி கணவருடன்

''என் கணவர் இறந்து போய் ஒன்பது வருஷமாச்சு. அவருக்குப் பிறகு வறுமையிலே வாழ்ந்து வந்தோம். எப்படியோ என் மகனையும், மகளையும் பத்தாவது வரை படிக்க வைச்சுட்டேன். இப்போ நான் சத்துணவு மையத்திலே ஆயாவா வேலை செய்து வர்றேன். ஏழைக் குடும்பங்களுக்கு நம்ம முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திருமண உதவி நிதித் திட்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்டேன். இதன் மூலமா நான் ஐயாயிரம் ரூபா உதவி பெற்று எம் பொண்ணோட கல்யாணத்தை நல்லபடியா நடத்திட்டேன்.

''என்னைப் போல விதவைத் தாய்மார்கள், தன் மகளுக்குத் திருமணம் செய்யறது கஷ்டமான நிலையிலே இருக்கிற இந்தக் காலத்திலே, இது போன்ற ஒரு நல்ல திட்டத்தை, ஏழை ஜனங்கள் பயன் பெறுகிற அரிய திட்டத்தைக் கொண்டு வந்த இந்த அரசுக்கு நாங்க என்றென்றும் நன்றியோட இருப்போம்'' என்றார் மகிழ்ச்சியுடன்.

-எஸ். நாகராசன்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரியார் மாவட்டம்.

" மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால், தம் பிறந்த நாளையொட்டித் தொடங்கப்பெற்ற 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்' இன்று பட்டி தொட்டிகளிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு உதவிக்கரமாக விளங்கி வருகிறது. ஏழை இளம் பெண்களின் வாழ்வில் ஏற்றி வைக்கிற தீபமாய் விளங்கி வருகிற இந்தத் திட்டத்திற்கு, இன்று நல்ல ஆதரவும் மனப்பூர்வமான பாராட்டும் கிடைத்து வருகிறது. "

# ''ஏழை எளியவர்களுக்கு வரப்பிரசாதம்''

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம், குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம் எஸ். புதூரைச் சேர்ந்த திருமதி சாந்தகுமாரி தாய், தந்தை யற்றவர். 19 வயதான இவர் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளார். அவர் கூறுகிறார்-

''நான் மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். அம்மா, அப்பா இல்லாத என்னை என் சித்தப்பா ஆதரவு கொடுத்து 9-வது வரை படிக்க வைத்தார். எனக்குத் திருமணம், செப்டம்பர் ஏழாந்தேதி நிச்சயிக்கப்பட்டிருந்தது. பணத்துக்காக ரொம்பவும் கஷ்டப்பட்டோம். யார் யாரையோ கேட்டுப் பார்த்தோம். அந்தச் சமயத்திலே திருமணத்துக்கு உதவி செய்யறதா அரசாங்கம் செய்திருந்த விளம்பரத்தைப் பத்திரிகையிலே பார்த்தோம். பிறகு முக்கிய சேவிகா மூலம் ஊராட்சி ஒன்றியத்தை அணுகினோம். பணமும் கிடைத்தது. எங்கள் திருமணமும் சிறப்பாக நடந்தது.''

இவ்வாறு கூறிய இவர், இந்தத் திட்டம் ஏழை எளியவர்களுக்கு ஒரு வரப் பிரசாதம். இந்தத் திட்டத்தினால், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோர்கள், எப்பாடு பட்டாவது தம் பெண்களைக் குறைந்தது எட்டாவது வகுப்பு வரை நிச்சயம் படிக்க வைப்பார்கள், இல்லையா?'' என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

-எம். அண்ணாமலை,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்.



திருமதி சாந்தகுமாரி



திருமதி மணிமேகலை



திருமதி கலாராணி

# ''எங்களைக் கை தூக்கிவிட்டது அரசு''

சேலம் மாவட்டம், சேர்ந்த மங்கலம் ஊராட்சி ஒன்றியம், நஞ்சகவுண்டாபுரம் கிராமத்தைச் சார்ந்த மணிமேகலை என்பவர், பத்தாவது வரை படித்தவர். இவரது குடும்பம் கூலி வேலை செய்துதான் வாழ வேண்டியுள்ளது. இவரது தாயார் பெயர் திருமதி திருப்பதி. அவர் கூறுகிறார்-

''நான் மாதர் சங்கத்திலே அங்கத்தினராக இருக்கிறேன். கடந்த மூணு வருஷமா, என் மகளுக்குத் திருமண ஏற்பாடுகளைச் செய்து வந்தேன்! ஆனா, பணம் வசதி இல்லாம, அவளோட திருமணத்தைத் தள்ளிப் போட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த முக்கிய சேவிகா, எங்கள் மாதர் சங்கத்தில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம் பற்றிக் கூறினார். 'ஏழையாகிய நான் இந்த உதவியைப் பெற முடியுமா?' என்று யோசித்தேன். பிறகு முயற்சி செய்ததில்-தக்க சமயத்தில் திருமண உதவித் திட்டம் மூலம் எங்களைக் கைதூக்கிவிட்டது அரசு. பணமும் கிடைத்தது. இல்லாவிட்டால், வட்டிக்குக் கடன் வாங்கி ரொம்பவும் கஷ்டப்பட்டிருப்போம்.''






# ''நம்பிக்கை வீண் போகவில்லை!''

சேலம் மாவட்டம், டி. பெருமாள் பாளையத்தைச் சார்ந்தவர் கலாராணி. பள்ளி இறுதி வகுப்பு வரை படித்துள்ளார். இவரது தகப்பனார் பெயர் பெ. வேடியப்பன். விவசாயத் தொழிலாளி. இவர் தனது மகளுக்கு 20 வயதாகியும், போதிய நிதி வசதி இல்லாமல் கடந்த இரண்டு ஆண்டுகளாக மகள் திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தார். பிறகுதான் இவருக்கு காலம் கண் திறந்தது.

'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம் 'மூலம் ரூ. 5,000 கிடைத்தது. அதைக் கொண்டு, தம் மகளின் திருமணத்தைச் சிறப்பாக நடத்தினார்.

''நான் ஒரு ஏழை விவசாயி. தினம் பதினைந்து ரூபாய் கூலி வாங்குகிற நான் , எப்படி, ஐயாயிரம் ரூபாய்



சம்பாதிக்க முடியும்! அரசு தந்த இந்த உதவியை என்னால் மறக்கவே முடியாது'' என்கிறார் மகிழ்ச்சியுடன் இவர்.

திருமணம் செய்து கொண்ட திருமதி கலாராணி அவர்களை இத் திட்டம் பற்றிக் கேட்டபோது-

''எனது வாழ்வில் ஒளிவிளக் கேற்றிய முதல்வர் அவர்களை நாங்கள் என்றும் மறக்க மாட்டோம். இந்தத் திருமண உதவி எல்லாம் கிடைக்காது என்று எங்கள் நம்பிக்கையைக் குலைத்தார்கள். ஆனால் எங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. ஏழை எளியவர்களுக்கும் உதவி கிடைக்கும் என்பது எங்களைப் பொறுத்த வரையில் உண்மையாயிற்று. அரசாங்கத்தின் இந்த உதவியினால், என் பெற்றோர்கள் கண் கலங்காமல் என்னுடைய திருமணத்தை நடத்தி வைக்க முடிந்தது'' என்று பெருமிதத்துடன் கூறுகிறார்.

ஏழை எளிய மக்களின் வாழ்வில் வசந்தம் வீசிட, தமிழக அரசின் இது போன்ற சமுதாய நலத்திட்டங்கள் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

-வை. புண்ணியமூர்த்தி,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம் மாவட்டம்

## 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்'

# ஏழைகளை வாழ வைக்கும் திட்டம்

பின் தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில் நடந்தது இது. அரூர் அருகில் உள்ள கீழ்ச்செங்கப்பட்டி என்ற குக்கிராமத்தைச் சேர்ந்த கே. தமிழ்ச்செல்வி ஒருநாள் அருகாமையிலுள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்துக்குள் நுழைந்தபோது, அங்கிருந்த நோட்டீஸ் போர்டின் மீது அலட்சியமாக நோட்டம் விட்டாள்.

ஏழைப் பெண்களின் திருமணத்துக்காக ரூ.5,000 மானிய உதவி அளிக்கப்படும் என்ற அறிவிப்பை அதில் படித்தபோது, அவளடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

உடனே வீட்டிற்கு விரைந்தாள். அங்கே தன்னுடைய மகளின் திருமணம் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருந்த தகப்பனார் ஆர். கிருஷ்ணனிடம், இந்த மகிழ்ச்சிகரமான தகவல் பற்றி தெரிவித்தாள். வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளுமாறு தூண்டினாள்.

அப்புறமென்ன? தமிழ்ச்செல்வியின் திருமணம் ஆகஸ்டு 17-ந் தேதியன்று ஜாம்ஜாமென்று நடந்தேறியது.

பணம் இல்லாத காரணத்தினால் இரண்டாண்டுக் காலம் காத்திருந்து, கடைசியில் அரசின் மானிய உதவியால் கைகூடிய கல்யாணம் அது.

கோபிநாதம்பட்டியைச் சேர்ந்த ஆர். குப்பம்மாள் தனது மகள் புஷ்பராணியின் திருமணத்திற்காகப் பணம் சேர்க்கப்படாதபாடுபட்டு யாரையெல்லாமோ கெஞ்சிக் கேட்டுச் சலித்துப் போய்விட்டிருந்த நிலைமையில், அரசாங்க மானிய உதவி பற்றிய அறிவிப்பை ஒரு தமிழ்ப் பத்திரிகையின் மூலம் அறிந்தார்.

அவர் விண்ணப்பித்துக் கொண்டு, மானிய உதவி பெற்று செப்டம்பர் 4-ந் தேதி தமது மகளைத் திருமணம் செய்து கொடுத்தார். அவர், சென்ற வாரம் அரூரில் 'இந்து' நிருபரிடம் தமது அனுபவத்தை எடுத்துரைத்தபோது, அவரது முகத்தில்தான் எத்தகைய நிம்மதி! ''இது கடவுளாகப் பார்த்து அனுப்பிய உதவி, அய்யா''. என்று சொல்லி அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பார்கூர் அருகிலுள்ள அச்சமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த, 58 வயதான ராமச்சந்திரராவ், அங்கு கர்ணம் வேலை பார்த்து வந்தவர். முந்தைய அரசு, கிராம நிர்வாக முறையை ஒரேயடியாக மாற்றி அமைத்தபோது, கர்ணம் வேலையை இழந்தவர். குடும்பக்காலட்சேபம் நடத்துவதற்காக இப்போது பரிசுச் சீட்டுகள் விற்று பிழைப்பு நடத்தி வருகிறார்.

25 வயதை எட்டி, கழுத்தில் தாலி ஏறுவதற்காகக் காத்து நிற்கும் தமது மகள் பிரபாவதியின் திருமணத்தை நடத்துவதற்காக மூன்று, நான்கு தடவை முயற்சித்துப் பார்த்து, கைகூடாமல் போகவே, ராத்திரித் தூக்க

மின்றி நாட்களைக் கழித்து வந்தார். வரதட்சணைக் கோரிக்கைகள், கையில் பணமில்லாமை ஆகியவையே அவரது முயற்சிகளின் தோல்விக்கு முக்கிய காரணங்களாகும்.

"அரசாங்கத்தின் ரூ.5,000 மானிய உதவிக்காகத் தான் ஆவலுடன் எதிர்பார்த்திருந்ததை அவரது மனைவியார் ருக்மணி அம்மாள் கண்ணீர் உகுத்தபடி விவரித்தார். புது மணப்பெண்ணான பிரபாவதி, தள்ளுவண்டி தேநீர்க் கடை நடத்தி வருவதாகக் கூறினார்."

"தன் திருமணம் சம்பந்தமாக, குடும்பத்தில் நான்கு ஆண்டுக் காலமாக இருந்த வந்த கவலைக்கு முடிவு ஏற்பட்டது குறித்து, தமக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை உருக்கமாக விவரித்து விட்டு, இந்தத் திட்டம் ஏழைப் பெண்களுக்குக் கிடைத்துள்ள ஒரு வரப் பிரசாதம் என்றார்."

தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ள பல்வேறு சமூக நலத்திட்டங்களுள், மூவலூர் இராமாமிருத அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம், இந்த மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளிலும் மூலை முடுக்குகளிலும் கூட பரவலான பாராட்டுதலையும், பயன்பாட்டையும், பெற்றிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் எத்தனையோ உதாரணங்களில் இவை சில.

இந்தத் திட்டத்தின் கீழ் எட்டாவது வகுப்பு தேறி, 18 வயதைப் பூர்த்தி செய்துள்ள, குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.5,000க்கு மேற்படாமல் உள்ள பெண்களுக்கு ரூ.5,000 திருமண உதவி வழங்கப்படுகிறது. பழங்குடிப் பிரிவைச் சேர்ந்தவர்களாயிருந்தால் கல்வித் தகுதி 5-வது வகுப்புத் தேர்வுதான்.

கிருஷ்ணகிரியைச் சேர்ந்த சுமதிக்குச் சென்ற மாதந்தான் திருமணமாயிற்று. அவரது கணவர் பெட்டிக் கடை வைத்திருக்கிறார். "இந்தத் திருமண உதவித் திட்டம் வந்தபிறகு, இனி பெண்களை ஒரு சுமையாகவே கருத மாட்டார்கள். குறைந்தபட்சம் ஏழைக் குடும்பங்களிலாவது பெண்களை ஒரு சுமையாகக் கருத மாட்டார்கள்" என்று ஒரு ஆறுதல் பெருமூச்சுடன் தமது எண்ணத்தை வெளிப்படையாகவே கூறினார்.

இந்தத் திட்டத்தின் கீழ் உதவி பெற்ற பலரை நான் சந்தித்துப் பேசிய போது, ஒரு உண்மையைக் கண்டறிந்தேன். இந்தக் கல்யாணங்களில் இவ்வளவு வரதட்சணை வேண்டும், இவ்வளவு நகைகள் போட வேண்டும் என எந்தப் பிள்ளை வீட்டுக்காரர்களும் கேட்கவில்லை. மணமகளை விட மணமகன் குறைவாகவே படித்திருக்கிறான். இந்தத் திருமணங்களில் எல்லாம், உதவித் தொகைக்குக் கூடுதலாக ரூ.500 அல்லது ரூ.1,000தான் செலவாகியிருக்கிறது.



★ உழைப்பே செல்வம்;
★ உழைப்பவர்க்கே உரிமை;
★ உழைப்பாளிக்கே உலகம் உரியது.

★ வைரத்தைப் பட்டை தீட்டத்தீட்ட, அதனுள் பல வண்ணங்கள் தெரிவது போல், திருக்குறளை ஆராய ஆராய, அதில் பல புத்தம் புதிய அருமையான கருத்துக்கள் புலப்படும்.

★ கேடுகள் முளைக்கும் போது, அவற்றினை எதிர்த்து, வீழ்த்தி, நல்லனவற்றைப் பாதுகாத்துத் தீரவேண்டும். அதுமட்டும் போதாது. கேடுகள் மீண்டும் எழாதபடி பாதுகாப்பு ஏற்படுத்திக் கொண்டாக வேண்டும்.

பெண்களைப் பெற்றவர்கள் எல்லாம் ஒரே குரலில் ஒருமித்து இந்தத் திட்டத்தை வரவேற்றார்கள். "மதிய உணவு, இலவசக் கல்வி போன்ற திட்டங்களை, இனிமேல் வரக்கூடிய எந்த அரசாங்கம் எப்படி வாபஸ் பெறமுடியாதோ, அதே போல இந்தத் திட்டத்தையும் வாபஸ் பெறமுடியாது" என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

நான் நடத்திய பேட்டியின்போது உடன் இருந்த மொரப்பூர் எம்.எல்.ஏ., வி. முல்லைவேந்தன் ஒரு யோசனை தெரிவித்தார். 'திருமணம் நடந்தபிறகு, கூட ஒரு மாதத்துக்குள் இந்த மானிய உதவியை அனுமதிக்க வேண்டும்' என்பதே அவர் கூறிய யோசனையாகும். 'வட்டார அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதற்கு அவகாசம் பிடிப்பதால் இவ்வாறு செய்ய வேண்டும்' என்றார். 'இத்தகைய தாமதங்கள் காரணமாக, ஒன்றிரண்டு திருமணங்களைத் தள்ளிப் போட நேர்ந்திருக்கிறது' என்றார்.

இதுபற்றி மாவட்ட ஆ 'சித் தலைவர் ஆர். இரத்தினசாமியைக் கேட்டபோது, இந்த விண்ணப்பங்களைக் கூடியவரை மிகக் குறுகிய காலத்தில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமாறு தாம் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிவித்தார்.

நடைமுறைகளைப் பூர்த்தி செய்வதில், எழுதப் படிக்கத் தெரியாத பெற்றோர்களுக்கு அதிகாரிகள் உதவ வேண்டும்' என்று ஆணை பிறப்பித்திருப்பதாக அவர் கூறினார். 'வட்டார வளர்ச்சி அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் தம் கைக்குக் கிடைத்த ஐந்து நாட்களுக்குள் எல்லா விண்ணப்பங்களுக்கும் தாம் அனுமதி வழங்கியதாக' தருமபுரி மாவட்ட சமூகநல அதிகாரி கூறினார். இதுவரையில் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் 156 விண்ணப்பங்களின் பேரில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு 504 ஆகும்.

அரசாங்க விழாக்களில் எல்லாம் கிராமப்புறப் பெண்கள் இந்தத் திட்டம் பற்றித் தகவல் கேட்கிறார்கள் என்றும், மூலை முடுக்குகளில் உள்ள கிராமங்களில் கூட, இந்தத் திட்டம் பற்றிய துண்டறிக்கைகளை விநியோகிக்க, தாம் ஏற்பாடு செய்திருப்பதாகவும் தருமபுரி மக்கள் தொடர்பு அலுவலர் எம். கிருஷ்ணன் தெரிவித்தார்.

—நன்றி: 'இந்து' நாளிதழ் (13.9.89)





# தமிழ்நாட்டில் மாதம் ஒரு தொழிற்சாலை

## முதல்வர் கலைஞர்

மாநில அளவில் தொழில் நல்லுறவு விருது, தொழிற்சாலைப் பாதுகாப்பு விருது மற்றும் தொழிலாளர் நல விருது ஆகிய முப்பெரும் விருதுகள் வழங்கும் விழா 8-9-89 அன்று சென்னையில் வள்ளுவர் கோட்டத்தில் இனிது நடைபெற்றது. தொழிலாளர் துறையும், தொழிற்சாலை ஆய்வுத் துறையும் இணைந்து இவ்விழாவினை நடத்தின. அவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விருதுகளை வழங்கி விழாப் பேருரை ஆற்றினார். மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்தினார்.

முன்னதாக, விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் திரு. மலைச்சாமி, இ.ஆ.ப. வரவேற்றுப் பேசினார். அடுத்து, தமிழ்நாடு சிறுசேமிப்புக் குழுத் துணைத் தலைவர் திரு. ரகுமான்கான், எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை ஆணையாளர்-செயலாளர் திரு. எம். வெங்கடாசலம், இ.ஆ.ப. மற்றும் தொழிலதிபர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு-செய்தி-மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தமது தலைமை உரையில்,

''தொழிலையும் உற்பத்தியையும் மட்டும் அரசு முக்கியமாகக் கருதவில்லை. தொழிலாளர் உரிமைகள் சிறிதுகூட பாதிக்கப்படக் கூடாது என்பதையும் இந்த அரசு கண்காணித்து வருகிறது. தொழில் உறவு செம்மையாக இருந்தால்தான் தொழிலில் உயர்வு ஏற்படும்.''

''தொழிலாளரும், நிர்வாகிகளும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, பிரச்சினையின் நியாயத்தை உணர வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. சமுதாயத்தில் அடித்தளத்திலுள்ள மக்கள் சீரான வாழ்வைப் பெற வேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகவும் அக்கறை கொண்டு உள்ளார். தொழில் வளம் பெற நிர்வாகிகள் தொழிலாளர்கள் நல்ல ஒத்துழைப்புத் தரவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்புரை ஆற்றும்போது குறிப்பிடுகையில்,

''தமிழ்நாட்டில் தொழில்வளம் பெருக வேண்டும் என்கின்ற சீரிய முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே தமிழ்நாட்டிலுள்ள 50-க்கும் மேற்பட்ட தொழிலதிபர்களைத் தலைமைச் செயலகத்தில் அழைத்து அவர்களுடன் கலந்து பேசி ''உங்களுக்குத் தேவையான வசதிகளை எல்லாம் செய்துதர இந்த அரசு தயாராக இருக்கிறது. எனவே, நீங்கள் எவ்வித அச்சமுமின்றி அமைதியான முறையில் தொழில் வளம்பெற அரசோடு ஒத்துழைக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன். மேலும் அனைத்திந்திய அளவிலும் 50-க்கும் மேற்பட்ட தொழிலதிபர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்று, அவர்களுடன் பேசி ''இந்த மாநிலத்தில் தொழில்களைத் தொடங்குங்கள். தொழில்களைப் பெருக்குங்கள். உங்களுடைய தேவைகளைப் புறக்கணிக்காமல், புதிய தொழில்களைத் தொடங்க உங்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருக்கிறோம்'' என்று உறுதியளித்தேன்.

''அதற்கேற்ப, தொழிலதிபர்களும் தொழிலாளர்களும் தருகின்ற ஒத்துழைப்பின் அடிப்படையில் - ஊக்கத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டில் மாதம் ஒரு தொழிற்சாலையைத் தொடங்குவோம் என்று என்னால் உறுதியளிக்க முடிகிறது.''

''கூட்டுறவுத் துறையால் தொடங்கப்பட்ட தொழில்களானாலும், அரசுத் துறையால் தொடங்கப்பட்ட தொழில்களானாலும், தனியார் துறையினரால் தொடங்கப்பட்ட தொழில்களானாலும், எல்லா இடங்களிலும் நிர்வாகிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நீங்காத நல்லுறவு வளர்ந்திட வேண்டும். அதற்கு வழிகாட்டுகின்ற, பயன்படுகின்ற வகையில்தான் இந்த விழா நடைபெறுகிறது.'' என்று குறிப்பிட்டார்.

விழா இறுதியில் தொழிலதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சரால் விருதுகள் வழங்கப்பட்டன. தலைமைத் தொழிற்சாலைகள் ஆய்வாளர் திரு. என். எஸ். திருஞானம் நன்றிகூற விழா நிறைவு அடைந்தது. -நம்து செய்தியாளர்.



# சேலம் மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

**ரூ. 1.36** கோடி செலவில் கட்டப்பட்ட சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி புதிய பல மாடிக் கட்டடத்தை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 28.8.89 அன்று திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் புதிய கட்டடத்தைத் திறக்கவும், அரசு சார்பில், நலிவுற்றவர்களுக்கு நல உதவிகளை வழங்கவும், புதிய வழித்தடங்களில்பேருந்து விடுகின்ற முயற்சியில் ஈடுபடவும் உள்ள இந்த நல்ல விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். நலிவுற்றோர் நலம் பெற உதவும் வகையில் இந்த விழாவில் 20 ஆயிரம் பேர்களுக்கு உதவிகள் சுமார் ரூ.5 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படுகின்றன. ஏற்கெனவே 10.6.89 அன்று இம்மாவட்டத்தில் 7 ஆயிரம் பேர்கள் பயன்பெறத்தக்க வகையில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் உதவிகள் வழங்கப்பட்டன''.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் கூட்டுறவு வங்கியின் பெட்டக வசதியைத் துவக்கி வைத்து உரையாற்றுகையில், வங்கி ஊழியர்களுக்குச் சலுகைகளை அறிவித்தார். அவையாவன:-

''தொடக்கக் கூட்டுறவு வங்கி ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு நிர்வாகத் தரப்புச் சந்தா 6.25 சதவீதமாக வழங்கப்பட்டு வந்தது. இதை 10 சதவீகிதம் உயர்த்தி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிதியிலிருந்து கடன் பெறுவது தாராளமாக வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.


''மலைவாழ் பகுதியில் உள்ள தொடக்கக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு இதுவரை மலைவாழ். படி வழங்கப்படவில்லை. தற்போது மலைவாழ் படி, புதியதாக வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

''அனைத்துப் பணிநிலைத் தகுதிகளுக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் அகவிலைப்படியில் 5 சதவிகிதம் கூடுதலாக அதிகப்படுத்தப்பட்டுள்ளது. தொடக்கக் கூட்டுறவு வங்கியில் அயற்பணியில் மத்தியக் கூட்டுறவு வங்கிப் பணியாளராகப் பணி புரிபவர்களின் அயற்பணிக் காலம் முடிவடைந்ததும், தொடக்கக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களைக் கொண்டு பணி இடங்களைப் பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்ய ஏற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது. தொடக்கக் கூட்டுறவு வங்கியில் காசாளர்களாகப் பணிபுரிபவர்களுக்கும், காசுப் பணிப் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் 'ரிஸ்க் அலவன்ஸ்' இதுவரை வழங்கப்படவில்லை. தற்போது வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டு உள்ளது.

''தொடக்கக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களின் 1988-ஆம் ஆண்டில் இருந்த 6 தகுதி நிலைகளில் உள்ள புதிய உச்சவரம்பினைத் தளர்த்த கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இலாபத்தில் இயங்கும் சங்கத்தில் உள்ள உதவிப் பணியாளருக்குச் சீருடை தற்போது வழங்கப்பட்டு வருகிறது. வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் ஒரு வருடத்திற்கு இரவுக் காவலர் மற்றும் உதவிப் பணியாளர்களுக்கும் ஒரு டெரிகாட்டன் சீருடை வழங்க அனுமதிக்கப்பட்டு உள்ளது.''

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள், சேலம் மத்திய வங்கி பவள விழா மலரை வெளியிட்டுப் பேசும் போது:-





''சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கி தனக்கென 5 மாடிக் கட்டடத்தைக் கட்டியுள்ளது. 13 ஆண்டு காலத்திற்குப் பின்னால் தமிழக ஆட்சியை மீண்டும் ஏற்றுக்கொண்டுள்ள முதல்வர் கலைஞர் அவர்கள், நாட்டு மக்களுக்கு உதவக்கூடிய பல நல்ல திட்டங்களை இந்த விழாவில் செயல்படும்படிச் செய்வார். அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 15 புதிய தடங்களில் பேருந்துகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்ச்சி நடக்கிறது. சேலம் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவாளர்களுக்கு நல்ல உதவிகளை மாவட்ட கூட்டுறவு வங்கி தொடர்ந்து செய்யும்'' என்று குறிப்பிட்டார்.

விழாவில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. பொன்முடி, மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் டாக்டர் சந்திரசேகரன், கூட்டுறவுத் துறை இயக்குநர் திரு. ரெ. ஆறுமுகம், தமிழ்நாடு நிலவள வங்கி தனி அதிகாரி திரு. வி. கருப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவிற்கு வந்திருந்தவர்களை, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சுர்ஜித் கே. சவுதிரி வரவேற்றார்.

***தகவல்: வை. புண்ணியமூர்த்தி***
***செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்***
***சேலம் மாவட்டம்***



**"குடல் புழுக்களை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசியிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பான்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!"**




# பான்மின்த்*

(மொரண்டல் ஸிட்ரேட்)

## குடற் புழுக்களை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

"பாழும் குடல் புழுக்களால் — அம்மம்ம, நான் பட்ட பாடு! பலவீனம், பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பான்மின்த் தான் பலிச்சுது — அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!"

**பால் இழப்பே இல்லை.**
"அருமையான சேதி — எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும் சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பான்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பான்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால் மனிதருக்குக் கெடுதலே இல்லை — நூற்றுக்கு 100 பத்திரமானது."

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**
"என் தங்கச்சி — பிள்ளைத் தாய்ச்சி — அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பான்மின்த் சினைக்காலம் முழுக்க எந்த கெடுதலும் செய்யலை; ஏன் பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆ! ஆறுதலான சுகம்!"

**வசதி மிக்கதும் கூட.**
சாப்பிட வெகு இலகு பான்மின்த். கண்டி விடுங்க ஒரு போலஸ் (பெரிய மாத்திரை) — எங்கமாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு. உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு சின்ன மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!"

பால் இழப்பே இராது
பான்மின்த்
இணையில்லை ஈடு செய்வது

**கால்நடை மருத்துவரிடம் பெறுவீர்: சிறந்த மருந்து**

**பான்மின்த்***

குடற் புழுக்களைக் கொல்லும், ஆரோக்கியத்தை வெல்லும்!

LINTAS BMT 4 2217 TM

*யு எஸ் ஏ ஃபைஸர் நிறுவன டிரேடு மார்க்

pfizer

மேலும் விவரமறிய எழுதுவீர் இம் முகவரிக்கு:
ஃபைஸர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400 021.




## கோவை மாநகராட்சி
## பொறியியல் துறை மற்றும் சுகாதாரத் துறை

இம்மாநகராட்சியில் மொத்தமுள்ள 570.046 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் 500.021 கி.மீ. நீளமுள்ள சாலைகள், தார் சாலை, தூசி பரவாச்சாலை, சிமெண்ட் கான்கிரீட் சாலை ஆகியவைகளாக மாற்றப்பட்டுள்ளன.

இவ்வாண்டுக்கு சாலைப் பணிகளுக்காக ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 147 வேலைகள் 156.27 இலட்சம் செலவில் செய்யப்பட இருக்கின்றன.

8-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.500 இலட்சம் செலவில் அனைத்து சாலைகளும் தார் சாலைகளாக மாற்ற இலக்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சிறுவாணி தண்ணீர் விநியோகம் ரூ.21.65 கோடியில் நிறைவேற்றப்பட்டு நாளொன்றுக்கு 1,014 லட்சம் லிட்டர் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. நடப்பாண்டில் 146 சாக்கடைப் பணிகள் ரூ.75.20 இலட்சத்தில் நிறைவேற்றப்பட உள்ளன.

வறட்சி நிவாரணப்பணித் திட்டத்தில் 40 ஆழ்குழாய்க் கிணறுகள் ரூ.15 இலட்சம் செலவில் செய்யப்பட உள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "பொது சுகாதாரம் காக்க போர்க்கால நடவடிக்கை" என்னும் திட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக அகற்றப்படாமல் இருந்த சாக்கடை மண் தூர்வாரி அகற்றப்பட்டது. மற்றும் சாலையிலுள்ள அதிகப்படியான மண் மற்றும் கட்டிட இடிபாடுகள் மற்றும் குப்பைகள் ஆகியன அகற்றப்பட்டன. இதற்கு ரூ.10 இலட்சம் செலவானது. இத்திட்டத்தினால் சாக்கடை நீர் தங்கு தடையின்றி செல்ல வழி ஏற்பட்டது. நகரிலுள்ள குப்பை கூளங்கள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன.

இம்மாநகராட்சியிலுள்ள பள்ளிக்கூடங்களில் 54 பணிகள் ரூ.8.78 இலட்சத்தில் இவ்வாண்டு செலவு செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## மாநகராட்சி மின் துறை

மாநகராட்சி மின் துறையால் மொத்தம் 16,021 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

நகரின் நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துக்குக் கூடுதல் வெளிச்சம் தரும் பொருட்டு நெடுஞ்சாலைகளின் மையப்பகுதியில் சோடியம் ஆவி விளக்குகள் ரூ.18.96 இலட்சத்தில் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.10 இலட்சம் செலவில் நகரின் பல்வேறு பகுதிகளிலும் முக்கிய சந்திப்புகளிலும் கூடுதல் வெளிச்சம் தரும் பொருட்டு சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ரூ.25 இலட்சம் செலவில் மாநகராட்சி மின் விநியோகப் பகுதியில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதைச் சரி செய்ய 10 இடங்களில் புதிய மின் மாற்றிகள் அமைக்கவும் 10 இடங்களில் மின் மாற்றிகளின் திறனை அதிகரிக்கவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

ரூ.30.14 இலட்சம் செலவில் சீரநாய்க்கன்பாளையம் துணை மின் நிலையத்திலிருந்து இரண்டு புதிய மின்பாதை இவ்வாண்டு அமைக்கப்பட உள்ளது.

**ஹேமந்த்குமார்சின்கா இ.ஆ.ப.**
ஆணையர்
கோவை மாநகராட்சி

**மா. இராமன், இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சித் தலைவர்
மற்றும் தனி அலுவலர்
கோவை மாநகராட்சி

*With best wishes from:*

## M/s. K. DAMODHARASAMI NAIDU & BROS.,
(Sree Annapoorna Gowrishankar Group, Coimbatore)

## SREE ANNAPOORNA (LODGING)
Coimbatore-2.

(Three-Star Hotel with 56 A/C & Non-A/C Rooms, Conference Hall and other facilities.)

RESTAURANTS AT:

★ Sree Annapoorna (Main) R.S. Puram, Coimbatore,
Sree Annapoorna, (Central Bus Stand) Dr. Nanjappa Road,
Sree Annapoorna, Mettupalayam Road, Coimbatore.

★ Sree Gowrishankar - Cross Cut Road, Coimbatore.
Sree Gowrishankar - Arts College Road, Coimbatore.
Sree Gowrishankar - (Laxmi Complex), Coimbatore.

★ SREE ANNAPOORNA FOODS,
15/9, Rangasamy Road,
R.S. Puram,
Coimbatore-2

*(Manufacturers of Curry Powders etc.)*

★ SREE ANNAPOORNA DEPARTMENTAL STORES
Nehru Stadium,
Coimbatore.

★ SREE ANNAPOORNA DEPARTMENTAL STORES
*(SRI Valli Complex)*
*(with Restaurant attached)*
NSR Road,
Saibaba Colony
Coimbatore-11

GRAMS: 'POORNAM' Telex 0855-447 (SAP)
Phone 47722 (7 Lines)
41471
41022

---

போன்: 25396

## ஹோட்டல் ஈரானி
(உயர்தர அசைவ உணவகம்)
கோயம்புத்தூர்

எங்களிடம் கை தேர்ந்த ஆட்களைக் கொண்டு சுவையான பிரியாணி வகைகள், கோழி, வான் கோழி, காடை, மட்டன், மீன் வகைகள் தயாரித்து கொடுக்கின்றோம்.

★ சைனீஸ் உணவு வகைகளும் கிடைக்கும்.

குடும்பத்துடன் உணவருந்த குளு குளு அறைகளும் உண்டு.

கோடி ரூபாய் இப்பொழுது கிடைத்துள்ளது. 200 கோடி ரூபாய் முன்பு எப்படிப்போனது, என்ன ஆனது என்ற கேள்விக்கே போகாமல் அந்தக் கேள்வியையும் பதிலையும் உங்களுக்கே விட்டு விடுகிறேன்''.

''தமிழ்நாட்டில் மலைப்பாறைகளில் கிரானைட் கல் கிடைக்கிறது. அதை எடுத்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் ஏராளமான வருவாய் கிடைக்கும். கடந்த ஆண்டு 5 கோடி ரூபாய் அளவிற்குத்தான் ஏற்றுமதி நடந்துள்ளது. அதற்கு முன்பு இதை விடவும் குறைவாகவே ஏற்றுமதி ஆகி உள்ளது. கடந்த ஆண்டு ஏற்றுமதியின் மூலம் அரசுக்கு ஒரு கோடி ரூபாய் தான் வருமானம் கிடைத்துள்ளது. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற ஆறு மாத காலத்தில், அதே கல் 20 கோடி ரூபாய் அளவிற்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் 5 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைத்துள்ளது. இதைப்போன்று பலவற்றைச் சொல்ல முடியும்.''

''இந்த விழாவில் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த மாவட்டத்திற்குத் தேவையானவைகளை எடுத்துக் கூறினார்கள். வெகுவிரைவில் ஒரு பெரிய தொழிற்சாலை இங்கு அமைப்பதற்கான பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. அது ஒரு டயர் தொழிற்சாலையாக இருக்கலாம். 200 முதல் 300 கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்காக நாங்கள் விவாதிக்கிறோம். இதற்கான தொடக்க விழா விரைவில் நடைபெறும்போது அதற்கான அடிக்கல்லை நானே வந்து நாட்டுகிறேன்.''

''கேரள மாநிலத்தில் ஓணம் பண்டிகைக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மலையாள மொழி பேசும் மக்கள் ஏராளமாக உள்ளனர். அதனால் ஓணம் பண்டிகைக்குக் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விடுமுறை அளிக்க வேண்டும் என்று இங்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. அது ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுகிறது''.

''பத்மனாபபுரம் நகரசபை குடிநீர்த் திட்டத்திற்கு ஆய்வுத்தொகை திட்டத் தொகையோடு சேர்க்க நான் கூறியதைத் தொடர்ந்து, அந்தத் திட்டம் நிறைவேறும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 22 இலட்சம் ரூபாய் நகரசபையில் இருந்து கட்ட வேண்டியது உள்ளது என்று இங்குக் கூறப்பட்டது. அந்தத் தொகையை மானியமாக அரசு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்டால் இதைக் கடைப்பிடித்து மற்றுள்ள நகர சபைகளும் அரசிடம் மானியம் கேட்டால் நாங்கள் யாரிடம் போய் மானியம் கேட்பது. அதனால் 22 இலட்சம் ரூபாயில் 11 இலட்சம் ரூபாயை பத்மனாபபுரம் நகரசபை கட்டினால் போதும். நீண்டகாலத் தவணை பத்மனாபபுரம் நகரசபைக்குத் தரப்படும்''.

கன்னியாகுமரியில் உள்ள நேசமணிப் போக்குவரத்துக் கழகப் பஸ் நிலையத்திற்குக் கவிமணி தேசிக விநாயகம் பெயர் வைக்க வேண்டும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கண்ணப்பன் வழியாக ' எனக்கு கோரிக்கை வைக்கப்பட்டது. அதையும் ஏற்று கன்னியாகுமரியில் உள்ள நேசமணிப் போக்குவரத்துக் கழகப் பஸ் நிலையத்திற்குக் கவிமணி தேசிக விநாயகம் பெயர் சூட்டப்படுகிறது.

நேசமணிப் போக்குவரத்துக் கழகம் அகில இந்திய சாலைப் போக்குவரத்து நிறுவனத்திடம் இருந்து இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளது. சிறந்த விருதுகள்ளைப் பெற்றுள்ளது. சிறந்த விருதுகளைப் பெற்றதற்காக நேசமணிப் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு 75 ரூபாய் வழங்க நிர்வாகம் அறிவித்தது. ஆனால் ஊழியர்கள் 75 ரூபாய் குறைவு, நாங்கள் பெற்றதோ இரண்டு விருது என்று கூறி உள்ளனர். அதனால் நேசமணிப் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்குக் கூடுதலாக 75 ரூபாய் சேர்த்து 150 ரூபாய் வழங்கப்படும். இதனால் 4 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் அடைவார்கள்'' என்று குறிப்பிட்டார்.

இந்த விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கே.பி. கந்தசாமி, திரு. துரைமுருகன், திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீசன், திரு. எஸ். தங்கவேல், ஆகியோரும், சட்டமன்ற உறுப்பினர்களான திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை, திரு. பொன் விஜயராகவன், திரு. எஸ். நூர்முகமது, திரு. எம். சுந்தரதாஸ் மற்றும் நாகர்கோயில் நகர்மன்றத் தலைவர் திரு. பி. தர்மராஜ் ஆகியோரும் உரையாற்றினர்.

தொகுப்பு:

எம்.ஏ. லாரன்ஸ்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கன்னியாகுமரி மாவட்டம்

## ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி

தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், சென்னை மாநகராட்சி 25.8.1989 அன்று ஏழு பேர்களுக்கு ரூ.35,000 வழங்கியது.

ரூபாய் 5,000 வீதம் காசோலைகளை மாநகராட்சி ஆணையாளர் திரு. மு. அபுல்ஹஸன், சைதை சட்ட மன்றத் தொகுதி உறுப்பினர் திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் அவர்கள் முன்னிலையில் சென்னை மாநகராட்சிக் கட்டடத்தில் வழங்கினார். 10-வது வட்ட அலுவலர் திரு. என்.ஆர். கோடீஸ்வரன் மனுக்களைப் பெற்று பரிசீலனை செய்து, உதவித் தொகை பெறத் தகுதியுள்ள 7 பேர்களுக்கும் காசோலைகளை அளிக்க ஏற்பாடு செய்தார்.

திருவான்மியூரைச் சேர்ந்த செல்வி சி. கலா, செல்வி ஆர். தேவகி, சைதாப்பேட்டையைச் சேர்ந்த செல்வி. சிசிலியா, கோட்டூர்புரத்தைச் சேர்ந்த செல்வி மயிலம்மாள், வேளச்சேரியைச் சேர்ந்த செல்வி பி. கிருஷ்ணவேணி, ஜாபர்கான் பேட்டையைச் சேர்ந்த செல்வி எம்.ஆர். இராஜலட்சுமி ஆகிய 6 பேர்களும் நேரில் பெற்றுக் கொண்டனர். சைதாப்பேட்டையைச் சேர்ந்த செல்வி எஸ். புவனேஸ்வரி நேரில் வராததால், 10-வது வட்ட அலுவலர், காசோலையை 26.8.89 அன்று சைதைச் சட்ட மன்ற உறுப்பினர் முன்னிலையில் 10-வது வட்ட அலுவலகத்தில் வழங்கினார்.



# தீண்டாமை வேண்டாமே!

—பூங்கோவன்



'தீண்டாமை வேண்டா' மென்று
தென்றல்வந்(து) உடலைத் தீண்டும்!
காண்விழியில் உறக்கம் வந்து
கண்ணிமையை மெல்லத் தீண்டும்!
தேன்தமிழில் வார்த்தை வந்து
சுவையாக நாவைத் தீண்டும்!
வான்மழையோ கீழே வந்து
வளமாக்கப்புவியைத் தீண்டும்!

விண்மீன்கள் கூட்டம் வந்து
விரிகடலாம் வானைத் தீண்டும்!
கண்மணிகள் காட்சி தன்னைக்
காண்பதற்கு ஒளியைத் தீண்டும்!
பொன்மணிகள் அணியாய் வந்து
பூவையரின் கழுத்தைத் தீண்டும்!
மின்மினிகள் வட்ட மிட்டு
வண்ணஒளி விளக்கைத் தீண்டும்!

அலைநுரைகள் கணமும் தோன்றி
அலைந்தலைந்து கரையைத் தீண்டும்!
கலையுணர்வு கருத்தில் வந்து
கற்பனையால் உளத்தைத் தீண்டும்!
சிலையாகிப் போன நல்லோர்
செய்தபணி நினைவைத் தீண்டும்!
விலைமதிப்பே யில்லா வெற்றி
வியனுலகில் புகழைத் தீண்டும்!

எழுத்துக்கு வடிவம் தந்த
ஏட்டினையே எழுத்து தீண்டும்!
பழுத்தபழம் மரத்தை விட்டுப்
பால்மணலைப் பாய்போல் தீண்டும்!
உழுகின்ற உழவர் கால்கள்
உழும்வயலை உவப்பாய்த் தீண்டும்!
அழுகின்ற குழந்தை தன்னை
அன்புத்தாய்க்கரங்கள் தீண்டும்!

வான், கடல், மண் எல்லாம் ஒன்றாய்
வளம்சேர்க்கத் தீண்டும் போது,
தேன்தென்றல் ஆடை யெல்லாம்
தேவன்போல் தீண்டும் போது,
ஊன்உடலால் ஒன்று பட்ட
ஓரினமாய்ப் போற்றும் மக்கள்
'தீண்டாமை' என்னும் பொய்மைத்
தீமைகளை அழித்தால் என்ன?



இலக்கிய விருந்து

# கல்வியே அழியாச் செல்வம்

**"வெள்ளத்தால் அழியாது வெந்தழலால்**
**வேகாது வேந்தராலும்**
**கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்**
**நிறைவின்றிக் குறைவுறாது,**
**கள்ளர்க்கோ பயனில்லை காவலுக்கோ**
**மிக எளிது கல்வியென்னும்**
**உள்ளத்தே பொருளிருக்கப் புறம்பாகப்**
**பொருள்தேடி யுழல்கின்றாரே!"**

சில நாளில் தோன்றிச் சிலநாளிலிருந்து சில நாளில் மறைந்து போவதாகிய இம்மக்களுடம்பிற் பிறந்தவர்களான நாம் எந்தவகையான செல்வத்தைப் பெறுதற்கு முயலல் வேண்டுமென்றால், என்றும் அழியாதாய், நம் உடம்பு அழிந்தாலும் தான் அழியாமல் நமது உயிரொடு சேர்ந்து நம்மை எல்லாப் பிறப்புகளிலுந் தொடர்ந்து வருவதாய் உள்ள அழிவில்லாப் பெருஞ் செல்வத்தையே அடைவதற்குக் கண்ணுங் கருத்துமாய் இருக்க வேண்டும். ஏன்? அழியாத செல்வத்தையே பெற வேண்டுமென்னும் விருப்பம் நம்மில் ஒவ்வொருவரிடத்தும் இயற்கையாகவே காணப்படுதலாலும், அவ்விருப்பம் இல்லாதவர்களை எவ்விடத்தும் எக்காலத்துங் காண்டல் கூடாமையானு மென்க. ஒரு திங்கள், இரண்டு திங்களிற் கிழிந்து போகுஞ் சீமைத் துணிகளை வாங்க விரும்புகின்றோமா? பன்னிரண்டு பதினைந்து திங்கள் கிழியாமல் அழுத்தமாயிருக்கும் நாட்டுப் புடவைகளை வாங்க விரும்புகின்றோமா? விலை சிறிது மிகுதியாய் இருந்தாலும், அழுத்தமாய் நீடித்திருக்கும் ஆடைகளையல்லவோ வாங்க ஆவல் கொள்கின்றோம்? சிறிது கை தவறினாலும் கீழ்விழுந்து நொறுங்கிப் போகும் மட்பாண்டங்களைப் புழங்க விரும்புகிறோமா? கீழே தவறி விழுந்தாலும் உடையாமல் வலுவாய் உள்ள செப்புக் கலங்கள் - பித்தளைக் கலங்களைக் கையாள விரும்புகின்றோமா? விலை ஏறியிருந்தாலும் நீண்ட நாள் பயன்படுஞ் செப்புக் கலங்கள் - பித்தளைக் கலங்களையல்லவோ பொருள் கொடுத்து வாங்க விழைகின்றோம்? இங்ஙனமே நாம் நாடோறுங் கையாண்டு வரும் பொருள்களிலுங்கூட, விரைவில் அழிந்து போகாமல் நீண்டநாள் நிலைத்திருக்கும் பொருள்களையே நாம் அடைய விரும்புதலால், நம்மில் ஒவ்வொருவருக்கும் அழியாச் செல்வத்தையே பெற வேண்டுமென்னும் அவா இயற்கையாகவே வேரூன்றி நிற்கின்றது.

இங்ஙனம் அழியாச் செல்வத்தையே அடைய வேண்டுமென்னும் அவா நம்மெல்லாரிடத்தும் இயற்கையாக இருந்தாலும், முத்துச் சிப்பியில் உள்ள முத்தின் ஒளியும், பாசி மூடிய பவளத்தின் நிறமும், மாசியில் மறைந்த மதியின் துவக்கமுங், கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளியும் போல் நம்மை மூடிக்கொண்டிருக்கும் அறியாமை என்னும் இருளில் அகப்பட்டவர்களாகி நம் அறிவை இழந்து அழியாச் செல்வத்தை அடைய முடியாமல், நிலையின்றி அழிந்து போகும் பொருள்களையே நிலையாகப் பிழைபட நினைந்து, அவற்றைப் பெறுவதிலும் அவற்றை நுகர்வதிலுமே நமது காலத்தைக் கழித்து வருகின்றோம். பாருங்கள்! நம்மவர்களிற் பெரும்பாலார் மாடமாளிகைகளையும் ஆடை அணிகலங்களையும் தட்டுமுட்டுக்களையுந் தின்பண்டங்களையும் நாடகக் காட்சிகளையும் வேடிக்கை விளையாட்டுக்களையுமே மேலான செல்வங்களாகக் கருதி, அவற்றைப் பெறுவதிலும், அவற்றை நுகர்வதிலும் விடாமுயற்சியுடையவர்களாய் இருக்கக் காண்கின்றோமேயல்லாமற், சிறிது நேரமாயினும் அடக்க ஒடுக்கத்தோடிருந்து நம்மைப் படைத்த சிவபெருமானை நினைக்கவும், நம்மைப் போலவே அவ்வாண்டவனாற் படைக்கப்பட்ட உயிர்களின் நன்மையைக் கருதவும், அவை பசியாலும் நோயாலும் வருந்துவதைக் கண்டு, மனங்கசிந்து, இரங்கித் தம்மால் இயன்ற அளவு அவற்றிற்கு ஒரு கைப்பிடி உணவாவது ஒரு காசு மருந்தாவது உதவி, அவற்றின் துன்பத்தைப் போக்கவும், தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார், ஔவைப் பிராட்டியார், காரைக்கால் அம்மையார், சேக்கிழார் பெருமான் முதலான உயர்ந்த அறிவுடையோரால் அருளிச் செய்யப்பட்டுள்ள அரும்பெரு நூல்களை ஓதி உணரவும் முயற்சி வாய்ந்தவர்களாயுள்ள ஆண் பெண்பாலாரைக் காண்பது அரிதினும் அரிதாய்ப் போய் விட்டதே!

**தனித்தமிழ்த் தந்தை**
**மறைமலையடிகள்**



இங்ஙனம் வெள்ளத்தால் அழிந்துபோவதும், வெந் நெருப்பால் வெந்து போவதும், அரசர்களாற் கைப்பற்றப்படுவதும் கொடுக்கக் கொடுக்கக் குறைந்து போவதும் கள்வர்க்காக நம்மை அஞ்சுவிப்பதும், பாதுகாப்பதற்கு மிகுந்த வருத்தத்தைத் தருவதுமான இச்செல்வம் நம்மால் எந்நேரமும் விரும்பத்தக்கதன்றென்பது இதனால் இனிது விளங்குகின்றதன்றோ? இவ்வாறு சொல்லுதலைக் கொண்டு நாம் செல்வத்தை வேண்டாமல் வறுமைப்பட்டு இந்த மண்ணுலகில் வருந்தியே காலங்கழிக்க வேண்டுமென்று நீங்கள் நினைத்தல் கூடாது. நமது மண்ணுலக வாழ்க்கை இனிது நடப்பதற்கும், பிற உயிர்களின் துன்பத்தைப் போக்கும் ஈகை அறங்களைச் செய்வதற்கும், மற்ற நல்ல முயற்சிகளைச் செய்வதற்கும், இன்றியமையாது வேண்டப்படும் பொருளைச் சேர்த்து, ஆரவாரம் இல்லாமலும், எல்லாந் தனக்கே என்று எண்ணாமலும், தமக்கும் பிறர்க்கும் பலவகையால் நல்ல பயன்கள் விளையும்படி, அதனைப் பயன்படுத்தல் வேண்டுமென்பதே எனது கருத்தாகும்.

இன்னும், இவ்வழிந்து போகும் பொருளைப் படைத்தவர்களும் படையாதவர்களுமாகிய எல்லாரும், வெள்ளத்தால் அழியாததாய், வெந்தழலால் வேகாதாய், அரசர்களாலுங் கைப்பற்றப் படாததாய் கொடுக்கக் கொடுக்கக் குறையாதாய் கள்ளர்களுக்காக அஞ்சவேண்டுவது இல்லாதாய், நமது அறிவினுள்ளே இருத்தலாற் பாதுகாப்பதற்கு எளிதாய் விளங்கும் அழயாச் செல்வமாகிய கல்விப் பொருளைப் பெறுதற்கு மிகவும் முயற்சியுடையவர்களாய் இருக்க வேண்டும். இது பற்றியே, "வெள்ளத்தால் அழியாது" என்னும் அரிய பாட்டு இந்தக் கட்டுரைக்கு முதலாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

செல்வமானது வெளியேயுள்ள பருப்பொருளாதலால் வெள்ளத்தால் அழியும்; வெந்தழலால் வேகும். கல்வியானது நமது உயிரைப்பற்றி உள்ளே இருக்கும் நுண்பொருளாகையால் வெள்ளத்தில் அழியாது; வெந்தழலில் வேகாது. செல்வமானது பொன், நிலம், வீடு முதலிய பருப்பொருளாயிருத்தலால் அரசர்களாற் கைப்பற்றவும்படும். கல்வியானது அறிவுருவான நுண்பொருளாகையால் அவர்களாற் கவரப்படமாட்டாது. செல்வமானது பிறர்க்கு எடுத்துக் கொடுக்கக் கொடுக்கக் குறைந்து போகும். கல்வியானது பிறருக்கு எடுத்துச் சொல்லச் சொல்ல அளவில்லாமற் பெருகும். செல்வத்தை வைத்திருப்பவர்கள் எங்கே கள்வர் வந்து திருடிக் கொண்டு நம்மையுங் கொன்று விடுவார்களோ என்று எந்நேரமும் அச்சத்திலேயே காலங்கழிக்க வேண்டும். கல்வியை வைத்திருக்கும் புலவர்களோ அங்ஙனம் கள்வர்க்குச் சிறிதும் அஞ்சவேண்டுவதில்லை. செல்வத்தைப் பாதுகாப்பதற்கு அளவு கடந்த முயற்சி வேண்டும். கல்வியைப் பாதுகாப்பதற்கு அத்தகைய வருத்தம் வேண்டுவதில்லை. இங்ஙனமெல்லாங் கல்வியானது செல்வத்திலுஞ் சிறப்புடைய அழியாச் செல்வமாய் இருத்தலினாலேயே தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார்.

**"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை**

என்றும், ஔவைப்பிராட்டியார்,

**"மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்**
**மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்-மன்னனுக்குத்**
**தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்**
**சென்றவிட மெல்லாஞ் சிறப்பு"**

எனறும் அருளிச் செய்தனர்.



ஆனால சிலர் கல்வியானது ஆண்மக்களுக்குத் தாம் வேண்டுமே யல்லாமற் பெண்மக்களுக்கு வேண்டுவதில்லை யென்றும், பழைய நாளில் மாதர்கள் எவருங் கல்வி கற்க வேண்டுமென்று நூல்களில் சொல்லப்படவில்லை யென்றும்




கூறுவார்கள். உயிர்கள் என்ற பொது வகையில் விலங்குகளும் மக்களும், ஒப்பாவர்களேயாவர்; உண்டு தேடுதல், தேடிய உணவை உண்டல், உறங்கல், இன்புறுதல் என்னுந் தொழில்கள் விலங்குகளுக்கும் உண்டு. ஆனால் மக்கள் விலங்குகளிலும் உயர்ந்தவர்கள் என்று சொல்வது ஏன் என்றால் நல்லது இது தீயது இது என்று பகுத்துணர்தலானுந் தம்மைப் போன்ற உயிர்க்கு இரங்கித் தம்மாலான உதவி செய்தலானுங் கடவுளைத் தொழுதலாலும், இங்ஙனமெல்லாம் நமது அறிவை வளரச் செய்வதற்குரிய பல நூல்களைக் கற்றலாலுமே மக்கள் விலங்குகளிலும் உயர்ந்தவராக எண்ணப்படுகின்றனர். இவ்வுயர்ந்த அறிவின் செயல்கள் இல்லையானால், விலங்குகளுக்கும் மக்களுக்குஞ் சிறிதும் வேற்றுமை இல்லாமற்போம். கல்வி இல்லாதவர்களுக்கு நுட்பமான அறிவு சிற்சில நேரங்களில் காணப்பட்டாலும், அதனை அறிவாகப் பெரியோர்கள் கொள்ளமாட்டார்களென்றும், கல்வியுடையவர்களே கண்ணுடையவர்கள் ஆவார்கள் அல்லாமற் மற்றவர்கள் முகத்தில் இரண்டு புண்ணுடையவர்களே ஆவார்களென்றும் விளக்குதற்கன்றோ திருவள்ளுவ நாயனார்,

''விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்''

எனவும்

''கல்லாதான் ஒட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளார் அறிவுடை யார்''

எனவும்

''கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்''

எனவுந் திருவாய்மலர்ந் தருளினார்.

இங்ஙனம் அறிவான் மிக்க ஆன்றோர், மக்களாய்ப் பிறந்த எல்லார்க்குங் கல்வி இன்றியமையாது வேண்டற் பாலதேயாமென்று கூறியிருக்க, அஃது ஆண்மக்களுக்குத்தாம் வேண்டுமே யல்லாமற் பெண் மக்களுக்கு வேண்டுவதில்லையென்று உரைப்போர் உண்மை அறிந்தவராவாரோ, சொன்மின்கள்! அருமைத் தாய்மார்களே, பெண்பாலார் மக்களிலுந் தாழ்ந்த விலங்குகளாயிருந்தாலன்றோ அவர்கட்குக் கல்வி வேண்டாம் எனலாம்? இவ்வுலக வாழ்க்கையை நன்றாக நடத்தும் முறையில் ஆண்மக்களைக் காட்டிலும் மிகுந்த பொறுமையும் ஆழ்ந்த நுண்ணறிவும் வேண்டிய அவர்கட்குக் கல்வியெனுந் தூண்டா மணிவிளக்கைத் தாராமல், அவர்களை அறியாமை என்னும் பேர் இருளிற் போகச் சொல்லுபவர்கள் உண்மை அறிந்தாராவரோ சொன்மின்கள்!

இனி, முற்காலத்திருந்த ஒளவையார், பூதப்பாண்டியன் பெருந்தேவியார், காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார் முதலான பெண்மணிகளெல்லாருங் கல்வியில் மிகச் சிறந்தவர்களாயிருந்தமை தெரிந்தவர், பழைய நாளிற் பெண் மக்கள் எவருங் கல்வி கற்கவில்லையென்று கூறுவரோ சொன்மின்கள்!

''பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெல்லாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே''

என்று கல்வியிற் சிறந்த கம்பர் கூறியிருத்தலால் முற்காலத்தில் இருந்த பெண்மக்கள் எல்லாருங் கல்வியில் வல்லவர்களாய் இருந்தார்களென்பது இனிது விளங்கவில்லையா?

இனிப் பெண்பாலர்க்கு ஆடை அணிகலன்கள்முதலான ஒப்பனைகள் அவரவர் அளவுக்குத் தக்கபடி சிறிது சிறிது வேண்டுவதாயினுங், கல்வியில்லாதவர்களுக்கு இவ்வாடையணிகலன்களால் உண்டாகும் அழகு அழகாக மாட்டாதாகும் என்னுங் கருத்தோடு,

''குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல-நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு''

என்று நாலடியாரென்னுஞ் சிறந்த பழமையான உயர்ந்த நூலிற் கூறியிருப்பதை உணர்பவர்கள் பெண்மக்களுக்குக் கல்வி வேண்டாமென்று சொல்லத் துணிவரோ கூறுமின் தாய்மார்களே!

இனி, இங்ஙனமெல்லாம் ஆழ நினைந்து பார்க்குங்கால ஆண் மக்களுக்குக் கல்வி இன்றியமையாதாய் இருத்தல் போலவே, அவர்போல் மக்கட் பிறப்பவரான பெண்மக்கட்குங் கல்வியானது இன்றியமையாத அழிவில் செல்வமாகுமென்பது நன்கு பெறப்படுகின்றது.

-(பாரி நிலையம் வெளியிட்ட 'அறிவுரைக் கொத்து' என்ற நூலிலிருந்து)




# பம்ப் ஓடினால் பயிர் ஓங்கி வளரும், பம்ப் நின்றால் வேலை ஓய்ந்துவிடும்



விவசாயிகளின் வாழ்க்கை அவர்களுடைய பயிரில் இருக்கிறது என்றால் பயிரின் உயிர் நீரை நம்பியிருக்கிறது. பயிருக்கு காலாகாலத்தில் நீர் கிடைக்காவிடில் நல்ல விதைகள், தரமான உரம் மற்றும் உளம் தளராத உழைப்பு எல்லாமே வீணாகிவிடும்.

வளர்ந்து நிற்கும் பயிருக்கு நீர் தேவைப்படும்போது, கிணற்றில் நீர் இருப்பினும் பம்ப் எரிந்து போய்விட்டாலோ, உடைந்துவிட்டாலோ, கெட்டுப்போய்விட்டாலோ அல்லது திருட்டுப்போய்விட்டாலோ விவசாயிகளின் வாழ்க்கை பாழாய்ப்போய்விடும்.

இந்தமாதிரி கஷ்ட காலத்தில் விவசாயிகளுக்கு உதவி செய்கிறது

நியூ இந்தியாவின் விவசாய பம்ப்ஸெட் இன்சூரன்ஸ்.

விவசாய பம்ப்ஸெட் இன்சூரன்ஸ் திட்டத்தில் ஸப்மெர்ஸிபிள் பம்ப்ஸெட் உள்பட எல்லாவகை பம்ப்ஸெட்டுகளுக்கும் இன்சூர் செய்யலாம்.

விவசாய பம்ப்ஸெட் இன்சூரன்ஸ் ப்ரீமியம்: மோட்டாரின் ஹார்ஸ் பவருக்கேற்றபடி ஆண்டுக்கு குறைந்தபட்சம் 50 ரூபாய்.

நியூ இந்தியாவின் 1000க்கும் அதிகமான அலுவலகங்கள் நாடு பூராவும் பரவியுள்ளன.

மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள அலுவலகத்தில் விசாரியுங்கள் அல்லது ஏஜெண்ட்டை சந்தியுங்கள். உங்களுக்கு சேவை செய்யவே எட்டாத தூரத்தில் உள்ள கிராமங்களில்கூட நியூ இந்தியாவின் கிராம பிரதிநிதிகள் காத்திருக்கிறார்கள்.

விவசாய பம்ப்ஸெட் இன்சூரன்ஸுக்கு

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

ஜெனரல் இன்ஷ்யூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்

கஷ்ட காலத்தில் உங்களுக்கு ஆதரவு

R K SWAMY/NIA/4294 TM-A

# அந்தி வேளை




'ஊருக்கு மேற்கே ஆறுண்டு, குளமுண்டு; சந்தியே, சந்தியே' என்ற பாட்டு இப்போது சின்னப்பனுக்கு ஞாபகம் வருகிறது. ஆலமரத்தடியில் அம்மன் தேருக்கு முன் நடக்கும் தெருக்கூத்தில், 'மகன் லோகி தாசனுக்குத் தாகம்; தண்ணீர் வேண்டும்' என்பாள் சந்திரமதி. அதற்குப்பதிலாக நட்சத்திரையன் இந்தப் பாட்டைப் பாட ஆரம்பித்துவிடுவான். வீட்டிலே லோகி தாசன் தண்ணீர் குடிக்கக்கூடாதாம். ஆற்றி லும் குளத்திலும் ஒரு கை-ஒரே ஒரு கைதான் - அள்ளிக் குடிக்கச் சொல்லி உத்தரவு போடுவான் அந்த வேதியன்.

தாடியும் மீசையும் கோலும் கூனல் நடையுமாக வேதியன் வேஷம் போட்டுக் கொண்டு, அந்தக் காலத்திலே வருஷத்துக்கு வருஷம் பெரிய வீட்டு முத்துக்கருப்பன்தான் நட்சத்திரத் தரகனாக விளங்குவது வழக்கம். இவனோ எப்போதும் சந்திரமதி வேஷம் போட்டுக் கொண்டு அழுவதில் ஈடு இணையில்லாதவன். இவனுடைய முகாரி ராகம் அக்கம் பக்கத்திலே எட்டூருக்குப் பிரசித்தம்.

முத்துக்கருப்பனுக்கும் சின்னப்பனுக்கும் சமவயது. நல்ல மிடுக்கான வாலிபம். ஆனால், முத்துக்கருப்பன் வேஷம் கட்டி னால் குடுகுடு கிழவனாகத் தான் தோன்று வான். இவனைப் பற்றியோ கேட்க வேண் டியதில்லை. பெண் வேஷம் பூண்டுவிட்டால் அழகு கொஞ்சும். 'வால வயசுக்கார' ரதிப் பெண் போல்வே துலங்குவான். இவனைப் 'பஞ்சவர்ணக்கிளி' என்றுகூடச் சொல் வார்கள். அவ்வளவு எழிலோடு, ஒயிலாக, சொகுசாக இருக்கும் இவன் வேஷம். அதனாலே 'பஞ்சவர்ணச் சின்னப்பன்' என்ற பெயர் வந்து, பிறகு 'பஞ்சவர்ணம்' என்று திரிந்து, கடைசியில் அதுவே நிலைத்து விட்டது. வீட்டிலே சின்னப்பன்; வெளி யிலே பஞ்ச வர்ணம்.

அது ஒரு காலம். கூத்து என்றால், சாமானியக் கூத்தா? விடிய விடிய எட்டு நாள் ஆடுவார்கள். அரிச்சந்திர நாடகம் மட்டுமா? நல்லதங்காள் சரித்திரம், கிருஷ்ண லீலை, ராம நாடகம், பிரகலாத சரித்திரம் எல்லாம் ஆடுவதுண்டு. சில ஊர்களிலே கூத்தாடி ஜாதி என்று தனியாக இருக்குமோ, என்னவோ; இவர்கள் ஊரில் அப்படி இல்லை. இருபது வேலிக் குடித்தனக்கார வீட்டு முத்துக்கருப்பனும், அதற்கு ஈடு ஜோடியான வீட்டுச் சின்னப்பனுமே கூத்தில் சேர்ந்தார்கள் என்றால், மற்றவர்களைப் பற்றிச் சொல்வானேன்? ஊருக்கு ஊர் 'வளமை' வேறே. 'கூத்தாடி' என்று இழி வாகப் பேசுவது இவர்கள் ஊர் 'வளமை' இல்லை.

இரண்டு பேரும் - முத்துக்கருப்பன், சின்னப்பன் இரண்டு பேரும் - ஒன்றாக நாடகம் படித்தார்கள். முத்துக்கருப்பனுக்குப் பாட்டு வரவில்லை; 'அகடவிகடம்' தான் வந்தது. நரிக்குறவன், எண்ணெய்ச் செட்டி யார், முத்து வியாபாரி, வேதியன், அனு மான், நரசிங்கம் இந்த வேஷமெல்லாம் போட்டு நடிக்க அவன் கற்றான். சின்னப் பனுக்கோ குயிலைப்போலப் பாட்டு வந்தது. மெல்லிய பெண்குரல். ஒல்லியான உடம்பு. நல்லதங்காள், சந்திரமதி, யசோதம்மா, சீதாதேவி இந்த வேஷமெல்லாம் இவனுக்கு வாய்த்தன.

முத்துக்கருப்பனின் தங்கச்சி செங்கமலத் துக்குச் சின்னப்பனிடம் மிகுந்த இஷ்டம். இவனையே கல்யாணம் கட்டிக்கொள்வ தென்று அவள் உறுதிகொண்டு விட்டாள். அவளுடைய இஷ்டத்தைப்பற்றி யாரும் அன்னிதாச் சொல்லவில்லை. அப்பா பழநிச்சாமி, அம்மா அமிர்தம், அண்ணன் முத்துக்கருப்பன் எல்லாருக்கும் அதிலே ஒரு சந்தோஷங்கூட உண்டு.

சின்னப்பன், ஒருத்திக்கு ஒரு மகன். இவனுடைய அப்பா, அம்மா இரண்டு பேரும் போய்விட்டார்கள். வீட்டிலே கூட்டி மெழுக-சோறாக்க-அத்தைக் கிழவிதான் இருந்தாள். செங்கமலத்தைக் கல்யாணம் கட்டிக்கொள்ள இவனுக்கு ஒரு தடையு மில்லை. அப்படியிருந்தும் இவன் என் னவோ ஏனோ சாக்குப்போக்குச் சொல்லிக் கொண்டே இருந்தான். "கடலை விற் கட்டும்", 'மிளகாய் விற்கட்டும்" என்றெல் லாம் சாக்குப்போக்கு. உண்மையில் சின்னப் பனுக்கு இஷ்டமில்லையா, என்ன? அன்னம் போல் அழகாயிருந்த செங்கமலத்தை வீட்டுக் காரியாய் அடைய எவனுக்கும் கொடுத்து வைக்க வேண்டுமே! இல்லை, பரிசுப்பணம் பத்து ரூபாய்க்கும் கல்யாணச் செலவு நூறு ரூபாய்க்கும் கடலையும் மிளகாயுமா விற்றாக வேண்டும்? அதெல்லாம் இல்லை. கல் யாணம் என்றாலே இவனுக்கு என்னவோ ஒரு கூச்சமாயிருந்தது. கல்யாணத்தில்-அது வும் செங்கமலத்தை அடைவதில்-ஆசைதான்.

ஆனால் கூச்சம் காரணமாக அதை நாலைந்து வருஷம் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்துவிட்டான். முட்டாள்தனம்; பெரிய முட்டாள்தனம்! அப்புறம் வீணே விவகாரம் வந்தது; பெரும் பகை மூண்டது. அது தீருமோ-என்றாவது தீருமோ-என்ற நிலையும் ஏற்பட்டது.

செங்கமலத்தை வேறு இடத்தில் கொடுக் கப் பேச்செல்லாம் நடந்தது. அவள் உறுதி யான பெண்; துணிச்சலான பெண். "நான் வெறுங்கழுத்தியாக இருப்பேனே தவிர, வேறொருத்தன் என்னைத் தொட்டுத் தாலி கட்டச் சம்மதிக்க மாட்டேன்" என்று பிடி வாதம் பிடித்துவிட்டாள். வீட்டுக்குச் செல் லப் பெண் அவள். யாருக்கும் அவளை



-தி.ஜ.ர

'பத்திரிகை உலக ஜாம்பவான்' என்று அமரர் தி.ஜ.ர.வைக் குறிப்பிட வேண்டும். அந்த அள வுக்கு அவர் பத்திரிகையுலகிலே புகழ்பெற்று விளங்கியதுடன், பல எழுத்தாளர்களையும் அறி முகப்படுத்தினார்.

'சக்தி' பத்திரிகை வாயிலாகத் தமிழில் 'டைஜெஸ்ட்' முறையை முதன்முதலாக அறிமுகப் படுத்தியவர். பின்னர் தமது மறைவுக்காலம் வரை 'மஞ்சரி' இதழின் ஆசிரியராகப் பணியாற்றி னார். குழந்தை இலக்கிய முன்னோடியாகவும் விளங்கிய அவர் பல நூல்களையும் படைத்து உள்ளார்.

தி.ஜ.ர.வின் எழுத்திலே தரம், திறமை, சுவை இவை இருக்கும். பிறமொழி இலக்கியங்களைத் தமிழில் சுருக்கித் தருவதிலே அவருக்கு நிகர் அவரே எனலாம்.

வற்புறுத்திக் கல்யாணம் கட்டிவைக்க இஷ்டமில்லை. ஆனால், சின்னப்பனை மணக்க மட்டுமே இடமே இல்லாமல் போய்விட்டது. அண்ணனையும் பெற்றோரையும் மீறி இவனை மணக்க, அவ்வளவு துணிச்சல் அவளுக்குத்தான் வருமா? இல்லை, அப்படி வற்புறுத்தி மணந்துகொள்ள இவனால்தான் முடியுமா? ஆனால் ஒன்று; இவனும் வேறு பெண்ணை மனத்தாலும் நினைக்கவில்லை. கல்யாண எண்ணத்தையே விட்டுவிட்டான்.

இதோ இன்று இந்த அந்திவேளை எவ்வளவு மனோகரமாயிருக்கிறது! ஆனந்தமான இந்த அந்திவேளையில், அன்றைய அந்திவேளையைச் சின்னப்பனுக்கு நினைவு வருகிறது. அப்பாடா! என்ன பயங்கரமான அந்திவேளை! இதோ தீபம் வைத்தாயிற்று. மனம் பூரிக்கச்செய்யும் தீபம். அதைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கடவுளை வழிபடுகிறானே இன்று; இந்த மாதிரியா இருந்தது. அன்றைய அந்திவேளை? சந்திரன் இதோ பரிபூரணமாய் மாசற்ற வானத்தில் உதிக்க ஆயத்தமாகிறானே, இந்த மாதிரியா அன்று இருந்தது? இடியும் மின்னலும் சோனாமாரியுமாயிருந்த அந்த அந்திவேளையை நினைத்தாலே, உடம்பு சிலிர்க்கிறது. ஆனாலும் என்ன? அன்று இவனுக்கு அந்த யோசனை-முன்னும் வேலியும் சப்பாத்திக் கள்ளிப்பத்தையும் சூழச் சங்கிலிக் கறுப்பனின் கூந்தல் பனைக்குப் பக்கத்திலே அகப்பட்டுக் கொள்ளும் யோசனை! - எப்படித்தான் தோன்றியதோ? அதுவும் ஒரு நல்ல காலத்துக்குத் தான். நல்லதும் சரி, பொல்லாததும் சரி, உலகத்திலே சாமி துணையால்தான் நடக்கின்றன. அந்தக் கூந்தல் பனைதான் இப்போது எவ்வளவு உயரம் வளர்ந்து விட்டது! கைக்கெட்டும் உயரத்தில் அன்றிருந்த அது, இன்று 'எட்டேணி வெச்சாலும் எட்டாத' உயரத்துக்கு வளர்ந்துவிட்டதே! ஊரிலே எங்கேயிருந்து பார்த்தாலும் கோபுரம்போல் அது தெரிகிறது. இருபது வருஷத்துக்குள் எவ்வளவு உயரம்!

ஆமாம், இருபது வருஷத்துக்கு முன்னால் அதெல்லாம் நடந்தது. சொக்காயி அம்மனுக்குத் தேர்த்திருவிழா தொடங்கியது.

இவர்கள் ஊரிலே எல்லாமே ஒரு விசித்திரம். சொக்காயிக்குப் பிரம்மாண்டமான சட்டத் தேர் கட்ட வேண்டும். அதற்குத் திரைச்சீலை போர்த்திப் பூக்குஞ்சமெல்லாம் தொங்கவிட்டு அலங்காரம் செய்யவேண்டும். பிறகு அந்தத் தேரை இழுக்கலாமா? அது தான் கூடாது. இழுத்தால், யார் பேரிலாவது அம்மனுக்கு ஆவேசம் வந்துவிடும்; 'காலிலே புரியைக் கட்டிக் கடகடன்னு இழுக்கிறானே' என்று அவள் கத்துவாள். தேருக்கு வடம் கட்டினால், தன் காலுக்குப் புரி கட்டியதாக எப்படித்தான் நினைக்கிறானோ அந்த அம்மன்! இந்த ஊர் ஆட்களுக்கு ஏற்றபடி ஓர் அம்மனும் வாய்த்திருக்கிறாள்! இவர்கள் ஒரு வழிக்கும் ஒருவனைப் போகவிடமாட்டார்கள் இல்லையா?

## இரத்தக் கொதிப்பிற்கு

## புதிய மருந்து

இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள், மீன் எண்ணெயை பெருமளவில் உட்கொண்டால், இரத்தக் கொதிப்பு தணிந்து விடுமாம். அமெரிக்காவில் வாண்டர்பில்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரு ஆராய்ச்சியாளர்கள் இதனைக் கண்டுபிடித்துள்ளனர்.

இரத்தக் கொதிப்பைத் தணிய வைப்பதற்கு டாக்டர்கள் கொடுக்கும் வழக்கமான அதே அளவு சக்தியானது மீன் எண்ணெயிலும் இருக்கிறது என்று இந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இதய நோயைத் தடுப்பதற்கான மருந்தாகவே, மீன் எண்ணெய் இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்தது. பழுதடைந்த இரத்தக் குழாய்களைச் சீர்படுத்தி, இரத்தத்தில் கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கக் கூடியது மீன் எண்ணெய்; அன்றியும் இரத்தக் குழாய்களுக்குள் இரத்தம் கட்டிப் போவதை மட்டுப்படுத்தும் திறன் கொண்டதும் ஆகும். ஆனால், இரத்த அழுத்தத்தையும் இது கட்டுப்படுத்தக் கூடியது என்பது இப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அம்மனுடைய பெருந்தேருக்கு, மலைப் பாம்புபோல் நீண்ட இரண்டு வாரைகள்; ஒன்று, நெட்டிவாரை; மற்றொன்று 'கல் வாரை. நெட்டி என்றால் நெட்டி இல்லை; கல் என்றால் கல் இல்லை. இரண்டும் மரந்தான். ஒன்று அதிகமாய்க் கனக்கும்; ஒன்று சற்று லேசாயிருக்கும். அவ்வளவு தான். அந்த வாரைகளைக் கட்டி, நாலு பக்கத்திலும் பக்கத்துக்கு முப்பது நாற்பது பேர் இருந்துகொண்டு, தேரைச் சுமக்க வேண்டும். ஒரு பக்கத்திலே ஒரையடித்தால், மறுபக்கத்து ஆள் எவனாவது இந்தப் பக்கத்துக்கு வரலாமா? வருவானா? மாட்டான்; வரக்கூடாது. நாலு தெருக்காரனுக்கும் வாரைகளின் நாலு மூலையும் பங்கு. இரண்டு வாரைக்கு நாலு மூலை; நாலும் நாலு தெருவுக்குப் பாத்தியம். தேரை ஒவ்வொரு தெருவுக்கும் கொண்டுபோய்த் திரும்ப வேண்டும். அவன் அவன் தெருவுக்குக் கொண்டுபோகும்போது அவன் அவனுக்கும் வெகு குஷி. 'ஜம், ஜம்' என்று அப்போது விம்மிக்கொண்டு அந்தத் தெரு ஆட்கள் தோள் கொடுப்பார்கள். மறு வாரையின் எதிர் மூலை தாழ்ந்துவிடும். தேர் எங்கே சாய்ந்து விடுமோ என்று தோன்றும். சாயாது; சமாளித்து விடுவார்கள். இப்படி எத்தனையோ வருஷம் எத்தனையோ தடவை நடந்திருக்கிறது. சின்னஞ் சிறு குழந்தையாயிருந்தது முதல் பல வருஷம் இதைச் சின்னப்பன் பார்த்திருக்கிறான். ஆனால்

என்னவோ அந்த வருஷம் அந்தத் தடவை அது சாய்ந்தே விட்டது. என்ன கோளாறோ! அம்மனுக்கு என்ன கோபமோ!

''மனிசங்களுக்குப் புத்தியும் ஒத்துமையும் இல்லாட்டி, அம்மன் என்ன செய்யும்?'' என்று ஏளனமாய்ப் பேசினான் முத்துக் கருப்பன்.

அதிலிருந்து தொடங்கியது பெரிய சச்சரவு. வடக்குத் தெரு ஆட்களின் மேல் குற்றம் இல்லை என்பது அவன் எண்ணம். அவன் வடக்குத் தெருக்காரன்.

''எதுவும் கடவுள் செயல்தாம்ப்பா. மனிசனுக்கு ஏன் புத்தியும் ஒத்துமையும் இல்லாமெப் போகுது? தானிங்கிற அகம் பாவத்தினாலேதான்'' என்றான் இவன். சாதாரணமாகத்தான் இதை இவன் சொன்னான். இவன் தெற்குத் தெருக்காரன் என்றதனால் அல்ல.

''தானும் தன் பரிசனமும் செய்யறது சரியாய்த் தான் படுமப்பா எவனுக்கும். தன் குத்தம் தெரிஞ்சவன் உலகத்தைக் குத்தம் சொல்லமாட்டான்''. இது முத்துக்கருப்பனின் பதில்.

பேச்சு வளர்ந்தது. மனிதனுடைய தர்க்கங்களின்போக்கே வெகு விநோதம். உணர்ச்சி தெளியாதபோது, அறிவும் தெளியாது. நியாய அநியாயங்களை அறிவு மாத்திரம் தனித்தியங்கிக் கண்டுகொள்ளாது. காரண காரியங்களைத் தர்க்கமே நிலை நாட்டி விடுவதாக எண்ணுகிறார்களே. எவ்வளவு மதியீனம்!

இவனுக்கும் முத்துக்கருப்பனுக்கும் நேர்ந்த விவகாரம் எங்கெங்கோ தாவியது. அம்மன் தேர் சாய்ந்தபோது, நல்லவேளையாக எவருக்கும் எந்தவித விபத்தும் நேரவில்லையே, அதைப்பற்றி இருவரும் சந்தோஷப்படவில்லை. அம்மன் தேர் சாய்ந்ததோ, இல்லையோ! இவர்கள் மனம் சாய்ந்து விட்டது; கோணிவிட்டது. அதற்குத் தெருவில் வந்தா சாயவேண்டும்.?

இதற்கேற்றாற்போல, அந்த வருஷம் ராஜாவேஷ ராமலிங்கம் திடீரென்று காலமடைந்து விட்டான். ஆலமரத்தடியில் அம்மன் தேருக்குமுன் சத்தியநெறி அரிச்சந்திர நாடகம் போடுவதாக ஏற்பாடு நடந்திருந்தது. ராஜா ராமலிங்கந்தான் போய்விட்டானே? யார் இப்போது அரிச்சந்திர வேஷம் கட்டுவது? இவனே ராஜா வேஷம் கட்டினால் போகிறது என்று எவனோ சொன்னான். இவனும் சரி என்றான். ராஜா வேஷத்திலும் பெயர் எடுப்பதில் இவனுக்குக் கொஞ்சம் ஆசையும் தட்டியது.

''ஒரே நாள் மயான காண்டம் மட்டுந்தானே ஆடப்போறம்?'' அதிலே ராஜா வேஷம் பெரிசா வேண்டியதில்லே. பேருக்கு ஓர் ஆள் இருந்தாப் போதும்'' என்றான் முத்துக்கருப்பன்.



''ஏன்? அதில் சந்திரமதி - அரிச்சந்திரன் தருக்கம் நடக்க வேணாமா? அரிச்சந்திர வேஷத்துக்கு நல்ல ஆள் இருந்தாத்தானே அது சோபிக்கும்?'' என்றான் இவன்.

''அது சரிதாம்ப்பா. முக்காவாசி நேரம் சந்திரமதி புலம்பல்' இருக்குது. அதெக் குறைக்க முடியாது. தருக்கத்தைச் சுருக்க முடிச்சுப்பிடுவம்'' என்றான் முத்துக் கருப்பன்.

இவன் பிடி கொடுக்காமல், ''பாக்கலாம். இப்ப என்ன அதுக்கு?'' என்று மையமாகப் பதில் சொல்லி வைத்தான்.

அம்மன் தேர் சாய்வதற்கு முன் நடந்தது. இந்தப் பேச்சு. இதற்கும் இப்போது அம்மன் தேர் சாய்ந்ததற்கும் ஏனோ முத்துக்கருப்பன் முடிபோட்டான்.

''குத்தம் செஞ்சவன் யாரு? நியாயத்தெக் கண்டவன் யாரு?'' என்று இவன் சொன்னதற்குப் பதிலாக, ''நீதாம்பா குத்தமே செய்யாதவன்; நியாயத்தெக் கண்டவன். 'ராஜா வேஷமா? நானே கட்டறேன்; ராணி வேஷமா? நானே கட்டறேன்' என்கிறே பாரு, அதனாலே'' என்று கிளிக்கோடு பாய்ந்தான் முத்துக்கருப்பன்.

அது என்னவோ இவன் மனத்தை உறுத்திற்று. ''திறமை இருக்கிறவன் எந்த வேஷமும் கட்டலாம். நாக்கெச் சுட்டுப் போட்டாலும் பாட வராதவன் இல்லே அதுக்குப் பயப்படணும்?'' என்று இவனும் கொஞ்சம் குத்தலாகவே பேசினான்.

''என்னமோ பொம்பிளை வேஷம் போட்டுட்டா, எல்லாம் முடியும்னு நெனச்சிட்டையோ? ராஜா வேஷம் லேசில்லே, தம்பி. அம்மன் தேரெத் தூக்கிக்கிட்டு எம்பிக் குதிக்கிறமாதிரி இல்லே அது!'' என்று துடுக்காய்ச் சொன்னான் முத்துக்கருப்பன்.

இப்படியே மேல் ஸ்தாயிக்குப் போய் விட்டது பேச்சு. ஆண்டவன் புண்ணியத்தாலே அடிதடிதான் நேரவில்லை. இந்த ஊர் ஆட்களுக்குள் அடிதடி என்றால், மண்வெட்டியும் அரிவாளும் வந்துவிடுமே. ''ஒரே வெட்டாய் வெட்டுவேன்; ஒரே குத்தாய்க் குத்துவேன்'' என்றெல்லாம் ஆவேசம் வந்தது போல் குதிக்கத் தொடங்கிவிடுவார்களே! இவனும் இந்த ஊர்க்காரன்தான். ஆனால் இந்த அநாகரிகத்தைக் கண்டாலே, இவனுக்கு எரிச்சலாயிருக்கிறது. முத்துக்கருப்பன் அப்படியில்லை. அடிதடி வரைக்கும் அவன் வந்திருப்பான். அதுவும் சிலம்ப விளையாட்டிலே நாலடி போட்டு அவனுக்கு ரொம்பப் பழக்கம். ஆனால் இரண்டு கையும் தட்டினால்தானே சத்தம் கேட்கும்? இவன் சண்டைக்குத் தயாரில்லை. ,வந்த சச்சரவு பேச்சோடு நின்றது. ஆனால் சாதாரணப் பேச்சில்லை. ஒருவன் முகத்தில் மற்றவன் விழிப்பதில்லை என்ற சபதம் வரைக்கும் போய்த்தான் நின்றது.

அந்த வருஷத்து நாடகம் நின்றது. முத்துக்கருப்பன் குடும்பத்துக்கும் இவன் குடும்பத்துக்கும் உள்ள நேசம் அடியோடு அறுந்தது. செங்கமலத்தை இவன் கல்யாணம் கட்டிக் கொள்ளலாம் என்ற ஆசையிலும் மண் விழுந்தது.

அவள் நினைப்பை இவன் மறக்க முடியவில்லை. மறக்க முழு முயற்சியும் செய்தான். அது எப்படி முடியும்?

சின்னப்பனின் மனம் ஒரேயடியாய் ஒடிந்து போயிற்று. ஒரு வேலையும் ஓடவில்லை.

இதற்கு முன்னெல்லாம் டவுனிலே என்ன டிராமா நடந்தாலும் தவறாமல் போய்ப் பார்த்து வருவான். பெரிய பாட்டுக்காரர் யாராவது பாடுகிறார் என்றால், எல்லா வேலையையும் போட்டுவிட்டு ஓடுவான். ஒரு பாட்டை ஒரு தடவை கேட்டால் அதை அப்படியே மனத்தில் முடி போட்டுக்



## அண்ணாவின் இசை ஞானம்

*கர்நாடக சங்கீதத்தில் அறிஞர் அண்ணாவுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு, எம்.எல். வசந்த குமாரி, எம்.எஸ். சுப்புலட்சுமி, என்.சி. வசந்தகோகிலம், சி.எஸ். ஜெயராமன், சீர்காழி கோவிந்த ராஜன், மதுரை சோமு, கே.ஆர். ராமசாமி, எம்.எம். தண்டபாணி தேசிகர், தியாகராஜ பாகவதரின் இசை, கலைவாணர் என். எஸ். கிருட்டிணனின் வில்லுப்பாட்டு இவற்றை விரும்பிக் கேட்பார்.*

*திரு. டி. என் இராசரத்தினம் அவர்களின் நாதசுரமும் கேட்பார். ஓவியம் வரைவதில் விருப்பம் அதிகம். வரைந்த ஓவியங்களை நண்பர்களிடம் காட்டி, அதைப் பற்றி எழுந்த சர்ச்சைகளை நகைச் சுவைபட தம்பிக்குக் கடிதத்தில் எழுதியிருக்கிறார்.*

*மாநாடுகளில் ஓவியக் கண் காட்சி நடத்துவதில் அண்ணா எப்போதும் நாட்டம் உள்ளவர். ஓவியக் கலையைப் பிரசாரத்திற்கு உபயோகப்படுத்திய ஒரே தலைவர் அண்ணா அவர்கள் என்றால் மிகையாகாது.*

கொண்டு விடுவான். புதுப் புதுப் பாட்டு, புதுப் புது மெட்டு, அபூர்வ ராகங்கள் இவற்றிலெல்லாம் இவனுக்குப் பெரிய மோகம். இப்போதே ஒன்றிலும் இவன் மனம் செல்லவில்லை. பழைய பாட்டுக்கள் கூட மறந்து வந்தன.

செங்கமலத்தின் ஞாபகத்தைக் கைவிட எவ்வளவுக்கு எவ்வளவு முயன்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு அவள் ஞாபகம் வரவர அழுத்தமாக அவன் மனத்தில் வளர்ந்தது. எந்நேரமும் அவன் நினைப்புத் தான். சற்றுப் பித்துப்பிடித்தவன் போலானான். கொஞ்சம் அசடு தட்டியது. வேறொருவனாயிருந்தா முழு அசடாகியிருப்பான். பைத்தியமே பிடித்திருக்கும். இவனாயிருக்கக் கொண்டு சமாளித்துக் கொண்டான். என்ன இருந்தாலும் நாலெழுத்துப் படித்த பிள்ளை இல்லையா?

ஆனால், ஒன்று; ஒவ்வொரு நாளும் செங்கமலத்தை எட்டி இருந்தாவது ஒரு முறை கண்ணால் பார்த்தாக வேண்டும். நாள் தவறாமல் வடக்குத் தெருவுக்குப் போவான். அக்கம் பக்கம் நாலு வீடுகள் தள்ளி நின்றுகொண்டு, ஏதோ பெரிய விஷயம் பேசுவதுபோல் யாருடனாவது வம்பளப்பான். உண்மையில் இவன் கண் பெரிய வீட்டு வாசலிலே பதிந்திருக்கும். இவன் வந்திருப்பது தெரிந்துதானோ என்னவோ, அவள் வெகு நேரம் வரைக்கும் வாசல் பக்கமே வரமாட்டாள். தவறி ஒரு முறை வந்தாலும் சுடர்விடும் கண்களால் இவனைக் குடித்து விடுவதுபோலப் பார்த்து, உடனே உள்ளே ஓடிவிடுவாள். அவளுக்கு இவனைக் கண்டாலே பிடிக்கவில்லையோ? 'இவனைத் தவிர வேறு யாரையும் மணக்க மாட்டேன்' என்று அவள் சொல்வதாக ஊரார் சொல்வதெல்லாம் வெறும் பேச்சோ? அது எப்படியானாலும் அவளைப் பார்த்தது போதும்; அது போதும் இவனுக்கு. அன்றைத் தினம் பலன் பெற்று விட்டது. இப்படியே பல நாள் போய்க் கொண்டிருந்தது. பைத்தியக்காரன்! பிறருக்கு இவன் விஷயம் தெரியாதென்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தான். ஆனால், ஊர் முழுவதும் இது தெரிந்து விட்டது.

இப்படிக் காலத்தை இவன் ஓட்டிக் கொண்டிருந்தபோதுதான் ஒரு நாள் அது நடந்தது—இவன் வாழ்க்கையிலே ஒரு நாளும் மறக்க முடியாத அது. ஒவ்வொருவனுக்கும் வாழ்க்கையிலே அது மாதிரி ஒன்றிரண்டு நிகழ்ச்சிதான் நேரும். வாழ்க்கையிலேயே மிகக் குதூகலமான அளவற்ற ஆனந்தம் அளித்த பரபரப்பு நிறைந்த ஒரு நிகழ்ச்சியோ-எந்நாளும் மறவாத இன்பம் நல்கிய ஒரு நிகழ்ச்சியோ-பயமும் அதன் நடுவே தீரமும் தோன்றிய ஒரு நிகழ்ச்சியோ - ஒவ்வொருவனுக்கும் ஒன்றிரண்டுதான் நேரும். இந்த அத்தனை உணர்ச்சிகளும் சேர்ந்தாற்போல இவனிடம் ஊறச் செய்த நிகழ்ச்சி அது.

பெரிய வீட்டுப் பழநிச்சாமிக்கு வயது ஐம்பதுக்கு மேல் ஆகியிருந்தது. அப்போது அவருக்கு மாலைக் கண் வந்துவிட்டது. சூரியன் மலைவாயில் விழுந்தால், அவருக்குக் கண் தெரியாமல் போய்விடும். ஆனால் தேகத்திலே நல்ல தெம்பு இருந்தது. பரபர என்று ஏதாவது வேலை செய்து கொண்டேயிருப்பார். குடுகுடு என்று எங்கேயாவது நடப்பார், துறுதுறு என்று அலைவார். ஆனால் எதற்கும் கைக்குக் காவலாக ஒரு கோலைப் புதிதாக எந்நேரமும் இப்போது வைத்துக் கொண்டார்.

அன்று வெயில் சாயும் தருணம். வடக்குத் தெருவுக்கு இவன் போனான். வழக்கப்படி வம்பு பேசிக் கொண்டிருந்தான். திடீரென்று பெருங்காற்றொன்று வீசி மண்ணை வாரித் தூற்றியது. வானம் ஒரேயடியாய்க் கறுக்கத் தொடங்கியது. கடலை உலர்த்தியவர், வரகு உலர்த்தியவர், எண்ணெய்க்குக் கொப்பரை உலர்த்தியவர் எல்லாரும் பரபரவென்று அவற்றை அள்ளத் தொடங்கினார்கள். பெரிய வீட்டு வாசலில் செங்கமலமும் அவள் தாயும் வந்து நின்று, இப்படி எதையோ வாரியபடி ஏதோ பேசிக் கொள்ளத் தொடங்கினார்கள். அவர்கள் குரலிலே கவலை தொனித்தது. பாராமுகமாக அந்தப் பக்கம் ஏதோ காரியமாய்ச் செல்வதுபோல் பாசாங்கு செய்தபடி இவன் அவர்கள் பேச்சைச் சற்று நெருங்கிக் கேட்டான்.

''அப்பா வயல் வெளிப்பக்கந்தான் போனாங்க. நான்தான் சொல்றேனே'' என்றாள் செங்கமலம்.

''கருப்பனும் அங்கேதானே போயிருப்பான்?'' என்று கேட்டாள் தாய்.

''இல்லேம்மா, இல்லே. அண்ணன் எங்கேயோ மாடு பார்க்கப் போறேன்னு அடுத்த ஊருக்குப் போச்சு.''

''அப்படின்னா அவுங்களெ இப்ப யார் போய் அழைச்சுவரது? இந்த வயசுக் காலத்திலே, இப்பிடிப் பண்றாங்க. சூரியன் மறெஞ்சாக் கண்ணோ தெரியாது. மழையோ எட்டூருக்குக் கறுத்து வருது. பொழுதிருக்கச்சே வீட்டுக்குப் போவோம்னாவது வருவாங்களா? போன எடமோ காடும் புதரும் கறுப்பண்ண சாமியும் சூழ்ந்து கிடக்கும். எங்கே அகப்பட்டுக்கிட்டுத் தவிக்கிறாங்களோ! தவிக்கட்டும். நாம்ப என்ன பன்றது? அவுங்க அவுங்க தலையிலே பிரமன் எழுதியதுக்கு அவுங்க அவுங்க தானே அநுபவிக்கணும்?''

இவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது. 'ஐயோ பாவம்!' என்று ஒருகணம் நினைத்தான்.

அஸ்தமித்தால் அந்தக் கிழவருக்குக் கண் தெரியாது. இவனுக்கோ அஸ்தமித்தால், இருட்டிலே மிகுந்த பயம். அறிவாளிதான்; நல்ல பாட்டுக்காரன்தான்; நாலு பேர் புகழும் நடிகன்தான். ஆனால் மிக மிகப் பயந்தாங்கொள்ளி.

''யார் எக்கேடு கெட்டால் நமக்கென்ன?' என்று ஒரு கணம் எண்ணினான். அடுத்த கணமே, இந்த எண்ணம் மாறியது. இவர் செங்கமலத்தில் அப்பா இல்லையா? செங்கமலத்தின் கண்ணிலிருந்து ஒரு சொட்டு நீர் உதிர்ந்தால், அது இவனுக்குத் தாங்காத வேதனை தரும். அதற்கு இவன் இடங் கொடுக்கலாமா? கூடாது! கூடாது.

தன்னை மறந்த சிந்தனையோடு நடந்தான்.

பெரிய வீட்டு வயல்வெளிப் பக்கம் போகவேண்டும் என்று நினைத்து இவன் நடக்கவில்லை. ஆனால், அந்தத் திசை இவன் காலுக்குத் தெரியும். அது தானாகவே அந்தத் திசை நோக்கி நடந்தது.

கறுப்பண்ணசாமி கோயிலைத் தாண்டியாயிற்று. சுடுகாட்டைக் கடந்தாயிற்று. காட்டாற்றங் கரையை அடையும்போது, வெள்ளெழுத்து மறையும் நேரம். இன்னும் ஒரே ஒரு தூற்றல்கூட விழா விட்டாலும் வானம் குமுறத்தொடங்கிவிட்டது. இரண்டு பாகை தூரத்தில் உள்ளவர்களை ஆரோக்கியமான கண்ணுள்ளவர்களே அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி வெளிச்சம் மங்கிவிட்டது.

எட்டுத் திசையிலும் ஆளரவம் துளிக்கூட இல்லை. காக்கை குருவிகளின் சந்தடியும், ஆடு மாடுகளின் மணியோசையும் முற்றும் மங்கிவிட்டன. இடியின் குமுறலும் காற்றின் சீறலுந்தான் கேட்டன.

> இலட்சியவேகம் என்பது, நாம் எவ்வளவு உயரத்தை எட்டிப் பிடித்தாலும் திருப்தி ஏற்படாதது. அது உள்ளத்தில் எழும்பும் மிகவலிமையான ஒரு வேட்கையாகும்.
>
> —மாக்கியவெல்லி

மற்ற நாளாயிருந்தால் இப்படித் தன்னந்தனியே காட்டுப் பக்கத்தில் அகப்பட்டுக் கொண்டதற்கு இவன் பெருந் திகில் அடைவான். இன்று இந்த அந்திவேளையில் இவனுக்குப் பயமே இல்லை; துளியும் பயமில்லை.

நரசிம்ம மூர்த்தி இந்த மாதிரி அந்திவேளையிலே தான் அவதரித்திருப்பார். அப்படி இருந்தது இது. ஆனாலும் என்ன? நரசிம்மத்தைக் கண்டு இரணியன் தான் பயப்பட வேண்டும். பிரகலாதனுக்கு ஏது பயம்? ஏன் பயம்?

'பழநிச்சாமி எங்கேயாவது தென்படுகிறாரோ?' என்று கவனிப்பதற்காக, இடமும் வலமும் முன்னேயும் இவன் திரும்பிப் பார்த்தான். அவர் இவன் கண்ணுக்குத் தென்படவில்லை. மார்பளவு தண்ணீருள்ள ஆற்றைக் கடந்து, மறு கரைக்குப் போனால், கூப்பிடு தூரத்தில் பெரிய வீட்டு வயல் வெளி. 'அங்கேயும் போய்ப் பார்த்துவிடலாம்' என்று இவன் எண்ணி, நீரில் இறங்கினான்.

''யார் அங்கே? யார் அது?''

சின்னப்பன் திடுக்கிட்டுத் திரும்பினான். ''இவர் அவர் குரல்தானோ? அது மாதிரிதான், இருக்குது. இந்தப் பெரியவங்களே இப்படித்தான். நீரில் ஆள் இறங்கும் சலசலப்பு, காலடியின் அரவம், எட்டத் தோணும் நிழல் ஆட்டம், பேச்சுக் குரல் எதையும் உத்துக் கேட்டு, கூப்பிடத் தொடங்கிடுவாங்க!''

ஆனால், அந்தக் குரல் வந்த இடத்தை இவன் சட்டென்று கண்டுபிடிக்க முடியவில்லை.

வைக்கோலைக் கீழே பட்பட்டென்று தட்டிக் கொண்டே, மறுபடியும் அவர், ''யார் அது? கூப்பிடறது காதிலே விழல்லே?'' என்று கம்பீரமாகக் கேட்டார்.

ஆற்றங்கரையில் ஒரு மண்மேட்டுக்கு அருகே அவர் உட்கார்ந்து கொண்டிருந்ததை இவன் கண்டு கொண்டான்.

''நான்தான்'' என்றான். அது என்னவோ வழக்கமான குரல் இல்லை. இவன் தொண்டையிலே ஏதோ ஒரு கரகரப்பு ஏற்பட்டது. அதுவும் ஒரு நன்மைக்குத்தான்.

கண்ணோ தெரியவில்லை; ஆள் பேர் இல்லாத காட்டுப்பக்கத்திலே தனியாக இருக்கிறார். ஆனால் அவருடைய கம்பீரம் மாத்திரம் போகவில்லை.

''நான்தானின்னா? கோடி வீட்டுக் குப்பனா, மேலத்தெரு மருதையா?''

''இல்லெ. நான்தான்''

''அட எளவு! நம்ம கருப்பன்தானா?''

இவன் அதற்குப் பதில் சொல்லாமல், ''வாங்க போவோம். கோலை இப்பிடிக் கொடுங்க. ஒரு முனையெ நீங்க பிடிச்சுக்குங்க'' என்றான்.

''அடேயப்பா! நான் இன்னும் அப்பிடிக் குருடாப் போகல்லே. நீ முன்னாலே நட, நான் பின்னாலே வர்றேன்.''

இருவரும் ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். இரண்டெட்டுப் போவதற்குள், சடசட வென்று மழை பொழியத் தொடங்கியது. மழை என்றால் இப்படி அப்படிப்பட்ட மழையல்ல. சிறு சிறு கூழாங்கற்களைக் கூடை கூடையாக வாரி யிறைப்பதுபோன்ற மழை. ஒவ்வொரு மழைத் துளியும் சுள்ளென்று உடம்பிலே சரம்போல தைத்தது. எங்கும் ஒரே காரிருள் சூழ்ந்தது. தடமே தெரியவில்லை. முள்ளையும் கல்லையும் பாராமல் கருப்பண்ணசாமி தோப்பையே இலக்காக வைத்துக்கொண்டு இவன் நடந்தான். பின்னாலே வந்த கிழவர், ''காலைக் கொஞ்சம் எட்டுப்போடு, தம்பி'' என்று சொல்லி, கைத்தடியை டப் டப் என்று தட்டிக்கொண்டே நடந்தார்.

எதிரே ஒரு பெரிய கள்ளி வேலி வந்து சேர்ந்தது. அதில் வழி எங்கே என்று தெரியாமல் இவன் தயங்கி நின்றான்.

''என்ன, தம்பி, தயங்குறே? வேலியா? செத்தெ ஒதுங்கிக்கோ. வழி பண்றேன்'' என்றார் கிழவர். இவன் நகர்ந்தான். கோலைப் படீர் படீர் என்று வேலியிலே அவர் இரண்டு போடு போட்டார். கள்ளி நொறுங்கிச் சிதறி வழி பிறந்தது.

''நட'' என்றார் கிழவர்.

வைரம் மங்கிய வானச்சேலை பளார் என்று இரண்டாகக் கிழிந்தது போல ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்கு ஒரு மின்னல் பாய்ந்தது. உடனே சீறிய சிங்கம்போல் கரமுர கரமுர என்று பேரிடி ஒன்று உறுமியது.

மின்னல் ஒளியை வேறு சமயங்களில் கண்டால், இவன் நடுங்குவான். இப்போது, அதைக் கண்டு இவன் மகிழ்ந்தான். மின்னல் தோன்றிய கணத்தில், பளிச்சென்று வெகு தூரம் தடம் தெரியும். மின்னலை 'ஆண்டவன் போட்ட விளக்கு' என்றே இவன் எண்ணினான். திரும்பத் திரும்பச் சிறிது நேரத்துக்கு ஒருதரம் மின்னிக்கொண்டேயிருந்தது. கிழவரின் கோலுதவியால் வேலிகளை முறித்துக்கொண்டும் மின்னொளியிலே வழி கண்டுகொண்டும் இவன் நடந்தான்.

வழிநெடுக கிழவர் ஏதாவது பேசிக் கொண்டே வந்தார்.

''ஏண்டா தம்பி, அந்தச் சின்னப்பனோடே இன்னும் ஏதுக்குடா வருமம்?''

''நாடகமே நின்னுபோச்சே உன்னாலே தானே?''

''செங்கமலத்தெ நெனச்சாத்தான் மனசுக்குச் சங்கடமா இருக்குது. அதெக் கன்னிப் பொண்ணாவே வெச்சிடுவதா?''

''அது என்னவோ அவனெத் தவிர வேறே யாரையும் கட்டிக்கமாட்டேன்னு பிடிவாதமா நிக்கிது!''

இவன் சரியாய்ப் பதிலே சொல்லவில்லை. 'உம்' 'ஆம்' என்று முனகிப் பூசி மெழுகினான். தன் குரல் தெரிந்துவிடக் கூடாதே என்று ஒருபுறம் பயம்; அவருடைய உள்ள நிலையை அறிந்து இவன் அடைந்த உள்ள நெகிழ்ச்சியால் ஏற்பட்ட தொண்டையடைப்பு மறுபுறம்.

கிழவரை இன்று இவன் போய் அழைத்து வராவிட்டால், அவர் கதி என்ன ஆகியிருக்குமோ?

> சிந்தித்துத் தெளிவுபெறாது கற்பது மனித உழைப்பை வீணடிப்பதாகும். கல்வியின் துணையின்றிச் சிந்திப்பது ஆபத்தானதாகும்.
>
> —கன்பூசியஸ்

இருவரும் உடம்பெல்லாம் சொட்டச் சொட்ட மழையில் நனைந்துவிட்டார்கள். இவனுக்கு வெடவெட என்று நடுங்கியது. இந்த நிலையிலும் இவனுக்கு ஓர் ஆனந்தமே ஏற்பட்டது.

இப்போது சங்கிலிக் கறுப்பனின் கூந்தல் பனையருகே வந்தாயிற்று.

பளீர் என்று ஒரு மின்னல் மின்னியது. பக்கத்திலே புளிய மரத்தில் கட்டித் தொங்கிய இரும்புச் சங்கிலி அறுந்து விழுவதுபோல் தோன்றிற்று. ஐயோ! சங்கிலி விழுந்தால், ஊரைக் கறுப்பன் அதம் பண்ணிடுவானே'' என்று சின்னப்பன் வாய்விட்டுக் கத்திவிட்டான்.

''யாரப்பா நீ? முத்துக்கருப்பன் இல்லே போலிருக்குதே!'' என்றார் கிழவர்.

''ஊம்! ஊம்!'' என்றே இவன் முனகினான்.

இனி வழியைப்பற்றிப் பயமில்லை. இருபுறமும் தேர்க்கள்ளிகள் அணிவகுத்த வீரர்கள் போல் நிற்கும் பெரிய வண்டிச் சுவட்டுக்கு வந்தாயிற்று. நடந்தார்கள் இருவரும்.

''ஊருக்குள்ளே வந்திட்டோம் போலிருக்கே.''

''ஆமாம்.!''

''வண்டிச் சுவடா?''

''ஆமாம்.''

கொஞ்ச நேரத்தில் எதிரே யாரோ விளக்கோடு வருவது சிறிது தூரத்தில் தெரிந்தது.

அவன் சட்டென்று பின்வாங்கி ஒரு மரத்தடியில் பதுங்கிக் கொண்டான்.

வந்தவன் முத்துக்கருப்பன்தான். தகப்பனை ''வாங்க அப்பா!'' என்று சொல்லி அழைத்தான்.

''ஓ நீதானா?''

''ஆமாம், வாங்க.''

நல்லவேளையாய்ப் போயிற்று!'' என்று இவன் நினைத்தான். 'தான் செய்த காரியம் அவர்களுக்குத் தெரியாமல் போனதே நல்லது' என்று எண்ணினான். தனியே வீடு போய்ச் சேர்ந்தான்.

அன்று அந்த அந்திவேளையில், அவன் செய்த காரியம் மட்டும் நினைக்கும்போதெல்லாம் அவனுக்குப் பெரிதும் இன்பம் அளித்தது. அதை யாரிடமும் சொல்வதில்லை என்று உறுதி பூண்டான்.

அடுத்த நாளே இவனுக்குக் குளிர் எடுத்துக் காய்ச்சல் அடித்தது. இரண்டு மூன்று நாளில் ஜன்னிகூடக் கண்டுவிட்டது. அப்போது என்ன என்னவோ உளறியிருக்கிறான்.

''ஏ செங்கமலம்! உங்க அப்பனைக் காப்பாத்தினது யாரு? நான்தானே! சங்கிலிக் கறுப்பன் சங்கிலி அறுந்து போச்சு! ஊரை அதம்பண்ணப் போறான், பாத்துக்கோ. நீ என்னெக் கலியாணம் கட்டிக்கமாட்டே, செங்கமலம்?'' இப்படியெல்லாம் பிதற்றல்.

யார் செய்த புண்ணியமோ? காய்ச்சல் ஒன்றிரண்டு நாளில் குறைந்தது. நல்ல தூக்கம் வந்தது. தூங்கினான்.

செங்கமலத்தைப் பற்றியே என்னவோ கனவு. ''ஏ செங்கமலம் ... நீ... நீ... நீ... எங்கே? எங்கே இருக்கே!'' என்று உளறிக் கொண்டே விழித்தெழுந்தான்.

என்ன ஆச்சரியம்! பக்கத்திலே செங்கமலம் இருந்தாள். ''இதோ இருக்கேனே, மனசெ அலட்டிக்காதிங்க. தூங்குங்க'' என்றாள்.

''நீயா? நீயா?''

''ஆமாம். நான்தான் இதோ அண்ணன் நிக்குதே! பாருங்களேன்''

முத்துக்கருப்பன் கண்களிலே நீர்ததும்ப, ''சின்னப்பா, நான் இல்லே பெரிய வீட்டுப் புள்ளெ; நீதான்! பெரியவரெக் காப்பாத்தியவன் நீ. இனிமே நீ எங்கவீட்டுப் புள்ளெ'' என்றான்.

உணர்ச்சி மிகுதியால், சின்னப்பனுக்குச் சிறிது களைப்பு ஏற்பட்டது. மீண்டும் தூங்கிவிட்டான்.


இவ்விதமாகச் சமரசம் ஏற்பட்டது. சில நாளில் சின்னப்பன் பரிபூர்ண குணம் அடைந்தான். அடுத்த மாதம் முகூர்த்த மாதம். அதில் சின்னப்பனுக்கும் செங்கமலத்துக்கும் திருமணம் நடந்தது.

இதோ வீட்டிலே இந்த அந்திவேளையில் இன்பம் தோன்றத் திருவிளக்கேற்றி வைத்திருப்பவள் அந்தச் செங்கமலந்தான். சற்று நேரத்தில் முத்துக்கருப்பன் வரப்போகிறான், 'இந்த வருஷம் என்ன நாடகம் போடுவது?'' என்று கேட்பதற்காக!

நரசிங்க நாடகந்தான் போடவேண்டும். நரசிங்கம் தோன்றியது போன்றது. அந்த அந்திவேளை. பிரகலாத வரதர் காட்சியளிப்பது போன்றது இந்த அந்திவேளை. அந்த மூர்த்தியின் இரண்டு கோலங்களையும் விமரிசையாகக் காட்டிவிட வேண்டும் அந்த நாடகத்திலே.

(பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்ட, 'மஞ்சள் துணி' என்ற நூலிலிருந்து)

## புதுக்கோட்டை மாவட்டத்தில்



# கல்லில் கலைவண்ணம்

கல்லை ஆயுதமாகக்கொண்டு தனது வாழ்க்கையைத் தொடங்கிய மனிதன் காலப் போக்கில் தனது கற்பனைத் திறனையும், வாழ்க்கைச் சுவைகளையும், நினைவுகளையும் அதில் பதித்து வைத்தான். உள்ளத்தில் அரும்பிய கலை உணர்வு, கல்லில் கலை வண்ணம் கொண்டது. இறைவனுக்கு எத்தனை எத்தனையோ உருவங்கள் படைக்கப் பட்டன. அப்படிப் படைக்கப்பட்ட திருவுருவங்களுக்குப் பல்லாயிரக்கணக்கான கோயில்கள் எழுப்பப்பட்டன. இந்தக் கோயில்களும், அவற்றில் காணப்படும் சிற்பங்களும் நமது தமிழ்ச் சமுதாயத்தின் உயர்ந்த இலட்சிய வாழ்க்கையையும், பண்பாட்டுச் சிறப்புகளையும், கலைத்தொழில் நுட்பத் திறனையும் புலனாக்குகின்றன. மேலும், அவை ஒவ்வொன்றும் தமிழகத்தில் கோலோச்சிய பண்டைய பேரரசர்களின் வரலாறு கூறும் காலப் பெட்டகங்களாகவும் விளங்குகின்றன. இப்படி மலர்ந்த சிற்பங்களுள், கட்டுமானங்கள் ஆகியவற்றை எல்லாம் கணித்து, அளந்து, அவற்றிற்கு இலக்கணம் வகுத்து வைத்தனர் தமிழ்நாட்டுச் சிற்ப வல்லுநர்கள். இதற்கான விதிமுறைகளை ஆகம நூல்களும், வஸ்து சாஸ்திரங்களும் எடுத்துரைக்கின்றன.


''கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற பழக்கமுள்ள தமிழ் நாட்டில் பல்லாயிரக்கணக்கான கோயில்கள், காணப்பட்டபோதிலும் ஒரு சில இடங்களில் உள்ள பெரிய கோவில்களும், அவற்றில் காணப்படும் சிற்பங்களுமே நமக்கு அறிமுகமாகி உள்ளன. ஆனால் நமது நாட்டின் மூலை முடுக்குகளெல்லாம் பரந்துகிடக்கும் எண்ணற்ற கலைச் செல்வங்கள் நமது கவனத்திலிருந்து விலகியே நிற்கின்றன. இது போன்ற கோயில்கள் பல பகுதிகளில் காணப்படுகின்றன.

தமிழகக்கோயில் கட்டடக்கலை வரலாற்றில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கலைச் சின்னங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. பாண்டி நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் எல்லைப் பகுதியாகப் புதுக்கோட்டை விளங்கியதால், தமிழகத்தை ஆண்ட அத்துணை வம்ச அரசர்களுக்கும் அது அரசியல் போர்க்களமாக விளங்கியது. அதேபோன்று, அவர்களது கலையார்வத்தை வடித்து வைக்க சோதனைக் களமாகவும் விளங்கியது. இப்பகுதியில் ஆட்சி செலுத்திய பாண்டியர், பல்லவர், சோழர், விஜயநகரமன்னர்கள், நாயக்கர்கள் ஆகிய பல வம்ச அரசர்கள் எடுப்பித்த நூற்றுக்கணக்கான கோயில்கள் இங்கு காணப்படுகின்றன.

மரங்கள் போன்ற அழியும் பொருள்களில் கோயில்கள் கட்டுவதை விடுத்து, மலையைக் குடைந்து குகைக்கோயில் எடுக்கும் பழக்கத்தை கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் மகேந்திரவர்மப் பல்லவன் தமிழகத்தில் அறிமுகம் செய்தான். இதன்பின் கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து சிறிய கருவறையும், ஓரடுக்கு விமானமும் கொண்ட, கற்றளி, எனப்படும் சிறிய கோயில்கள் கட்டப்பட்டன. ஓரடுக்கு விமானமுள்ள கோயில்கள், இரண்டு, மூன்று, எனப்படிப்படியாக வளர்ந்து, தஞ்சாவூர் பெரிய கோயில் போன்ற, வானத்தை முட்டும், மிக உயரமான விமானங்களுடன் கூடிய கோயில்கள் உருவாகின. இப்படி கோயில் கட்டிடக் கலையின் பரிணாம வரலாற்றைப் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கோயில்களைக் கண்டு தெரிந்து கொள்ள முடியும். இங்கு மலையைக் குடைந்து உருவாக்கப்பட்ட 16 குகைக் கோயில்கள் உள்ளன. ஆரம்ப கால ஓரடுக்குக் கொண்ட சிறிய கற்றளிகள், காளியாப்பட்டி, திருப்பூர், ஏனாதி, பனங்குடி, விசலூர், கண்ணனூர் ஆகிய இடங்களில் நின்று கோயில் கட்டிடக்கலையின் தொடக்க வரலாற்றைப் பறைசாற்றி கொண்டிருக்கின்றன. இதைத் தொடர்ந்து கொடும்பாளூர், நார்த்தாமலை, திருக்கட்டளை ஆகிய இடங்களில் உள்ள கோயில்களில் கூடுதல் அடுக்குடன் கூடிய விமானங்களின் படிப்படியான வளர்ச்சியைக் காண்கிறோம். பிரகாரம், முகமண்டபம், ஆயிரங்கால் மண்டபம், ராஜகோபுரம் ஆகியவற்றுடன் கூடிய பிற்காலக் கோயில்கள் பலவும் இங்கு உண்டு. இந்தக், கோவில்களிலெல்லாம் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தாகும் எழில்மிகு சிற்பங்கள் பல அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. இதோ, ஒரு சில காட்சிகள்!.

ஏகாந்தமாக ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டுள்ளார் விஷ்ணு பெருமாள்; தேவியர் அருகிலிருக்கின்றனர். அவரது நாபியிலிருந்து பிரும்மா தோன்றி காட்சியளிக்கிறார். அமரர் கூட்டம் இசைபாடி இன்புற்றிருக்கிறது. இந்த நேரத்தில் சில அசுரர்கள் திடீரெனப் பாய்ந்து நிலமகளையும், திருமகளையும் தூக்கிச் செல்ல முற்படுகின்றனர். பதட்டமும், குழப்பமும் பரவுகிறது. நடுநடுங்கிய நிலமகள் அனந்த சயன மூர்த்தியின் காலடியிலும், திருமகள் மார்பிலும் தஞ்சமடைகின்றனர். உடனே ஆதிசேஷன் தீச்சுவாலையைக் கக்கி அசுரர்களைச் சாம்பலாக்குகிறான். ஆதிசேஷனைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டுகிறார் அனந்த சயனர். திருமயம் சத்தியமூர்த்தி குகைக் கோயில் கருவறையில் காணப்படும் காட்சி இது. மேடையில் நடத்தப்படும் நாடகக் காட்சியைக் கல்லிலே வடித்து நமக்கு விருந்தாக்கியிருக்கிறான் சிற்பி.

ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த நகரம் கொடும்பாளூர். இந்நகரின் எழில் தோற்றம் சிலப்பதிகாரத்தில் ஒலிக்கிறது. இன்று ஏக்கப் பெருமூச்சோடு காட்சியளிக்கிறது இந்தச் சிற்றூர். இங்குதான் தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய கோயில் விமான அமைப்புக்கு முன்னோடியாய்த் திகழும் மூவர்கோயில் உள்ளது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இங்கு ஆட்சி செலுத்திய பூதி விக்ரமகேசரி என்னும் வேளிர் குல மன்னன், தன் பெயராலும், தனது தேவியர் கற்றளி, வரகுணா ஆகிய இருவரின் பெயராலும் மூன்று கோயில்களைக் கட்டினான்! மூன்றில் ஒன்று சிதைந்து விழ்ந்துவிட மற்ற இரண்டும் தமிழக சிற்பக்கலைக்குச்சிகரமாகக் கட்டியங் கூறிக் கொண்டிருக்கின்றன. இவை அதிக உயரமான கோயில்கள் இல்லையென்றாலும் உன்னதமான அமைப்பு உடையவை. கோயில்களின் மாடங்களை அலங்கரிக்கும் சிற்பங்கள் நம்மை இன்முகத்துடன் வரவேற்கின்றன. அங்க அமைப்புகள் மனித உடற்கூறு அமைப்போடு ஒத்திருப்பது இந்தச் சிலைகளின் சிறப்பாகும். சிவபெருமானின் பல தோற்றங்கள் புராணக் கதைகளுக்கு ஏற்ப வடித்துவைக்கப்பட்டுள்ளன. தனது பக்தன் மார்க்கண்டேயனைக் காப்பதற்கு, காலனைக் காலால் உதைத்துக் களிநடனம் புரியும், காலாரி மூர்த்தி, சக்தியும், சிவமும் இணைந்த உமையொருபாகன, பிரம்மாவின தலையைக் கொய்த பாவத்தைப் போக்க ஆடையற்றநிலையில் கையிலே கபாலம் ஏந்தி நிற்கும் பிட்சாடனர், தருகாவனத்தில் யானை அரக்கனைக்கொன்று உக்கிர நடனமாடும் கஜாரி மூர்த்தி, முப்புரம் எரிந்து ''கொடுகொட்டி'' நடனமாடும் திரிபுராந்தகர், சர்ப்பச் சடையன் வீணையேந்திய வித்தகன் கையிலே கண்ணாடி கொண்டு ஒப்பனை செய்து கொள்ளும் ஆரணங்கு, இதுபோன்ற எத்தனையோ எழில்மிகு சிற்பங்கள். எளிமையாகவும், ஆடை ஆபரணங்கள் அதிகமின்றியும், அழகு பூண்டு விளங்கும் இந்தச் சோழர் காலத்துச் சிற்பங்களுக்கு இணையிலையே!



### இந்தியாவில் 2.25 இலட்சம் கம்ப்யூட்டர்கள்

**1985**-ஆம் ஆண்டிலிருந்து நம் நாட்டில் சுமார் 2 இலட்சத்து 5 ஆயிரம் மைக்ரோ கம்ப்யூட்டர்களும் 9,200 மினி கம்ப்யூட்டர்களும், 360 பெரிய கம்ப்யூட்டர்களும் நிறுவப்பட்டிருக்கின்றன. மத்திய மாநில அரசுத் துறைகள், தனியார்-பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் இந்தக் கம்ப்யூட்டர்கள் அனைத்தும் நிறுவப்பட்டிருக்கின்றன.

தன்னை அழிக்கமுடியாத வரம்பெற்ற ஹிரண்யகசிபு ஆணவம் தலைக்கேறி 'சொல்லடா' 'ஹரி என்றக் கடவுளெங்கே', என்று பிரஹலாதனைத் துன்புறுத்தினான். 'நாராயணன், தூணிலும் உள்ளான், துரும்பிலும் உள்ளான்', என விடை பகர்ந்தான் பிரஹலாதன். அருகிலிருந்த தூணை எட்டி உதைத்தான் ஹிரண்யகசிபு. தூண் இரண்டாகப் பிளந்தது. அதிலிருந்து, சிங்கமும், மனித உடலும் கொண்ட பயங்கர உருவம் தோன்றியது. ஹிரண்ய கசிபுவைப் பற்றிப் பிடித்து தனது கால்களுக்குக் குறுக்கே கிடத்தி, அவனது உடலை இருகூறாகப் பிளந்து, குடலை, மாலையாக அணிந்து கொண்டது! ஆணவம் வீழ்ந்தது! இதுவே நரசிம்ம அவதாரம். இந்த காட்சியினை ஒரு தூணிலே வடித்துள்ளான் சிற்பி. அதில் தான் எத்தனை உயிரோட்டம்; காதலுக்கு, கரும்பைத் தூதுவிட்டு விளையாடும், ரதி மன்மதன் சிலை, நம்மைக் கனவுலகிற்கு இட்டுச் செல்லுகிறது. இவை குடுமியாமலை குடுமிநாதர் கோயிலில் காணப்படும் சிற்பங்கள். இந்தக் கோயில் மண்டபத் தூண்களில் காட்சியளிக்கும் இன்னும் உயிரோட்டமுள்ள சிற்பங்கள் பலவுள்ளன. இந்தச் சிற்பங்கள் நமது கலைத் திறனுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

பகீரதனின் தவப்பயனால் விண்ணிலிருந்து மண்ணுக்கு இறங்கிய, கங்கையின் வேகத்தைத் தடுக்க தனது சடையைப் பிரித்து கங்கையைத் தாங்கி நிற்கும், ஏழடி உயரமுள்ள கங்காதரர் சிலை திருக்கோகர்ணம் கோகர்னேஸ்வரர் குகைக்கோயில் சுவரை அலங்கரிக்கிறது. நீண்டிருக்கும் சடைமுடியில், கங்கை அமைதியுடன் அமர்ந்திருக்கும் காட்சியில் சிற்பக்காரர்கள் கைவண்ணம் புலப்படுகிறது.

சோழர் கால வரலாற்றில் சீர்மிகு இடத்தைப் பெறும் நார்த்தாமலையில் விஜயாலய சோழீச்வரம் என்னும் 10-ஆம் நூற்றாண்டுக் கோயில், கல்லிலே கண்டதொரு எழிற் கோலமாகும். வட்ட வடிவமான நான்கு அடுக்கு விமானத்தையும், பிறை வடிவமான பிரகாரத்தையும் கொண்டு ''வேசரா'' என்னும் கட்டடக்கலைப் பாணியில் அமைந்த கோயில், தமிழகத்தில் இது ஒன்றே! இந்தக் கோயிலில் சோழர் காலத்துக் கலையின் தொடக்கம் தோன்றிய போதிலும், பல்லவர் காலத்துக் கோயில்களின் ஒற்றுமையையும் காணலாம். வாணிபம் செய்யும் பொருட்டு கடல் கடந்த நாடுகளுக்குச் சென்ற நமது முன்னோர் அங்கு கண்ட கலைப் படைப்புகளையும் இங்கு கொண்டு வந்து சேர்த்தனர். பெண்ணின் முகமும் சிங்கத்தின் உடலும் கொண்ட ''ஸ்பிங்க்ஸ்'' எனப்படும் எகிப்து பாணி சிற்பங்களை இங்கு கண்டு வியப்புறுகிறோம்

எருமையின் முகமும், வலுவான மனித உடலும் கொண்ட அரக்கனுடன், அன்னை பராசக்தி சமர்புரிந்து, அந்த அரக்கனை அடித்து வீழ்த்தும் காட்சியினை, மலையடிப்பட்டி குகைக் கோயில் சிற்பங்களில் காணலாம். சனாதி முனிவருக்கு சித்துவங்கள் போதித்த தட்சிணாமூர்த்தி மறைகூறி மகிழ்ந்திருக்கும் காட்சியினை திருவேங்கைவாசல் சோழர் காலக் கோயிலில் காணலாம். சிற்ப சாஸ்திர அமைப்பில் இந்தச் சிற்பம் தனித்தன்மை வாய்ந்தது. யானைமீது அமர்ந்து, இன்முகத்துடன் அருள்பாலிக்கும் 'பால சுப்பிரமணியர்' சிற்பம், கண்ணனூர் கோயிலில் உள்ளது. தமிழ்க் கடவுளான முருகனின் வாகனம், யானை, என சங்க இலக்கியங்கள் கூறுவதற்கு, சான்று பகர்வது இந்தச் சிற்பம். இதுபோன்று, தமிழகத்தின் பிறகோயில்களில் இல்லாத, பல சிறப்பு அம்சங்கள், இங்குள்ள கோயில்களிலும், சிற்பங்களிலும் காணப்படுகின்றன.

**ஆவுடையார் கோயில்:** இது கல்லிலே கவிபாடும் கலைக்கூடம். கோவில் கட்டும் ஸ்தபதியர் ''ஆவுடையார்கோயில் சிற்ப அடங்கலுக்குப் புறம்பாக'' என்று தங்களது ஒப்பந்தத்தில் குறிப்பிட்டு எழுதுவதிலிருந்து இந்தக் கோயிலின் சிற்பக்கலைத் திறன் தெளிவாகும். குதிரை வாங்குவதற்குப் பணம் கொண்டு வந்த, பாண்டியநாட்டு அமைச்சராக இருந்த மாணிக்கவாசகர், இறைவன் அருளில் மயங்கி, குதிரை வாங்காமல் இறைவனுக்கு இந்த ஆலயம் கட்டிய வரலாற்றையும், மன்னனிடமிருந்து, மாணிக்க வாசகரைக் காப்பாற்ற, சிவபெருமான், நரிகளைப் பரிகளாக மாற்றிய கதையையும், அமைச்சர் முக்திபெற்று, ஆண்டியான கதையையும், திருவிளையாடல்

-ஜே. இராஜாமுகமது
காப்பாளர்
அரசு அருங்காட்சியகம்
புதுக்கோட்டை



## பட்டுத் தொழிலில் — பாவையர்க்கு வேலை வாய்ப்பு

**1956**-ஆம் ஆண்டு மொழி வழி மாநிலப் பிரிவினை ஏற்பட்டவுடன், குறிப்பிடத்தக்க வகையில் தமிழகத்தில் பட்டுத் தொழில் இல்லை எனச் சொல்லலாம்.

அன்றைய சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதியாகிய ஓசூரிலும், கோவை மாவட்டத்தின் பகுதியாகிய தாளவாடியிலும் மிகவும் சிறிய அளவில் பட்டுத் தொழில் செய்யப்பட்டு வந்தது.

தொழில் வணிகத்துறையின் ஒரு அங்கமாக விளங்கிய பட்டுத் தொழில் வளர்ச்சிப் பகுதி 1979-ஆம் ஆண்டிலிருந்து தனித் துறையாக மாற்றப்பட்டு சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

கிராமப்புறங்களில் சிறிய முதலீட்டைக் கொண்டு நல்ல வருமானத்தைப் பெறக் கூடிய ஒரு குடிசைத் தொழிலாக அமைந்து உள்ளது பட்டுத் தொழில்.

பிற விவசாயப் பயிர்களைப் போல் அன்றி, இத்தொழிலிலிருந்து மாத வருமானம் பெறக்கூடிய வாய்ப்பு இருப்பது இத்தொழிலின் தனிச் சிறப்பு ஆகும்.

நெல், கரும்பு போன்ற பிற பாசனப் பயிர்களுக்குத் தேவையான நீரின் அளவை விட முசுக்கொட்டைச் செடிக்குத் தேவையான நீரின் அளவு மிகவும் குறைவே ஆகும்.

தமிழகத்தில் பருவமழை தவறும்போதும், நிலத்தடி நீர் குறையும் போதும் குறைந்த நீர் வளத்தில் விவசாயிகளின் துயர்துடைக்கும் வகையில் வருவாயை அளிக்க வல்லது பட்டுத் தொழிலாகும்.

தமிழகத்தில் வேலைவாய்ப்பின்றி, மற்றும் வருவாயின்றித் தவிக்கும் கிராமப்புற மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்து உள்ளது பட்டுத் தொழிலாகும்.

மல்பரிச்செடி பயிரிடுதல், இலை பறித்தல், பட்டுப் புழு வளர்த்தல், பட்டுக் கூடுகளிலிருந்து நூல் எடுத்தல் போன்ற பல தொழில்நுட்ப வேலைகளில் மகளிர் இலாபகரமாக ஈடுபடலாம்.

தற்போது வளர்ந்து வரும் பட்டுத் தொழிலில் மகளிரின் ஈடுபாடு இரண்டில் மூன்று பங்காக அமைந்துள்ளது. இதில் மல்பரிச் சாகுபடியில் 30 சதவிகிதமும், பட்டுப் புழுவளர்ப்பில் 43 சதவிகிதமும், பட்டு நூற்பில் 61 சதவிகிதமுமாக அமைந்து உள்ளது.

தமிழகத்தில், கிராமப்புற மகளிர்க்குப் பட்டுத் தொழிலின் மூலம் வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் போர்டு அறக்கட்டளை நிதி உதவியுடனும், சுவிஸ் அபிவிருத்திக் கழக நிதி உதவியுடனும் திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன.

இதனைக் கருத்தில்கொண்டு தமிழக அரசு ரூ.41.77 கோடி அளவில் உலக வங்கி நிதி உதவியுடன் திட்டம் தீட்டி, இவ்வாண்டிலிருந்து ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் மேலும் 23,000 ஏக்கர் பரப்பளவில் பாசன வசதியுடனும், மற்றும் 7,000 ஏக்கர் பரப்பளவில் மானாவாரியிலும், மல்பரிச் செடி பயிரிடத் திட்டம் இடப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் பட்டுக் கூடுகளின் உற்பத்தி திட்டகால இறுதியில் 14,142 மெட்ரிக் டன்களாக அமையும்; மற்றும் பட்டு நூலின் உற்பத்தி 1,366 மெட்ரிக் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.


உலகப் பிரசித்தி பெற்ற காஞ்சீபுரம், ஆரணி, சேலம், கும்பகோணம் பகுதிகளில் கைத்தறியில் நெசவு செய்யப்படும் பட்டுத் துணிகளுக்குத் தேவையான பட்டுநூலில் தன்னிறைவு பெற வாய்ப்புகள் உள்ளன. மேலும் இத்தொழில் வளர்ச்சியினால் தமிழகத்தில் 1,00,000 மனித ஆண்டுகள் அளவிற்கு வேலைவாய்ப்பை உண்டாக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

புராணம் கூறும். இந்த வரலாற்றையெல்லாம் இங்கே கல்லிலே வடித்திருக்கிறான் சிற்பி. கோயில் தாழ்வாரத்தில் உள்ள கொடுங்கை கல்லில் செய்ததா, அல்லது மரத்தில் செய்ததா என நம்மை வியப்பிலாழ்த்துகிறது. உயிர்த்துடிப்பு ஒன்றைத் தவிர எல்லா அம்சங்களும் இங்குள்ள சிலைகளில் உள்ளன. ஒவ்வொரு தூணிலும் ஒரு சிற்பம் கவிபாடிக் கொண்டிருக்கிறது. அவை ஒன்றை ஒன்று போட்டியிட்டுக் கொண்டு நம் கவனத்தைக் கவர்ந்திழுக்கின்றன. ஆபரணங்கள் அதிகமாக அணி செய்யப்பட்டுள்ள இந்தச்சிற்பங்களில், கை, கால்களின் நரம்புகூட, வெளியே தென்படுகிறது. இன்று நாம் காணும் நவநாகரிக நகைகளையும், உடைகளையும் இந்தச் சிலைகளிலே அன்றே வடித்து வைத்துள்ளார். ஒலையில் செய்யப்பட்ட கூடையினை இடுப்பல் வைத்து, கையில் இடுக்கிக்கொண்டு குறிசொல்ல வரும், வேடுவச்சி சிலையின் ஒய்யாரத் தோற்றம், நம்மை மயங்க வைக்கிறது. இந்தக் கோயிலை அலங்கரிக்கும் இன்னும் பல எழில்மிகு சிற்பங்களை இன்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். இந்தக் கோயில் மண்டபங்களைத் தமிழகத்தின் சிற்பக் கலைக்கூடம், என்று சொன்னால் மிகையாகாது.

காகிதத்திலும் அட்டையிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்களைக் கண்டு பழக்கப்பட்ட நமக்கு, கல்லின் பரப்பிலே வரையப்பட்டுள்ள சித்தன்னவாசல் ஓவியங்கள் நமது காட்சிக்கு சுவைமிகு விருந்தளிக்கின்றன. ஆம்! கருங்கல்லின் சொர சொரப்பான பரப்பில் சுண்ணாம்பு சாந்துபூசி அது காய்வதற்கு முன்பே இயற்கை வண்ணங்களால் அதில் ஓவியம் தீட்டியுள்ளனர். மண்டபத்தின் கூரையில் எப்படித்தான் இந்த ஓவியங்களை வரைந்தானோ அந்த ஓவியன் என வியப்பெய்துகிறோம். அஜந்தா ஓவியங்களை விஞ்சும் கலைத்திறன்! ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றும் வண்ணப் பொலிவுடன் உங்களை வரவேற்கின்றன, சித்தன்னவாசல் ஓவியங்கள்!

புதுக்கோட்டை மாவட்டத்தில் இப்படி கல்லிலே கலைவண்ணம் காணும் இடங்களின் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. அவற்றையெல்லாம் வார்த்தையால் வர்ணித்துவிட முடியாது. எனவே நேரில் கண்டு இன்புற இன்முகத்துடன் இந்த கலைச் செல்வங்கள் உங்களை வரவேற்கின்றன.





# COCO MILK

## பொன் விழா காணும்



கோவை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம்

தற்போது நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் லிட்டருக்கு மேல் பால் உற்பத்தியை எட்டியுள்ளது. திருப்பூர் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் மூலம் திருப்பூர் நகர மக்களுக்கு பாலித்தீன் பைகளில் பால் வினியோகப் பணியை மேற்கொண்டுள்ளது. மேலும் பாலித்தீன் பைகளில் பொது மக்களுக்குச் சுத்தமான, தரமான நெய் விற்பனையையும் துவக்கியுள்ளது. இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் ரூ. 3 கோடியே 70 இலட்சம் செலவில் புதிய பால் பண்ணைக் கட்டடம் ஒன்றைக் கட்டியுள்ளது. 3-வது பால் பெருக்குத் திட்டத்தினையும், ரூ. 3.4 கோடி செலவில் அமல்படுத்தி வருகிறது. சுத்தமான பால் பேடா, நறுமணப் பால், சுத்தமான நெய், ஐஸ்கிரீம் ஆகியவற்றிற்கு இன்றே அணுக வேண்டிய நிறுவனம் கோகோமில்க்.

ச. மருதாசலம்,
எல்.ஈ.ஈ.டி.ஆர் அண்டு ஏ. சி.டிடிஈ.,
நிர்வாக இயக்குநர்

மா. இராமன், இ.ஆ.ப.,
தலைவர்,
மாவட்ட ஆட்சியர்

கோவை மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிட்
பச்சாபாளையம், காளம்பாளையம் அஞ்சல், பேரூர் வழி
கோயம்புத்தூர்-641 010

Phone: 22198
20549

# VISWAM TEXTILES

YARN & CLOTH MERCHANTS
79, Perumal Koil Street
Tirupur 638604

**POWER LOOM CLOTH**
**EXPORT QUALITY**



# வால்பாறை நகரியம்

வால்பாறை நகரியத்தில் நடப்பு ஆண்டு 1989-90-இல் கீழ்க்கண்ட வளர்ச்சிப் பணிகள் எடுத்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

| | | ரூ. |
|---|---|---|
| 1. | தடுப்புச் சுவர் கட்டும் பணிகள் | 3,00,000 |
| 2. | கல்வர்ட் கட்டும் பணிகள் | 20,000 |
| 3. | கிணறு வெட்டும் பணிகள் | 55,000 |
| 4. | வடிகால் கட்டும் பணிகள் | 5,15,000 |
| 5. | படிக்கட்டு கட்டும் பணிகள் | 6,30,000 |
| 6. | சாலை பராமரிப்புப்பணிகள் | 3,50,000 |
| 7. | தொலைக்காட்சிப் பெட்டி வாங்குதல் | 85,000 |
| 8. | குடிநீர்த் திட்டப் பணிகள் | 3,00,000 |
| 9. | கட்டடம் (குவார்ட்டர்ஸ்) கட்டும் பணிகள் | 7,35,000 |
| 10. | நவீன கழிப்பிடம் கட்டும் பணிகள் | 40,000 |
| | மொத்தம் | 30,30,000 |

ஒம்/- கே.எஸ். பழநிஅப்பன்,
எம். காம், எம்.பி.ஏ.
சிறப்பு நிலை செயல் அலுவலர்,
வால்பாறை நகரியம்

ஒம்/- மா. இராமன்,
இ.ஆ.ப.,
நகரியக்குழுத்தலைவர்,
வால்பாறை நகரியம்
மற்றும்
கோவை மாவட்ட ஆட்சித் தலைவர்.




இந்தியாவிலேயே முதலாவதாக...

# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்

'தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத் தொடக்க விழா' 20.9.89 அன்று சென்னைக் கால்நடை மருத்துவக்கல்லூரி வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மேதகு தமிழக ஆளுநர் மற்றும் பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 'தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்தார்.

ஆராய்ச்சி மற்றும் படிப்புதவித் தொகை நிதியாக, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் - டாக்டர் ஏ.டி. வேணுகோபாலன் ஒரு இலட்சம் ரூபாயும், டாக்டர் எஸ்.கே.எம். மயில்சாமி ஒரு இலட்சம் ரூபாயும் காசோலையாக வழங்கினார்கள். திரு. வி. பெருமாள் நாயுடு அறக்கட்டளை சார்பில் ரூ.25 ஆயிரம் வழங்கப் பட்டது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவக் கல்லூரி சார்பில், முதலமைச்சர் நிதிக்காக ரூ.25 ஆயிரம் அளிக்கப் பட்டது.

விழாவில் வரவேற்புரையாற்றிய மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் மற்றும் பல்கலைக்கழக இணைவேந்தர் டாக்டர் க. சந்திர சேகரன் அவர்கள் 'கால்நடைப் பராமரிப்புக்காகவும் வளர்ச்சிக்காகவும் இந்த அரசு பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே. பி. கந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. க. பொன்முடி, தமிழ்நாடு கால்நடை மருத்துவப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. ரிச்சர்டு மாசிலாமணி ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஜெயராஜ் வாழ்த்துரையாற்றினார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப. அவர்கள் தம்முடைய வாழ்த்துரையில் - "1903 ஆம் ஆண்டு, இந்தியாவிலேயே முதலாவதாகச் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப் பட்டது. தென் மண்டலத்திலேயே இது சிறந்த கால்நடை ஆராய்ச்சி மையமாக அமைந்தது. இங்கே படித்தவர்கள் தமிழ்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பெரும்புகழ் பெற்றிருக்கிறார்கள். இன்று இங்கே புதிதாக மலரும் கால்நடைப் பல்கலைக் கழகம் இந்தியாவிலேயே சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழவேண்டும் என்று வாழ்த்துகிறேன்" என்றார்.

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரும், சிறுசேமிப்புத் துறைத் துணைத் தலைவருமான திரு. அ. இரகுமான் கான் பேசியதாவது:

"உலகத்தில் ஏழு அதிசயங்கள் இருக்கின்றன. ஏழாவது அதிசயம் தாஜ்மகால். அதேபோல, உலகத்தில் மொத்தம் உள்ள ஆறு கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகங்களோடு, ஏழாவதாக இந்தப் பல்கலைக் கழகம் அமைந்திருக்கிறது. ஏழாவது அதிசயமான தாஜ்மகாலைக் கட்டிய ஷாஜகானைப் போல, இந்த ஏழாவது பல்கலைக் கழகத்தை உருவாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும் சரித்திரத்தில் இடம் பெறுவார். உலகிலேயே கால்நடை மருத்துவர்கள் சோவியத் நாட்டில்தான் அதிகம். அதற்கு அடுத்த இடம்

இந்தியாவுக்கு. இந்தியாவில், அதிகக் கால்நடை மருத்துவர்கள் உள்ள மாநிலம் தமிழ்நாடுதான்''

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி அவர்கள் உரையாற்றும்போது,

''மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது ஊதியக் குழு அறிவிப்பை அறிவித்தபோது, முதன் முதலாக நன்றி தெரிவித்தவர்கள் கால்நடை மருத்துவத் துறையைச் சார்ந்தவர்கள்தான்'' என்று குறிப் பிட்டார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 'தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்'தைத் தொடங்கிவைத்து ஆற்றிய விழாப் பேருரையில் குறிப்பிட்டதாவது:-

''19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வங்கத்தில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தைத் தொடர்ந்து சென்னை-சைதாப் பேட்டையில் கால்நடை மருத்துவ அறிவியல் உள்ளிட்ட ஒரு வேளாண்மைப்பள்ளி தொடங்கப்பட்டது. இந்திய ஆவினக் கொள்ளை நோய்க் குழுவின் பரிந்துரைப்படி டாக்டர் மேஜர் கன் என்ற ஆங்கிலேயரால், லண்டன் கால்நடைமருத்துவக் கல்லூரித் தகுதிகளையொத்து, 1.10.1903-இல், எண்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு, சென்னை வேப்பேரியில் கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்கப் பட்டது.

''இந்தக் கல்லூரியில் முதலில் இ.எம்.டி.சி., என்ற மூன்றாண்டு டிப்ளமோ படிப்பிற்காக இருபது மாணவர்கள் மட்டுமே படித்தார்கள். 1936-இல் இக்கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரத்தோடு பி.வி.எஸ்.சி., என்னும் பட்டப் படிப்பை இந்தியாவிலேயே முதலாவதாகப் பயிற்றுவிக்கும் கால்நடை மருத்துவக் கல்லூரியாகச் சிறப்புப் பெற்றது. வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கல்வியின் முதல் இந்திய அமெரிக்கக் குழுவின் பரிந்துரைப்படி, 1959-ஆம் ஆண்டில் இக்கல்லூரி பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிக்கான தென் மண்டல மையமாக உயர்வு பெற்றது. இப்போது இக்கல்லூரியில் பதினெட்டுப் பிரிவுகளில் எம்.வி.எஸ்.சி. என்ற பட்ட மேற்படிப்பும், பதினாறு பிரிவுகளில் பி.எச்டி என்ற உச்சகட்ட மேற்படிப்பும் பயிலும் வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

'சென்னைப் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரத்தோடு செயல்பட்டுவந்த இந்தக் கல்லூரி 1974-இல் உதயமான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் வந்தது. பிறகு, 1976-இல் அப் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமாயிற்று. கால்நடை மருத்துவர்களின் தேவை அதிகமானதால், 1985-ஆம் ஆண்டு நவம்பரில், நாமக்கல்லில், தமிழகத்தின் இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரி, மறைந்த என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது தொடங்கப் பட்டது.

இப்பொழுது தொடங்கப்படும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், கல்வி கற்பிப்பது - குறித்த கால அளவில் மக்களுக்குத் தேவையான ஆராய்ச்சியில் ஈடுபடுவது மற்றும் விரிவாக்கப் பணிபுரிவது ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபடும். குறிப்பாகக் கால்நடை வளர்ச்சிக்குப் புதிய ஊக்கத்தை அளிக்கும் வகையில் பயிற்சி தரும். பட்டம் பெறாத கிராமப்புற இளைஞர்கள், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தியவர்கள், வேலையற்ற பட்டதாரிகள் ஆகியவர்களுக்கு அவர்கள் கையால் தொழில் செய்து கற்கும் வண்ணம் பயிற்சி தரும்போது அவர்கள் தன்னம்பிக்கையோடு சுய வேலை வாய்ப்புகளைப் பெறவும் முடியும். இதனால் அவர்கள் தமது வருவாயைப் பன்மடங்கு பெருக்கிக் கொள்ளுவதோடு, கிராமப்புற வேலையின்மையைக் குறைக்கவும் இது உதவுகிறது'' என்றார்.

'தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்' தொடக்க விழா சிறப்பு மலரை மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் வெளியிட்டார். முதல் மலரை மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் டாக்டர் க. சந்திரசேகரன் பெற்றுக் கொண்டார்.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

''மாநிலத்தில் 12-வது பல்கலைக் கழகமாக இன்று இந்தப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மேம்பாட்டிற்கு அனைத்து உதவிகளையும் அரசு அளிக்கும். மாநிலத்தில் உள்ள விவசாயிகளின் மேம்பாட்டிற்கான விரிவாக்கப் பணிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துச் செயலாற்ற வேண்டியது இப்பல்கலைக் கழகத்தின் கடமையாகும். வெறுமனே பி.எச்.டி பட்டம் பெறுபவர்களை உருவாக்குவது மட்டும் இதன் நோக்கமல்ல.

''கால்நடை வளர்ப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு, பன்றி - முயல் வளர்ப்பு போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் விவசாயிகள் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடியும். இப்படிப்பட்ட ஒருங்கிணைந்த அணுகுமுறையை விவசாயிகள் கைக்கொள்ளுவதற்கான ஆய்வுகளிலும், விரிவாக்கப் பணிகளிலும் இந்தப் பல்கலைக் கழகம் முக்கியக் கவனம் செலுத்த வேண்டும்.

''வேளாண்மைப் பல்கலைக் கழகமும், இந்தப் பலகலைக் கழகமும், இணைந்து செயல்படுவதற்கான திட்டக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இந்தப் புதிய பல்கலைக் கழகத்தின் ஆய்வுப் பணிகளை ஊக்குவிக்கும் வகையில், கல்வி அறக்கட்டளைகளை உருவாக்கித் தாராளமாக உதவப் புரவலர்கள் முன்வரவேண்டும்.''

—விழா முடிவில், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறைச் செயலாளர் திரு. து. முருகராஜ் இ.ஆ.ப. நன்றியுரையாற்றினார்.

—நிகழ்ச்சித் தொகுப்பு
'இந்திரன்'




## வட ஆர்க்காடு மாவட்டத்தில்

ஆங்கில அரசினால், வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு நியமிக்கப் பெற்ற முதலாவது ஆட்சியாளர் திரு. ஜியார்ஜ் ஸ்டார்டன் ஆவார். இவர் 2-8-1801 இல் நியமிக்கப்பட்டார்.

தற்போது வடஆர்க்காடு மாவட்டத்தின் ஆட்சியாளராக உள்ள திரு.மா. சத்தியமூர்த்தி, இ.ஆ.ப., வடஆர்க்காடு மாவட்டத்தின் 118 வது ஆட்சியாளர் ஆவார்

இம்மாவட்டத்தில் ஐ.சி.எஸ். பட்டம் பெற்ற ஆட்சித் தலைவர் திரு.ஆர். என். காம்பெல் (1900).

ஐ.சி.எஸ். பட்டம் பெற்ற கடைசி ஆட்சித் தலைவர் திரு.ஆர்.ஸி. பெல் (1946).

ஐ.ஏ.எஸ். பட்டம் பெற்ற, முதல் ஆட்சித் தலைவர் திரு.என்.வி. சுகவனம் (1951).

வட ஆர்க்காடு மாவட்டம் 12,265 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பெரிய மாவட்டம் ஆகும். இதில் 4 வருவாய்க் கோட்டங்கள், 13 வட்டங்கள், 5 ஊரக வளர்ச்சிப் பிரிவுக் கோட்டங்கள், 38 ஊராட்சி ஒன்றியங்கள், 12 நகராட்சிகள், 38 பேரூராட்சிகள் உள்ளன.

இம்மாவட்டம் வடகிழக்கு மற்றும் தென் மேற்குப் பருவக்காற்றால் மழை பெறக்கூடியது. ஆனாலும் பெரும் பகுதி மழை வடகிழக்குப் பருவக் காற்றினாலேயே கிடைக்கிறது. இம்மாவட்டத்தில் 3.12 இலட்சம் கிணறுகளும் 2,940 பாசன ஏரிகளும் உள்ளன.





## சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 132-வது பட்டமளிப்பு விழா 5.9.89 அன்று, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது.

பல்கலைக் கழக வேந்தர் மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் பட்டம் பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பட்டங்களை அளித்தும், பரிசுகள் வழங்கியும் உரையாற்றினார். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், இவ்விழாவில் பங்கேற்று பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தினார்.

**நான்காவது அட்டை சொல்லும் செய்தி**

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க் குடிமகன், மாண்புமிகு அமைச்சர்கள் திரு. மு. கண்ணப்பன், திரு. துரை முருகன், திரு. டி.ஆர். பாலு, எம்.பி., ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

## ஆதி திராவிட மக்களுக்கான தொகுப்பு வீடுகள் திறப்பு விழா

தஞ்சை மாவட்டத்தில், திருவாரூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மேமங்கலம் கிராமத்தில் - ஆதி-திராவிடர்களுக்காகக் கட்டி முடிக்கப்பட்ட 156 கான்கிரீட் தொகுப்பு வீடுகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 6.9.89 அன்று திறந்து வைத்தார்.

அவ்விழாவில் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது: ''1974 ஆம் ஆண்டு ஏற்கெனவே தி.மு.க. ஆட்சி தமிழகத்தில் நடைபெற்ற போது ஆதிதிராவிட மக்களுக்குக் கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தருவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. 1975-76 ஓராண்டில் 30,022 வீடுகள் அரசால் கட்டப்பட்டன.

தற்போது ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் கட்டப்பட்ட வீடுகளெல்லாம் வெறும் ஓட்டு வீடுகளாக இருக்கின்ற காரணத்தால், அவைகள் விரைவில் வீணாகி விடுகின்றன, குடியிருப்பதற்கு இலாயக்கற்றதாகி விடுகின்றன, என்பதற்காக இந்த ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மத்திய அரசு தரும் உதவியோடு மாநில அரசும் ஒரு கணிசமான தொகையை இணைத்து இப்போது இதுபோன்ற கான்கிரீட் வீடுகளைக் கட்டத் தொடங்கியிருக்கின்றோம்.

''இந்த ஆண்டில் நாற்பத்திரண்டாயிரம் வீடுகளைக் கட்ட அரசு தீர்மானித்திருக்கிறது. அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. அடுத்த மாத இறுதிக்குள் இந்த கான்கிரீட் வீடுகள் எல்லாம் கட்டி முடிக்கப்பட்டு விடும்.''

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. பொன்முடி மற்றும் திரு. தம்ப சாமி எம்.எல்.ஏ., ஊராட்சி ஒன்றிய தலைவர் திரு. ஆர்.பி. சுப்பிரமணியம் ஆகியோரும், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். மச்சேந்திரநாதன் இ.ஆ.ப. அவர்களும் விழாவில் கலந்து கொண்டார்கள்.







## அண்ணா பிறந்த நாளில் இலவச அரிசி வழங்கு விழா!

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி, தமிழக அரசின் இலவச அரிசி வழங்கும் விழா சென்னையில் 15-9-89 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அண்ணாநகர் தொகுதி 72-வது வட்டத்தில் உள்ள டி.பி. சத்திரம் சிந்தாமணி கூட்டுறவு நியாய விலைக் கடையில், காலை 9 மணியளவில் நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பங்கேற்று 5 கிலோ இலவச அரிசி வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் உணவு அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவிற்குத் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு. எம் எம். இராஜேந்திரன் இ.ஆ.ப.; தலைமை ஏற்றார். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசு உயர்அதிகாரிகளும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசுச் செயலாளர் திருமதி யாஸ்மின் அகமது, இ.ஆ.ப., வரவேற்புரை ஆற்றினார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு. எம். எம். இராஜேந்திரன் இ.ஆ.ப., அவர்கள் தமது தலைமை உரையில்:

''இப்போது தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களிலெல்லாம் தலையாய திட்டம் ஏழைமக்களுக்கு இலவச அரிசி வழங்கும் இந்தத் திட்டம். புதிய அரசு அமைந்த நேரத்தில், நிதிநிலைமை இக்கட்டாக இருந்தது. அதைப் பொருட்படுத்தாமல், நலிந்த மக்களின் இன்றியமையாத தேவைகள் தட்டுப்பாடின்றி அவர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும் என்பதில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தினார். அதன் பலன்களில் ஒன்றுதான், இந்த இலவச அரிசி வழங்கும் திட்டம்'' என்று குறிப்பிட்டார்.

சிறுசேமிப்புத் துறைத் துணைத் தலைவர் திரு. இரகுமான்கான் எம்.எல்.ஏ., திரு. டி. ஆர். பாலு எம்.பி. ஆகியோர் உரையாற்றிய பிறகு, மாண்புமிகு கூட்டுறவு மற்றும் உணவு அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி அவர்கள் தம்முடைய முன்னிலை உரையில் தெரிவித்ததாவது:

''தேர்தலுக்கு முன்னால், தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டது போல, வறுமையின் கொடுமையிலிருந்து ஏழைக் குடும்பத்தார் விடுபட-இந்த அரசு அறிவித்துச் செயல்படுத்திவரும் திட்டங்களில் ஒன்றுதான் இன்றைய தினம் நடைபெறும் இந்த இலவச அரிசி வழங்கும் திட்டமாகும். நலிந்து கிடக்கும் மக்களால் இத்திட்டம் இன்முகத்தோடு வரவேற்கப்படுகிறது. இந்த அரசு, ஆளும் கட்சிக்காரர்கள் 40 ஆயிரம் பேருக்குப் புதிதாக ரேஷன்கார்டு கொடுத்திருப்பதால் இன்றைக்குப் பற்றாக் குறை ஏற்பட்டிருப்பதாகச் சிலர் பேசி வருகிறார்கள். அது தவறு. தங்களுக்குக் கார்டே வழங்கப்படவில்லை என்பவர்களின் கோரிக்கைகளை மிகக் கவனமாகப் பரிசீலித்து, இந்த அரசு சுமார் 10 ஆயிரத்து 839 குடும்பங்களுக்கு புதிய கார்டு வழங்கியிருக்கிறது. அதே நேரத்தில் முந்திய அரசுகளின் கவனக் குறைவால் தரப்பட்டிருந்த 34,068 போலி ரேஷன் கார்டுகளைக் கண்டுபிடித்து ரத்து செய்திருக்கிறோம். இந்தியாவைப் பொறுத்தவரை அரிசித் தேவையில் தன்னிறைவு இல்லை; சர்க்கரைப் பற்றாக்குறை; பாமாயில், மண்ணெண்ணெய் பற்றாக்குறையெல்லாம் இருக்கிறது. ஆனால், மத்திய அரசு வெளியே ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறது.

கேட்டால் இறக்குமதி செய்யவேண்டும் என்கிறார்கள். இங்கே விலை ஏறிக்கொண்டிருக்கிறது. பற்றாக்குறை மாநிலமாக நாம் இருக்கிறோம். நமது முதல்வர் அவர்கள், இந்த நிலை நீங்கும்வரை, எந்த அளவுக்கு மத்திய அரசு கொடுக்கிறதோ அதைப் பகிர்ந்து கொடுங்கள் என்று ஆலோசனை கூறியிருக்கிறார். அது பற்றித் திட்டவட்டமாகக் கலந்து பேசி விரைவில் மேல் நடவடிக்கை எடுக்கவிருக்கிறோம்.

### முதல்வர் உரை

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''இன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள். அண்ணா பிறந்த நாள் என்றால், தமிழர்களுக்கு இன உணர்வு ஊட்டப்பட்ட நாள்; அண்ணா பிறந்த நாள் என்றால், அரசியல் பண்பாட்டை அனைத்துத் தரப்பினருக்கும் உணர்த்துகின்ற நாள்; அண்ணா பிறந்த நாள் என்றால், ஏழை எளிய மக்களுக்குக் கண் திறந்த நாள்; அண்ணா பிறந்த நாள் என்றால், தமிழ் இலக்கியம், மரபு, வரலாறு, பண்பாடு இவற்றுக்கெல்லாம் மகிமை உருவாக்குகின்ற நாள்.

அந்த நாளில் அண்ணாவுக்கு எது உகந்ததோ, அந்த அரிய செயலை அண்ணா அவர்களின் தம்பிமார்கள் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த அரசு இன்றைக்குத் தமிழ்நாடு முழுதும் நடத்திக் கொண்டிருக்கிறது. இந்த இடத்தில் இப்போது நடப்பதுபோல இன்றைக்கு 22 ஆயிரம் இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் ஏழை எளிய மக்களுக்கு இலவச அரிசி வழங்கப்படுகிறது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்பது அண்ணா அவர்கள் நம்முடைய உள்ளத்திலே பதிய வைத்திருக்கின்ற திருவாசகம் ஆகும். அந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக நாம் எடுக்கின்ற முயற்சிகளிலே ஒன்றுதான் இந்த நிகழ்ச்சி.

இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்பு-அறிஞர் அண்ணா அவர்களுடைய எண்ணங்களை, இலட்சியங்களை, கொள்கைக் கோட்பாடுகளை மையமாக வைத்து வெளியிட்ட தேர்தல் அறிக்கையை நீங்கள் யாரும் மறந்திருக்க மாட்டீர்கள். அந்த அறிக்கையின் தலைப்பே-'சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்' என்பதுதான்.

தமிழகத்திலே புத்தாண்டு நாள் அன்றும், பொங்கல் நாள் அன்றும், தீபாவளி நாள் அன்றும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற-அதாவது முந்நூறு ரூபாய்க்குக் குறைந்த மாத வருமானம் உடைய குடும்பங்களுக்கு ஐந்து கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும் என்பது தேர்தல் அறிக்கையிலே தரப்பட்ட உறுதிமொழி. ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, உணவு அமைச்சர் அவர்கள் என்னோடும், அமைச்சரவையிலும் விவாதித்து, அந்த மூன்று தடவையோடு மட்டுமல்லாமல், ஜூன் மூன்றாம் தேதியும், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த செப்டம்பர் பதினைந்தாம் தேதியும் அதிலே இணைக்கப்பட்டு, ஆண்டொன்றுக்கு ஐந்து தடவை ஐந்து கிலோ அரிசி இலவசமாக ஏழை எளியோருக்குத் தருவதென்று தீர்மானிக்கப்பட்டு, அந்த ஐந்து தடவைகளில் மூன்றாவது தடவையாக இன்றைக்குத் தமிழகம் முழுவதும் உள்ள ஏழை எளிய மக்களுக்கு இலவச அரிசி வழங்கப்படுகிறது. கிட்டத்தட்ட 83 இலட்சம் குடும்பங்கள், இன்றையதினம் இந்த இலவச அரிசியினால் பயனடைகிறார்கள்.''

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது நீண்ட உரையிலே குறிப்பிட்டார்.

விழா முடிவில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. செ. ஆறுமுகம், இ.ஆ.ப., அவர்கள் நன்றி உரை ஆற்றினார்.

## தமிழகமெங்கும்...



பேரறிஞர் அண்ணா அவர்களின் 81-வது பிறந்தநாளையொட்டித் தமிழகமெங்கும் உள்ள ஏழைகளுக்கு இலவசமாக அரிசி வழங்கும் நிகழ்ச்சி, அரசு சார்பில் 15.9.89 அன்று நடாத்தப்பட்டது.

சென்னையில் உள்ள அண்ணா நகரில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பங்கேற்று, ஏழைகளுக்கு இலவச அரிசி வழங்கினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள், காஞ்சிபுரத்தில் நடந்த விழாவில் கலந்து கொண்டு இலவச அரிசி வழங்கினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன், இளையாங் குடியில் இலவச அரிசி வழங்கினார்.





பேரறிஞர் அண்ணா அவர்களின் 81-வது பிறந்த நாளையொட்டி, அண்ணாசாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி, திரு. டி.ஆர். பாலு எம்.பி., சட்டமன்ற உறுப்பினரும் சிறுசேமிப்புத் துறை துணைத் தலைவருமான திரு. அ. இரகுமான்கான் ஆகியோரும் மாலை அணிவித்தார்கள் (15-9-89).

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் திருவல்லிக்கேணியிலும், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி புரசைவாக்கத்திலும், மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. சாதிக் பாட்சா மண்ணடியிலும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வி.பி. துரைசாமி பெரியார் நகரிலும் அரிசி வழங்கினர்.

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி விருதுநகரிலும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் கோயம்புத்தூரிலும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி கும்பகோணத்திலும், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் மதுரை (மேற்கு)யிலும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. என். வீரபாண்டி ஆறுமுகம் சேலத்திலும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். துரைமுருகன் வந்தவாசியிலும் இலவச அரிசி வழங்கினார்கள்.

அதேபோல் - மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் தாராபுரத்திலும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி விழுப்புரத்திலும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் இராமகிருஷ்ணன் அச்சிறுபாக்கத்திலும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு கரூரிலும், மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் டாக்டர் சந்திரசேகரன் புதுக்கோட்டையிலும், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு சங்கரன் கோயிலிலும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் பேரவைச் செயலர் திரு. எல். கணேசன் ஒரத்த நாட்டிலும், மாண்புமிகு அரசுக் கொறடா திரு. கதிரவன் கடையநல்லூரிலும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் ஏழை மக்களுக்கு இலவச அரிசி வழங்கினார்கள்.

## Entyce – success comes from consistent quality





Only a few years ago, fourteen textile mills in Tamil Nadu and Pondicherry combined to form "National Textile Corporation (Tamil Nadu and Pondicherry) Ltd." Within a remarkably short time, the Company's products evolved from simple cotton yarns to sophisticated polyester blends.

**Yarns**

Our quality yarns come to you in standard hanks and cones, spun out of pure cotton and blends, in counts of 20 to 120, carded and combed. In recognition of our quality we have been awarded the ISI mark for our 40s carded and 40s combed hosiery yarn.

**Fabrics**

We market all our fabrics under the brand name "Entyce". The Entyce product range has expanded very rapidly from simple cottons that include Poplins, 2/2 Rubia, Cambric, and Drills to sophisticated polyesters. Entyce covers every requirement – suitings, shirtings, sarees, dress materials, furnishings, etc. Many of these are processed in our own processing House at Pondicherry.

**Entyce**®

Good taste.
At affordable prices.

national textile corporation (TAMIL NADU & PONDICHERRY) LTD
A GOVERNMENT OF INDIA ENTERPRISE
10/64 SOMASUNDARAM MILLS RD COIMBATORE 641 009

**SPINNING MILLS:** Om Parasakthi Mills, Coimbatore; Kishnaveni Textile Mills Coimbatore. Sri Ranga Vilas Ginning, Spinning & Weaving Mills, Coimbatore. Pankaja Mills Coimbatore. Cambodia Mills, Coimbatore; Pioneer Spinners, Paramakudi (Ramanathapuram District); Kaleeswarar Mills 'B' Unit, Kalayarkoil (Ramanathapuram District); Balaramavarma Textile Mills, Shencottah (Tirunelveli District) **COMPOSITE MILLS:** Coimbatore Spinning & Weaving Mills, Coimbatore; Somasundaram Mills, Coimbatore; Kaleeswarar Mills 'A' Unit, Coimbatore; Coimbatore Murugan Mills, Coimbatore; Sri Sarada Mills (Coimbatore) **COMPOSITE MILL & PROCESSING HOUSE:** Sri Bharathi Mills, Pondicherry.




# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

**TNPSC Advt No 49**

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டம் 2ல் உள்ள தேர்வாணைய விளம்பர எண்ணில் கட்டம் 3க்கான பதவிகளுக்கு விண்ணப்பங்களை வரவேற்கும் அறிவிக்கைகளில் கட்டம் 4-ல் கண்டபடி பணியிடப் பகிர்வீடு ஒதுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இப்பதவிகளுக்கான ஒதுக்கீட்டில் புதிய சுழற்சி முறை துவக்கப்படுவதால் கட்டம் -5ல் கண்டபடி பணியிடப் பகிர்வீடு செய்யப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஏற்கனவே அறிவிப்புச் செய்யப்பட்ட மற்ற நிபந்தனைகளில் மாறுதல் எதுவும் இல்லை. முன்பு வெளியான பணியிடப் பகிர்வீட்டின் அடிப்படையில் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் தற்போதைய புதிய பணியீடு ஒதுக்கீட்டில் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதால் பகிரங்கப் போட்டியில் பரிசீலிக்கப்பட விருப்பமில்லையெனில் விண்ணப்பங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். இல்லாவிடில், அவர்கள் பகிரங்கப் போட்டிக்குரிய தகுதிகளைப் பெற்றிருப்பின், அவர்களுடைய விண்ணப்பங்கள் பகிரங்கப் போட்டியின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும். இதே போல், புதிய பகிர்வீட்டின்படி 'பெண்களுக்கென' ஒதுக்கீடு பெறாத பணியிடங்களுக்கு ஏற்கெனவே விண்ணப்பித்துள்ள பெண் விண்ணப்பதாரர்கள் பொதுக்காலியிடங்களுக்கும், போட்டியிட விருப்பம் இல்லையெனில் தங்கள் விண்ணப்பங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

முன்னர் பெண்களுக்கென அறிவிக்கப்பட்டு, தற்போது பொதுப் போட்டிக்கு அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கு ஆண் விண்ணப்பத்தாரர்களிடமிருந்தும் இதே போல் முன்னர் ஒதுக்கீடு பெறாத தொகுதிகளுக்கும் தேவையான தகுதிகள் பெற்றிருப்பின், அந்த விண்ணப்பதாரர்களிடமிருந்தும், விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. இத்தகைய விண்ணப்பங்கள் தமிழ்நாடு தேர்வாணைய அலுவலகத்தை 16.10.89ம் நாள் மாலை 5.30க்குள் வந்தடைய வேண்டும். விண்ணப்பப்படிவம், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், விளம்பர எண் மற்றும் இனத்தின் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, எழுதப்பட்டு செயலாளர் அவர்களுக்கு வழங்கக்கூடிய ரூ.10 (ரூபாய் பத்து மட்டும்) க்கான கோடிட்ட அஞ்சல் ஆணையுடனும், அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் ( State Bank of India ) ஏதாவது ஒரு கிளையில், செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்காகப் பெறப்பட்ட, ரூபாய் 10க்கான கேட்புக் காசோலை(Demand Draft) பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்கு சென்னை-6 (குறியீட்டு எண் 0800) -க்குச் செலுத்தத்தக்கதாகவும், சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருப்பின், அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா.

அட்டவணை

ஒதுக்கீடு

| வ.எண் | விளம்பர எண். | பதவியின் பெயர் | ஏற்கனவே அறிவிக்கப் பட்டபடி | புதிய இனஒதுக்கீடு முறைப்பட்டியல் | வயது | தகுதி |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | 12 | தமிழ்நாடு தொழில்சார் நிலைப்பணியில் இளநிலை வேதியியலர் (Junior Chemist) | பி.வ.-2<br>ப.போ-2 | தா.வ./தா.வ.வ.1<br>பி.வ.—1<br>ப.போ.—2 | 30 வயதிற்குக் குறைவாக | வேதியியல் (Chemistry) ஏதேனும் ஒரு பிரிவில் முதல் அல்லது இரண்டாம்வகுப்பு பட்ட மேற்படிப்புப் பட்டம் |
| 2. | 33 | தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப் பணியில் உதவிப்புவியியலாளர் (Assistant Geologist) | தா.வ./தா.ப.வ.—1<br>பி.வ.—1<br>(பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள)<br>ப.போ.—1 | தா.வ./தா.ப.வ—1<br>பி.வ.—1<br>ப.போ.—1 | 30 வயதிற்குக் குறைவாக, புவியியல் பி.எஸ்சி (Hons) அல்லது எம்.எஸ்.சி Degree பெற்று அத்துடன் மூன்று வருட காலத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருப்பவர்களுக்கு உச்சவயது வரம்பு மேலும் ஐந்து வருடங்களுக்கு உயர்த்தப்படும். | புவியியலில் (Geology) ஒரு பட்டம். |
| 3. | 14. | தமிழ்நாடு கைத்தறி மற்றும் நெசவுச் சார் நிலைப் பணியில் கைத்தறி ஆய்வாளர் | தா.வ./தா.ப.வ.—4<br>(அவற்றில் 1 பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது)<br>பி.வ.—16<br>(அவற்றில் 5 பெண்களுக்காக ஒதுக்கப் பட்டவை)<br>ப.போ.—10<br>(அவற்றில் 3பெண்களுக்காக ஒதுக்கப் பட்டவை) | தா.வ./தா.ப.வ.—5<br>(அவற்றில் 1 பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது)<br>மி.ப.வ.—6<br>(அவற்றில் 3 பெண்களுக்காக ஒதுக்கப் பட்டவை)<br>பி.வ.—9<br>(அவற்றில் 2 பெண்களுக்காக ஒதுக்கப் பட்டவை)<br>ப.போ.—10(அவற்றில் 3 பெண்களுக்காக ஒதுக்கப்பட்டவை) | 30 வயதிற்குக் குறைவாக | A diploma in Handloom or Textile Technology awarded by the State Board of Technical Education and Training, Tamil Nadu<br>or<br>B.Com.degree<br>or<br>B.Sc.degree in Chemistry |
| 4. | 15 | தமிழ்நாடு மருத்துவப் பணியில் அரசுமருத்துவ மனைகளில் உணவு முறையாளர்கள் | பி.வ.—1<br>ப.போ.—1 | தா.வ/தா.ப.வ—1<br>ப.போ.—1 | 40 வயதிற்குக் குறைவாக | i) B.A. or B.Sc. Degree with Chemistry or Physiology as one of the subjects or a degree in domestic Science;<br>and<br>A diploma in Dietitics of the All India Institute of Hygiene and Public Health, Calcutta or any other Institution or body recognised by the Government of Tamilnadu or the University grants Commn., for the purpose of its grants.<br>or<br>ii) A degree in Home Science.<br>or<br>iii) B.Sc. degree in Nutrition and Dietitics of the Madras University. or<br>iv) A post Graduate Diploma in Applied Nutrition and Public Health of the Madurai-Kamaraj University, Madurai. |
| 5. | 31 | தமிழ்நாடு மருத்துவப் பணியில் கதிர்வீச்சு பௌதிகத்தில் உதவிப் பேராசிரியர் | தா.வ./தா.ப.வ.—1<br>மி.பி.வ./சீ.ம.—1<br>(பெண்களுக்கென ஒதுக்கப்பட்டவை)<br>பி.வ.—1<br>ப.போ.—1<br>(பெண்களுக்கென ஒதுக்கப்பட்டவை) | தா.வ./தா.ப.வ.—2<br>பி.வ.—1<br>ப.கோ.—1 | 32க்குக்குறைவாக | A degree of M.Sc (Medical Physics) obtained after undergoing studies at the College of Engineering, Guindy, belonging to the Anna University, Madras and duly declared eligible for appointment as Radiological Safety Officers in the Medical Institutions by the Division of Radiological protection of the Bhabha Atomic Research Centre, Bombay. (or)<br>A degree of M.Sc (Physics) and a Diploma in Radiology physics awarded by the Bombay University after undergoing one year Post Graduate Course in Hospital Physics and radiology physics conducted by the Division of Radiology protection of the Bhabha Atomic Research Centre. |

சென்னை-600 008
17080

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | 19 | தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுப்பணியில் உதவிப்பணிமேலாளர் (முதலில் இரண்டு பதவிகளுக்கு மட்டும் விளம்பரப்படுத்தப்பட்டது. தற்போது மூன்றாக உயர்ந்துள்ளது) | பி.வ.—1 ப.போ.—1 | தா.வ./தா.ப.வ.—1 பி.வ.—1 ப.போ.—1 | 30க்குக்குறைவாக (எழுதுபொருள் மற்றும் அச்சுப்பணித்துறையில் ஏற்கனவே பணிபுரிபவர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது) | (1) குறைந்தஅளவு பொதுக் கல்வித் தகுதி மற்றும் (2) அச்சுத்தொழில் நுட்பவியலில் ஒரு பட்டயம்; (Letter Press or Offset) மற்றும் (3) நன்மதிப்பு வாய்ந்த அச்சகத் தொழிற்சாலைகளில் கண்டிப்பாக ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத நடைமுறை அனுபவம் பெற்றிருக்கவேண்டும். அவ்வைந்து ஆண்டுகளில் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் மேற்பார்வைத் திறனுள்ளவராய் (Supervisory Capacity) பெற்ற அனுபவம் உள்ளடங்கி இருக்கவேண்டும். |

**குறிப்பு:** தமிழ்நாடு அரசு அச்சக சார்நிலைப் பணியில் முறையான நியமனத்தில் முதலில் சேர்ந்த தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிந்திருந்தாலும் குறிப்பிட்ட கல்வித்தகுதி பெற்றிருப்பின் அவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

DIPR/1910/MS/80/இசட்.

# இராமநாதபுரம் மாவட்டத்தில்...

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திட்டத்தின்கீழ் 15 பேருக்குத் தலா 5,000 ரூபாய் விதம் 75,000 ரூபாய் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களால் 8-9-'89 அன்று வழங்கப் பட்டது.

மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், 318 பேருக்கு வீட்டு மனைப்பட்டாக்களும், 33 பேருக்கு நில ஒப்படைப்பும், 37 பேருக்கு முதியோர் உதவித்தொகையும், நலிந்தோர் உதவித் திட்டத்தின் கீழ் 22 பேருக்குத் தலா ரூ. 2,000 விதம் ரூ. 44,000 உதவியும், பிற்பட்டோர் நலத்திட்டத்தின்கீழ் இலவசச் சலவைப் பெட்டிகள் 3 பேருக்கும் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்டம் ஆர். எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கொட்டக்குடி கிராமத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. செல்லமுத்து, இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது.

அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், 1,213 பேருக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின்கீழ் மனைப்பட்டாக்கள் வழங்கி மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் உரையாற்றும்போது, "மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் 1969-ஆம் ஆண்டு மக்கள் குறைதீர்க்கும் நாள் நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்தார்கள். மக்களிடத்தில் அலுவலர்கள் சென்று மக்கள் குறைபாடுகளைக் கேட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காகத்தான் இதுபோன்ற திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஏழைகளுக்கு வீட்டு மனைப் பட்டா, திருமணத் திட்டத்தின்கீழ் திருமண உதவி வழங்குதல் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதன் மூலம் மக்கள் அதற்கான நலனை நேரடியாகப் பெறுகிறார்கள். இம் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது" எனத் தெரிவித்தார்.

விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. கோ. சுந்தரம் மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரத்தினை அறிவித்தார். மாவட்ட ஆட்சியர் திரு. அ. செல்லமுத்து இ.ஆ.ப. இது போன்ற குறைதீர்க்கும் நாளில் பொது மக்களின் பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்க்கப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

—வி. சச்சிதானந்தம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

**TNPSC Advt No 50**

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு பொதுப்பணியில் காவல் துறை வானொலிப் பிரிவில் ஒரு தொழில் நுட்ப அலுவலர் பதவிக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. (பகிரங்கப் போட்டி)

குறிப்பு:

1. தேர்வாணைய விளம்பர எண் 22-ன்படி ஏற்கனவே விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

2. தேர்வாணைய விளம்பர எண் 22-ன்படி விண்ணப்பித்த பெண் விண்ணப்பதாரர்கள் ஆண்களும் போட்டியிடும் பொதுக் காலியிடத்திற்கு விண்ணப்பிக்க விருப்பமில்லாவிட்டால், தங்கள் முந்தைய விண்ணப்பத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2200-75-2800-100-4000 (திருத்தப்பட்டது)

வயது: 30 வயதிற்குக்குறைவாக

கல்வித் தகுதி:

மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியலில் ஒரு முதல் வகுப்புப் பட்டம் (First Class Degree in Electronics and Communication Engineering)

இறுதி நாள்: 21.10.89 அன்று மாலை 5.30 மணி

வயது வரம்பு: 1.7.1989 அன்றுள்ளபடி

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்" தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.9.1989 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை, அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.9.1989 அன்றோ அதற்குப் பிறகு வாங்கப்பட்ட சென்னை-6, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் Code No. 0800ல் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) "கேட்புக் காசோலை" (Demand Draft) யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறிய வற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

50 டிஐபிஆர்/1918/செ/89/எலிகண்ட்

# TNPSC Advt No 52

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

கீழ்க்கண்ட பதவிகளுக்கு 23-10-89க்குள் ஆணையத்தின் அலுவலகத்தில் வந்து சேருமாறு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சம்பளம், வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி (க.த) முதலியவை ஒவ்வொரு பதவிக்கும் பின்னால் கொடுக்கப்பட்டுள்ளன.

1. தமிழ்நாடு தொழிற் சார்நிலைப் பணியில், மின் இயல் மற்றும் மின் அணுப் பொறியியல் பிரிவில் இரண்டு சோதனையாளர் பதவி ரூ. 1640-2900 ஆ.தி.வ/ப.வ: 1. ப.போ:1, 35 வயது (கல்வித் தகுதி) (அ) மின் இயல் அல்லது மின் அணுப் பொறியியலில் ஒரு பட்டம் அல்லது பட்டயம் மற்றும் (ஆ) அங்கீகரிக்கப் பட்ட நிறுவனத்தில் மின் சோதனைத் துறையில் பட்டம் பெற்றவர்களாக இருப் பின் ஓராண்டுக் காலத்திற்குக் குறையாத அனுபவமும், பட்டயம் பெற்றவர்களாக இருப்பின் மூன்றாண்டுக்குக் குறையாத அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

2. தமிழ்நாடு தொழில் சார்நிலைப் பணியில் கும்பகோணம் அரசினர் கலைத்தொழில் கல்லூரியில் ஒரு விரிவுரையாளர் (கலை வரலாறு) பதவி ரூ. 500-900, 45 வயது.

Qualification:—

1. A first class Diploma in Fine Arts of the Government College of Arts and Crafts (formerly school of Arts and Crafts, Madras) Madras or Sir J.J.School of Arts, Bombay or Govt. College of Arts and Crafts, Calcutta or Government School of Arts and Crafts, Lucknow or any other recognised Institution or School of Arts and Crafts (or)
A degree in History of Arts and Art criticism of any university. (or)

A degree in Arts or Science of any University.

2. **Experience**:—Practical experience in teaching History of Arts for a period of not less than three years.

3. தமிழ்நாடு தடய அறிவியல் சார்நிலைப் பணியில் ஒன்பது அறிவியல் உதவியாளர் நிலை 1 பதவி.சம்பளம் ரூ.1640-2900. தா.வ. / தா.ப:2 மி.பி.வ மற்றும் சீ.ம:1 (பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது) பி.வ.3 ப.போ. 3 (ஒரு இடம் பெண் களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது) வயது 30க்குக்குறைவாக.

Qualification :-

i) The degree of M.Sc in Forensic Science.The basic degree should have been obtained by the subject specified for the divisions, or

ii) If Candidates with qualification prescribed in item (i) above are not available then candidates with M.Sc degree in the subject specified for the following divisions will be considered. The subjects for the various divisions shall be as specified below:

| **Division** | **Subjects** |
|---|---|
| 1. Prohibition and Excise | Chemistry |
| 2. Biology | Zoology, Botany, Bio-chemistry. Antnropology (Physical) Cnemistry |
| 3. Physics | Physics/Physical Chemistry |

4 தமிழ்நாடு தடய அறிவியல் சார்நிலைப் பணியில் முப்பத்தைந்து அறிவியல் உதவியாளர் நிலை II பதவி, சம்பளம் ரூ. 1400-2600

| பிரிவு | காலியிட எண்ணிக்கை |
|---|---|
| வேதியியல் | 1 |
| மதுவிலக்கு மற்றும் ஆயப்பிரிவு | 27 |
| நஞ்சியல் | 2 |
| உயிரியல் | 1 |
| குருதிவடி நீரியல் பிரிவு | 2 |
| இயற்பியல் | 1 |
| ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு | 1 |

தா.வ/தா.ப: 6 (இரண்டு இடம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது)
மி.பி.வ./சீ.ம:7 (மூன்று இடம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது)
பி.வ. 10 (2 இடம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது)
ப.போ. 12 (நான்கு இடம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது)
வயது 30க்குக் குறைவாக
கல்வித்தகுதி:

A first class degree in Science in the subject specified for the division.
Provided that other things being equal preference shall be given to those who hold the degreein M.Sc in Forensic Science.

| Division | Subject |
|---|---|
| 1. Chemistry | Chemistry |
| 2. Prohibition and Excise | Chemistry |
| 3. Toxicology | Chemistry, Bio-chemistry |
| 4. Biology | Zoology, Botany, Anthropology, Bio-chemistry, Anthropology (Physical) Chemistry |
| 5. Serology | Zoology, Bio-chemistry, Micro Biology |
| 6. Physics | Physics/physical Chemistry |
| 7. Research and Development | Physics, Chemistry, Botany, Zoology, Bio-chemistry, Microbiology, Anthoropology (Physical), Mathematics. |

5. தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் சார்நிலைப் பணியில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையில் ஒரு புள்ளியியல் வல்லுநர் பதவி

சம்பளம் ரூ.1600-2660 வயது ஆ.தி.வ./ப.வ./மிகவும்
பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சீர் மரபினர்/பி.வ. 33
மற்றவர்கள் 30
கல்வித்தகுதி: எம்.எஸ்.ஸியில் புள்ளியியல் பட்டம்.

6. தமிழ்நாடு சீர்திருத்தப்பள்ளி சார்நிலைப்பணியில் இரண்டு தொழில்நுட்ப உதவி யாளர்

சம்பளம்: ரூ.1400-2600
வயது: 35
கல்வித்தகுதி: 1. குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதி மற்றும்
2. இயந்திரவியல் பொறியியலில் ஒரு பட்டயத்துடன் நற்பெயர் பெற்ற பொறியியல் பணிமனையில் இரண்டு ஆண்டு அனுபவம்.

7. தமிழ்நாடு பொது சார்நிலைப் பணித் தொகுதியில் புள்ளியியல் துறையில் பத்து புள்ளியியல் ஆய்வாளர் பதவி.

சம்பளம்: ரூ.1600-2600 வயது; 30க்குக்குறைவாக
ஆ.தி.வ./ப.வ. 2
மி.பி.வ./சி.ம 1 (பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது)
பி.வ. 3
ப.போ 4 (ஒரு பதவி பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது)
கல்வித் தகுதி: கணிதம் அல்லது புள்ளியியல் அல்லது பொருளியல் பாடத்தை முக்கியப் பாடமாகக் கொண்ட ஒரு பி.ஏ. அல்லது பி.எஸ்சி.பட்டம்.

8. தமிழ்நாடு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையில் அறுபது உதவிப் பொறியாளர் (சிவில்) பதவி

சம்பளம்: ரூ.1640-2900 வயது: 30க்குக்குறைவாக

A degree in Civil Engineering or a pass in Sections A and B (Civil Engineering) of the A.M.I.E (Inuia) Examination (renamed as Institution Examination)

இன ஒதுக்கீட்டு விதியின்படியும் மற்றும் பெண்களுக்கான ஒதுக்கீட்டு விதியின் படியும் தெரிவு செய்யப்படும்.

9. தமிழ்நாடு வேளாண்மைத் துறையில் எண்பத்திரெண்டு வேளாண்மை அலுவலர் (ஆராய்ச்சி)

சம்பளம்: ரூ.1640-2900
வயது: 30 வயதுக்குக்குறைவாக
எம்.எஸ்சி. (விவசாயம்) அல்லது பி.எச்டி. போன்ற வேளாண்மையில் முதுநிலைப் பட்டம் பெற்றவர்களுக்கு 32 வயதுக்குக் குறைவாக.

வேளாண்மையில் இளநிலைப் பட்டம் ( Bachelor's Degree in Agriculture ) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / தாழ்த்தப்பட்ட பழங்குடி மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பகிரங்கப் போட்டிக்காக எந்தெந்த பதவிக்குப் பொருந்துமோ, அதன்படி இடஒதுக்கீடு விதி மற்றும் பெண்களுக்கான ஒதுக்கீடு/தெரிவுகள் செய்யப்படும். ஆணையத்தின் அறிவிக்கைகளில் விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கொட்டை எழுத்தில், விண்ணப்பம் கோரும் கடிதத்திலும் விண்ணப்பத்திலும் குறிப்பிட வேண்டும்.

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசு ஊழியர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் பணி வேட்பாளருக்கான விதி முறைகளில் தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர்தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ, அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், விளம்பர எண் மற்றும் இனம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.9.1989 அன்றோ அதற்குப் பிறகோ வழங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) கோடிட்ட அஞ்சல் ஆணையுடனும் அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் ஏதாவது ஒரு கிளையில், செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்காகப் பெறப்பட்ட, ரூபாய் 10-க்கான கேட்பு காசோலை, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்கு சென்னை-6 (குறியீட்டு எண். 0800)க்கு செலுத்தத் தக்கதாகவும், சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26/12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருப்பின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

குறிப்பு: ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி கோரிக்கைக் கடிதம் ரூ. 10க்கான அஞ்சல் ஆணையுடன் அனுப்பப்படவேண்டும்.

தா.வ: தாழ்த்தப்பட்ட வகுப்பினர்; தா.ப: தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்
மி.பி.வ./சீ.ம: மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்
பி.வ. பிற்பட்ட வகுப்பினர்; ப.போ. பகிரங்கப் போட்டி

52 டிஐபிஆர்/1921/செ/89/எலிகண்ட்

## ஆசிரியர் தின விழா

ஆசிரியர் தின விழா - தமிழக மாநில நல்லாசிரியர் விருது வழங்கும் விழா' 5.9.89 அன்று திருச்சிராப்பள்ளி கலை அரங்கத்தில் மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 228 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கி, சிறப்புரையாற்றினார். அவர்தம் சிறப்புரையில் 'நல்ல சமுதாயத்தை உருவாக்குவதில், எதிர்கால இளைஞர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதில், ஆசிரியர்களுக்குப் பெரும் பங்கு இருக்கிறது. தமிழ்நாட்டில் 2 கோடிப் பேர் எழுத்தறிவு இல்லாமல் இருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டிய மாபெரும் பொறுப்பு ஆசிரியர்களையே சாரும். கல்விக்காக இந்த ஆண்டு 900 கோடி ரூபாய் செலவிட்டு இருக்கிறோம். ஆசிரியர்கள் சம்பள உயர்வுக்கு மட்டும் 50 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஆகிறது. 1.5 கோடி ரூபாய் செலவில் புதிய மேல் நிலைப் பள்ளிக்கூடங்கள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டுள்ளன'' என்று கூறினார்.

விழாத் தொடக்கத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. வா.ஆ. சிவஞானம் வரவேற்றார். தொடக்கக் கல்வி இயக்குநர் திரு. தி. நாச்சிமுத்து, சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆ. மலர் மன்னன், பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. முத்துக்குமரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். திருச்சி முதன்மைக் கல்வி அலுவலர் திரு. ஜி. இராதாகிருஷ்ணன் நன்றி கூறினார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழ[illegible] [illegible]வலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னதத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.


கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

● புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு ● ஷர்ட்டிங் ● சூட்டிங் ● ஃபர்னிஷிங் ● பெட்ஷீட்கள் ● டவல்கள் ● வேட்டிகள் ● லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.




தமிழரசு
16-10-1989
அம்பேத்கார்
தொடக்க விழா
உதவிகள்
ஆந்திர மாநிலம்
திருவண்ணாமலை-சம்புவராயர்
தென்ஆற்காடு






தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் புதிய தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டினார். (28-9-89)

## இந்த இதழில்...

அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா... 2
புதிய மாவட்டங்கள் மலர்ந்தன ... 4
பயன் அடைந்தோர் பகர்வன ... 9
பெரியார் மாவட்டத்தில் முதல்வர் கலைஞர்...13
கைப்பம்பு விசைப்பம்பு பராமரிப்பு முறை ...17
பண்ணைச் செங்கான் (சிறுகதை) ...20
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்-
(விளம்பரங்கள்) ...25
பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்...49
பேசும் பொம்மைகள் ...53
சிதம்பரனார் மாவட்டத்தில் ...57
மாதம் ஒரு தொழிற்சாலை-இலக்கை நோக்கி ...58
வெண்பாப் போட்டி ...60
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் ...61
வன உயிரின வாரத் தொடக்க விழா ...63




தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2020
சுக்ல-புரட்டாசி-30
மலர்:20 16-10-1989 இதழ்:8



## மானும் மானும் போரிடலாமா?


"எந்தப் பெரியார் இந்த நாட்டிலே சாதி ஒழிய வேண்டும் என்பதற்காக, தன்னுடைய தள்ளாத வயதிலும் பாடுபட்டாரோ, அவர் மறைவதற்குச் சில நாட்களுக்கு முன்புகூட, சென்னையில் தியாகராய நகரில் நடைபெற்ற கூட்டத்தில் எவ்வளவு உறுதியோடு, அழுத்தம் திருத்தத்தோடு சாதி ஒழிப்புக் குரலை அன்றைக்கு உயர்த்தினாரோ, அந்தப் பெரியார் உலவிய இந்த மண்ணில், அந்தப் பெரியாரின் குரல் கேட்காத பட்டி தொட்டிகள் இல்லை என்று சொல்லக்கூடிய இந்த மண்ணில், இன்றைக்கு அந்தப் பெரியார் இல்லை. அவர் இல்லை என்பதால் அவரின் கொள்கையும் இல்லாமல் போய்விடுகிறதோஎன்ற ஏக்கம்தான் என்னை அலைக்கழித்துக் கொண்டு இருக்கிறது.

"புராணங்களிலே கூடப் படித்து இருக்கிறோம். அந்தக் காலத்திலே மன்னர்களைப் பாராட்டுவது என்றால், அரசர்களைப் புகழ்வது என்றால் அவர்களுடைய ராஜ்யத்தில் மானும், புலியும் ஒரே துறையிலே தண்ணீர் குடித்தன என்று சொல்வார்கள், அவ்வளவு ஒற்றுமையாக இருந்தார்கள் என்பதற்காக. ஆனால் இன்றைக்கு மானும் மானும் கூட ஒரே துறையில் தண்ணீர் குடிக்க ஒப்புவதில்லை. ஒன்றோடொன்று மோதிக் கொள்கின்றன. புலியும் மானும் போரிடலாம். மானும் மானும் போரிடலாமா? கீரியும் பாம்பும் போரிடலாம். கீரியும் கீரியும் போரிடலாமா?

"கழுகு அல்லது வல்லூறு ஒரு புறாவைத் துரத்தலாம். ஆனால் ஒரு புறா இன்னொரு புறாவை அழிக்க எண்ணலாமா? இதைத்தான் பெரியாரின் சிலையைத் திறக்கிற இந்த நேரத்தில் நான் மிகுந்த வேதனையோடு கேட்கக் கடமைப்பட்டு இருக்கின்றேன்."

**முதல்வர் கலைஞர்**

(22-9-89 அன்று, திருவாரூரில் தந்தை பெரியார் சிலை திறப்பு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)



# அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா

அண்ணல் காந்தியடிகளின் 121-வது பிறந்த நாள் விழா, 2-10-89 அன்று தமிழக அரசின் சார்பில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அன்று காலை, மெரினா கடற்கரையிலுள்ள அண்ணல் காந்தியடிகள் திருவுருவச் சிலைக்கு, மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர், திருமதி அக்கம்மா அலெக்சாண்டர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்தார்கள். பிறகு நூற்பு வேள்வியும், இசை நிகழ்ச்சியும் நடந்தது. அதன் பிறகு, தக்கர் பாபா வித்யாலயாவின் மாணவர்கள் பங்கேற்ற சமபந்தி விருந்து நடந்தது.

**தொடக்க விழா**

அன்று மாலை, கிண்டி காந்தி மண்டபத்தில், அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் தொடக்க விழா நடந்தது.

டாக்டர் சிவ சிதம்பரம் அவர்களின் இன்னிசையுடன் விழா இனிதே தொடங்கியது.

செய்தி, சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில்,

"காந்தியக் கொள்கைகள் நம்மை விட்டு நீங்கிவிட்டனவோ என்று சந்தேகப்படும்படியாக, சாதிச் சண்டை



தொடர்பான சம்பவங்கள் நடந்து வருகின்றன. அன்புதான் உயர்ந்த பண்பு என்று காந்தியடிகள் நமக்கு உபதேசித்தார். அதை உணர்ந்து நாம் எல்லா மக்களுடனும் சகோதர உணர்வுடன் வாழ வேண்டும்'' என்றார்.


காந்தி மண்டப வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினைத் தொடங்கி வைத்தும், பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கியும் மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர் அவர்கள் பேசியதாவது:

"காந்தியடிகள் பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதோடு, அவருடைய போதனைகளையும் நாம் நம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும்.''

விழாவில் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன், திரு. அச்சூட்பட் வரதன் ஆகியோர் பேசினார்கள்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. கி. ராஜமாணிக்கம் அவர்கள் நன்றி நவின்றார்.

அன்று இரவு திருமதி பானு சுப்பிரமணியத்தின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடந்தது. அண்ணல் காந்தியடிகள் பற்றிய திரைப்படமும் காண்பிக்கப்பட்டது.





**சிறப்புக் கூட்டம்**

சிறப்புக் கூட்டம் 5-10-89 அன்று நடந்தது.

திருமதி கோவை கமலா குழுவினர். இன்னிசையுடன் விழா தொடங்கியது.

செய்தி-சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் சிறப்புரையாற்றுகையில்,

"அரசுக் கட்டடங்களுக்குத் தேசிய விடுதலை வீரர்களின் பெயர்களைத் தமிழ்நாடு அரசு சூட்டி அவர்களுக்குப் பெருமை அளித்து வருகிறது'' என்றார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்தினார். அப்போது அவர், பேசுகையில்,

"குடியினால் வரும் தீங்குகளை எடுத்துரைத்து, குடிப்பழக்கத்தை ஒழிக்க நாம் ஒரு மாற்றுத் திட்டம் கண்டாக வேண்டும். 1975-ஆம் ஆண்டில், நான் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது, 'ஒரத்த நாடு திட்டம்' என்னும் திட்டம் தஞ்சையில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது. அந்த எண்ணம் தொய்ந்து போகாமல், தொடர்ந்து நடத்த இந்த அரசு சபதம் மேற்கொள்கிறது. மதுவின் தீமையை எடுத்துரைத்து, மக்கள் திருந்தும் வகையில் பெரிய இயக்கத்தை இந்த அரசு நடத்த இருக்கிறது'' என்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்த மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் பேசுகையில், "காந்தியின் உயிர்க் கொள்கைகளான அன்பு, உண்மை, அகிம்சையைப் பின்பற்ற நாம் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு கி. ராஜமாணிக்கம் அவர்கள் நன்றி நவின்றார்.

இரவு கலை நிகழ்ச்சி நடந்தது. திரைப்படமும் காண்பிக்கப்பட்டது.

**நிறைவு விழா**

நிறைவு விழா 8-10-89 அன்று நடந்தது.

திருமதி ராதா ஜெயலட்சுமி



இசை நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது.

செய்தி-சுற்றலாத் துறைச் செயலர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

விழாவிற்கு மேதகு டாக்டர் பி.சி. அலெ[...] அவர்கள் தலைமை வகித்[...] கையில், "அகிம்சை என்ப[...] யடிகளுக்கு முன்னதாக, கீதையில் சொல்லப்பட்[...] ஆனால் அரசியலில் அகி[...] காந்தியடிகள்தான் முதன் [...] பயன்படுத்தினார்'' என்றார்.

முன்னாள் மத்திய [...] திரு. சி. சுப்பிரமணியம் பேசுகையில், "காந்தியடிகள் வழியில் வன்முறையை ஒ[...] களுக்குச் சேவை செய்ய இளைஞர்கள் உறுதி கொள்ள வேண்டும்'' என்[...]


முன்னாள் மத்திய [...] திருமதி மரகதம் சந்திரசேகர் டாக்டர் என். மகாலிங்கம் [...] உரையாற்றிய பிறகு, மா[...] கல்வியமைச்சர் பேராசிரி[...] அன்பழகன் அவர்கள் பேருரை நிகழ்த்தினார். [...] அவர் குறிப்பிட்டதாவது:

"காந்தியடிகள் தன்[...] தலைவராகக் கருதிக் கொ[...] சாதாரண பாட்டாளி ம[...] போல் வாழ்ந்து காட்டினா[...] தப்பட்ட மக்களின் முன்னே[...] காகப் பாடுபட்ட அவர், திரு[...] புத்தர், மகாவீரர் ஆகி[...] எண்ணங்களை அரசியலி[...] படுத்தினார்.''

செய்தி-மக்கள் தொடர்[...] இயக்குநர் திரு. கி. ராஜமா[...] அவர்கள் நன்றி கூறினார்.

அன்று இரவு கலை [...] நடந்தது. திரைப்படம் கா[...] பட்டது.

-நமது செய்[...]



# புதிய மாவட்டங்கள் மலர்ந்தன



## திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்

நிர்வாக வசதிகளை முன்னிட்டு, பெரிய மாவட்டங்கள் - சிறிய மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு வருகின்றன.

அந்த வரிசையில் வட ஆர்க்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு, பல்லாண்டுகள் ஆகியும் அந்த முயற்சி நிறைவேறாதிருந்தது.

திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்ட திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் என்றும், வேலூரைத் தலைநகராகக் கொண்ட வட ஆர்க்காடு-அம்பேத்கார் மாவட்டம் என்றும் வட ஆர்க்காடு மாவட்டத்தை 2 மாவட்டங்களாகப் பிரிக்க முடிவெடுக்கப்பட்டது.

செப்டம்பர் 30-ஆம் நாளன்று இந்தப் பணி நிறைவேறியது:

காலை 10.30 மணி அளவில், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் தலைமையில் மாவட்டத் தொடக்க விழா,டேனிஷ் மிஷன் பள்ளித்திடலில் நடைபெற்றது.

வரவேற்புரை ஆற்றிய தமிழக அரசுத் தலைமைச் செயலர் திரு. எம்.எம். இராஜேந்திரன், இ.ஆ.ப. குறிப்பிட்டார்:

''1973-இல் நிர்வாகச் சீரமைப்பு ஆணையம், முதல்வர் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. புதிய மாவட்டங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று அது கருத்துத் தெரிவித்தது. அதன் அடிப்படையில் திருச்சி, தஞ்சைப் பகுதிகளிலிருந்து புதுக்கோட்டை பிரிக்கப்பட்டது. நாளடைவில் 20 (இருபது) மாவட்டங்கள் உருவாகின.

''1984-இல் நிபுணர் குழுவின் பரிந்துரையின் பேரில், வட ஆர்க்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும் என முடிவாகியது என்றாலும் பரிந்துரை பல்லாண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருந்து வந்தது. அது இன்று நிறைவேற்றப்படுகிறது''.

திட்ட விளக்கவுரை ஆற்றிய வருவாய்த்துறைச் செயலர் திரு. ஏ.எம். சுவாமிநாதன், இ.ஆ.ப. தெரிவித்தார்:

''இராமநாதபுர மாவட்டம் பிரிக்கப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டதும் அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு 8 மாதங்கள் ஆயின. அதேபோல், நெல்லை மாவட்டம் பிரிக்கப்படுவதற்கு 6 மாதம் ஆகியது. இன்று மலரும் இந்தப் புதிய மாவட்டம், பிரிக்கப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்ட 3 மாத காலத்திற்குள்ளேயே பிரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கொள்ளும் விரைவான நடவடிக்கைகள்தான் இதற்குக் காரணம்''.

அடுத்து, முதல்வர் கலைஞர் அவர்கள், ஒரு பொத்தானை அழுத்தி திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

செங்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு சேட்டு, திருவண்ணாமலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு பிச்சாண்டி, திருவண்ணாமலை நகராட்சித் தலைவர் திரு எஸ்.முருகையன், தண்டராம்பட்டுத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு பொன்முடி, முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன், வந்தவாசி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு எல். பலராமன், ஆகியோர் உரையாற்றினர்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திருதுரைமுருகன் அவர்கள் உரையாற்றும்போது,

''மலேயா, கடாரம், புட்பகம், சாவகம், இலங்கைத் தீவுவரை, ஆட்சியைப் பரவ விட்டவர்கள் சம்புவராயர்கள். சம்புவராயர்கள் வன்னியர்கள், குலத்தால் அவர்கள் வன்னிய குல க்ஷத்திரியர்கள் என வழங்கப்பட்டார்கள்.

''மன்னர்களாக வாழ்ந்த பெருமக்கள் அவர்கள். வன்னிய சமுதாயம்,ஆண்ட சமுதாயம். சோழர் சமுதாயத்தைத் தாங்கி நின்ற சமுதாயம். சோழர்களின் நிலவாக வந்துள்ள முதல்வர் கலைஞராம் சுந்தரத் தலைவரை இன்றும் வன்னிய சமுதாயம் தாங்கி நிற்கும் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் சம்புவராயர் மாவட்டம் அமைந்துள்ளது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு ஆற்காடு வீராசாமி அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:

''தமிழக மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டவர் நமது முதல்வர். இன்று இங்கு 59 திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறார் முதல்வர். தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்தின் மீதும் - ஒவ்வொரு தொகுதியின் மீதும் - அவருக்குப் பற்று உண்டு. அவர் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறேன்''.

அடுத்து, தலைமை உரையாற்றிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சில் மனோகரன் அவர்கள் உரையாற்றும் போது குறிப்பிட்டார்;

''மாவட்டப் பிரிவினை காரணமாக புதிய திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டத்திற்கு நிறைந்த வசதிகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையை நீங்கள் எல்லாம் பெற்றிருப்பதைப் போலவே நானும் பெற்றிருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இந்த மாவட்டம், பிரிவினையால் வளம்பெறும்; தனி நபர் வருமானம் உயரும்; வாழ்க்கை வசதி பெருகும்; வேலை வாய்ப்பு அதிகமாகும்."

அடுத்து, புலவர் கோவிந்தன் அவர்களின் மகனார் திருமாவளவன் எழுதிய 'சம்புவராயர்' என்னும் நூலை முதல்வர் கலைஞர் வெளியிட, முதற் பிரதியை வன்னிய அடிகளார் பெற்றுக்கொண்டார்.

வன்னிய அடிகளார் எழுதிய 'தாமரைக்கண்ணன்' என்னும் நூலைக் கலைஞர் வெளியிட, முதற்பிரதியை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சிலார் பெற்றுக் கொண்டார்.

பின்னர் கலைஞர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் பல அலுவலகங்களுக்குரிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். பின்னர் 26,691 நபர்கள் பயன்பெறும் வகையில் 569.759 இலட்ச ரூபாய்க்குரிய நலத்திட்ட உதவிகளை வழங்கினார். புதிய பேருந்து வழித்தடங்களைத் தொடங்கி வைத்தார். அதன்பின்னர், விழாப் பேருரை ஆற்றினார்.

அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''தமிழக வரலாற்றில் அந்தக் காலத்தில், வட எல்லையின் மூலமாகப் பல்வேறு ஊடுருவல்களைத் தடுக்கின்ற வல்லமை பொருந்தியவர்களாக, வாய்ப்புப் பெற்றவர்களாக, மண்ணாளும் உரிமை பெற்றவர்களாக இருந்த, சோழர்கள் நடத்திய பல்வேறு போராட்டங்களில் சோழ மன்னர்களுக்கு உறுதுணையாகவும் இருந்த வீரகுல மக்கள் சம்புவராயர்கள். அந்த சம்புவராயர்கள் அரசுக்குத் துணையாக . இருந்தவர்கள் மாத்திரம் அல்ல. அரசே அமைத்து, அமைந்த அரசின் வழியில் அறவழி பிறழாமல், நீதி போற்றி, பெண் உரிமை தந்து, நிர்வாகத்தை விரைவாக, செம்மையாக எப்படி நடத்துவது என்பதற்கெல்லாம் திட்டம் வகுத்து இந்த வட்டாரத்திலே வாழ்ந்தவர்கள் .

''அத்தகைய புகழும் பெருமையும் வீரமும் நிறைந்த அந்த இன மக்கள், அந்த இன மக்களின் தலைவர்கள் இந்த வட்டாரத்தில் நடத்திய பெருமை மிக்க ஆட்சியை நினைவு கொள்ளவும் அவர்களுக்கு நன்றிக்கடன் ஆற்றவும் வட ஆர்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டிய சூழ்நிலையில், அப்படிப் பிரிக்கப்படுகின்ற பகுதிகளில் ஒன்றான இந்தப் பகுதிக்கு திருவண்ணாமலை— சம்புவராயர் மாவட்டம் என்று பெயரிடப்படுகிறது.

''இந்த மாவட்டத்தில் பல்வேறு தொழில்வளம் சிறக்க,தமிழக அரசு எல்லாவிதமான வசதிகளையும் செய்து தரும் என்ற உறுதியினை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்,

''போளூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கான திட்டம் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. மத்திய அரசின் ஒப்புதலுக்காக அந்தத் திட்டம் காத்துக் கொண்டிருக்கிறது.


''திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலே உள்ள வந்தவாசி, செய்யாறு, ஆரணி, போளூர், செங்கம், திருவண்ணாமலை ஆகிய ஆறுவட்டங்களும் அரசால் தொழில் ரீதியாகப் பின்தங்கிய வட்டங்கள் என அறிவிக்கப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். எனவே அங்கே ஒரு இராணிப்பேட்டை இருப்பதைப் போல இங்கே பல இராணிப்பேட்டைகள் சம்புவராயர் மாவட்டத்திலே உருவாவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

''செங்கம், வந்தவாசி வட்டங்களில் கருப்புப் பாறைகளும், பல வண்ணப்பாறைகளும் ஏற்கனவே இருக்கின்றன. அவைகளையெல்லாம் பயன்படுத்தி, அதன் மூலமாக அரசுக்கும் இந்த மாவட்டத்தில் உள்ள ஊராட்சி மன்றங்களுக்கும் ஆதாயம் பெருகுகின்ற வகையில் திட்டங்கள் தீட்டப்படுவதைப் பற்றி விரைவில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இங்கு அமையவிருக்கும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு ராஜ கம்பீரன் மாளிகை என்றும், மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கு இரா. தருமலிங்கம் வளாகம் என்றும் பெயர் சூட்டுகிறேன்''.

விழா முடிவில், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெ. கோலப்பன் இ.ஆ.ப. நன்றி கூறினார்.

### அட்டை சொல்லும் செய்தி



# வட ஆர்க்காடு-அம்பேத்கார் மாவட்டம்

செப்டம்பர் 30-ஆம் நாள் மாலை!

வேலூர் நகரம் விழாக்கோலம் கொண்டிருந்தது.

வண்ண விளக்குகளும் தோரணங்களும் வீதிகளை அணி செய்தன.

முதியோர், இளையோர், மாதர் நல்லார், மழலைச் சிறுவர்கள் பல்லாயிரக் கணக்கில் கோட்டை மைதானத்தில் குழுமியிருந்தனர்.

சரியாக 7 மணியளவில், வட ஆர்க்காடு-அம்பேத்கார் மாவட்டத் தொடக்க விழா தொடங்கியது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சில் திரு. கி. மனோகரன் அவர்கள், விழாவுக்குத் தலைமை வகித்தார்:

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் தலைமைச் செயலர் திரு. எம். எம். ராஜேந்திரன் இ.ஆ.ப. வரவேற்று உரையாற்றும்போது,

''தாழ்த்தப்பட்ட இனத்து மக்களின் சோர்வை நீக்கி, அவர்கள் முன்னேற்றம் பெறுவதற்காகப் பாடுபட்டவர் டாக்டர் அம்பேத்கார். அவர் பெயர் அமைந்த இந்த மாவட்டம் புகழ் ஓங்கி நிற்கும்'' என்று குறிப்பிட்டார்.

வருவாய்த்துறைச் செயலர் திரு. ஏ.எம். சுவாமிநாதன், இ.ஆ.ப., திட்டவிளக்க உரையாற்றும்போது,

''இந்த மாவட்டம் 26 இலட்சம் மக்கள் 844 கிராமங்கள், 20 ஊராட்சி ஒன்றியங்கள் 9 நகராட்சிகள், 12 சட்டமன்ற உறுப்பினர்கள், 7 வட்டங்கள் கொண்ட மாவட்டம் ஆகும். இங்குள்ள ஒவ்வொரு வட்டமும் ஒவ்வொரு வகையில் சிறப்புப் பெற்றதாகும்'' என்றார்.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஒரு பொத்தானை அழுத்தி, பெயர்ப் பலகையைத் திறந்து வைத்து 'வட ஆர்க்காடு-அம்பேத்கார்' மாவட்டத்தைத் தொடங்கி வைத்தார். வருவாய்க் கோட்ட அலுவலகத்தைத் திறந்து வைத்ததுடன் புதிய பேருந்து வழித்தடங்களையும் தொடங்கி வைத்தார். 550.445 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை 28,965 பேர்களுக்கு வழங்கினார்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. சி.டி. தண்டபாணி வாழ்த்துரை வழங்கினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்களின் நல்வாழ்வுக்காகத் தனது வாழ்நாள் முழுவதும் போராடிய பெருமகன் அம்பேத்கார்:

''அவரது பெயரை இந்த மாவட்டத்திற்குச் சூட்டியுள்ள முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூற வேண்டும்.''

அடுத்து உரையாற்றிய முன்னாள் அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் தெரிவித்ததாவது:

''அண்ணல் அம்பேத்கார் அவர்களின் கொள்கையை தந்தை பெரியார்-பேரறிஞர் அண்ணா-கலைஞர் ஆகியோர் செயல்படுத்தியுள்ளனர். மராட்டிய மாநிலத்தில் உள்ள மராத்தாவாடா பல்கலைக் கழகம் மராத்தாவாடா அம்பேத்கார் பல்கலைக் கழகம் என அழைக்கப்பட வேண்டும் என ஆசிரியர்களும், மாணவர்களும் போராடி வருகிறார்கள். அப்படியிருந்தும் அங்கு அம்பேத்கார் பெயர் வைக்கப்படவில்லை. ஆனால், தமிழகத்தில் ஒரு மாவட்டத்திற்கு அம்பேத்காரின் பெயரைச் சூட்டியுள்ளார் நமது முதல்வர் கலைஞர் அவர்கள்.''

வாணியம்பாடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. அப்துல் சமது, குடியாத்தம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. ஆர். சுந்தரம், அரக்கோணம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆர். ஜீவரத்தினம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பின்னர் உரையாற்றிய மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்:

''தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளியாக விளங்கியவர் அம்பேத்கார்.

''அவருக்கும் நமது முதல்வர் கலைஞருக்கும் மிகுந்த ஒற்றுமை உண்டு. தூங்கிக் கிடந்த-தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் நலம் காப்பதற்காக-தூக்கம் இல்லாமல்-விழித்திருந்து தொண்டாற்றினார் அம்பேத்கார். தூங்கிக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தட்டி எழுப்புவதற்காக-தூங்காமல் விழித்திருந்து தொண்டாற்றுகிறார் முதல்வர் கலைஞர். அம்பேத்காரின் மறுபதிப்பாகத் திகழ்கிறார் நமது முதல்வர்''.

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள்

''இந்த மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கை இன்று நிறைவேறியுள்ளது. இந்த மாவட்டத்திற்கு அண்ணல் அம்பேத்காரின் பெயரைச் சூட்டிப் பெருமைப்படுத்தியுள்ள முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் தெரிவித்தார்:


''இந்த மாவட்டம் புராதனச் சின்னங்கள் நிறைந்த மாவட்டம். உலக உல்லாசப் பயணிகளைக் கவரத்தக்க அளவுக்குச் சுற்றுலாத் தலங்கள் நிறைந்த மாவட்டம். இதற்கு அண்ணல் அம்பேத்காரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது பெருமைப்படத்தக்க செய்தி.''

அடுத்து, விழாப் பேருரை ஆற்றிய முதல்வர் கலைஞர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டதாவது:

"வெள்ளம் போல் தமிழர் கூட்டம், வீரங் கொள் கூட்டம்' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எடுத்து இயம்பியதற்கேற்ப வேலூர், விழாக் கோலம் பூண்டிருக்கிறது. அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய அழியாப் பெயரை இந்த மாவட்டத்திற்குச் சூட்டியதன் மூலம் நாங்களெல்லாம் பெருமை பெறுகிறோம். இது அம்பேத்காருக்கு வழங்கப்படுகின்ற பெருமை என்று நான் என்னை ஏமாற்றிக் கொள்ள மாட்டேன். அவருடைய பெயரைச் சூட்டுவதால் நமக்குக் கிடைப்பது பெருமை. அந்தப் பெருமையைப் பெறுகின்ற சுயநலத்தோடுதான் டாக்டர் அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய திருநாமத்தை வட ஆர்க்காடு மாவட்டத்தினுடைய ஒரு பகுதிக்குச் சூட்டி நாமெல்லாம் மகிழ்கின்றோம்.

"அம்பேத்காரைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1956-ஆம் ஆண்டு அம்பேத்கார் மறைந்த பொழுது எழுதிய வாசகங்களை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

'அம்பேத்கார் அவர்கள் இருந்த இடமும் தூரமும் மிக அதிகம். எனினும் இங்கு பற்பல இடங்களில் 'அம்பேத்கார் மன்றம்', 'அம்பேத்கார் படிப்பகம்', 'அம்பேத்கார் படத்திறப்பு' என்று அவரது அந்தப் பெயரை சொல்லி உவகை கொள்வதுண்டு நாம்.



'எங்கோ பிறந்து, படித்து, பட்டம் பெற்று, எவ்வளவோ பதவிகளையும், பாராளும் பொறுப்பினையும் ஏற்றிருந்த பொழுதும்கூட, அவர், தான் பிறந்த குடி மீது நீங்காப்பற்றுக் கொண்டு, கேடு கெட்ட நிலையிலிருந்து மீண்டும் புது உருப் பெறவேண்டுமென்னும் ஆசை கொண்டு, அரும்பெரும் பணிகளைச் செய்தார் என்பதால்தான், உறுதியோடு இந்நாட்டு மக்களுக்கு நீதி தேடிடும் சீயமாக அவர் இருந்ததால் தான் அதே கொள்கைக்காகப் போராடிய நீதிக் கட்சியின் வழிவந்த நமக்கும் அம்பேத்கார் என்ற திருநாமம் தித்திக்கிறது.''

—இது பேரறிஞர் அண்ணா அவர்கள், அம்பேத்கார் மறைந்த பொழுது - 'திராவிட நாடு' இதழிலே தீட்டிய வாசகம்.

''அத்தகைய மாமேதை-ஒடுக்கப்பட்ட சமுதாயத்திற்காக உழைத்துக் கொண்டே இருந்தவர்-இன்றைக்கு இந்தியத் தரணியிலே நடமாடிக் கொண்டிருக்கின்ற அரசியல் சாசனத்தைத் தயாரித்துத் தந்த மூல கர்த்தா.

''சோவியத் நாட்டிலே ஒரு புரட்சித் தலைவன் தோன்றினார் - மாவீரன் லெனின்! அதைப்போல் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தோன்றிய புரட்சித்தலைவர்தான் அம்பேத்கார். இன்றைக்கு இந்திய பூபாகத்தில் அம்பேத்கார் பெயர் தமிழகத்திலே உச்சரிக்கப்படுவதைப் போல வடபுலத்திலே உச்சரிக்கப்படுவதில்லை. இந்த நேரத்திலே நான் வேலூர் கோட்டை வெளி மைதானத்திலே இருந்து தமிழகத்தின் முதலமைச்சர் என்கின்ற முறையிலே அல்ல, நானும் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்கின்ற முறையில், நான் தாழ்த்தப்பட்ட மக்களுடைய சம்பந்தி என்ற முறையில், அந்த வகையிலே நானும் அம்பேத்காரும் உறவினர்கள் என்ற நிலையில், அந்த அறிஞனுக்கு, அவன் பிறந்த மாநிலத்திலே மாத்திரமல்லாமல் இன்றைக்கு எப்படி தமிழகத்திலே ஒரு மாவட்டம் அந்தப் புனிதன் பெயரால் தொடங்கப்படுகிறதோ - அதைப்போல் 1991-ஆம் ஆண்டு அம்பேத்கார் நூற்றாண்டு விழா கொண்டாடுகிற நேரத்தில் இந்தியாவிலே உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு அம்பேத்கார் மாவட்டம் உருவாக வேண்டுமென்ற விருப்பத்தைக் கோட்டை வெளி மைதானத்திலேயிருந்து நான் தெரிவிக்கின்றேன்.

''அதற்கான குரலை இந்தியா முழுமையுமுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பரிவு கொண்டிருக்கிற மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் இந்தியாவிலே அம்பேத்காருடைய நூற்றாண்டு விழா கொண்டாடுகிற நேரத்தில் எப்படி தமிழகத்தில் ஒரு அம்பேத்கார் மாவட்டம் உதயமானதோ அதைப்போல் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு அம்பேத்கார் மாவட்டம் இருந்தாக வேண்டும் என்று குரல் கொடுக்க வேண்டும். இதை நான் எச்சரிக்கையாகச் சொல்லவில்லை, அன்பு வேண்டுகோளாக விடுக்கின்றேன்.

''இந்த மாவட்டத்தில்,மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு 'ஈ.வே.ரா. மணி-யம்மை வளாகம்' என்று பெயர் சூட்டுகிறேன். பட்டிதொட்டிகள் எல்லாம் பயணம் செய்து பிரச்சாரம் செய்த சிற்றரசு அவர்களை நினைவு கூரும் வகையில் 'சி.பி. சிற்றரசு மாளிகை' என்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் பெயர் சூட்டுகிறேன். வேலூர் பேருந்து நிலையத்திற்கு உபயதுல்லா பெயரைச் சூட்டுகிறேன்.''

விழா இறுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. சத்தியமூர்த்தி இ.ஆ.ப. நன்றி கூறினார்.

-நிகழ்ச்சித் தொகுப்பு
த.பி.

# புதிதாகச் சூட்டப்பட்ட புகழ்ப் பெயர்கள்

- சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு 'அன்னை சிவகாமி வளாகம்' என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்குக் 'கே.வி.கே. சாமி மாளிகை' என்றும் பெயுர்கள் சூட்டப்பட்டன. (11.9.89)
- திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு 'சுந்தரலிங்கம் வளாகம்' என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்குப் 'புலித்தேவன் மாளிகை' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன. (12.9.89)
- திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சேரன் மாதேவித் தொகுதியில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ரூ.85 இலட்சம் செலவில் கோபால சமுத்திரத்தில் கட்டப்பட்டுள்ள புதிய பாலத்திற்கு திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவரான டபிள்யூ.பி.ஏ. சௌந்தர பாண்டியனார் பெயர் சூட்டப்பட்டது. (12.9.89)
- பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குத் 'தீரன் சின்னமலை' பெயர் சூட்டப்பட்டது. (18.9.89)
- தஞ்சை மாவட்டத்திலுள்ள பழையாறு மீன்பிடி துறைமுகத்திற்கு 'சிங்கார வேலர்' பெயர் சூட்டப்பட்டது. (18.9.89)
- திருச்சி மாவட்டத்தில் உருவாகி வரும் வேளாண்மைக் கல்லூரிக்கு, முன்னாள் அமைச்சர் 'அன்பில் தர்மலிங்கம்' பெயர் சூட்டப்பட்டுள்ளது. (7-9-89)
- தமிழ்நாடு அரசின் விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டத்திற்கு ''டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமண உதவித் திட்டம்'' என்ற பெயர் சூட்டப்பட்டது. (22.9.89)
- தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தஞ்சையில் உள்ள 'சத்யா' விளையாட்டு அரங்கில் கட்டப்பட்ட நீச்சல் குளத்திற்கு 'குந்தவை நீச்சல் குளம்' என்ற பெயர் சூட்டப்பட்டது. (22.9.89)

## கவிஞர் கருணானந்தம் மறைவு

தமிழக அரசின் செய்தி-மக்கள் தொடர்புத் துறையில் துணை இயக்குநராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற கவிஞர் கருணானந்தம் அவர்கள் 27-9-1989 அன்று திருநெல்வேலியில் மறைவெய்தினார்.

தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முதல்வர் கலைஞர் ஆகியோருடன் நெடுங்காலம் தொடர்பு கொண்டிருந்த கவிஞர் கருணானந்தம் அவர்கள், சிறந்த எழுத்தாளராகவும், நூலாசிரியராகவும் விளங்கினார். அவரது படைப்புகளில் 'அண்ணா காவியம்', 'தந்தை பெரியார்' ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

15-10-1925-இல் பிறந்த கவிஞர் கருணானந்தம் அவர்கள் மத்திய அரசின் ரெயில்வே அஞ்சல் பிரிப்பகத் துறையில் (R.M.S.) பல்லாண்டுகள் பணிபுரிந்தவர். பின்னர், 1969-இல் தமிழக அரசின் செய்தித் துறையில் பொறுப்பு ஏற்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வளர்ச்சிக்கு, குறிப்பாக கழக ஆட்சியில் உருவாக்கப்பட்ட 'தமிழரசு' இதழை வளர்ப்பதற்கு இவர் ஆற்றிய பணி பாராட்டுக்குரியதாகும்.



அன்னாரின் மறைவுக்கு 'தமிழரசு' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

—ஆசிரியர்




பயன் அடைந்தோர் பகர்வன :

# ஏழை எளியோர் பயன்பெறும் அரிய திட்டம்

## ''இந்தத் திட்டம் ஒரு வரப் பிரசாதம்!

கிராமப்புறங்களில் வாழும் ஏழைப் பெண்களின் மகப்பேறு நல மேம்பாட்டிற்கான நிதி உதவித் திட்டம், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுச் சீராகச் செயல்படுத்தப்பட்டும் வருகிறது.

திருமதி பாப்பாத்தி அம்மாள்



'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம்' என்கிற திட்டத்தின் மூலம் ஏழை எளியமக்கள் பெரிதும் பயன் பெற்று வருகிறார்கள். இந்த அரிய திட்டத்திற்கு நல்ல ஆதரவும் கிடைத்து வருவது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம் ஆர். கோம்பைக் கிராமத்தைச் சேர்ந்த கருவுற்ற ஏழைப்பெண் திருமதி பாப்பாத்தி இந்தத் திட்டத்தின் மூலம் உதவி பெற்றுள்ளார். ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த இவருடைய கணவர் பெயர் வீரன். கூலி வேலை செய்பவர்.

திருமதி பாப்பாத்தியைச் சந்தித்த போது இந்தத் திட்டத்தின் நன்மைகளை விளக்கினார்:


''அரசாங்கம் கொண்டு வந்த இந்தத் திட்டத்தைப் பற்றி இங்கே உள்ள முக்கிய சேவிகா மூலம் அறிந்தேன். அவர் உதவியுடன், ஆரம்பச் சுகாதார நிலையத்தில் பெயரைப் பதிவு செய்து கொண்டேன். அவர், ஊராட்சி ஒன்றியம் மூலமாக, எனக்குத் தாலுக்கா அலுவலகத்தில் எல்லாச் சான்றிதழ்களையும் வாங்கித் தந்தார்.

''மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம், எனக்கு நூறு ரூபாய் கொடுத்தார்கள். குழந்தை பிறந்தவுடன் மேலும் நூறு ரூபாய் தருவதாகக் கூறியுள்ளார்கள்.

''எங்களைப் போன்ற ஏழைக் குடும்பத்தில் பிறந்த தாய்மார்களுக்கு இந்தத் திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும். இரண்டு குழந்தைகளுக்கு மேல் உள்ளவர்கள், இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற முடியாது என்பதால், 'இரண்டே போதும்' என்று சொல்கிற வகையில் இரண்டுக்கு மேல் பெற்றுக் கொள்ளவும் மாட்டார்கள்.

"கிராமப்புற ஏழைப் பெண்களின்
மகப்பேறு நல
மேம்பாட்டிற்கென அறிமுகப்படுத்தப்பட்டதுதான்
டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி
நினைவு மகப்பேறு நிதிஉதவித் திட்டம்.
மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின்
பிறந்த நாளின்போது
தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம்
ஏராளமான, கருவுற்ற பெண்கள்
பயன் பெற்று வருகிறார்கள்."

# பம்ப் ஓடினால் பயிர் ஓங்கி வளரும், பம்ப் நின்றால் வேலை ஓய்ந்துவிடும்



விவசாயிகளின் வாழ்க்கை அவர்களுடைய பயிரில் இருக்கிறது என்றால் பயிரின் உயிர் நீரை நம்பியிருக்கிறது. பயிருக்கு காலாகாலத்தில் நீர் கிடைக்காவிடில் நல்ல விதைகள், தரமான உரம் மற்றும் உளம் தளராத உழைப்பு எல்லாமே வீணாகிவிடும்.

வளர்ந்து நிற்கும் பயிருக்கு நீர் தேவைப்படும்போது, கிணற்றில் நீர் இருப்பினும் பம்ப் எரிந்து போய்விட்டாலோ, உடைந்துவிட்டாலோ, கெட்டுப்போய்விட்டாலோ அல்லது திருட்டுப்போய்விட்டாலோ விவசாயிகளின் வாழ்க்கை பாழாய்ப்போய்விடும்.

இந்தமாதிரி கஷ்ட காலத்தில் விவசாயிகளுக்கு உதவி செய்கிறது

நியூ இந்தியாவின் விவசாய பம்ப்செட் இன்சூரன்ஸ்.

விவசாய பம்ப்செட் இன்சூரன்ஸ் திட்டத்தில் ஸப்மெர்ஸிபிள் பம்ப்செட் உள்பட எல்லாவகை பம்ப்செட்டுகளுக்கும் இன்சூர் செய்யலாம்.

**விவசாய பம்ப்செட் இன்சூரன்ஸ் ப்ரீமியம் :** மோட்டாரின் ஹார்ஸ் பவருக்கேற்றபடி ஆண்டுக்கு குறைந்தபட்சம் 50 ரூபாய்.

நியூ இந்தியாவின் 1000க்கும் அதிகமான அலுவலகங்கள் நாடு பூராவும் பரவியுள்ளன.

மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள அலுவலகத்தில் விசாரியுங்கள் அல்லது ஏஜெண்ட்டை சந்தியுங்கள். உங்களுக்கு சேவை செய்யவே எட்டாத தூரத்தில் உள்ள கிராமங்களில்கூட நியூ இந்தியாவின் கிராம பிரதிநிதிகள் காத்திருக்கிறார்கள்.

விவசாய பம்ப்செட் இன்சூரன்ஸுக்கு

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்

கஷ்ட காலத்தில் உங்களுக்கு ஆதரவு

RK SWAMY






*சென்னை மாநகராட்சி சார்பில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் துணைவியார் திருமதி தயாளு கருணாநிதி அவர்கள் சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலையில் உள்ள மாநகராட்சி தாய்சேய்நல மருத்துவ மனையில் வழங்கினார். சைதை சட்டமன்ற உறுப்பினர் திரு. ஸ்ரீதர், மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். (22.9.89)*

"எனக்குக் கொடுத்த இந்தப் பணத்தைக் கொண்டு, எனக்கு வேண்டிய மருந்துகளை வாங்கிச் சாப்பிடுவேன். எனக்கு ஏற்கெனவே, ஒரு பெண் குழந்தை உள்ளது. இனி குழந்தை பிறந்தவுடன், கருத்தடையும் செய்து கொள்வேன்".

## ஏழைத் தாய்மார்கள் பயனடைவார்கள்!"

இதே ஊரைச் சேர்ந்தவர் திருமதி காளியம்மாள். ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர். இவரது கணவர் பெயர் மருதமுத்து. கூலி வேலை செய்து வருகிறார்.

"இந்தத் திட்டம் எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது" என்கிறார் திருமதி காளியம்மாள். இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்,



திருமதி காளியம்மாள்

"பால்வாடியில் எனக்கு இந்தத் திட்டத்தைப் பற்றிக் கூறினார்கள். இதன் மூலம் நூறு ரூபாய் உதவியும் பெற்றேன். குழந்தை பிறந்ததும் நூறு ரூபாய் தருவதாகச் சொன்னார்கள்.

"இந்த நல்ல திட்டத்தினாலே, ஏழைத் தாய்மார்கள் பயனடைவார்கள். நிறை மாதத்தில், கூலி வேலைக்குப் போக முடியாத நிலையில், மருந்துச் செலவுக்கு இந்தத் தொகை பயன்படுகிறது.

ஏற்கெனவே ஒரு குழந்தை எனக்கு உள்ளதால், குழந்தை பிறந்ததும் கருத்தடை ஆப்பரேஷன் செய்து கொள்வேன்." என்றார்.

பேட்டியின்போது இவர்கள் மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் கருத்து தெரிவித்தார்கள்.

-எம். **அண்ணாமலை,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்.






# பெரியார் மாவட்டத்தில் முதல்வர் கலைஞர்

பெரியார் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

18.9.89 அன்று, ஈரோடு நகராட்சி வ.உ. சிதம்பரனார் பூங்கா வளாகத்தில் நடைபெற்ற இவ்விழா வில், ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய மேல்நிலைத் தொட்டியையும், 19 கிராமங்கள் பயன்பெறும் வகையில் ரூ.61.18 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்களையும், ரூ.150.48 இலட்சம் மதிப்பீட்டில் கவுந்தப்பாடி யில் அமைக்கப்பட்ட துணை மின் நிலையத்தையும், காங்கேயத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட் டப்பட்ட புதிய பேருந்து நிலையத் தையும், கவுந்தப்பாடியில் ரூ.9.51 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப் பட்ட ஆதி திராவிடர் மாணவியர் விடுதியையும் திறந்து வைத்தார்.

இவையன்றி, சென்னம்பட்டி, குப்பாண்டாம்பாளையம், ஆலாம் பாளையம் ஆகிய கிராமங்களில் ரூ.7.14 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட 119 ஆதி திராவிட குடியிருப்புகளையும், கூகலூரில் ரூ.17.27 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார நிலை யம் மற்றும் அலுவலர்கள் குடியிருப் பினையும், கோபி அரசு மருத்துவ மனையில் ரூ.4.40 இலட்சம் மதிப் பில் அமைக்கப்பட்டுள்ள குடும்பநல அறுவைச் சிகிச்சைப் பிரிவுக் கட்ட டத்தையும், சாலைப்புதூரில் ரூ.1.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு உள்ள சுகாதாரக் கிளை நிலையத் தையும், மேட்டாங்காட்டுவலசில் ரூ.1.75 இலட்சம் செலவில் கட்டப் பட்டுள்ள சுகாதாரக் கிளை நிலை யத்தையும், பட்டிமணியக்காரன் பாளையம், காஞ்சிக்கோயில், கவுந் தப்பாடி ஆகிய ஊர்களில் ரூ.5.43 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி வகுப்பறைகளையும், கோபியில் ரூ.5.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந் தகம் மற்றும் மருத்துவர் குடி யிருப்பினையும், மலையம்பாளையத் தில் ரூ.5.14 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் தங்கும் விடுதியையும், வீரப்பன் சத்திரத்தில் ரூ.4.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூட்டுறவு விவசாய வங்கி கூடுதல் கிடங்கினையும், உடுமலை-சின்னதாராபுரம் சாலை யில் ரூ.3.30 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பாலத்தினை யும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். இவற்றின் மொத்த மதிப்பீடு ரூ.332.15 இலட்சம் ஆகும்.

ரூ.590.12 இலட்சம் மதிப்பீட்டில் கலிங்கியம், குன்னத்தூர், சிறு வலூர், ஊத்துக்குளி, தொளப் பலூர், பேரூராட்சி மற்றும் 131 குடியிருப்புகளுக்கான குடிநீர்த்

## ரூ.133 கோடியில் கிராமப்புறக் கூடுதல் வேலைவாய்ப்புத் திட்டம்

**கி**ராமப்புறங்களில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும், மக்களுக்குப் பயன்படும் பொதுச் சொத்துக்களை ஏற்படுத்தவும் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் நடப்பு ஆண்டில் தமிழகத்தில் செயலாக்கப்படுகிறது. இத்திட்டத்தைத் துரிதமாகவும், சிறப்பாகவும் செயல்படுத்தும் விதத்தில் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய ஆணைகளையும். வெளியிட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்தை ரூ.133 கோடி செலவில் நிறைவேற்றிடத் திட்டமிடப் பட்டுள்ளது. இதுவரை ரூ.64.71 கோடி ரூபாயும், 24,044 மெட்ரிக் டன் அரிசியும், 24,044 மெட்ரிக் டன் கோதுமையும் வழங்கப்பட்டுள்ளன.

கசிவு நீர்க் குட்டைகள், சிறிய நீர்ப்பாசன வேலைகள், குளங்கள், ஊருணிகள், சாலைகள் அமைத்தல் மற்றும் கூட்டுக் குடியிருப்புகள் கட்டுதல் ஆகிய வேலைகள் இத்திட்டத்தின் மூலம் செய்யப்படுகின்றன. மொத்தம் ரூ.3909.61 இலட்சம் மதிப்பீட்டில் 36,809 வேலைகள் செய்து முடிக்கப்படும்.

மிகப்பெரிய இத்திட்டத்தை தமிழக அரசு செயலாக்குவதன் மூலம் தமிழகத்தின் கிராமப் புறங்களில் வேலையற்ற தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். பாசன வசதிகள் கூடுதலாக்கப்படுவதால் உணவு உற்பத்தி அதிகமாகும். 42,000 குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதால் கிராமப் புறங்களில் வாழும் ஆதிதிராவிடர் ம்ற்றும் பழங்குடியினர் வீடுகளைப் பெறுவர்.

இவ்வாண்டு செப்டம்பர் திங்கள் இறுதிக்குள் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிதி மற்றும் திட்ட இலக்குகளில் 50 சதவீதத்தை முடித்துவிட வேண்டுமென்று அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

திட்டம், ரூ.108.24 இலட்சம் மதிப்பீட்டில் கவுந்தப்பாடி-பி. மேட்டுப் பாளையம்-கலங்கபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ரூ.58.26 இலட்சம் மதிப்பீட்டில் பாதூர்-கிளாம்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டம், ரூ.58.76 இலட்சம் மதிப்பீட்டில் காசிபாளையம்-மாக்கினாம் கோம்பை கூட்டுக் குடிநீர்த் திட்டம், ரூ.31.58 இலட்சம் மதிப்பீட்டில் அக்கரை கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம், ரூ.31.52 இலட்சம் மதிப்பீட்டில் கெம்மநாயக்கன்பாளையம் மற்றும் 5 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் ஈரோடு நகராட்சிப் பகுதியிலுள்ள ஈ.வி. நஞ்சப்பா வீதியில் ரூ.130 இலட்சம் மதிப்பீட்டில் வடிகால் அமைப்பது, ஆர்.கே.வி. சாலையில் ரூ.72 இலட்சம் மதிப்பீட்டில் வணிக மையம் அமைப்பது, காமராஜ் வீதியில் ரூ.14.75 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வணிக மையம் அமைப்பது, சிலம்பரான் குட்டையில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் தினசரி சந்தை அமைப்பது, பெரியார் நகருக்கு ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது, பெரியார் மத்தியக் கூட்டுறவு அலுவலக வங்கிக்கான அலுவலகக் கட்டடத்தினை ரூ.125 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவது, தாராபுரத்தில் ரூ.25.50 இலட்சம் மதிப்பீட்டில் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தைக் கட்டுவது, கவுந்தப்பாடியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது ஆகிய பணிகளுக்குக் கால்கோள் நாட்டப்பட்டது. மேற்கண்ட அனைத்துத் திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ.1,266.19 இலட்சம் ஆகும்.

இதுதவிர, 441 முதியோர்களுக்கு ரூ.22,000 மதிப்பீட்டில் ஓய்வூதியம், வருவாய்த்துறையின் சார்பில் 10,000 பேர்களுக்கு ரூ.62 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டு மனைப் பட்டாக்கள், நிலமற்ற 19 ஏழைகளுக்கு ரூ.6.30 இலட்சம் மதிப்பீட்டில் நில ஒப்படைப்பு, நலிந்தோர் குடும்பநல உதவித் திட்டத்தின் கீழ் ரூ.3.72 இலட்சம் மதிப்பீட்டில் 186 நபர்களுக்கு உதவிகள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.300 இலட்சம் மதிப்பீட்டில் கடன் மற்றும் மானியம், காலம் சென்ற அரசுப்பணியாளர் ஒருவரின் மனைவிக்கு ரூ.40,000 குடும்பநல உதவி, 89 ஓட்டுநர்களுக்கு ரூ.27.38 இலட்சம் மதிப்பீட்டில் ஆட்டோ ரிக்ஷா, ரூ.42.73 இலட்சம் மதிப்பீட்டில் 33 ஓட்டுநர்களுக்குப் புதிய வாடகை ஊர்தி, ரூ.2.65 இலட்சம் மதிப்பீட்டில் பிற்பட்டோர் நலத் துறையின் சார்பில் 100 இலவச மனைப்பட்டா, 10 கல்லுடைக்கும் நபர்களுக்கு ரூ.4,000 மதிப்பீட்டில் இலவசத் தொழிற் கருவிகள், 33 முடிதிருத்துவோருக்கு ரூ.7,000 மதிப்பீட்டில் இலவசத் தொழிற்கருவிகள், 183 சலவைத் தொழிலாளர்களுக்கு 1.05 இலட்சம் மதிப்பீட்டில் தொழிற் கருவிகள் வழங்கப்பட்டன.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் 135 பெண்களுக்கு ரூ.6.75 இலட்சம் மதிப்பீட்டில் உதவித்தொகை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் 1,000 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உதவி, 73 ஊனமுற்றோ ர்களுக்கு 1.09 இலட்சம் மதிப்பீட்டில் 3 சக்கர வண்டிகள், ஊனமுற்ற இருவருக்கு ரூ.3,000 செலவில் சக்கர நாற்காலிகள், கடும் ஊனமுற்ற 11 நபர்களுக்கு ரூ.13,000 செலவில் பராமரிப்பு உதவி, 240 திக்கற்ற பெண்களுக்கு ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் இலவசத் தையல் இயந்திரங்கள், விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் ஒரு பெண்ணுக்கு ரூ.5,000, ரூ.27,000 மதிப்பீட்டில் 27 விதவையர் மகள்கள் திருமண உதவி, ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் 360 மகளிர்களுக்கு வங்கிக் கடன், ரூ.22,000 மதிப்பீட்டில் 5 கலப்புத் திருமணத் தம்பதியர்களுக்குப் பாராட்டுப் பத்திரம் மற்றும் சேமிப்புப் பத்திரம், ரூ.2.20 இலட்சம் மதிப்பீட்டில் 123 ஊனமுற்றோர்களுக்கு வங்கிக் கடன், ரூ.4.46 இலட்சம் மதிப்பீட்டில் 346 ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள், ரூ.5,000 மதிப்பீட்டில் 8 நபர்களுக்கு இலவசச் சலவைப் பெட்டிகள், இலவசக் கண்ணொளி வழங்கும் திட்டத்தின் கீழ் 827 பேர்களுக்கு இலவசக் கண் சிகிச்சை வசதி, ரூ.23.30 இலட்சம் மதிப்பீட்டில் 33,785 ஆதி திராவிடர்களுக்கான நலச் சிறப்புத் திட்ட உதவி, ரூ.4.61 இலட்சம் மதிப்பீட்டில் 242 நபர்களுக்கு ஆதிதிராவிட நலச் சிறப்புத் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் ஆகியவற்றையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்கள். மேற்கண்ட ரூ.496.72 இலட்சம் மதிப்பீட்டிலான நல உதவிகள் மூலம் 53,155 பேர்கள் பயன் பெற்றார்கள்.

60 கிராமங்களில், 25,700 பேர்கள் பயன்பெறும் வகையில் ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 9 நகர வழித்தடங்களையும், ஒரு,புற வழித் தடத்தையும் ஆக 10 புதிய பேருந்து வழித் தடங்களைத் துவக்கி வைத்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாப்பேருரை ஆற்றினார். அப்போது அவர் பேசுகையில்,

"இதுபோன்ற விழாக்களை நடத்துவது விளம்பரத்திற்காக அல்ல. ஒருவகையில் எந்த விளம்பரத்திற்காக என்றால், இதுபோன்ற திட்டங்கள் இருக்கின்றன, இந்தத் திட்டங்கள் மக்கள் மத்தியிலே எடுத்துச் சொல்லப்படாமல் மங்கிக் கிடக்கின்றன, பயன்படாமல் கிடக்கின்றன, தூய திட்டங்கள் துருப் பிடித்துக் கிடக்கின்றன, அது மக்களுக்குப் புரிய வைக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான், இந்த விழாக்களில் இன்னின்ன திட்டம் இருக்கிறது, அவைகளை நீங்கள் இன்னின்னாரை நாடிப் பெற்றுக் கொள்ளலாம், இடையில் யாராவது விஷமம் செய்யக்கூடும், இடையில் யாராவது தரகு வேலைக்கு வரக் கூடும், 200 ரூபாய் கிடைப்பதில் இருபதை நாம் எடுத்துக்கொள்ளலாமா என்று யாராவது எண்ணக் கூடும், அதற்கெல்லாம் இடம் தராமல் 'அரசு எங்களுக்கு 200 ரூபாய் கொடுக்கிறது, அதை ஒழுங்காக எங்களுக்குக் கொடு' என்று கேட்கிற துணிவை மக்கள் பெற்றாக வேண்டும். 'என்னுடைய திருமண உதவிக்காக 5,000 ரூபாய் கொடுக்கிறது அரசு. அதை ஒழுங்காக என் இடத்தில் கொடு. அதில் நீ கமிஷன் கேட்காதே' என்று சொல்கின்ற தைரியத்தை மக்கள் பெற்றாக வேண்டும். இடைத் தரகர்கள் வருவார்கள். அவர்களால் காரியம் ஆகாவிட்டாலும் கூட, தன்னால் தான் இந்தக் காரியம் முடிந்தது என்று சொல்லிக் கொண்டு இடைத் தரகர்கள் வருவார்கள். அவர்களுக்கு இடம் தராமல் நீங்கள் எச்சரிக்கையாக இருந்து திட்டத்தின் பலன்களை நீங்கள் முழுமையாகப் பெற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றார்.

"பெரியார் மாவட்டத்தில் அமைந்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கு, 'தீரன் சின்னமலை மாளிகை' என்று பெயர் சூட்டப்படுகிறது என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்கு மாண்புமிகு சமூக நலத்துறை மற்றும் ஊரக தொழில் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்களும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்களும் முன்னிலை வகித்துச் சிறப்புரையாற்றினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி. கண்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அ. கணேசமூர்த்தி, திரு. டி.கே. சுப்பிரமணியம், டாக்டர் டி. சாந்தகுமாரி, ஈரோடு நகரமன்றத் தலைவர் திரு. செ. அரங்கராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.


விழாவிற்கு வந்திருந்தோரை பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., வரவேற்றார். பெரியார் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ச. சுவாமிநாதன் நன்றி கூறினார்.

—எஸ். நாகராசன்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரியார் மாவட்டம்

★ பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குச் சற்று அளவுக்கு மீறிய நாணயமும், கட்டுப்பாடும் உறுதியும், தியாக புத்தியும் வேண்டும்.

★ எனது சீர்திருத்தம் என்பதெல்லாம் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்து, சரி என்று பட்டபடி நட என்பதேயாகும்.

★ உனக்குப் பெருமை வேண்டுமானாலும், உற்சாகம் வேண்டுமானாலும், பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக் கொள்.



Kirtilal Kalidas & Co.

Diamonds & Jewellery


Since 1939

601, Raja Street,
Post Box 32, Coimbatore-641 001.
Cable: 'DIAMOND'
Phone: 24782, 24704



# கைப்பம்பு - விசைப்பம்பு

## பராமரிப்பு முறை



—இரா. பூரணலிங்கம், இ.ஆ.ப.,
ஊரக வளர்ச்சி ஆணையாளர்

"நீரின்றி அமையாது உலகு" என்பது தமிழ் மறை. தமிழ்நாட்டில் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட, தமிழக அரசு எல்லா நடவடிக்கைகளையும் முனைப்புடன் மேற்கொண்டுள்ளது.

கடந்த 30.6.89 தேதி முடிய, ஊரக வளர்ச்சித் துறை மேற்பார்வையிலுள்ள 12,616 ஊராட்சிகளில், 65,597 ஆழ்துளைக் குழாய்க் கைப்பம்புகள், 34,889 வடிமுனைக் குழாய்க் கைப்பம்புகள், 18,890 விசைப் பம்புகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் அனைத்துக் குடியிருப்புகளிலும் நிறுவப்பட்டுள்ள குடிநீர்ப் பம்புகள் பழுதுறாமல் இயங்கவும், அவ்வாறு பழுதுற்றால் விரைந்து சீர்படுத்தி இயங்க வைக்கவும் முழுப் பொறுப் பேற்றுள்ள ஊரக வளர்ச்சித் துறை மூன்றடுக்கு முறையை வகுத்துப் பராமரிக்கிறது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், ஒரு கைப்பம்பு பழுதுற்றால், இரு நாட்களுக்குள் சீர் செய்து மீண்டும் இயக்கப்பட வேண்டும். பெரும் பழுதென்றால் குறைந்த பட்சம் ஒரு வாரத்திற்குள் சீர்ப்படுத்த வேண்டும். இந்நடைமுறையில் ஊர்ப் பயனாளிகளும் பொறுப்பேற்கிறார்கள்.

மேற்குறித்த பராமரிப்பு முறையினால் கடந்த நான்கு ஆண்டுக் காலமாகத் தொடர்ச்சியாக மொத்த பம்புகளின் எண்ணிக்கையில் 98 சதவிகிதத்திற்கும் குறையாத பம்புகள் இயக்கத்தில் உள்ளன. தமிழகத்தில் பட்டி தொட்டிகள் எங்கும் பரவலாக அமைக்கப்பட்டுள்ள ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட பம்புகளை 98சதவிகித இயக்க நிலையில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருவது ஒரு சாதனையாகும்.

**மூன்றடுக்குப் பராமரிப்பு முறை**

ஒவ்வொரு கைப் பம்பினையும் சரிவரப் பராமரிப்பதற்கெனப் பயன்பெறுவோர் மத்தியிலிருந்து ஒரு பெண் பராமரிப்பாளர் நியமனம் செய்யப்படுகிறார். கைப் பம்புப் பராமரிப்பாளருக்கு ஊரக வளர்ச்சித் துறையினரும், 'யுனிசெப்' துறையினரும் இணைந்து இரண்டு நாள் பயிற்சி அளிக்கிறார்கள். சிறு பழுதுகளை நிவர்த்தி செய்ய ஸ்பானர் செட்டும், பெரும் பழுது குறித்து வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குத் தெரிவித்திட அஞ்சல் அட்டைகளும், பயிற்சி முடிந்தவுடன் அளிக்கப்படுகின்றன. இந்த அஞ்சல் அட்டைகள் மூலம் பழுது ஏற்பட்ட கைப்பம்புகளை உடனடியாக நிவர்த்தி செய்ய, பராமரிப்பாளர்கள் பம்பின் எண், மற்றும் நிறுவப்பட்ட இடம் ஆகியவைகளை எழுதி அனுப்புவதன் மூலம் கைப் பம்புகள் எந்த நேரத்திலும் சரிவர இயங்கும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபடுகின்றனர்.

**வட்டார அளவில்:**

வட்டார அளவில், ஒரு கைப் பம்பு பொருத்துநர் மூலம் கைப் பம்புகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கைப்பம்பு பராமரிப்பாளர்களிடமிருந்து பழுதுகள் பற்றிய புகார் வந்தவுடன் இந்தப் பொருத்துநர் இரண்டு நாளுக்குள் நிவர்த்தி செய்ய வேண்டும். அவரால் சீர்படுத்த இயலாத பெரும் பழுதாக இருந்தால் கோட்ட அளவிலான நடமாடும் குழுவின் மூலம் கைப் பம்புகளை நிவர்த்தி செய்வார்.

100 கைப்பம்புகளுக்கு மேல் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் வட்டாரப் பொருத்துநர் நீங்கலாக நூற்றுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 30 கைப் பம்புகளையும் பராமரிப்பதற்கெனக் கூடுதல் ஃபிட்டர்கள் வேலைக்கேற்ற ஊதிய அடிப்படையில் மாவட்ட ஆட்சியர்களால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

**தேசிய அளவில் தமிழகம் தலைசிறந்து விளங்குகிறது**

### கோட்ட அளவில்...

கோட்ட அளவில் ஒரு நடமாடும் குழு ஊர்தியுடன் இயங்கி வருகிறது. இந்தக் குழுவில் ஓர் இளநிலைப் பொறியாளர், பொருத்துநர் (கம்மியர்), மின் பணியாளர், உதவியாளர் மற்றும் ஊர்தி ஓட்டுநர் ஆகியோர் பணியாற்றுகின்றனர். இவர்கள் அந்தக் கோட்டத்தைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்களில் பெரும் பழுதுகள் பற்றிய புகார்கள் பெறப்பட்டவுடன் அந்தப் பழுதினைச் சரிசெய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் ஓர் உதவி செயற்பொறியாளர் (விசைப்பம்பு பராமரிப்பு), விசைப்பம்புகள் இயங்குவதைப் பராமரிப்பதற்காக நியமனம் செய்யப்பட்டு உள்ளார். இவர் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கைப்பம்புகளுக்குத் தேவைப்படும் உதிரிப் பாகங்கள் வாங்குவது குறித்து மாவட்ட ஆட்சியாளருக்குத் தரம் மற்றும் தொழில் நுட்பம் பற்றி உதவி செய்வார்.

1987 வரை கைப்பம்புகள் பராமரிப்பு முறை, பழுது நீக்கி செயல்படுத்தும் முறை நிலையாக அமைந்திருந்தது. அதாவது ஒரு கைப்பம்பு பழுது அடைந்தால் அதை ஆய்வு செய்து பழுது நீக்கம் செய்யப்படும். 1989 முதல் 'பழுது தடுக்கும் முறை' அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையில் வழிப் படம் ஒன்று நிறுவப்பட்டு பொருத்துநர் ஆய்வு செய்யும் நாள், மற்றும் எந்தெந்த நாட்களில் கைப்பம்புகளை ஆய்வு செய்தார், துப்புரவு செய்த விவரம் மற்றும் உதிரிப் பாகங்கள் மாற்றப்பட்ட விவரங்கள் அந்த வழிப் படத்தில் குறிக்கப்பட்டு இருக்கும். இந்த முறையில் கைப் பம்புகளின் பழுது நிலைகள் குறைக்கப்பட்டு அவைஇயங்கும் கால அளவும் நீட்டிக்கப்படுகிறது.

கைப்பம்புகள் சரிவர இயங்குவதைத் தொடர்ந்து மேற்பார்வையிடக் கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் ஒவ்வொரு வாரமும் பழுது மற்றும் சீர்படுத்தும் முறைகளை ஆய்வு செய்வார். ஆய்வுக் கூட்டத்தில் கோட்டத்தைச் சார்ந்த வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பொருத்துநர்களின் நடமாடும் குழுப் பொறியாளர், தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் மின்வாரியத்தைச் சேர்ந்த உதவிப் பொறியாளர்கள் கலந்து கொள்வர். மாவட்ட அளவில் ஆட்சியர்கள் ஒவ்வொரு அரைத் திங்களிலும் நிலையை ஆய்வு செய்து தம் அறிக்கையினை ஊரக வளர்ச்சி ஆணையருக்கு அனுப்புவர்.

## ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிலாளர்க்கு நிதி உதவி!

சென்னையை அடுத்துள்ள வண்டலூரில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை கடந்த பிப்ரவரி 7-ஆம் தேதி முதல் மூடப்பட்டது. இதனால் 3036 தொழிலாளர்கள் கடந்த ஆறு மாதங்களாக வேலையின்றி அவதியுறுகின்றனர். இந்த நிறுவனத்தைத் திறப்பது குறித்து தொழிலாளர் துறையும், அரசும் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றன. தொழிற்சாலையைத் துவக்குவதில் பல சிக்கல்கள் உள்ளதால், முடிவான ஒப்பந்தம் ஏற்படவும் நிறுவனத்தைத் திறக்கவும் சில காலம் ஆகும்.

தொழிலாளர்களின் அவதியைக் கருத்தில் கொண்டு கருணை அடிப்படையில் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையில் பணிபுரியும் 3036 தொழிலாளர்களுக்கும் முதல்வர் நிவாரண நிதியிலிருந்து ஒரு நபருக்கு ரூ. 200 வீதம் மொத்தம் ரூ. 6 இலட்சத்து 7 ஆயிரத்து 200 வழங்கப்பட்டுள்ளது.

### மாநில அளவில்

மாநில அளவில் ஊரக வளர்ச்சித் துறை ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர்களது வேலைத் திறமையைக் கூர்ந்து ஆய்வு செய்கிறார். இந்தப் பராமரிப்பு மூலம் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பழுதுகளின் விகிதம் 2 சதவிகித அளவிற்குள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

கைப்பம்பு உதிரிப் பாகங்களைக் கொள்முதல் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட முறை பின்பற்றப்பட்டு வருகிறது. மாநில அரசு, 'யுனிசெஃப்' நிறுவனத்தாரின் பரிந்துரைகளின் மூலம் மூன்று தயாரிப்பு நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து, அந்த நிறுவனங்களிடமிருந்து உதிரிப் பாகங்கள் வாங்க ஒப்புதல் அளித்துள்ளது. மாவட்ட ஆட்சியர். அவர் தம் மாவட்டத்திலுள்ள கைப்பம்புகளுக்கு ஓர் ஆண்டிற்குத் தேவையான உதிரிப் பாகங்கள் பட்டியலைத் தயார் செய்து காலாண்டிற்கு ஒருமுறை கொள்முதல் செய்வார். இந்த உதிரிப் பாகங்கள் 'யுனிசெஃப்' நிறுவனத்தாரால் நியமனம் செய்யப்பட்டுள்ள 'கிரவுன் ஏஜென்சி' மூலம் சோதனையிடப்பட்டு அதற்காகச் சோதனைச் சான்றிதழ் பெறப்பட்ட உதிரிப் பாகங்களை வாங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தரம் வாய்ந்த உதிரிப் பாகங்களே கொள்முதல் செய்யப்படுகின்றன.

விசைப்பம்புகள் பராமரிப்புப் பணிகள், ஊராட்சி ஒன்றிய ஆணையர் மற்றும் கோட்ட நடமாடும் குழுப் பொறியாளரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர்களிடமே அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு உள்ளது. கைப்பம்புகள், விசைப் பம்புகளைப் பராமரிக்க - ஒரு ஆழ்துளைக் கைப்பம்பிற்கு ஒரு ஆண்டிற்கு ரூ.350, ஒரு வடிமுனைக் குழாய் கைப்பம்பிற்கு ஒரு ஆண்டிற்கு ரூ.50, ஒரு விசைப் பம்புக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.1,000 வீதம் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.

குடிநீர்ப் பம்பு செயல்படுவதில் ஊராட்சி, ஊராட்சி மன்றங்களின் பங்கேற்பால், தமிழகத்தில் கைப் பம்பு, விசைப்பம்பு பராமரிப்பு முறை, தேசிய அளவில் தலைசிறந்து விளங்குகிறது. ●

என்றும்
உங்கள் அபிமான
ஸ்தாபனம்!

D. A.

போன்: 20285, 20690

தி. ஆறுமுகம் பிள்ளை
ஜவுளி பெருங்கடல், தூத்துக்குடி-2

# பண்ணைச் செங்கான்

கு.ப.ரா.

"இதோ இந்த மாமரம் ஒங்க பாட்டன், மவராசன், வச்ச மரம். பளம் கல்கண்டு கணக்கா சுவையா இருக்கும்! இந்தத் தென்ன மரம் அவரு கையாலே போட்ட நெத்து. இப்படி தடத்தோடேயே வாங்க. வரப்புலே நடந்து பளக்கமில்லே. பட்டணவாசத்துப் புள்ளே!" என்று வேகமாக விடாமல் பேசினான் செங்கான்.

நானும் அவனும் நிலத்தின் ஒருபுறத்து வரப்பின்மேல் நடந்து போய்க் கொண்டிருந்தோம்.

"இதை எப்போப்பா அறுக்கலாம்?" என்றேன்.

நிலத்தில் நின்ற பயிரைக் காட்டிக்கொண்டு செங்கான், "இன்னும் கொஞ்ச நாள் போவணுங்க. தொண்டெக் கதிரா இருக்குது. கொஞ்சம் 'மேப்பக்கம் பூறா, கதிரு வாங்கி நிக்குது... இந்த மாமரத்து நெளலிலேயே குந்துங்க. ஏ, கங்காணி! சின்னசாமிக்கு ரெண்டு எளனி புடுங்கியா!" என்றான்.

எனக்கு இளநீர் குடிக்கத் தெரியவில்லை. மேலேயெல்லாம் கொட்டிக் கொண்டு விட்டேன்.

"அந்த ஒலயெ அளுத்திப் புடிச்சிக்கிட்டு, சட்டுனு சாச்சுக்கணும்" என்று செங்கான் சிரித்துக்கொண்டே கையால் செய்து காட்டினான்.

செங்கான், என் பாட்டனார் காலம் முதல் எங்கள் நிலத்தைச் சாகுபடி செய்கிறவன். சொக்கனூர் கிராமத்திலே அவன்தான் வயது முதிர்ந்த கிழவன். எண்பது வயது என்று பேச்சு. ஆனால் பார்த்தால் அறுபதற்கு மேல் சொல்ல முடியாது. கையில் அவன் உயரமுள்ள மூங்கில் தடி. தடி எடுத்தவன் தோட்டி என்பார்கள். ஆனால் செங்கான் தோட்டியல்ல. பழுப்பு நிலத்தில் பயிரேற்றிப் பிழைத்தான். தளதளவென்று செழித்திருந்த மார்பளவு பயிரின் நடுவில் எப்போதும் ஏதாவது வரப்பைக் கிண்டிக் கொண்டே இருப்பான்.

நிலத்தை விட்டு வெளியே வந்தாலும் அந்தத் தடி, இடுப்புக் கோவணந்தான். கறுப்புக் கம்பளி ஒன்றைத் தலையிலிருந்து கால்வரை, மழைக் காலத்தில் சாக்கை மடித்துப் போட்டுக் கொள்வது போலப் போட்டுக் கொண்டிருப்பான். காலில் செருப்பு, கறுத்த உடல், நரைத்த மீசையும் உச்சிக் குடுமியும்.

"அம்மா சொகமாயிருக்குதா? நம்ம கொளந்தே நல்லா இருக்குதோ? ஏன், ஒரு வாட்டி அம்மாளைக் கூட்டியாந்தா என்ன?"

செங்கான் சற்றுத் தொலைவில் உட்கார்ந்துகொண்டு கால் செருப்பின் வாரை இறுக்கிக்கொண்டிருந்தான்.

காலாவதி காலத்தில் நான் ஆண்டுதோறும் என் கிராமத்திற்குப் போய்விட்டு வருவது வழக்கம். நான் போகாவிட்டால் செங்கான் விடமாட்டான். அவன் கொடுத்ததை வாங்கிக்கொண்டு வருவேன், பாதிப் பணம், போய் வருவதில் செலவாகிவிடும். அவன் கொடுக்கும் குத்தகை என் பாட்டனார் காலத்தில் ஏற்பட்டது. பக்கத்து நிலங்களுக்கெல்லாம் குத்தகை இரட்டித்துவிட்டது. அந்தத் தடவை நான் கிராமத்திற்குப் போயிருந்தபோது எல்லோரும் என்னைப் பரிதாபப் பார்வையுடன் பார்த்தார்கள். சிலர் அருகில் நெருங்கி, யோசனை கூறினார்கள்.

"பாவம்! ஆண்டுக்கு ஒரு முறை வருகிறீர்கள். உங்களுக்கு இந்த ஊர் நிலைமை எப்படித் தெரியும்? கிழவன் ஏதாவது குத்தகை தருகிறானா இல்லையா? ஊரெல்லாம் குத்தகை ஏறிப்போச்சு. உங்களை மட்டும் அவன் ஏமாற்றுகிறான்" என்று சொல்லிக்கொண்டு ஒருவர் முன் வந்து தாம் ஓர் ஆளை இரண்டு பங்குக் குத்தகைக்குப் பேசி விடுவதாகச் சொன்னார்.

"இல்லை. இதனால் என்ன முழுகிவிட்டது! ஏதோ வெகு நாளாய் இருக்கிறான். இருந்துவிட்டுப் போகட்டும்" என்று நான் வழவழவென்று பேசினதைக் கேட்டதும் அந்த மனிதருக்குத் துணிச்சல் வந்துவிட்டது.

"நீங்கள் சும்மா இருங்கள் ஐய்யா! நான் எல்லாம் ஏற்பாடு செய்து விடுகிறேன். மேலும் பாருங்கள். ஊரோடு ஒத்து வாழ வேண்டும். ஊரில் ஏற்பட்டகுத்தகை வரவேண்டாமோ?"

"இல்லை, இல்லை. அவனை நீக்க எனக்கு மனம் வரவில்லை. அவன்தான் சாப்பிடட்டுமே. இதையே நான் நம்பி இருக்கவில்லை" என்றேன்.

"என்ன ஐய்யா நீங்கள் பேசுகிறது. வெகு அழகு! பின் அவன் பேருக்குத்தான் நிலத்தை எழுதிக் கொடுத்து விட்டுப் போய் விடுங்களேன். இந்தப் போக்குவரத்துச் செலவு வேண்டாமே" என்று என்னை ஏளனம் செய்து பேசலானார் அந்த மனிதர்.

நான் எப்பொழுதும் கடிந்து பேசுபவனல்ல. புது மனிதன்கூட ஒரே கணத்தில் என் தலைமேல் ஏறி விடுவான். நான் ஞெஞ்ஞ மிஞ்ஞவென்று சொன்னதை அந்த மனிதர் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. வேறு ஆளைப் பேசி என் பேருக்குக் குத்தகைச் சீட்டு எழுதி வாங்கிக்கொண்டு வந்து என் கையில் கொடுத்து விட்டார்! 'இதை எப்படிச் செங்கானிடம் சொல்வது? அவனை எப்படி அப்புறப்படுத்துவது!' என்பவையே எனக்குப் பெரிய பிரச்சினைகள் ஆகிவிட்டன.

அவன் அதிகமாகப் பேசி என்னை மடக்கி வசமாக்கிக் கொள்ளாமல் இருக்கும்பொழுதே அவனிடம் கண்டிப்பாக எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டுமென்று, மறுநாள் வயலுக்குப் போனபோது, நான் இரண்டு மூன்று தடவை வாயெடுத்தேன். ஒவ்வொரு தடவையும் வாய் வார்த்தை வெளியில் வராமல் நெஞ்சில் சிக்கிக் கொண்டது.

"பொளச்சுச்கெடந்தா வர வருசம் கிணத்தைக் கட்டி தொலெ வைக்கணும், ஐயா! எனக்கு ஒரு சோடி மாடு வாங்கிக் குடுங்க; இந்த நெலத்துலே பொன் வெளயச் செய்யறேன்!" என்றான் செங்கான்.

"செங்கான், உனக்குத்தான் வயசாகிவிட்டதே; இனி மேல் உன்னால் உழுது பயிரிட முடியுமா?" என்றேன்.

"நல்லாச் சொன்னீங்க, என்னெப்போலே இந்த வூரிலே யாரு காலத்துலெ பயிரேத்தறான்? ஏரி மொதத் தண்ணி நமக்கு!"



# முத்து நகரில் —
# ஓர் முன்னணி நிறுவனம்
# ‘‘அபிராமி’’

கிழக்கு ரத வீதி, தூத்துக்குடி, தொலைபேசி: 23007

ஆடவர்-மகளிர் அனைவரின்
எண்ணத்திற்கேற்ற - நவநாகரிக
வண்ணத் துணிகளின் சங்கமம்
‘அபிராமி’ டெக்ஸ்டைல்ஸ்,
அபிராமி மேட்சிங் சென்டர்
அபிராமி டிரேடர்ஸ்
அபிராமி எண்டர்பிரைசஸ்
அபிராமி சில்க்ஸ்

**-உரிமையாளர்-**

**ஆ. திருச்சிற்றம்பலம்**

தலைவர் : பாரதி அரிமா சங்கம்
தாளாளர்: சிதம்பரனார் நினைவு நடுநிலைப்பள்ளி
செயலர் : பாரதி தமிழ்ச் சங்கம்
தலைவர் : சிதம்பரனார் மாவட்ட இந்திய-சோவியத் கலாச்சாரக் கழகம்
தலைவர் : சிதம்பரனார் மாவட்ட கபாடிக் கழகம்


## நலிவுற்ற கலைஞர்களுக்கு உதவித் தொகை உயர்வு!

சிறந்து விளங்கி நலிவுற்ற நிலையிலுள்ள கலைஞர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்படும் கலைஞர்களுக்கு அரசு மாதம் ரூ. 150 வீதம் உதவித் தொகை வழங்கி வருகிறது.

இந்த உதவித் தொகையையும், உதவி பெறும் கலைஞர்களின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டுமென்று, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்த வேண்டுகோளை நன்கு பரிசீலித்த பின், மேற்கண்ட திட்டத்தின் கீழ் பயன் பெறும் கலைஞர்கள் அனைவருக்கும் மாதம் ரூ. 150 லிருந்து ரூ. 250 ஆக உதவித் தொகையை உயர்த்தி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை யிட்டுள்ளார். இந்த உயர்வு 1.4.89 முதல் நடைமுறைக்கு வரும். 1989-90 ஆம் ஆண்டில் பயன் பெறும் கலைஞர்களின் எண்ணிக்கையையும் 200 - லிருந்து 300 ஆக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயர்த்தியுள்ளார்.

‘‘ஒனக்கு ஒத்தாசைக்கு ஒருவரும் இல்லையே?

‘‘எம் மவன் பொந்திலியன் இருந்தா இந்த ஊரெயெ சாகுபடி பண்ணிடமாட்டேனா? மூணாம் வருசம் மகமாயி ஆத்தா !...’’என்று சொல்லிச் செங்கான் பெருமூச்சு விட்டான்.

‘‘அவன் மவன் ஒரு பய இருக்கான். அவன் செய்வானே ஒரு பெரிய ஆள் வேலை!’’ என்றான் சற்று நேரம் கழித்து.

செங்கான் மறுபடியும் சிறிது நேரம் சும்மா இருந்தான். நடந்ததை அந்தச் சமயத்தில் அவனிடம் சொல்ல எனக்கு மனமே வர வில்லை. செங்கான் மாமரத்தடியில் உட்கார்ந்துகொண்டு பொந்திலி யனை மாரியாத்தா கொண்டு போன வகையைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தான் போலும்! திடீரென்று தலை தூக்கி என் முகத்தைப் பார்த்தான்.

‘‘ஏன் ஐயா, நான் பயிரிட முடியாமெ போட்டுடுவேண்ணு ரோசனெ பண்றீங்களா? அது இந்த உசிரிலே இல்லை! நெலத்திலே ஈரமில்லே; சக்கையாய்ப் போச்சு மண்ணு. ஏளெட்டுக் கடெ கட்டினா நல்லாயிருக்கும்; கட்டலாங்களா?’’

பொழுது சாய்ந்துவிட்டது. தூரத்தில் நரிகள் ஊளையிட்டன.

‘‘வாங்க, நேரத்திலே வூட்டுக்குப் போவோம்! ஒங்களுக்கு இருட்டிலே நடந்து பளக்கமிருக்காது’’ என்று முன்னே வழிகாட்டிக்கொண்டு செங்கான் விரைவாக வீட்டை நோக்கிப் புறப்பட்டான். அவனைப் பின்பற்றிச் செல்வதுகூட எனக்குச் சற்றுச்சிரமமாகிவிட்டது.

‘‘ஏஞ்சாமி என்னெ விட்டு நெலத்தெ மாத்தணும்னு ரோச னெயா? என் உசிரிலே இன் னொருத்தன் அதுலே ஏரு பிடிக் கவா? முடியுமா எங்கணாச்சியும்? என் நெலத்துலே எவன் நொளை வான்? ... பாக்கறேன்... அந்த மண்ணுத்தான் அவனுக்கு வெளெய்வாள்ா?’’

சிறிது நேரம் மவுனமாக நடந்தான். நான் ஒரு வரப்பில் கால்தடுமாறி, வயலில் தண்ணீர் கட்டியிருந்த சேற்றில் காலை வைத்துவிட்டேன்.

‘‘கெடக்குங்க, வாய்க்கால்லே காலக் களுவிக்கலாம், ... நாப்பது வருசமா என் கையாலே வரப்புப் பிடிச்சி வாய்க்கா பிடிச்சி ... பெரிய ஐயா இருந்தா என்னெ வுட்டு மாத்தணும்னு நெனப்பாங் களா? மண்ணெக் கண்ணாக் காப்பாத்தி ....’’என்று சொல்லி வந்தவன் திடீரென்று நின்று, ‘‘நான் வுடமாட்டேன் ஐய்யா!’’ என்றான்.

என் மனத்தில் ஒரு தீர்மானத் திற்கு வந்துவிட்டேன்.

‘‘நான் மாற்றுகிறேன் என்று உன்னிடம் சொல்லவில்லையே!’’ என்றேன்.

‘‘அதுதானே கேட்டேன்! ஒரு கலம்,அரைக்கலம் நீங்க சாப்பிடறது நான் சாப்பிட்டா என்ன - இந்த வயக் காட்டுலே நான் பட்ட பாட்டுக்கு? நெத்தி வேர்வே நெலத்துலே விள எம்பாங்க. அது எனக்கல்ல தகும்! ராப்பவலா எவன் தன்னைப்போல காட்டுலெ கிடப் பான்? ரவைக்கு ரவெ தாவத்துக்குத் தண்ணி கொடுக்கறாப் போல நேரமறிஞ்சு எவன் தண்ணி கட்டு வான்? நம்ம காட்டு லெச்சுமி என் னோடே பேசுவாளே! ஒரு வருசம் தூறை உண்டா, சாவி உண்டா,தரிசு உண்டா? - மூணாம் வருசம் மளெ இல்லாதப்பக்கூட பயிரேத்திப்பிட் டேனே! இந்த வயக்காட்டுலே ஒளச்சேதான் நான் சாவணும் ஐய்யா! இதெ வுட்டா நான் செத்துப் போவேன்!’’

காலை ஐந்து மணிக்குப் பல் துலக்க நிலத்துப் பக்கம் போனேன். செங்கான் கணீரென்ற குரலில் ஏற்றப் பாட்டுப் பாடிக்கொண்டே தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந் தான்.

**‘‘மூங்கிலிலை மேலே - தூங்கு பனி நீரே**
**தூங்குபனி நீரை - வாங்கு கதி ரோனே!’’**

என்ற பாட்டின் ஒலி என் காதில விழுந்தது. வேலை மும்முரத்தில் அவன் என்னைத் திரும்பிக்கூடப் பார்ககவில்லை.

‘‘என்ன ஐயா, செங்கான்கிட்டே சொல்லிவிட்டீர்களா, இந்தப் பயிரை அறுத்துக்கொண்டு நிலத்தை விட்டு விட வேண்டுமென்று?’’ என்று என் நண்பர் கேட்டார்.

‘‘இல்லை, சொல்லப் போவ தில்லை. செங்கான் கொடுக்கும் நெல் போதும் எனக்கு!’’ என்றேன், தலை நிமிர்ந்து.

**—‘‘கனகாம்பரம்’’ என்ற நூலிலிருந்து**



**தொழில் தேவைகளுக்கான**
**நல்ல தரமான சுண்ணாம்புக்கு**
**அணுகுங்கள்!**

# பெரியசாமி இண்டஸ்டிரீஸ்,

**எட்டையாபுரம் ரோடு,**

**தூத்துக்குடி.**

**உரிமையாளர்,**

**என். பெரியசாமி,** எம்.எல்.ஏ.,
நகர்மன்றத் தலைவர், தூத்துக்குடி
மாவட்ட தி.மு.க. செயலாளர்

தொலைபேசி: 20876
இல்லம் : 22192
**தூத்துக்குடி**




**TNPSC Advt No 54**

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

கீழ்க்கண்ட பதவிகளுக்கு 30.10.1989க்குள் ஆணையத்தின் அலுவலகத்தில் வந்து சேருமாறு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சம்பளம், வயது வரம்பு மற்றும் கல்வித்தகுதி (க.த.) முதலியவை ஒவ்வொரு பதவிக்கும் பின்னால் கொடுக்கப்பட்டுள்ளன.

1. தோட்டக் கலைத்துறையில் 40 தோட்டக்கலை அலுவலர் பதவிகள் ரூ.1640-2900; (இன ஒதுக்கீட்டு விதி பொருந்தும்); 30 வயதிற்குக் குறைவாக; எம்.எஸ்சி (தோட்டக்கலை) அல்லது பி.எச்டி. (தோட்டக்கலை) போன்ற பட்டம் பெற்றவர்களுக்கு வயது 32க்கு குறைவாக; க.த.:- தோட்டக் கலையில் இளநிலைப்பட்டம்; (Bachelor's Degree in Horticulture)

2. தமிழ்நாடு பொது சுகாதாரப் பணியில் 51 சுகாதார அலுவலர் ( Health Officer ) பதவிகள் ரூ.2500 - 4200 (இன ஒதுக்கீட்டு விதி பொருந்தும்); 35 வயதிற்குக் குறைவாக.
க.த.,:-

   i) B.S.Sc degree or the Diploma in Public Health of the University of Calcutta **Or**

   ii) A Certificate of having undergone a special course of training in Sanitary Science in the Medical College, Madras for a period of not less than one year and of having passed the examination for licentiate in Public Health held at the end of that course **Or**

   iii) If fully qualified candidates are not available upto the number required applications from candidates possessing the M.B.B.S. degree **or** from candidates possessing the Diploma in Medicine and Surgery or the Diploma of L.M.P. granted by the Board of Examiners, Medical College, Madras, will be considered selection for subject to certain conditions.

**Note:** Tne period of service rendered by a candidate as short service/Regular Commissioned Officer in the Army Medical Corps will subject to a maximum period of five years be excluded in computing his age.

3. தமிழ்நாடு மருத்துவப் பணியில் மருந்துகள் பகுத்தாய்வுக் கூடத்தில் ஓர் துணை அரசு பகுப்பாய்வாளர் ( Biological ) பதவி; இன ஒதுக்கீட்டு விதி இப்பதவிக்குப் பொருந்தாது; ரூ.2500 -4200; 35 வயதிற்குக் குறைவாக.
க.த.,:-

   i) A degree in Medicine or Science or Pharmacy or Pharmaceutical Chemistry.

   **AND**

   ii) Experience for a period of not less than five years in the analysis of Schedule 'C' drugs in an Institution or Testing Laboratory approved by the Licensing Authority;

   Provided that in the case of Post Graduate in Medicine or Science or Pharmacy or Pharmaceutical Chemistry, Experience for a period of not less than tnree years in the analysis of Schedule 'C'drugs in an Institution or Testing Laboratory approved by tne Licensing authority **and**

   iii) An evidence of satisfactory completion of training in Physiology or Bacteriology or Serology or Phathology or Pharmacology or Microbiology.

   **Explanation:** For the purpose of this rule all Laboratories approved by the Licensing authority Under the Drugs and Cosmetics Rules, 1945 and all Government Laboratories engaged in the testing of drugs shall be treated as Laboratories approved by the Government.

4. தமிழ்நாடு தொழிற்பணியில் தொழில் மற்றும் வணிகத்துறையில் ஆறு உதவி இயக்குநர் பதவிகள் (தொழிற் கூட்டுறவு சங்கங்கள்) (Asst. Director of Ind. & Com. (Indl. Co-operatives) (இன ஒதுக்கீட்டு விதி பொருந்தும்); ரூ.2200-4000; 30 வயதிற்குக் குறைவாக.
க.த.,:-

   A Masters degree in Commerce with Co-operation as a subject or Economics, Mathematics, Statistics or Co-operation **or**

   A Diploma of Associate Member of the Institute of Chartered Accountants **Or**

Post Graduate diploma in Agricultural Economics and Co-operation awarded by the National Council for Rural Higher Education.

5. தமிழ்நாடு தொழிற்பணியில் தோல் முடிவாக்கம் மற்றும் செப்பனிடும் தொழிற் கூட்டுறவு சங்கத்தில் ( Leather Finishing Servicing Industrial Co-operative Societies/Institutions)

ஓர் உதவி இயக்குநர் பதவி (தொழில் நுட்பம்)

Assistant Director of Industries and Commerce (Technical)

(பகிரங்கப் போட்டி மூலம் தெரிவு செய்யப்படும்); ரூ.2220 -4000; 35 வயதிற்குக் குறைவாக;
க.த.,:-

(அ) தொழில்நுட்ப பட்டயத் தேர்வு வாரியத்தால் (Technological Diploma Examination Board) மாநில தொழில் நுட்பக்கல்வி மற்றும் பயிற்சி வாரியம் அல்லது வேறு ஏதேனும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது வாரியத்தால் வழங்கப்பட்ட தோல் தொழில் நுட்பத்தில் அல்லது காலணி ( Foot wear ) மற்றும் தோலினாலான பொருட்கள் தயாரிப்பில் ஒரு பட்டயம்; மற்றும் (ஆ) ஏதேனும் ஒரு இயந்திரமயமாக்கப்பட்ட காலணி (Shoe) தொழிற்சாலை அல்லது தோல்பதனிடுதல் முடிவாக்கப் பிரிவுகளில் (Leather Tanning Finishing Units) முதலாள் (Foreman) அல்லது உற்பத்தி உதவியாளராக ( Production Assistant) மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத நடைமுறை அனுபவம்.

6. தமிழ்நாடு மருத்துவப் பணியில் அரசு மருத்துவ நிலையங்களில் ஒரு பேச்சுப் பயிற்சியாளர் (Speech Therapist) (ஆ.தி.வ. ப.வ. மட்டும்) (Carried Forward vacancy) ரூ.2200-4000; வயது வரம்பு இல்லை.
க.த.,:-

B.Sc., or M.Sc with Speech Pathology and Theraphy from All India Institute of Logopadics, Mysore or from any other foreign University.

7. தமிழ்நாடு தொழிற் பணியில், தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் ஒரு முதல்வர் ( Principal ) இன ஒதுக்கீட்டு விதிமுறை பொருந்தாது; ரூ. 3000-4500; 40க்குக் குறைவாக,

க.த. :-

i) A degree in Science or Arts.

ii) A diploma in any branch of film Technology awarded by any recognised Institution in India.

And

iii) Expe.ience for a period of not less than ten years in Fim Tecnnology of which at least five years shall be in teacning in a Film Insititute.

8. தமிழ்நாடு பொதுப்பணியில் தமிழ்நாடு அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஒரு முதன்மை நூலகர் பதவி; இனஒதுக்கீட்டு விதிமுறை பொருந்தாது; ரூ.700-1300, 36க்குக் குறைவாக (தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியிலடங்கிய அரசு பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பட்டதாரி நூலகர் பதவிகளில் உள்ள நபர்களுக்கு வயது வரம்பு இல்லை)
க.த.:-

(i) (a) A Bachelor's degree in Science or applied Science;

OR

(b) A Bachelor's degree in Arts with any one of the following subjects as the main subject and any one of the remaining two subjects as ancillary, namely, History, Geography or Economics.

AND

ii) A degree or diploma in Library Science;

AND

iii) Experience for a period of not less than three years in the General care, supervision, organisation and development of a Technical Library on modern lines.

தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியிலடங்கிய அரசு பொறியியல் மற்றும் தொழில் ...லூரிகளில் பட்டதாரி நூலகர் பதவிகளில் உள்ள நபர்கள் அவர்கள் தமிழ்நாடு அரசின் ... நியமனம் பெற்று முதலில் சேர்ந்த தேதியிலிருந்து 5 ஆண்டுகள் முடிந்திருந்தாலும் ...ம்.

9. தமிழ்நாடு பொதுப்பணியில் சமூக நலத்துறையில் மனநலக் காப்பகத்தில் ஒரு மனோதத்துவர் பதவி (Psychologist in the Institute for mentally Retarded) (நியமன ஒதுக்கீட்டு விதி இத் தெரிவுக்குப் பொருந்தாது;) ரூ.1640-2900; குறைந்தது 28 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும் மற்றும் 45 வயது பூர்த்தி அடைந்திருக்கக்கூடாது.

க.த.:-

i) Post Graduate degree in Psychology and

ii) Experience for a period of not less than three years in the field of education or training or vocational rehabilitation of the mentally retarded.

10. தமிழ்நாடு பொதுப்பணியில் சமூக நலத்துறையில் மனநலக் காப்பகத்தில் ஒரு திட்ட அலுவலர் பதவி (Project Officer in the Institute for Mentally Retarded) (நியமன ஒதுக்கீட்டு விதி இத் தெரிவுக்கு பொருந்தாது); ரூ.2200-4000; 28 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். மற்றும் 45 வயது பூர்த்தி அடைந்திருக்கக் கூடாது.

i) Post Graduate degree in Psychology; AND

ii) Experience for a period of not less than five years in the field of education or training or vocational rehabilitation of the mentally retarded.

11. தமிழ்நாடு போக்குவரத்துப் பணியில் ஓர் உதவிப் பொறியாளர் (மோட்டார் வாகனங்கள்) பதவி; இனஒதுக்கீட்டு விதிமுறை பொருந்தாது; ரூ.2200-4000; 21க்கு மேலும் 40க்குக் குறைவாகவும்.
க.த.:-

i) Must possess a degree in Mechanical Engineering or a degree in Automobile Engineering (ii) Must have practical experience in Automobile Engineering workshop recognised by the Government of Tamil Nadu for a period of not less than 5 years (iii) Must hold a Motor Vehicles driving licence with endorsement to drive heavy motor vehicles and experience in driving such vehicles for a period of not less than sixmonths.

●Assistant Engineer (Motor Vehicles)

12. தமிழ்நாடு பொதுப்பணியில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் ஒரு Head of Section in Editing மற்றும் ஒரு Head of Section in Direction ஆகிய இரண்டு பதவிகள் (ஆ.தி.வ, ப.வ.:1; ப.போ.:1); ரூ.2200-4000; 40க்குக் குறைவாக.
க.த.:-

(a) (i) A diploma in the appropriate branch of film Technology (viz. Editing or Direction) awarded by the State Board of Technical Education and Training, Madras or the Film and Television Institute, Pune, AND (ii) Experience for a period of not less than five years in teaching the subject concerned (viz. Editing or Direction) in the Institute of Film Technology, Madras or in the Film and Television Institute, Pune,

OR

(b) (i) A diploma in the appropriate banch of film Technology (viz. Editing or Direction) awarded by the State Board of Technical Education and Training, Madras or the Film and Television Institute, Pune

AND

ii) Experience for a period of not less tnan five years in the production of a feature films as Film Editor or Film Director;

OR

(c) (i) A degree in Arts, Science or Commerce AND (ii) Experience for a period of not less than seven years in production of feature films as Film Editor or Film Director.

13. தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப்பணியில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைப் பயிற்சிப் பிரிவில் ஒரு இளநிலைப்பயிற்சி அலுவலர் (மொழி-ஆங்கிலம்) ப.போ. ஒன்று ரூ.1400-2600; 35 வயதிற்குக் குறைவாக. க.த. ஆங்கில மொழி மற்றும் இலக்கியத்தை பகுதி மூன்றில் முதன்மைப் பாடமாகக் கொண்ட ஒரு இளங்கலைப்பட்டம் (பி.ஏ)

14. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல சார்நிலைப் பணியில் ஒரு தமிழ் பண்டிட் நிலை-1, ப.போ:1 35 வயதிற்குக் குறைவாக ரூ.1400-2600.
க.த:-

(a) (i) Degree of Madras, Annamalai University in Tamil. Provided that if persons with degree in Tamil are not available, holders of degree of B.A. of Madras or Annamalai or Madurai University who have studied Tamil under Part I shall be eligible; and (ii) The B.T. degree of Madras University or

B.Ed degree of Annamalai or Madurai University or (b) (i) A completed Secondary School leaving certificate (ii) A title of Oriental learning conferred by the Madras or Annamalai or Madurai University in Tamil, and (iii) A Trained Teachers' Certificate of the Secondary Grade or a Senior Grade Basic Trained Teachers Certificate or successful completion of the Pandit's Training Course.

15. தமிழ்நாடு பொது சார்நிலைப்பணியில் சமூக நலத்துறையில் ஒரு பள்ளி உதவியாளர் (கணிதம்) (School Assistant) ப.போ: 1 ரூ.1400-2600; 20 வயதிற்கு மேலும் மற்றும் 35 வயதிற்குக் குறைவாகவும் க.த.1) தமிழ்நாட்டிலுள்ள ஏதாவதொரு பல்கலைக் கழகத்தில் கணிதத்தில் ஒரு பட்டம். 2) தமிழ் நாட்டிலுள்ள ஏதாவதொரு பல்கலைக் கழகத்தில் பி.டி. அல்லது பி.எட் பட்டம் மற்றும் 3) புதுமுக மேல்நிலையில் இந்த மாநிலத்தில் ஏதாவதொரு வட்டார மொழி பயின்றிருக்க வேண்டும்.

குறிப்பு: பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

16. தமிழ்நாடு மருத்துவச் சார்நிலைப் பணியில் மருந்து சரக்கு சோதனை ஆய்வகத்தில் ஆறு இளநிலை பகுப்பாய்னர் ( Junior Analyst in the Drug testing Laboratory ) தா.வ. தா.ப:1; மி.ப.வ.; சீ.ம. 1 ( பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது ) பி.வி.பி.வ.1; ப.போ.3 (1 பதவி பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது) ரூ.1400-2600; 30 வயதிற்குக் குறைவாக. க.த.

A degree in Pharmacy or chemistry or Pharmaceutical chemistry of any University or Institution And Experience in the analysis of drugs for a period of not less than one year in the case of persons possessing a degree in pharmacy or a Post Graduate degree in chemistry with Analytical Chemistry as a Special subject and for a period of not less than two years in the case of persons possessing a degree in chemistry or Pharmaceutical Chemistry.

குறிப்பு: தேர்வாணைய அறிவிக்கை நாள் 3.3.89ன் தொடர்பாக விண்ணப்பித்துள்ள விண்ணப் பதாரர்களும் தற்போது விண்ணப்பிக்கலாம். முன்னர் வெளிவந்த அறிவிக்கையின்படி தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் தற்போது விண்ணப்பிக்கும் விண்ணப்பத்திற்கான கட்டணம் ஏதேனும் இருந்தால் திரும்பப் பெற விண்ணப்பிக்கலாம்.

17. புவியியல் மற்றும் சுரங்கத்துறை ( Department of Geology and Mining ) உதவிப் புவி இயற்பியலாளர் பதவி ஒன்று ப.போ-1 ரூ.1640-2900; 30 வயதுக்குக் குறைவாக ( B.Sc. Hons. or MSc. Hons. ) பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் மூன்று வருடத்திற்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருந்தால் வயது உச்ச வரம்பில் 5 வருடம் கூட்டப்படும்.

Qualification: i) Masters degree in Physics or Geophysics or Applied Geophysics (ii) Not less than two years of field experience in Geophysical exploration or Minerals.

18. தமிழ்நாடு பொது சார்நிலைப்பணியில், தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம், சென்னையில் உதவி விரிவுரையாளர் (நடிப்பில்) பதவி ஒன்று ரூ.1400-2600; 35 வயதுக்குக் குறைவாக.

Qualification: (1) a. A degree in Arts or Science (b) Experience for a period of not less than three years in teaching the subject "Film Acting" or experience as a film actor in three feature films and (c) proficiency in Southern Regional Languages or (2) (a) Diploma or Certificate in Film acting awarded by the Tamil Nadu Board of Technical Education and Training, Madras or by the Film and Television Institute of India, Pune, (b) Experience for a period of not less than three years in teaching the subject "Film Acting" or experience as a film actor in three feature films; and (c) Proficiency in Southern Regional Languages.

19. தமிழ்நாடு தொழில் சார்நிலைப் பணியில் கிண்டி தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் உதவி விரிவுரையாளர் / உற்பத்தி உதவியாளர்

(Assistant Lecturer/Production Assistant in the Electronic Instrumentation Course)

பதவி ஒன்று ரூ.1640-2900 பகிரங்கப்போட்டி: 1; 35 வயதிற்குக் குறைவாக

(1) A Bachelor's Degree in Electronics or Instrumentation of Telecommunication (2) Practical experience for a period of not less than one year in a Factory manufacturing Electronic production including Electronic instruments.

20. தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில், தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் நடிப்பு பயிற்றுநர் ( Instructor in Acting ) பதவி ஒன்று ரூ.1320-2040.

below 30 years. Qualification: (1) A diploma or Certificate in Film Acting awarded by the Tamil Nadu Board of Technical Education and Training, Madras or by the Film and Television Institute of India, Pune; (2) Experience for a period of not less than one year in teaching the subject "Film Acting" or Experience as a film actor in three feature films and (3) Proficiency in Southern Regional Languages.

21. தமிழ்நாடு நெடுஞ்சாலைப் பொறியியல் சார்நிலைப் பணியில் நெடுஞ்சாலை ஆராய்ச்சிநிலையத்தில் நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையில் புவியியலர் (Geologist in Highways Research



Station in the Highways Engg. Sub. Service)
பதவி ஒன்று ரூ.1640-2900; வயது: தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் / மிகவும் பின் தங்கிய வகுப்பினர் / மற்றும் சீ.ம. / பி.வ. / 33 வயதுக்குக் குறைவாக. மற்றவர்களுக்கு 30 வயதிற்குக் குறைவாக. க.த.எம்.எஸ். புவியியல் ( M.Sc. Geology ) பட்டம்.

22. தமிழ்நாடு பொது சார்நிலைப்பணியில், பொதுப்பணித் துறையில் தலைமைக் கட்டிடக் கலைஞர் அலுவலகத்தில் இளநிலைக் கட்டிடக் கலைஞர் ( Junior Architect ) பதவி; ஏழு. ரூ1640-2900 ஆ.தி.வ./ ப.வ.:3 / மி.பி.வ. சீ.ம. / 1(பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது) பி.வ.1; ப.போ.2; 30 வயதுக்குக் குறைவாக.க.த.1. கட்டிடக் கலையில் ஒரு பட்டம் அல்லது 2, பம்பாய் ஜே.ஜே.ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸ் அல்லது மகாராஷ்டிரா அரசு வழங்கிய கட்டிடக் கலையில் ஒரு பட்டயம்.

23 தமிழ்நாடு, மக்கள் நல்வாழ்வு சார்நிலைப்பணியில் Health Education Bureauஇல் Teacher, Field Study and Demonstration Centre பதவி ஒன்று ரூ.1600-2660; 30 வயதுக்குக் குறைவாக. க.த.;

B.A. or B.Sc. or B.Com degree or B.O.L. of Annamalai University or B.B.A. of Madurai Kamaraj university or B.Litt of Madras University or B.B.M. and B.Litt of the Bharathiar University with B.T. or B.Ed or M.Ed degree and teaching /research experience for a period of not less than five years in the case of B.T. or B.Ed., holders and for a period of not less than two years in the case of M.Ed., degree holders.

24. தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில் புள்ளியியல் துறையில் உதவி புள்ளி விபர ஆய்வாளர்; பதவி:59; தா.வ / தா.ப / மி.பி.வ. / சீ.ம. / பி.வ. ப. போக்கான நியமன ஒதுக்கீடு, மற்றும் 30%. பெண்களுக்கென ஒதுக்கீடு விதிப்படி தெரிவு நடத்தப்படும். ரூ.1200-2040; 30 வயதுக்குக் குறைவாக. க.த. கணிதத்தையோ, புள்ளியியலையோ அல்லது பொருளியலையோ பிரதான பாடமாகக்கொண்ட ஒரு இளநிலைப் (பி.ஏ., பி.எஸ்ஸி.) பட்டம்.

25. தமிழ்நாடு தொழில்துறை சார்நிலைப் பணியில், விருத்தாசலத்திலுள்ள பீங்கான் மற்றும மட்பாண்டத் தொழில் நுட்ப நிலையத்தில் மேற்பார்வையாளர் ( Supervisor-Testing ) பதவி ஒன்று ரூ.1400-2600 வயது 30க்குக் குறைவாக, க.த.; இரசாயனத்தில் ஒரு இளம் அறிவியல் பட்டம் அல்லது /இரசாயனத் தொழில் நுட்பவியல் ( Chemical Technology ) அல்லது இரசாயனப் பொறியியல் ( Chemical Engineering ) பாடத்தில் ஒரு பட்டயம்.

26. தமிழ்நாடு பொதுச் சுகாதார சார்நிலைப் பணியில் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இயக்ககத்தில் ஒரு புள்ளி விவர ஆராய்வாளர் ( Statistical Investigator ) ப.போ.1 ரூ.1600-2660; வயது 30க்குக் குறைவாக க.த.:-B.A. or B.Sc. degree in the Mathematics or Statistics

27. தமிழ்நாடு கண்காணிப்பு சார்நிலைப் பணியில் ( Chargeman-cum-Laundry Mechanic ) பதவி ஒன்று. ரூ.1400-2600; 35 வயதுக்குக் குறைவாக; க.த :-

Diploma in Mechanical Engineering of the State Board of Technical Education and Training Madras or of a recognised Institution or Board.

28. தமிழ்நாடு பொதுச்சார்நிலைப் பணியிலுள்ள புள்ளியியல் துறையின் இளநிலை வரைவாளர் பதவியில் 4 காலியிடங்களுக்கு ஆ.தி.வ. /ப.வ.1; பி.வ.1, ப.போ-2, ரூ.1200-2040. 30 வயதிற்குக் குறைவாக.

Qualification: A pass in the Government Technical Examination in free hand outline and Model drawing by the Higher Grade; or A diploma in Fine Arts and in Painting awarded by the Government College of Arts and Crafts, Madras or (ii) A National Trade Certificate awarded by the National Council for Training in the trade of Draftsman Civil Mechanical or (iii) A Diploma in Civil/Mechanical Engineering awarded by the State Board of Technical Education and Training Department of Technical Education, Government of Tamil Nadu.

29. தமிழ்நாடு இயக்கூர்திகள் பராமரிப்பு சார்நிலைப்பணியில் ஆறு பொது முதலாள் ( General Foreman ) மற்றும் எட்டு தொழில் நுட்ப உதவியாளர் ( Technical Assistant ) பதவி

| | பொது முதலாள் | தொழில் நுட்ப உதவியாளர் |
|---|---|---|
| ஆ.தி.வ. /ப.வ. | 1 | 2 |
| ம.பி.வ. /சீ.ம. | 1 (பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது) | 1 (பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது) |
| பி.வ. | 1 | 2 |
| ப.போ. | 3 | 3 |
| | (அவற்றில் ஒன்று பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது) | (அவற்றில் ஒன்று பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது) |

ரூ.1640-2900 வயது 35 வயதுக்குக் குறைவாக

தகுதி (அ) இயந்திரப் பொறியியலில ( Mechanical Engineering ) அல்லது உந்தூர்திப் பொறியியலில் ( Automobile Engineering ) ஒரு பட்டம்

அல்லது

ஆ. உந்தூர்தித் தொழில் நுட்பவியலில் ( Automobile Technology ) ஒரு பட்டம்

அல்லது

இ. தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக்கழகத்தால் வழங்கப்பட்ட, உந்தூர்திப் பொறியியலில், ஒரு மேல்நிலைப்பட்டயமும் ( Post Diploma in Automobile Engineering ) ஓர் உந்தூர்திப் பட்டறையில் ( Automobile Workshop ) மேற்பார்வை அறிவுத் திறனில் ( Supervisory capacity ) இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்

30. தமிழ்நாடு பொறியியற் சார்நிலைப் பணியில் தமிழ்நாடு உள்ளாட்சிப் பிரிவில் வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பராமரிப்புப் பிரிவில் இரண்டு வானொலி மேற்பார்வையாளர்கள் பதவி ஆ.தி.வ/ப.வ.1.; ப.போ-1)- ரூ.1200-2040-ஆ.தி.வ. ப.வ. 35 வயதிற்குக் குறைவாக மி.பி.வ/சீ.ம-33 வயதிற்குக் குறைவாக (குறைந்த பட்சக் கல்வித் தகுதிக்கு மேற்பட்ட கல்வித்தகுதி இல்லையென்றால்); மற்றவர்களுக்கு 30 வயதிற்குக் குறைவாக. க.த.

I. Eligibility for admission to Higher Secondary of University Course of Study i.e. must have obtained not less than 35% of marks in each subject in 10th Standard or S.S.L C. (11 year Schooling) examination of the Government of TamilNadu. II. Any of the following qualification: (a) A degree in Radio Engineering or Telecommunication or the degree of B.Sc(Hon ) or M.Sc. in Physics or Applied physics with wireless as Special subject or (b) Graduateship of the British Institution of Radio Engineering, London or (c) Graduateship of the Institution of Telecommunication Engineers, India or (d) A diploma or certificate issued by any StateGovernment after a full time course of not less than two years in RadioCommunication and servicing and III. Practical experience for a period of not less than six months in the servicing of Radios and other Electronic Equipments in a Radio Manufacturing concern or a service institution or cinema studio etc. recognised by the Government or appointing authority for the purpose.

31. தொழிற்சாலைப் பணியில் ஒன்பது உதவி தொழிற்சாலை ஆய்வாளர்-பதவி, இன ஒதுக்கீட்டுவிதி பொருந்தும். ரூபாய் 1640-2900; க.த.:-30 வயதிற்குக் குறைவாக இயந்திரப் பொறியியல், மின் பொறியியல் அல்லது இரசாயனப் பொறியியல் அல்லது நெசவுத் தொழில் நுட்பப் பொறியியலில் ஒரு இளநிலைப்பட்டம்:

32. தமிழ்நாடு பொது சுகாதாரப் பணியில் 74 பொது சுகாதார செவிலியர் பதவிகள் (Public Health Nurse) இன ஒதுக்கீடு விதி / பொருந்தும். ரூ.1640-2900; 30 வயதிற்குக் குறைவாக குறிப்பு: தற்காலிகமாக பொது சுகாதார செவிலியர் பதவியிலிருப்போர் அவர்கள் வயது வரம்பைக் கடந்து இருப்பினும் விண்ணப்பிக்கலாம். அத்தகையோர் தேர்ந்தெடுக்கப்பட்டால், வயது வரம்பு விதி அரசால் தளர்த்தப்படும். க.த.:-

I A certificate of having undergone training for a period of not less than three and half years in a General Hospital of over 700 beds strength approved by the Madras Nurses and Mid Wives Council and a certificate of having passed the examination held at the end of the said course of training.

**AND**

A diploma in Public Health Nursing issued by any one of the following Institutions, namely;
All India Institute of Hygene and Public Health Calcutta; Lady Reading Health School, New Delhi.
College of Nursing, Christian Medical College, Vellore; Post Graduate Medical Institute, Chandigarh.

**OR**

A diploma in Community Health and Family Welfare Nursing issued by the College of Nursing, Madras Medical College, Madras.

**OR**

A Certificate of Post Basic B.Sc. (Nursing) degree issued by any one of the following Institutions namely;
College of Nursing Christian Medical College, Vellore; Madras Medical College, Madras ;
Post Graduate Medical Institution, Chandigarh;
College of Nursing Trivandrum Medical College Hospital;
S.N.D.T. Hospital, Bombay;
All India Institute of Medical Science, New Delhi

**OR**

B.Sc. (Nursing)degree

II A certificate of Registration in Section I-A or I.B of the Register of Nurses under the Tamil Nadu Nurses and Mid Wives Act, 1926 (Tamil Nadu Act III of 1926)

III A Certificate of Registration in Section I-C of the Register of Mid Wives under the Tamil Nadu Nurses and Midwives Act 1926 (Tamil Nadu Act II of 1926)
Provided that the Registration in Section I-C of the said Act, shall not apply to men candidates.

33. தமிழ்நாடு பொது சுகாதார சார்நிலைப் பணியிலடங்கிய பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் துறையிலுள்ள பதினெட்டு புள்ளியியல் உதவியாளர்கள் பதவி.

ஆ.தி.வ. /ப.வ.-5 (ஒரு காலியிடம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது)
மி.பி.வ. /சீ.ம.-3 (ஒரு காலியிடம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது)
பி.வ.-4 (ஒரு காலியிடம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது)
ப.போ-6 (பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட இரண்டு காலியிடங்கள் உட்பட)
சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ.1600-2660 வயது 30 வயதிற்குள்
க.த.

i) M.A. or M.Sc. or B.A.(Hons) or B.Sc. (Hons) in Statistics.

**Or**

ii) M.A.or M.Sc. or B.A.(Hons) or B.Sc.,(Hons) in Mathematics with Statistics as a special subject

**Or**

iii) (a) M.A. or M.Sc. or B.A.(Hons) or B.Sc (Hons) in Mathematics.

and

(b) A diploma in Economics with Statistics as part of the "Course for the diploma"

ஆ.தி.வ. /ப.வ., மி.பி.வ. /சீ.ம. /பி.வ. /ப.போ., க்காக எந்தெந்த பதவிக்கு பொருந்துமோ அதன்படி இடஒதுக்கீடு விதி மற்றும் பெண்களுக்கான ஒதுக்கீடு தெரிவுகள் செய்யப்படும். ஆணையத்தின் அறிவிக்கைகளில் விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண்கள் கிடைக்கப் பெறாவிடில் அத்தகைய காலியிடங்கள் ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கொட்டை எழுத்தில், விண்ணப்பம் கோரும்கடிதத்திலும்விண்ணப்பத்திலும் குறிப்பிட வேண்டும்.

ஆ.தி.வ. /ப.வ., மி.பி.வ., /சீ.ம., பி.வ., ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசு ஊழியர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும் அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும் அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் பணி வேட்பாளருக்கான விதிமுறைகளில் தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-2. அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், விளம்பர எண் மற்றும் இனம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.9.1989 அன்றோ அதற்குப் பிறகோ வழங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10 - சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணையுடனும் அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் ஏதாவது ஒரு கிளையில், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை-2 அவர்களுக்காகப் பெறப்பட்ட ரூபாய் 10க்கான (Account payee) ''கேட்புக் காசோலை'' (Demand Draft) பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்கு சென்னை-6 (குறியீட்டு எண். 8000)க்கு செலுத்தத்தக்கதாகவும் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 X 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருப்பின், அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

குறிப்பு:- ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி கோரிக்கைக் கடிதம் ரூ.10 அஞ்சல் ஆணை அல்லது கேட்புக் காசோலையுடன் அனுப்பப்படவேண்டும்.

சுருக்கங்கள்:-
ஆ.தி.வ. /ப.வ. :ஆதிதிராவிட வகுப்பினர் /பழங்குடி வகுப்பினர்.
மி.வ. /சீ.ம. :மிகவும் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர்.
பி.வ. :பிற்பட்ட வகுப்பினர்.
ப.போ. :பகிரங்க போட்டி.

டி.ஐபிஆர்/1996/எம்எஸ்/89.

TNPSC விளம்பர எண். 55

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனி விண்ணப்பம் உரிய கட்டணத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தொகுதி 1,2,3,7,8 மற்றும் 9 இல் உள்ள கீழ்க்காணும் பதவிகளில் நேரடி நியமனத்திற்கு முதனிலைத் தேர்வு (Preliminary Examinations) 1989-1990இல் நடைபெற உள்ளது.

| வரிசை எண் (1) | பணி மற்றும் பதவியின் பெயர் (2) | பதவிகளின் எண்ணிக்கை (தோராயமாக) (3) | சம்பள ஏற்றமுறை (4) | 1.7.89 அன்று வயது (5) | கல்வித் தகுதி (6) | குறிப்புரை (7) |
|---|---|---|---|---|---|---|
| **தொகுதி 1** | | | | | | |
| 1. | தமிழ்நாடு குடிமுறைப்பணியில் துணை மாவட்டாட்சியர் | 6 | மாதம் ஒன்றுக்கு ரூ. 2,200-75-2,800-100-4,000 | 21 வயதிற்கு மேல். தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 35 வயதிற்குள். மற்றவர்களுக்கு 30 வயதிற்குள். | பி.ஏ.அல்லது பி.எஸ்சி. (விவசாயம் போன்ற தொழிற்பாடங்கள் தவிர) அல்லது பி.காம்., அல்லது பி.பி.ஏ.அல்லது பி.ஒ.எல். அல்லது பி.லிட். அல்லது பி.பி.எம்.பட்டம். | |
| 2. | தமிழ்நாடு கூட்டுறவுப் பணியில் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர். | 40 | மாதம் ஒன்றுக்கு ரூ. 2,200-75-2,800-100-4,000 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர்க்கு வயது வரம்பு இல்லை. மற்றவர்களுக்கு 21 வயதிற்குமேல் 30 வயதிற்குள், கூட்டுறவு நிறுவனங்களில் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் மேலாளர், செயலாளர், நிர்வாக அதிகாரி போன்ற பணிகளில் உள்ளவர்களுக்கு 21 வயதிற்கு மேல் 32 வயதிற்குள். | எம்.ஏ.(கூட்டுறவு) அல்லது கூட்டுறவை ஒரு பாடமாகக் கொண்டு எம்.காம் பட்டம் அல்லது கூட்டுறவு, வணிகம், பொருளாதாரம், கணிதம், புள்ளியியல், வேளாண்மை, சட்டம் போன்றவைகளில் பட்டப்படிப்பு அல்லது ஊரக மேல்நிலைக்கல்வி தேசிய கவுன்சிலால் வழங்கப்படும் கூட்டுறவு வணிகவியல், பொருளாதாரம், கணிதம், புள்ளியியல் அல்லது வேளாண்மை போன்ற ஏதாவது ஒன்றைப் பாடமாகக் கொண்டு ஊரகப் பணிக்கான டிப்ளமோ அல்லது சார்ட்ட் அக்கவுண்டண்ட் நிறுவனத்தில் வழங்கப்படும் அசோசியேட் சிப்பில் ஒரு டிப்ளமோ. | |
| 3. | தமிழ்நாடு காவல்பணியில் துணைக் கண்காணிப்பாளர். (வகை-1) | 18 | மாதம் ஒன்றுக்கு ரூ.2,200-75-2800-100-4,000 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு 21 வயதிற்கு மேல் 35 வயதிற்குள் மற்றவர்களுக்கு 21 வயதிற்கு மேல் 30 வயதிற்குள். | பி.ஏ.அல்லது பி.எஸ்சி. (விவசாயம் போன்ற தொழிற்பாடங்களைத் தவிர அல்லது பி.காம்.பி.பி.ஏ., பி.ஒ.எல்., பி.லிட்.அல்லது பி.பி.எம். பட்டம். **உடற் தகுதி:** உயரம் 165 செ மீ.: மார்பு மூச்சு உள்ளிழுக்கும் போது 86 செ.மீ. விரிவடைய வேண்டியது 5 செ.மீ. | வயது வரம்பைக் கடந்த Emergency Commissioned Officerகளுக்கு வயது வரம்பு விதி தளர்த்தப்படும் |
| 4. | தமிழ்நாடு ஊராட்சிப் பணியில் கோட்ட வளர்ச்சி அலுவலர் | 16 | மாதம் ஒன்றுக்கு ரூ.2,200-75-2,800-100-4,000 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர்க்கு 35 வயதிற்குக் குறைவாக, மற்றவர்களுக்கு 30 வயதிற்குக் குறைவாக. | ஒரு பட்டம் | |
| 5. | தமிழ்நாடு பதிவுப் பணியில் மாவட்டப் பதிவாளர் | 3 | மாதம் ஒன்றுக்கு ரூ.2,200-75-2,800-100-4,000 | 21 வயதிற்குமேல் 30 வயதிற்குள். தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் மற்றும் பின் தங்கிய வகுப்பினர்க்கு வயது வரம்பு பொருந்தாது. | பி.ஏ.அல்லது பி.எஸ்சி. (விவசாயம் போன்ற தொழிற்பாடங்களில் தவிர) அல்லது பி.காம்., பி.ஒ.எல்., பி.பி.ஏ., பி.லிட். அல்லது பி.பி.எம்.பட்டம். | |
| 6. | தமிழ்நாடு பொதுப்பணியில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர். | 8 | மாதம் ஒன்றுக்கு ரூ.2,200-75-2,800-100-4,000 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும். சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்டவகுப்பினர்க்கு வயது வரம்பு இல்லை. மற்றவர்களுக்கு 30 வயதிற்குள் | பி.ஏ.அல்லது பி.எஸ்சி. (விவசாயம் போன்ற தொழிற்பாடங்களில் தவிர) அல்லது பி.காம்.; பி.ஒ.எல்., பி.பி.ஏ., பி.லிட் அல்லது பி.பி.எம். பட்டம் | |

**தொகுதி-2.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு கூட்டுறவுச் சார்நிலைப் பணியில் கூட்டுறவுச் சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர். | 31 | மாதம் ஒன்றுக்கு ரூ.1,400-40-1,600-50-2,300-60-2,600 | 30 வயதிற்குள் | பி.ஏ., பி.எஸ்சி., பி.பி.ஏ., பி.காம்., பி.பி.எம். அல்லது பி.லிட்., அல்லது ஊரகப் பணியில் பட்டயம் அல்லது பட்டயக் கணக்கர்களுக்கான நிலையங்களில் இணை உறுப்பினர்களுக்கான பட்டயம். | |
| 2. | தமிழ்நாடு பதிவுத்துறை சார்நிலைப்பணியில் இரண்டாம் நிலைச் சார் பதிவாளர். | 2 | மாதம் ஒன்றுக்கு ரூ.1,600-50-2,300-60-2,660 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/ தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வயது வரம்பு இல்லை. மற்றவர்களுக்கு 20 வயதிற்கு மேல் 30 வயதிற்குள் | பி.ஏ.அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பெற்ற பி.ஓ.எல். பட்டம் அல்லது பி.பி.ஏ. (மதுரைப் பல்கலைக்கழகம்) அல்லது பி.லிட். (சென்னைப் பல்கலைக்கழகம்) பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். | |
| 3. | தமிழ்நாடு தொழிலாளர் சார் நிலைப்பணியில் தொழிலாளர் உதவி ஆய்வாளர். | 14 | மாதம் ஒன்றுக்கு ரூ.1,600-50-2 300-60-2,660 | 30 வயதிற்குள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/ தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மிகவும் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை. | கலை, விஞ்ஞானம், வணிகவியல், பொறியியல் ஏதேனும் ஒன்றில் ஒரு பட்டம் அல்லது பி.ஓ.எல். அல்லது பி.பி.ஏ.அல்லது பி.லிட். | |
| 4. | தமிழ்நாடு செயலகப்பணியில் உதவிப் பிரிவு அலுவலர் | 17 | மாதம் ஒன்றுக்கு ரூ.1,400-40-1,600-50-2,300-60-2,600 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை. மற்றவர்களுக்கு 30 வயதிற்குள். தமிழ்நாடு உயர்நீதி மன்றத்தில் ஐந்தாண்டு காலத்திற்கு வழக்கறிஞராகத் தொழில் புரிபவர்கட்குச் சட்டத் துறையில் நியமிக்கப்பட்ட வயது வரம்பு 32 ஆண்டுகள். | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு பி.ஏ., பி.எஸ்சி. பி.காம். அல்லது பி.ஓ.எல் அல்லது பி.பி.ஏ. அல்லது பி.லிட். பட்டம். **மற்றவர்களுக்கு** (1) எம்.ஏ., எம்.எஸ்சி., பி.ஏ.(ஆனர்ஸ்) அல்லது பி.எஸ்சி.(ஆனர்ஸ்) அல்லது பி.காம்.(ஆனர்ஸ்) பட்டம். (2) பி.ஏ.அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். அல்லது பி.ஓ.எல்.அல்லது பி.பி.ஏ. அல்லது பி.லிட். பட்டத்துடன் பி.ஜி.எல்.பட்டம். (3) இளங்கலைப் பட்டப்படிப்பில் (Bachelors degree) ஏதேனும் ஒரு பாடத்தில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல். குறிப்பு: சட்டத்துறையில் நியமிக்கப்பட பல்கலைக்கழக மானியக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட சட்டப்படிப்பில் ஒரு பட்டம். | |
| 5. | தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் தணிக்கை ஆய்வாளர் | 17 | மாதம் ஒன்றுக்கு ரூ.1,400-40-1,600-50-2,300-60-2,600. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை. மற்றவர்களுக்கு 30 வயதிற்குள். | பி.ஏ.அல்லது பி.எஸ்.சி.அல்லது பி.காம்.அல்லது பி.ஓ.எல். அல்லது பி.பி.ஏ.அல்லது பி.பி. எம்.அல்லது பி.லிட்.பட்டம் | இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே இப்பதவிக்குத் தகுதியுடையராவர். |
| 6. | தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வருவாய்த்துறையில் உதவியாளர் | 60 | மாதம் ஒன்றுக்கு ரூ.1,200-30-1,560-40-2,040. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை. மற்றவர்களுக்கு 30 வயதிற்குள். | பி.ஏ., அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். அல்லது பி.ஓ.எல்.அல்லது பி.பி.ஏ. அல்லது பி.லிட். அல்லது பி.பி.எம். பட்டப்படிப்பு. | |

**தொகுதி-3.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு கூட்டுறவுச் சார்நிலைப் பணியில் கூட்டுறவுச் சங்கங்களில் முதுநிலை ஆய்வாளர் | 66 | மாதம் ஒன்றுக்கு ரூ.1,400-40-1,600-50-2,300-60-2,600. | வயது வரம்பு இல்லை. | இண்டர்மீடியட் அல்லது புகுமுக வகுப்பு அல்லது மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். | காலியிடங்கள் தாழ்த்தப்பட்டவகுப்பினர், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பின் தங்கிய வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்கு ஒதுக்கப் பட்டவை. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | தமிழ்நாடு பதிவுத்துறை சார் நிலைப்பணியில் இரண்டாம் நிலை சார் பதிவாளர் | 1 | மாதம் ஒன்றுக்கு ரூ.1,600-50-2,300-60-2,660. | வயது வரம்பு இல்லை. | இண்டர்மீடியட் அல்லது புகுமுக வகுப்பு அல்லது மேல் நிலைக்கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். | தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டது. |

**தொகுதி-7.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை சார்நிலைப் பணியில் செயல் அலுவலர் (நிலை-1) | 1 | மாதம் ஒன்றுக்கு ரூ.1640-60-2600-75-2900. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்-சீர்மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை. மற்றவர்களுக்கு: 30 வயதிற்கு மேல் 35 வயதிற்குள். | பி.ஏ., பி.எஸ்சி. பி.காம்., பி.பி.ஏ. பி.பி.எம்., பி.ஓ.எல். அல்லது பி.லிட் போன்றவற்றில் ஒரு பட்டம் மற்றும் சட்டப் படிப்பில் ஒரு பட்டம். | இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் இப்பதவிக்குத் தகுதிபெற்றவர்கள். பெண்கள் தகுதி அற்றவர்கள், உடல் ஊனமுற்றோருக்கான தெரிவு அரசின் இறுதியான முடிவைப் பொறுத்தது. |
| 2. | தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சி சார்நிலைப் பணியில் செயல் அலுவலர் (மூன்றாம் நிலை) | 8 | மாதம் ஒன்றுக்கு ரூ.1,200-30-1560-40 2040 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை. மற்றவர்களுக்கு 25 வயதிற்குமேல் 35வயதிற்குள். | பி.ஏ., பி.எஸ்சி., பி.காம்., பி.ஓ.எல்., பி.பி.ஏ., பி.லிட். அல்லது பி.பி.எல். போன்றவற்றில் ஒரு பட்டம். | இந்துமதத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் இப்பதவிக்குத்தகுதி பெற்றவர்கள். பெண்கள் தகுதி அற்றவர்கள். உடல் ஊனமுற்றோருக்கான தெரிவு அரசின் இறுதியான முடிவைப் பொறுத்தது. |

**தொகுதி-8.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சி சார்நிலைப் பணியில் செயல் அலுவலர். (நான்காம்நிலை) | 10 | மாதம் ஒன்றுக்கு ரூ.950-20-1150-25-1500. | 25 வயதிற்கு மேல் 35 வயதிற்குள் | குறைந்த அளவு பொதுக் கல்வி (M.G.E.Q.) அல்லது கல்லூரி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்வதற்கான பள்ளி இறுதிவகுப்பு சான்றிதழ் | இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே இப்பதவிக்கு தகுதி பெற்றவர்கள். பெண்கள் தகுதி அற்றவர்கள். உடல் ஊனமுற்றோருக்கான தெரிவு அரசின் இறுதியான முடிவைப்பொறுத்தது. |

**தொகுதி-9.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு தீயணைப்பு சார்நிலைப் பணியில் தீயணைப்பு நிலைய அலுவலர் | 5 | மாதம் ஒன்றுக்கு ரூ.1,200-30-1560--40-2,040. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், மற்றும் சீர்மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை. மற்றவர்களுக்கு: 20 வயதிற்கு மேல் 30 வயதிற்குள். | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் புகுமுக வகுப்பு அல்லது நிலைக் கல்வித் தகுதி தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். மற்றவர்களுக்கு: பி.ஏ., பி.எஸ்சி., பி.காம்., பி.பி.ஏ., பி.லிட், பி.ஓ.எல். அல்லது பி.பி.எல். போன்றவற்றில் ஒரு பட்டம். உடல் தகுதி: பார்வை நிலை (Vision standard) கண்ணாடி இல்லாமல் | உடல் ஊனமுற்றோர் தகுதி அற்றவர் ஆவர். |

| (1) | வலது கண் (2) | இடது கண் (3) | |
|---|---|---|---|
| தூரப் பார்வை | 6 / 6 | 6 / 6 | (snellen) |
| கிட்டப் பார்வை | 0.5. | 0.5. | (snellen) |

1. ஒவ்வொரு கண்ணிற்கும் அதன் எல்லைக்குட்பட்ட பார்வை தெரிதல் வேண்டும்.
2. நிறக்குருடு போன்றவை தேர்ச்சி பெறத் தகுதியற்றவையாகும்.

உடல்நிலை:

1. உயரம் (காலணி மற்றும் காலுறை இல்லாமல் 165 செ.மீ.)
2. மார்பளவு (சாதாரணநிலை) 84 செ.மீ.
3. ,, (விரிந்த நிலை) 89 செ.மீ.
4. ,, (விரிதல்) 5 செ.மீ.
5. உடல் எடை (காலணி மற்றும் காலுறை இல்லாமல்)50 கிலோ (அளவுகளை மெட்ரிக் முறையில் தெரிவிக்க வேண்டும்.)

## உடல் திறன் தேர்வு
## (PHYSICAL EFFICIENCY TEST)

| Events | "Three Star" Standard. | "Two Star" Standard | "One Star" Standard |
|---|---|---|---|
| 1. 100 metres run | 12 Seconds | 13 Seconds | 14 Seconds |
| 2. High Jump | 5'3" (160.02cms.) | 5' (152.40cms) | 4'6" (137.16cms) |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. Long Jump | 19' (5.80 M) | 17' (5.19 M) | 15' (4.57 M) | அனைத்து விண்ணப்பதாரர் கட்கும் முதலில் உடல் திறன் தேர்வு நடத்தப் படும். அத்தேர்வில் தகுதி பெற்றவர்கள் மட்டுமே முதுநிலைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். (Preliminary) |
| 4. Putting the shot of 7.27Kg. (16lbs) | 28' (8.53M) | 24' (7.32 M) | 20' (6.10 M) | |
| 5. Throwing the Cricket ball | 275' (83.82 M) | 225' (68.58 M) | 200' (60.96 M) | |
| 6. Rope Climbing (only hands) | 16' (4.88 M) | 14' (4.27 M) | 12' (3.66 M) | |
| 7. Pull-ups or chinning | 15 | 10 | 8 | |
| 8. 1,500 Meters run | 5 minutes | 5 minutes 15 Seconds | 5 minutes 45 Seconds | |

குறிப்பு:- 1. மேற்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ள காலியிடங்கள் தோராயமானவை. தெரிவு செய்யும்போது மாறுதல் இருக்கலாம்.

2. தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், மற்றும் பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட காலியிட மதிப்பீடுகள் ஒட்டு மொத்தமாக மேலே தெரிவிக்கப்பட்டுள்ளன. தெரிவுகள் அரசின் தற்பொழுதுள்ள விதிமுறையின் கீழ் அவ்வவ்வினங்களுக்கான ஒதுக்கீட்டின்படி செய்யப்படும்.

3. பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட காலியிடங்களில் பெண் விண்ணப்பதாரர் கிடைக்கவில்லையெனில், அவ்விடத்தில் அதே சாதியைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரரைக் கொண்டு நியமனம் செய்யப்படும்.

4. ஒவ்வொரு தொகுதியில் ( Group ) உள்ள பதவிகளுக்குத் தனித்தனி விண்ணப்பம் அனுப்ப வேண்டும். ஒரு தொகுதியில் உள்ள பல்வேறு பதவிகளுக்கும் ஒரே விண்ணப்பம் அனுப்பினால் போதுமானது.

5. தேர்வு மையம்

| விதித் தொகுப்பு எண் (Code Number) | பெயர் | விதித் தொகுப்பு எண். (Code Number) | பெயர் |
|---|---|---|---|
| 01 | கோயம்புத்தூர் | 09 | பாளையங்கோட்டை |
| 02 | கடலூர் | 010 | புதுக்கோட்டை |
| 03 | தர்மபுரி | 011 | சேலம் |
| 04 | ஈரோடு | 012 | சிவகங்கை |
| 05 | காஞ்சிபுரம் | 013 | தஞ்சாவூர் |
| 06 | சென்னை | 014 | திருச்சிராப்பள்ளி |
| 07 | மதுரை | 015 | உதகமண்டலம் |
| 08 | நாகர்கோவில் | 016 | வேலூர் |

தொகுதி ஒன்றுக்கான தேர்வு மையங்கள்: விதித்தொகுப்பு எண்: 01,02,06,07,09,011 மற்றும் 014.
தொகுதி இரண்டு மற்றும் மூன்றுக்கான தேர்வு மையங்கள்: அனைத்து மையங்களும்
தொகுதி ஏழு மற்றும் எட்டிற்கான தேர்வு மையங்கள்: 01,06,07,09 மற்றும் 014.
தொகுதி ஒன்பதுக்கான தேர்வு மையங்கள்: 01, 06,07,08,09,011, 013 மற்றும் 014.

தேர்வின் விவரங்கள்: இப்போட்டித் தேர்வு அடுத்தடுத்து இரண்டு நிலைகளை உடையது; அவை:

1. முதனிலைத் தேர்வு மூலம் முதன்மைத் தேர்வுக்குத் தெரிவு செய்தல்.
2. முதன்மைத் தேர்வு மூலம் பதவிகளுக்கு விண்ணப்பதாரரைத் தெரிவு செய்தல்.

**முதனிலைத் தேர்வு**

தொகுதி-1க்கான முதனிலைத் தேர்வு: பொது அறிவுத்தாள் 1 (கொள்குறி வகை) (Objective type) 100 மதிப்பெண்கள்.
கால அளவு- 2 மணி நேரம்.
பொது அறிவுத்தாள் 2 (விவரிப்பு வகை) (Descriptive type) 100 மதிப்பெண்கள்.
கால அளவு - 2 மணி நேரம்.

மற்ற தொகுதிகளுக்குப் ''பொது அறிவுத்தாள் ( General knowledge ) கொள்குறி ( Objective ) வகைக்கு 50 மதிப்பெண்கள் மற்றும் விவரிப்பு (Descriptive) வகைக்கு 50 மதிப்பெண்களுமாக இரண்டு மணி நேரம் கால அளவில் மொத்தம் 100 மதிப்பெண்களுக்கென நடைபெறும். முதன்மைத் தேர்வுக்குப் போட்டியாளர்களைக் குறைப்பதே இத்தேர்வின் நோக்கம். முதனிலைத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் தெரிவு செய்வதற்கான மதிப்பெண்களுடன் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா. ஒவ்வொரு பதவிக்கும் பதவியின் எண்ணிக்கையில் பத்து மடங்கு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்களே இத்தேர்வின் மூலம் முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவர்.

முதனிலைத் தேர்விற்கு அனுமதிக்கவே இவ்விளம்பரத்தின் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்கள், தேர்வாணையத்தின் மூலம் மறுபடியும் அனுப்பப்படும் விண்ணப்பத்தைக் கொண்டு முதன்மைத்தேர்விற்கு விண்ணப்பிக்கவேண்டும்.

ஒரு தொகுதித் தேர்வுக்கு 1000 விண்ணப்பங்களுக்கு மேலாகவோ அல்லது அத்தொகுதியில் அடங்கிய பதவிகளின் மொத்த எண்ணிக்கையின் பத்து மடங்கிற்கு மேலாகவோ விண்ணப்பங்கள் பெறப்படின் முதனிலைத் தேர்வு நடத்தப்படும்.

**முதன்மைத் தேர்வு**

முதன்மைத் தேர்வானது எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு உள்ளடங்கியதாகும். தேர்வாணையத்தினால் நிர்ணயிக்கப்படும் குறைந்த அளவு மதிப்பெண் பெற்றவர்களே நேர்முகத் தேர்விற்கும் தகுதியுடையவர் ஆவர்.

முதன்மைத் தேர்வில் பெறப்படும் மதிப்பெண்களைக் (எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வு) கொண்டு முடிவான படிநிலை ( Ranking ) நிர்ணயிக்கப் படும். விண்ணப்பதாரர்கள் படிநிலையின் அடிப்படையில் அவர்களுடைய விண்ணப்பத்தில் கோரப்பட்ட பதவிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுவர்.

## முதன்மைத் தேர்வின் திட்டம்
## (Scheme of Main Examination)

| தொகுதி மற்றும் அதன் நிலைகள் | பொருள் | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவு செய்வதற்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் | குறிப்புரை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| தொகுதி 1 (முதுநிலைப் பட்டப்படிப்பு நிலை) | தாள் 1 ஆங்கிலம் | 100 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் / | |
| | தாள் 2 பொது அறிவு (பகுதி 1) | 100 | தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், | |
| | தாள் 3 பொது அறிவு (பகுதி 2) | 100 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் | |
| | தாள் 4,5,6 மூன்று விருப்பப் பாடங்கள் (100 மதிப்பெண்கள் தனித்தனியே) (பத்தி 4(எ) வில் உள்ளபடி) | 300 | சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 204. மற்றவர்களுக்கு 272. | |
| | நேர்முகத் தேர்வு | 80 | | |

| | | | |
|---|---|---|---|
| தொகுதி 2 (பட்டப்படிப்பு நிலை) | ஆங்கிலம் | 100 | 171 |
| | பொது அறிவு (சிறு குறிப்பு மற்றும் வினா விவரிப்பு வரைதல்) | 100 | |
| | மூன்று விருப்பப் பாடங்கள் (100 மதிப்பெண்கள் தனித்தனியே) (பத்தி 4(பி)யில் கண்டபடி) | 300 | |
| | நேர்முகத்தேர்வு | 70 | |
| தொகுதி 3 (மேல்நிலை தகுதி நிலை) | ஆங்கிலம் கட்டுரை | 100 | 171 |
| | பொது அறிவு (சிறு குறிப்பு மற்றும் வினா, விவரிப்பு வரைதல்) | 100 | |
| | மூன்று விருப்பப் பாடங்கள் (100 மதிப்பெண்கள் தனித்தனியே) (பத்தி 4(சி) யில் கண்டபடி) | 300 | |
| | நேர்முகத் தேர்வு | 70 | |
| தொகுதி 7 (பட்டப்படிப்பு நிலை) | ஆங்கிலம் | 100 | 102 |
| | பொது அறிவு (சிறு குறிப்பு மற்றும் வினா விவரிப்பு வரைதல்) | 100 | |
| | இந்து மத இணைப்பு விளக்கம் மற்றும் (Treaties on Vaishnavam & Saivam) (தமிழில் மட்டும் விடையளித்தல் வேண்டும்) | 100 | |
| | நேர்முகத் தேர்வு | 40 | |
| தொகுதி 8. (பள்ளி இறுதி வகுப்பு நிலை) | ஆங்கிலம் | 100 | 102 |
| | பொது அறிவு (சிறு குறிப்பு மற்றும் வினா விவரிப்பு வரைதல்) | 100 | |
| | இந்து மத இணைப்பு விளக்கம் மற்றும் (Treaties on Vaishnavam & Saivam) (தமிழில் மட்டும் விடையளித்தல் வேண்டும்). | 100 | |
| | நேர்முகத் தேர்வு | 40 | |
| தொகுதி 9 (மேல்நிலைத் தகுதி நிலை) | ஆங்கிலம் கட்டுரை | 100 | 204 |
| | பொது அறிவு (சிறு குறிப்பு மற்றும் வினா விவரிப்பு வரைதல்) | 100 | |
| | மொழி பெயர்ப்பு மற்றும் கட்டுரை | 100 | |
| | மூன்று விருப்பப் பாடங்கள் (100 மதிப்பெண்கள் தனித்தனியாக) பத்தி 4(சி) யில் கண்டபடி) | 300 | |
| | நேர்முகத் தேர்வு | 80 | |

**OPTIONAL SUBJECTS :(a) For Group I Services Examination :** (Only one subject from each division specified below should be selected).

| DIVISION I | DIVISION II | DIVISION III |
|---|---|---|
| 1. Mathematics | 1. Zoology | 1. Geology |
| 2. Commerce | 2. Co-operation | 2. Tamil Language and Literature |
| 3. Philosophy | 3. Statistics | 3. National Security |
| 4. Economics | 4. Chemistry | 4. Agriculture |
| 5. Geography | 5. History | 5. Physics |
| 6. Law | | 6. Psychology |
| 7. Political Science | | 7. Botany |
| 8. Sociology. | | |

**(b) For Group II Services Examination:**(Only one subject from Part I and two subjects, not more than one from any of the three divisions from PartII below)

**PART-I**

| | | |
|---|---|---|
| 1. English | .. | Language and Literature |
| 2. English | | History of English Literature |
| 3. English | .. | Social History of England |
| 4. Sanskrit | .. | Language and Literature |
| 5. Sanskrit | .. | Ancient Indian History and Culture |
| 6. Sanskrit | .. | Comparative Philology and History of Sanskrit Literature |
| 7. Persian | .. | Language and Literature |
| 8. Persian | .. | History of Persian Literature |
| 9. Persian | .. | Literatary Criticism |
| 10. Arabic | .. | Language and Literature |
| 11. Arabic | .. | History of Arabic Literature |
| 12. Arabic | .. | Literary Criticism |
| 13. Tamil | .. | Language and Literature |
| 14. Tamil | .. | History of South India |
| 15. Tamil | .. | Elements of Comparative Grammer of the Dividian Languages and History of Tamil Language and Literature |
| 16. Tamil | .. | Tamil Nadu and Culture |
| 17. Tamil | .. | History of Tamil Culture |
| 18. Telugu | .. | Language and Literature |
| 19. Telugu | .. | History of Telugu Literature |
| 20. Telugu | .. | History of Andhra Desa and Andhra Culture |
| 21. Malayalam | .. | Language and Literature |
| 22. Malayalam | .. | History of Malayalam Literature |
| 23. Malayalam | .. | History of Kerala and Culture |
| 24. Urdu | .. | Language and Literature |
| 25. Urdu | .. | History of Urdu Literature |
| 26. Urdu | .. | Literary Criticism |
| 27. Kannada | .. | Language and Literature |
| 28. Kannada | .. | History of Kannada Literature |
| 29. Kannada | .. | History of Karnataka and Culture |
| 30. Hindi | .. | Language and Literature |
| 31. Hindi | .. | History of Hindi Literature |
| 32. Hindi | .. | Indian History and Culture |

## PART—II

| DIVISION I | DIVISION II | DIVISION III |
|---|---|---|
| 1. Maths (pure) | 1. Business Organisation and Administration | 1. Geology |
| 2. Physics | 2. Psychology | 2. Sociology |
| 3. Politics | 3. Zoology | 3. National Security |
| 4. Economics | 4. Banking and Mercantile Law | 4. Agriculture |
| 5. Geography | 5. Statistics | 5. Philosophy |
| 6. Botany | 6. Chemistry | 6. Indian History |
| 7. Home Science | 7. History of Europe | 7. Agricultural Botany |
| 8. Indian penal code | 8. History of Civilisation | 8. Anthropology |
| 9. Community Development | 9. Constitutional History of England | 9. Biology |
| 10. Public Relations | 10. Maths (Applied) | 10. Indian Constitutional Law |
| 11. Social Science | 11. Indian Culture | 11. Accounts and Audit |
| 12. Agricultural Chemistry | 12. Fine Arts. | 12. Co-operation |

**(c) For Group III and Group IX Services Examination:** Three Optional Subjects from the following:
(Only one subject from each of the division should be taken)

| DIVISION I | DIVISION II | DIVISION III |
|---|---|---|
| 1. Mathematics | 1. Psychology | 1. Sociology |
| 2. Physics | 2. Zoology | 2. Tamil Language and Literature |
| 3. Political Science | 3. Elements of Commerce | 3. Philosophy |
| 4. Elements of Economics | 4. Statistics | 4. Ethics and Indian Culture |
| 5. Geography | 5. Chemistry | 5. Biology |
| 6. Botany | 6. History | 6. Logic and Scientific Methods |
| 7. Home Science | 7. Social Studies(S.S.L.C.Standard) | 7. Accountancy |
| 8. General Science(S.S.L.C.Standard) | 8. Fine Arts | 8. Environmental Studies. |

5. **தேர்வுக் கட்டணம்:** தொகுதி 1-க்கு ரூ. 60/-
மற்ற தொகுதிகளுக்கு ரூ. 40/-

மேற்படி தேர்வுக் கட்டணம் வங்கிகளின் கோடிட்ட வரைவு (DEMAND DRAFT) மூலமாக, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னையில் உள்ள மா.நில பாரத வங்கி (STATE BANK OF INDIA) ஆயிரம் விளக்கு, சென்னை என்கின்ற விலாசத்தில் மாற்றக் கூடியதாகவோ அல்லது இந்திய அஞ்சல் ஆணை மூலமாக செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அவர்களுக்கு, அண்ணாசாலையிலுள்ள அஞ்சல் நிலையத்தில் மாற்றக் கூடியதாகவோ இருக்குமாறு பெற்று விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டும். மற்ற வகைகளில் அனுப்பப்படும்கட்டணம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இந்திய அஞ்சல் ஆணை / கோடிட்ட வங்கி வரைவு 21.9.89க்குப் பிறகு பெற்றிருத்தல் வேண்டும்.

6. **விண்ணப்பிக்கும் முறை:**

முதனிலைத் தேர்வில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் கண்டுள்ளவாறு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து செயலாளர். தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், சென்னை 600 002 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மாதிரி படிவத்தில் உள்ளவாறு (30 c.m. X 21 c.m.) அளவுள்ள முழு நீள வெள்ளைத் தாளில் சீராக இடைவெளி விட்டு விண்ணப்பத்தையும், வருகைத் தாளையும் தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும். வெளியிடங்களில் தனியார் மூலம் விற்கப்படும் விண்ணப்பங்களை உபயோகிக்கத் தடையில்லை. ஆனால் அவ்விண்ணப்பங்களில் தேர்வாணைய அறிக்கையில் கோரப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் இருத்தல் வேண்டும்.

"———————————————— தொகுதியில் அடங்கிய ———————————————— பதவிக்கான 1989-90ஆம் ஆண்டுக்கான முதனிலைத் தேர்வு விண்ணப்பம்" என மேலுறையில் எழுதியனுப்ப வேண்டும்.

7. (அ) விண்ணப்பதாரர், விண்ணப்பத்துடன் கீழே கண்டுள்ள சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் அனுப்புதல் வேண்டும்.

1. தேர்வுக் கட்டணத்தைக் கோடிட்ட வங்கி வரைவு / இந்திய அஞ்சல் ஆணை மூலம் அனுப்புதல் வேண்டும். (பாரத வங்கி) (கட்டணச் சலுகை உள்ளவர்கள் தவிர)

2. வருகைத் தாள் (மாதிரிப் படிவத்தில் உள்ளவாறு)

3. விண்ணப்பதாரர் அண்மையில் எடுக்கப்பட்ட அவருடைய நிழற்படத்தின் ஒரே மாதிரியான இரண்டு நகல்களைக் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒரு நகலை ஒட்ட வேண்டும். மற்றொன்றை வருகைத் தாளில் ஒட்ட வேண்டும்.

4. போதிய அஞ்சல் வில்லையுடன் கூடிய சுயவிலாசமிட்ட அஞ்சல் அட்டை ஒன்று.

5. வயது மற்றும் கல்வித் தகுதிக்கான சான்றிதழ்களின் நகல்கள்.

(ஆ) அரசுப்பணி மற்றும் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட துறைகளில் பணி செய்யும் விண்ணப்பதாரர்கள் நேரடியாகத் தேர்வாணையத்திற்கு விண்ணப்பிக்கலாம். அதே சமயத்தில் விண்ணப்பதாரர்கள் தேர்வில் கலந்து கொள்ளும் விவரத்தை துறைத் தலைவருக்கு எழுத்து மூலம் தெரிவித்திருத்தல் வேண்டும்.

(இ) தகுந்த தேர்வுக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் குறைபாடு உள்ள விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும். தள்ளுபடி செய்யப்பட்ட பின் பெறப்படும் கடிதங்கள் எக்காரணத்தைக் கொண்டும் மறுபரிசிலனை செய்யப்படமாட்டா.

விண்ணப்பத்துடன் கல்வி, வயது மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைக்காக அனுப்பப்படும் சாதிச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் நிழற்பட நகல்களை (Xerox) மட்டும் அனுப்பினால் அவைகளே முதனிலை மற்றும் முதன்மைத் தேர்வுக்குப் போதுமானவையாகும். மூலச் சான்றிதழ்களை அனுப்ப வேண்டியதில்லை.

8. **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் தேர்வாணைய அலுவலகத்தில் பெறுவதற்கான கடைசி நாள்:-**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கேட்கப்பட்டுள்ள அனைத்து ஆவணங்கள் மற்றும் இந்திய அஞ்சல் ஆணை வங்கி வரைவுகளுடன் தேர்வாணைய அலுவலகத்திற்கு 31.10.89 அன்று மாலை 5.30 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடைசித் தேதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

9. சில வகுப்பினருக்கு வயது மற்றும் கல்வித் தகுதி, கட்டணச் சலுகை சம்பந்தமாக அனுமதிக்கப்பட்ட சலுகைகளைக் கூறும் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகள் மற்றும் தேர்வாணையத்தின் அறிவிக்கை'' 16.8 89 நாளிட்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டில் (Bulletin) வெளியிடப்பட்டுள்ளது. செய்தி அறிவிப்பு வெளியீடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சகத் துறையின் அரசு வெளியீட்டு விற்பனை மையங்களின் மூலம் விலைக்குக் கிடைக்கப்பெறும். மேற்படி பணி வேட்பாளருக்கான விதிமுறைகள் 1-9-89 நாளிட்ட "தமிழரசு" ஆங்கிலம் மற்றும் தமிழ்ப் பதிப்புகளில வெளியிடப்பட்டுள்ளது.

# TNPSC Advt No 57

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

கீழ்க்கண்ட பதவிகளுக்கு 6.11.1989க்குள் ஆணையத்தின் அலுவலகத்தில் வந்து சேருமாறு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சம்பளம், வயது வரம்பு மற்றும் கல்வித்தகுதி முதலியவை ஒவ்வொரு பதவிக்கும் பின்னால் கொடுக்கப்பட்டுள்ளன.

1) தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட பள்ளி சார்நிலைப் பணியில் மூன்று காலியிடங்களுக்கு B. T. Assistant பதவிக்கு

ஆ.தி.வ. / ப.வ.-1; பி.வ.1; ப.போ-1

கணிதம்-1; அறிவியல்-1
— ஆங்கிலம்-1 } பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது

30 வயதிற்குக் குறைவாக: ரூ. 1400-2600

தகுதி

**B.T. Assistant in Mathematics**

a) A degree in Arts or Science with Mathematics as the main subject and B.T. or B.Ed. degree.

b) **B.T. Assistant in Science:** A degree in Science with Chemistry as main subject with physics as an ancillary subject and Botony or Zoology as another ancillary subject and B.T. or B.Ed. degree.

c) **B.T. Assistant in English:** A degree in Arts with English Literature as the main subject and B.T. or B.Ed. degree.

2) தமிழ்நாடு பிற்பட்டோர் நல சார்நிலைப் பணியில் இடைநிலைப் பள்ளிகளில் ஆறு ஆசிரியர் பதவிகளுக்கு- ஆ.தி.வ. / ப.வ. 1; மி.பி.வ / சீ.ம.-1 (பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது) பி.வ.-1; ப.போ-3 (ஒரு இடம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது.

| பாடம் | காலியிட எண்ணிக்கை |
|---|---|
| கணிதம் | 2 |
| வேதியியல் | 3 |
| இயற்பியல் | 1 |

35 வயதிற்குக் குறைவாக; ரூ. 1400-2600; கணிதம், வேதியியல் அல்லது இயற்பியலில் ஒரு இளம் அறிவியல் பட்டம்; மற்றும் எல்.டி. அல்லது பி.டி. அல்லது பி.எட். பட்டம்.

3) தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சார்நிலைப் பணியிலடங்கிய, பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் துறையிலுள்ள உயர்நிலைகளின் புள்ளி விவரங்கள் பதிவு செய்தலை அபிவிருத்தி செய்வதற்காக ஒப்பளிக்கப்பட்ட 5 புள்ளியியல் உதவியாளர்கள் Statistical Assistant, sanctioned for the improvement of Registration of Vital Statistics in the Department of Public Health and preventive Medicine. ஆ.தி.வ. / ப.வ.-1; மி.பி.வ. / சீ.ம.-1 (பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது) பி.வ.-1; ப.போ-2; 30 வயதிற்குக் குறைவாக; ரூ. 1600-2660; புள்ளியியல் அல்லது கணக்கில் புள்ளியியல் சிறப்புப் பாடமாக எடுத்து இளங்கலைப் பட்டம் அல்லது அறிவியலில் இளநிலைப் பட்டம்.

ஆ.தி.வ. / ப.வ., மி.பி.வ. /சீ.ம., பி.வ. /ப.போ.க்காக எந்தெந்தப் பதவிக்குப் பொருந்துமோ, அதன்படி இட ஒதுக்கீடு விதி மற்றும் பெண்களுக்கான ஒதுக்கீடு / தெரிவுகள் செய்யப்படும். ஆணையத்தின் அறிவிக்கைகளில் விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண்கள் கிடைக்கப் பெறாவிடில் அத்தகைய காலியிடங்கள் ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கொட்டை எழுத்தில், விண்ணப்பம் கோரும் கடிதத்திலும், விண்ணப்பத்திலும் குறிப்பிட வேண்டும்.

ஆ.தி.வ. / ப.வ., மி.பி.வ. / சீ.ம., பி.வ. / ப.போ. ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது



வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசு ஊழியர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும் / அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும் / அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் பணி வேட்பாளருக்கான விதி முறைகளில் தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், விளம்பர எண் மற்றும் இனம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.9.1989 அன்றோ அதற்குப் பிறகோ வழங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணையுடனும் அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் ஏதாவது ஒரு கிளையில், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கான பெறப்பட்ட ரூபாய் 10க்கான Account Payee "கேட்புக் காசோலை" (Demand Draft) பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்கு சென்னை-6 (குறியீட்டு எண்.0800)க்கு செலுத்தத்தக்கதாகவும், சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26X12 செ.மீ) அனுப்பவேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருப்பின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா.

குறிப்பு:— ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனிக் கோரிக்கைக் கடிதம் ரூ. 10 அஞ்சல் ஆணை அல்லது கேட்புக் காசோலையுடன் அனுப்பப்பட வேண்டும்.

சுருக்கங்கள்: ஆ.தி.வ. / ப.வ. ஆதிதிராவிட வகுப்பினர் / பழங்குடி வகுப்பினர்.
மி.பி.வ. / சீ.ம: மிகவும் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர்.
பி.வ: பிற்பட்ட வகுப்பினர்.
ப.போ.: பகிரங்கப் போட்டி.

DIPR / 2058 / MS / 89 / AD-bureau / 2770

# FORMAT

QUOTE ADVERTISEMENT NO : ____________

TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

**APPLICATION FORM FOR PRELIMINARY EXAMINATION**

(Candidates should send separate application for admission to each group of examination with separate application fee)

NAME OF POST AND SERVICE :

1. Examination Centre : with Code Number [ | ]

2. Register Number : [ ]
(To be assigned by office)

3. Details of fee paid :

| Name of Post Office/ Bank | Number and Date of IPO/Draft | Value Rs. P. |
|---|---|---|

Paste here a signed copy of recent passport size photograph

4. Do you claim fee exemption?: | Yes | No |

5. Name of the applicant - (IN CAPITALS)

6. Father's Name :

7. Address for communication :

8. Date of Birth : [ ][ ][ ][ ][ ][ ]
(Write 1 to 9 as 01 and 09)

8. (a) Age as on 1.7.89 : [ ][ ] Years

9. Sex : | M | F |

10. Community Code : [ ]
(SC/ST -1 : BC-2 : MBC/ DC -3 : Others-4.)

10(a) Religion Code : [ ]
Hindu-1 ; Muslim -2 Xian-3 ; Others -4.

11. Do you possess the prescribed educational qualification : Yes No

| Examination passed | Subjects of study | Year of pass | Marks/Grade | School/College/ University |
|---|---|---|---|---|
| | | | | |

12. Do you possess the additional or preferential qualifications prescribed for the Posts? Yes No

| Examination passed | Subject of study | Year of pass | Marks/Grade | Institute/College/ University |
|---|---|---|---|---|
| | | | | |

13. Whether employed, if so the details :

| Employer's Address | Posts Hold | Period From | To |
|---|---|---|---|
| | | | |



14. Do you claim any relaxation / concession in age, qualifications prescribed or in payment of fees? | YES | NO |

SUBSTANTIATE YOUR CLAIM :

15. DECLARATION

I hereby declare that all the statement made in this application are true, correct and complete to the best of my knowledge and belief. In the event of any information being found false or incorrect or ineligibility being detected before or after the examination, action can be taken against me by the Commission.

I have read the advertisement, notification and 'Instructions to Candidates' carefully and I hereby undertake to abide by the Instructions therein.

I further declare that I fulfil all the eligibility conditions prescribed for admission to the examination.

*I have informed my Employer in writing that I am applying for this examination.

(*Strike off this if not applicable.)

DATE :
STATION :

SIGNATURE OF THE CANDIDATE.

TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

PRELIMINARY EXAMINATION FOR THE POST OF ____________

INCLUDED IN GROUP ____________ SERVICES 1989.

IDENTIFICATION CERTIFICATE

1. Particulars to be filled in by the applicant :
   i) Name of Applicant :
   ii) Date of Birth :
   iii) Postal Address :
   (For Communication)

PASTE HERE A SIGNED COPY OF YOUR RECENT PASSPORT SIZE PHOTOGRAPH. (5 cm x 7cm)

2. Centre of Examination :

Signature of Candidate.

3. Register Number : (To be filled by TNPSC Office)


Controller of Examination

Tamil Nadu Public Service Commission,
Madras-600 002,
Dated 21st September, 1989.

DIPR/1988/MS/89/Z

# தூத்துக்குடி துறைமுகத்தின் நல்வாழ்த்துக்கள்

தூத்துக்குடி துறைமுகம்
வரலாற்றுத் தலைவன்
வ.உ.சி. கண்ட வண்ணக்கனவு!
''வெள்ளிப் பனிமலையின்
மீதுலாவுவோம்
அடிமேலைக் கடல் முழுவதும்
கப்பல் விடுவோம்''
என்ற தமிழ்க் கவிஞன்
பாரதியின் தணியாத
ஆசையின்
தார்மீகச் சுருதி!
சுதந்திரத்தின் பயனை
மக்களுக்கு
நல்கும் நிறுவனம் ...
உங்கள் அன்றாட வாழ்வில்
இணைந்த உங்கள் நண்பன்
தூத்துக்குடி துறைமுகம்



ஆர். ஜெயமோகன் பிள்ளை, இ.ஆ.ப.
தலைவர்
தொலைபேசி: 85-2290 முதல்
85-2299 வரை
85-2301 முதல்
85-2303 வரை
தொலை அச்சு: 0434-243



தமிழ் வளர்த்த பெரியார்:

# பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்



தேவகோட்டையை அடுத்த அமராவதிபுதூர் என்னும் ஊரில் இயங்கி வந்த காந்தி சுப்பிரமணியன் செட்டியார் குருகுலப் பள்ளியில் ஒருநாள் ...!

புதிய தலைமை ஆசிரியர் வரப்போகிறார் என்னும் செய்தியை அறிந்த மாணவச் செல்வங்கள், அவரை ஆவலுடன் எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். தலைமை ஆசிரியரின் உருவம், அப்படி இருக்கும், இப்படி இருக்கும் என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தபடியே தலைமை ஆசிரியர் வருகிறார். கையில் கம்பு ஊன்றிய வாறும், காலில் அடிப்பட்ட கட்டுடனும் வந்து கொண்டிருக்கிறார்.

நாற்பது வயதை எட்டிவிட்ட அந்தத் தலைமை ஆசிரியர், சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயத்தில், விளையாட்டு வகுப்பில் கலந்து கொள்ள நேர்ந்தது. அப்போது கால் தடுக்கி விழுந்துவிட்டார். கால் எலும்பு முறிந்துவிட்டது. மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார்; மறைமலை அடிகளாரின் மகன்கள் சிகிச்சைக்கு உதவி செய்தனர்.

கட்டுகள் அவிழ்க்கப்படுவதற்கு முன்னதாகவே அவருக்குத் தலைமை ஆசிரியர் பணி கிடைத்துவிட்டது. அதனால் கட்டுகளையோ, கஷ்டத்தையோ பொருட்படுத்தாமல் பணியை மேற்கொள்ளத் துணிந்தார். துணிவுக்கு உரிய அந்தத் தலைமை ஆசிரியர் தான் 'அப்பா' என்று சிலராலும், 'அப்பாத்துரையார்' என்று பலராலும் அன்புடன் அழைக்கப்பட்டு வந்த பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்.

பின்னாளில் சென்னை முத்தியால்ப் பேட்டை உயர்நிலைப் பள்ளியிலும், பச்சையப்பன் கல்லூரியிலும், திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும் ஆசிரியப் பணிபுரிந்து அளவிலாச் சிறப்புப் பெற்ற பன்மொழிப் புலவர் அப்பாத்துரையாரின் பிறந்த ஊர், குமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆரல்வாய் மொழி என்னும் அழகிய சிற்றூராகும்.

அவ்வூரில் வாழ்ந்து வந்த காசிநாதன், முத்தம்மை தம்பதியருக்கு முதல் மகனாக 1907 ஜூன் 24-ஆம் நாளன்று பிறந்தவர் அப்பாத்துரையார். அவருக்குக் குட்டியம்மாள் என்ற தங்கையும், கணபதி என்ற தம்பியும் உள்ளனர்.

அவ்வூரில் முந்திய நூற்றாண்டில் வாழ்ந்த தம்பிரான் தோழப்பிள்ளை என்ற தமிழ்ச் செல்வரின் பெண்வழி வந்த மரபில் ஏழு தலைமுறையாக வாழ்ந்துவந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் அப்பாத்துரையார். தந்தைவழிக் குடும்பம் அத்வைத சித்தாந்தத்தில் ஊறித் திளைத்ததாகும். அவர் தம் அன்னையார் நெல்லை மாவட்ட நான்குனேரி வட்டத்தில் கத்தூரி ரெங்கபுரம் என்னும் சிற்றூரில் வாழ்ந்த சைவக் குடும்பத்தில் தோன்றியவர். ஆக, அத்வைதமும் சைவமும் இரண்டறக் கலந்த மரபைச் சேர்ந்தவர் அப்பாத்துரையார் ஆவார். அதன் காரணமாக அவரது நெற்றியில் ஒரு காலத்தில் சந்தனப் பொட்டு, பரிமளித்துக் கொண்டிருந்தது

கா. அப்பாத்துரையாரின் பள்ளி வாழ்வு ஆரல்வாய்மொழியில் தொடங்கியது. அது, நெல்லை மாவட்ட குலசேகரன் பட்டினத்தில் தொடர்ந்தது. நான்காம் வகுப்பு முதல், கல்லூரி முதலிரு வகுப்புகள் வரையில்

**மா.சு. சம்பந்தன்.**

நாகர்கோவிலிலேயே படர்ந்தது. அவர் தமது ஆங்கில இலக்கிய (பி.ஏ. ஆனர்ஸ்) பட்டப் படிப்பை 1927 முதல் 1930 வரை திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் படித்து முடித்தார். 16 வயதுக்குள் உலக மொழிகள் பலவற்றிலும் எம்.ஏ., பட்டம் பெற்றார்.

உலகெங்கும் தமிழ்ப் பெருமையை நிலை நாட்டிட வேண்டும் என்பது இளம் அப்பாத் துரையாரின் ஆர்வம்! ஆசைப்பெருக்கு! நீண்ட நெடுங்கனவுமாகும். ஆனால், இதில் ஓரளவே அவரால் வெற்றிபெற முடிந்தது. ஏறக்குறைய பத்து மொழிகளுக்கு மேல் அவர் நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்றார்; சிலவற்றில் புலமை பெற்றார். சிலவற்றை ஓரளவு கற்றறிந்தார்.

இயல்பாகவே அவருக்கு ஏற்பட்ட மொழிப் பற்று, நாட்டுப் பற்றில் கொண்டுபோய் விட்டது! பாடல் இயற்றும் திறன் அவரிடம் குடிகொண்டிருந்தது. ஆனந்த விகடன் கவிதைப் போட்டியில் கலந்து கொண்டார். அவர் 'காந்தி மணிச் சிந்து' இயற்றிக் கொடுத்தார். ஆனால், பரிசு இவருக்குக் கிடைக்கவில்லை. வேறொருவருக்குக் கிடைத்தது. பரிசு பெற்றவர் யார் தெரியுமா? அவர் தான் நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்!

1933-லிருந்து 1935 வரை அப்பாத் துரையார் இந்தி ஆசிரியராகப் பணி புரிந்தார். இந்திப் பாடநூல்களை எழுதினார்; தேசியத் தமிழ்ப் பாடநூல்களை இயற்றித் தந்தார். 1938-இல் இந்தித் தேர்வு எழுதி 'விசாரத்' பட்டம் பெற்றார். 1939-இல் ஆங்கில எம்.ஏ. (இலக்கியம்) பட்டம் பெற்றார். 1940-இல் தமிழ் எம்.ஏ. பட்டம் பெற்றார்.

திரு. அப்பாத்துரையார், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பணகுடி என்னும் ஊரைச்சார்ந்த இசக்கியாடும் பெருமாள் பிள்ளையின் மகள் நாச்சியார் என்பவரைக் கடயத்தில் திருமணம் செய்து கொண்டார். அவ்வம்மையார் ஒரு குழந்தையைப் பெற்ற போது, தாயும் சேயும் இறந்து போயினர். அதனால் மிகுந்த சோகத்தில் ஆழ்ந்துவிட்டார் அப்பாத்துரையார். பணம் தேடியும்

# தமிழ்நாடு மின்சார வாரியம்
## வடசென்னை அனல்மின் திட்டம்

### ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தம்) மூன்று நகல்களோடு மேற்பார்வை பொறியாளர்/பொதுவியல்/அனல் மின்னாக்கம்.1 மூன்றாவது தளம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-600 002 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. பணியின் பெயர் | : | வட சென்னை அனல்மின் திட்டம் முதல் கட்டப் பணிக்கு திட்டக்களம் மேம்படுத்துதல் பகுதி II (சாலை வேலைகள்) பகுதி III(தடுப்புச்சுவர் வேலைகள்) |
| 2. ஒப்பந்த வரையறை எண் | : | எஸ்.இ.சி.டி.1-7 |
| 3. பிணை வைப்புத் தொகை | : | ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) |
| 4. ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாளும், நேரமும் | : | 1989, நவம்பர் 15-ஆம் நாள் புதன் கிழமை நண்பகல் 12.00 மணி வரை. |
| 5. தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும், நேரமும் | : | 1989, நவம்பர் 15-ஆம் நாள், புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி வரை |
| **6. ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை** | | |
| தமிழ்நாட்டிற்குள் | : | ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) |
| தமிழ்நாட்டிற்கு வெளியே | : | ரூ.550/- (ரூபாய் ஐநூற்று ஐம்பது மட்டும்) |
| | : | (ரூ.500/- வரி ரூ.50/-) |
| 7. ஒப்பந்தத்தை அனுப்புதல் | : | இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு என்பதால் ஒப்பந்தம் கேட்பதும் இரு பிரிவுகளாக ''தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தம்'' என்றும் ''ஏல விலை குறி ஒப்பந்தம்'' என்றும் குறிப்பிடப்பட்டு மூடி அரக்கு முத்திரையிட்டு தனித்தனி உறைகளில் அனுப்பப்படவேண்டும். உரிய நாளில் தொழில் நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறக்கப்படும். தொழில் நுட்ப இனங்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பிறகு ஏல விலைகுறி ஒப்பந்தங்கள் திறக்கப்படும் நாள் அறிவிக்கப்படும். தொழில் நுட்ப இன ஒப்பந்தத்தில், விலைகளைப் பற்றிய விவரங்களை தெரிவித்தல் கூடாது. |

ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள்தணிக்கை அலுவலருக்கு (முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம்) 800, அண்ணா சாலை, சென்னை-600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையை பணமாகவோ/பணவிடை வாயிலாகவோ, ஒப்பந்த வரையறை எண் குறிப்பிட்டுச் செலுத்தி பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்துக் கொண்டு, மேற்பார்வை பொறியாளர்/பொதுவியல்/அனல்மின்னாக்கம்-1 அலுவலகத்தில் 16.10.89 காலை 10.30 மணி முதல் 13.11.89 மாலை ஐந்து மணிவரை பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்த வரையறை பெறுவதற்கு செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்திற்காகவும் திரும்பத்தரப்பட மாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.30/ கூடுதலாக செலுத்த வேண்டும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்த வரையறை தவறிப் போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத்தக்கதல்ல.

பிணை வைப்புத் தொகையன்றி வந்து சேரும் ஒப்பந்தங்களும் குறித்த காலத்திற்குப்பின்னர் வந்து சேரும் ஒப்பந்தங்களும் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு. விற்பனை செய்யப்படும் எந்த ஒரு ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும், தேவை என கருதும்போது தளர்த்தவும், கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

DIPR/2044/RS/89/MAC

தலைமைப் பொறியாளர்/பொதுவியல் வடிவமைப்பு




தமிழ் எம்.ஏ. தேர்வை எழுதுவதற்கு மனமில்லாமல் இருந்தார். அவரது கவலையை அறிந்த திரு. வ. திருவரங்கனார், அவரைத் தேற்றி, தேர்வு எழுதத் தூண்டினார். தூண்டுதல் பயன்பட்டது. 10 நாளில் முனைப்பாகப் படித்துத் தேர்வு எழுதித் தமிழ் எம்.ஏ. பட்டம் பெற்றார் அப்பாத்துரையார்!

வைதீக வேதாந்தியாக இருந்த பன்மொழிப் புலவர் அப்பாத்துரையாரைப் படிப்படியாகச் சைவ சித்தாந்தம் ஆட்கொண்டுவிட்டது! நாகர்கோவிலுக்குத் தந்தை பெரியார் வருகை புரிந்தபோது அவருடன் ஏற்பட்ட தொடர்பு அப்பாத்துரையாரைச் சீர்திருத்தவாதியாக மாற்றியது! அவர், காந்தியடிகளின் சீடராக வாழ்வைத் தொடங்கி, இந்தியப் பற்றாளராகத் திகழ்ந்தார்! பின்னர் பெரியார், பேரறிஞர் அண்ணாமீது கொண்ட பேரன்பு அவரைத் தமிழ்ப் பற்றாளராக உருமாற்றி, கருத்துப் பரிமாற்றம் ஏற்படச் செய்தது!

முதல் மனைவி இறந்த பின்னர் கொத்தமங்கலம் அலமேலுவைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டார் அப்பாத்துரையார்!

இவர் காரைக்குடியில் 'குமரன்' என்னும் மாத இதழின் துணையாசிரியராகவும், சென்னையில் 'லிபரேட்டர்' என்னும் ஆங்கில நாளேட்டிலும், 'விடுதலை'என்னும் தமிழ் நாளேட்டிலும் ஆசிரியர் குழுவில். பணி புரிந்துள்ளார்.

'செந்தமிழ்ச் செல்வி', 'பொன்னி', 'முரசொலி', 'தென்றல்' போன்ற இதழ்களில் பல அரிய கட்டுரைகளைத் தொடர்ந்து இவர் எழுதி வந்தார். 'பொன்னி' இதழின் ஆசிரியராகவும் சிறிது காலம் பணி ஆற்றியுள்ளார். திரு. பெருஞ்சித்திரனாரின்''தமிழ் நிலம்'' எனும் திங்கள் இதழ், திரு. அப்பாத்துரையார் தலைமையில் தொடங்கி வைக்கப்பட்டது. இவர் 'முப்பால் ஒளி' என்னும் திங்கள் இதழைத் தொடங்கி, தொடர்ந்து திருக்குறளுக்கு மணிவிளக்க உரையை 18 அதிகாரங்களுக்குச் சுமார் 2000 பக்கங்களில் எழுதி வந்தார்.

இவர் எழுதிய 'அன்னை அருங்குறள்' அன்னை நிலையம் சார்பில் அச்சிடப்பட்டு, பெரியண்ணன்-மீனாட்சி திருமண இலவச வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் விழாவில் இவர் தொடர்ந்து 7 நாட்கள் பேசிய உரை, 1942-இல் 'தமிழ் வாழ்க' எனும் நூலாக வெளிவந்தது. இதுவே பின்னர்த் 'தமிழ் முழக்கம்' என்னும் மறு பெயரில் வெளியாகியுள்ளது. இவரால் இயற்றப்பட்ட 'சிறுகதை விருந்து', 'கதை இன்பமலர்' 1945-இல் வெளியாகியுள்ளன. 'பொன்னின் தோட்டம்' (1945), 'விந்தைக் கதைகள்', 'புத்தார்வச் சிறுகதைகள்', 'பலநாட்டுச் சிறுகதைகள்', 'ஆண்டியின் புதையல்' (1953),நாட்டுப் புறச் சிறுகதைகள்' (1954), 'சேக்ஸ்பியர் கதைக் கொத்து' (1941), 'சேக்ஸ்பியர் கதைகள்' (1946) 'இலக்கியக் கிரேக்கக் கதைகள்' (1953) 'மேனாட்டுக் கதைகள்' (1945) என்று பல நூல்களை எழுதியுள்ளார்.

இவர் மொழிபெயர்த்த கட்டுரை நூல்களாவன: கட்டுரை முத்தாரம் (1951), நல்வாழ்வுக் கட்டுரைகள் (1951), வாழும் வகை (1952),எண்ணிய வண்ணம் (1953), திருநிறை ஆற்றல் (1956), பேரின்பச் சோலை (1958) ஆங்கிலப் புலவர் வரலாறு (1945), அறிவுலகமேதை பெர்னாட்ஷா (1951), அறிவியல் முன்னவர் ஐன்ஸ்டீன் (1955), ஓவியக் கலைஞர் இரவிவர்மா (1952), பெஞ்சமின் பிராங்லின் (1955) மற்றும் பலப்பல.

திரு. கனகசபைப் பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய நூலை, திரு. அப்பாத்துரையார் 'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்' (1956) எனும் பெயரிலும், இஸ்லேட்டர் எழுதிய நூலை 'இந்திய நாகரிகத்தில் திராவிடப்பண்பு' (1955) எனும் பெயரிலும், 'கால்டுவெல் ஒப்பிலக்கண வரலாற்றை'யும், 'வாடாமாலை' என்னும் பெயரில் ஆங்கில நூலையும் மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார்.

மேலும், குடியாட்சி (1955) எனும் அரசியல் நூலையும், ஐக்கிய நாடுகளின் அமைப்பு (1959) என்னும் பொதுநூலையும் படைத்துக் கொடுத்துள்ளார்.

திரு. அப்பாத்துரையார் எழுதிய 'வருங் காலத் தமிழகம்' என்னும் அரிய நூலை 1947-இல் தமிழர் பதிப்பகத்தின் சார்பில் வெளியிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதற்குப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் மதிப்புரை தந்துள்ளார். இவர் தென்னாடு (1954), தென்மொழி, தென்னகப் பண்பு, தென்னாட்டுப் போர்க்களங்கள் (1971), சரித்திரம் பேசுகிறது (1955) என்னும் வரலாற்று அடிப்படை நூல்களையும் எழுதித் தந்துள்ளார்.

இவர் எழுதிய ''இந்திய மக்கள் விடுதலை இயக்க வரலாறு' என்னும் நூல் நாட்டு விடுதலைப் போராட்டத்தைத் தக்க வகையில் எடுத்துச் சொல்லும் அரிய நூலாகும்.

திரு. அப்பாத்துரையார் அரிதின் முயன்று உழைத்து 1952-இல் 'கழக ஆங்கிலத் தமிழ்க் கையகராதி'யை உருவாக்கித் தந்துள்ளார். 'இதுவரை இத்துறையில் வந்த எல்லா அகராதிகளின் குறைகளையும் இவ்வகராதி பேரளவு போக்கியது' என்று புகழ்ந்து கூறப்படுகிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் உருவாக்கப்பட்ட ஆங்கிலத் தமிழ் அகராதி மொழி பெயர்ப்புக் குழுவில் டாக்டர் அ. சிதம்பரநாதன் தலைமையில் அறிஞர் அப்பாத்துரையார் துணையாசிரியராக இருந்து அரும்பணியாற்றியுள்ளார். சட்டத் தமிழாக்கக் குழுவிலும் இருந்து திறம்பட உழைத்திருக்கிறார்.

பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையாரைச் சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கம் கேடயம் வழங்கிப் பெருமைப்படுத்தியது. அவர் அதன் தலைவராகவும் இருந்து அரும்பணியாற்றினார். பாரீசில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு மாநாட்டில் இவரைக் கலந்து கொள்ளும் படிச் செய்து, பெருமைப்படுத்தியது தமிழக அரசு. மேலும் 'செந்தமிழ்ச் செல்வம்' என்ற விருதினையும், ரூ. 5,000 மதிப்புடைய பொற்பதக்கத்தையும் அளித்துத் தமிழக அரசு சிறப்புச் செய்துள்ளது; 'கலைமாமணி' எனும் விருதையும் அளித்துள்ளது.

''காற்றும் மழையும்'' என்னும் நாடகத்தைத் திரு. அப்பாத்துரை 1956-இல் எழுதிக் கொடுத்தபோது, அதில் கவிஞர் கண்ணதாசன் 'போலீஸ்காரராக' நடித்துச் சிறப்பித்துள்ளார். கண்ணதாசன் நடத்திய 'தென்றல்'லில் கேள்விப் பெட்டியில் வினாக்களுக்கு அப்பாத்துரையார் தருத்த விடையளித்தும் உள்ளார். கவிஞர் தமது 'அர்த்தமுள்ள இந்துமத' நூல் தொகுதியின் தாம் பண்பாடு பெற்றது திரு. அப்பாத்துரையாராலே என்று குறிப்பிட்டுள்ளார்.

## பொன் விழாக் கண்ட நாவல்

அமெரிக்காவின் தலைசிறந்த நாவல்களில் ஒன்றான 'தி கிரேப்ஸ் ஆஃப்ராத்' வெளியாகி 50 ஆண்டுகள் நிறைவு பெற்று விட்டன.

ஜான் ஸ்டைன்பெக் எழுதிய இந்த மகத்தான நாவல் 1939, ஏப்ரல் 14-ந் தேதியன்று வெளியானது. 1930-ஆம்ஆண்டுகளில் அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் வேலை தேடிப்பயணமான விவசாயத் தொழிலாளர்களைப் பற்றியது இந்தக் கதை; பின்பு இது திரைப்படமாகவும் வெளியாகி இருக்கிறது; நாடகமாக நடிக்கப்பட்டிருக்கிறது; தீவிர சர்ச்சைகளையும் கிளப்பி இருக்கிறது.

ஸ்டைன்பெக் இறப்பதற்கு 4 ஆண்டுகளுக்கு முன்பாக, அவருக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு கிடைப்பதற்கும் முக்கிய காரணமாக இருந்ததும் இந்த நாவல்தான்.

இந்த நாவல் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, மொத்தத்தில் சுமார் ஒன்றரைக் கோடி பிரதிகள் இதுவரை விற்பனையாகியுள்ளது. இன்றும்கூட அமெரிக்காவில் பள்ளி மாணவர்கள் படிக்க வேண்டிய புத்தகங்களின் பட்டியலிலே-இது தொடர்ந்து இடம் பெற்று வருகிறது.

கவிஞர் கண்ணதாசன் தமது தென்றல் இதழில் அவ்வப்போது தமிழ் இலக்கிய விவாதங்களைத் தொடங்குவது உண்டு. அந்தச் சமயத்தில் எல்லாம், கட்டுரையைத் தொடங்குவதற்கு முன்பு அப்பாத்துரையாரின் இல்லத்திற்குச் சென்று அவரை அணுகி, தமது கட்டுரைக்குரிய ஆதாரங்களைச் சேகரித்துக் கொள்வதும் தமக்குற்ற ஐயங்களைத் தீர்த்துக் கொள்வதும் வழக்கம். இதனைக் கண்ணதாசனே பலமுறை குறிப்பிட்டிருக்கிறார்.

1971-ஆம் ஆண்டில் முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடிய கவிஞர் கண்ணதாசன்-ஒரு கவியரங்கத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். அக்கவியரங்கத்தின் தலைமைப் பொறுப்பை அப்பாத்துரையாரிடமே ஒப்படைத்தார் என்பதிலிருந்து அப்பாத்துரையாரின் பேராற்றல்-தமிழ்ச் சொல்லாற்றல் எளிதில் விளங்கும்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையாரின் மணிவிழா, பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் 1967-இல் சென்னை ஏ.வி.எம். ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது; மணிவிழா தொடர்பாக மலரும் வெளியிடப்பட்டது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தனது 1008-வது நூல் வெளியீட்டு விழாவில் இவரைப் பாராட்டிச் சிறப்புச் செய்துள்ளது. அச்சமயம் இவர் ஏற்புரை கூறியபோது, ''சென்னைப் பல்கலைக் கழகத்தையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தையும், திராவிடர் கழகத்தையும் நான் என்றும் மறக்க முடியாது; அம்மூன்று கழகங்களே என்னை வளர்த்துக் கொள்ள உதவி புரிந்துள்ளன'' என்று நன்றியுணர்வுடன் குறிப்பிட்டார்.

பன்மொழிப் புலவரைக் குமரி மாவட்டம் ஈன்றெடுத்துப் பெருமை பெற்றது, கேரளம் அவரைப் பயிற்றுவித்துச் சிறப்புற்றது; நெல்லையும், தென்பாண்டிப் பகுதியும் அவரைத் தொண்டில் ஈடுபடுத்தி மலர்வித்தன. தொண்டைநாடும் சென்னையும் பலவழிகளில் அவரது ஆற்றலைப் புலப்படுத்த வழிவகுத்துக் கொடுத்துக் கனிவித்தன என்று விதந்து கூறலாம்!

தமிழ், தமிழ் இனம், தமிழ்நாடு, தென்னகம்-இவை சிறக்க, தமது எழுத்தாலும் பேச்சாலும் மூச்சாலும் தமது இறுதிநாள் வரை பெரிதும் பாடுபட்டு உழைத்துவந்த பெருமகனாக-சான்றோராகத் திகழ்ந்தவர் பன்மொழிப் புலவராவர்!

அவர்-தமிழ்ப் புலவராக-பன்மொழிப் புலவராக- அரசியல்வாதியாக-எழுத்தாளராக-மொழி பெயர்ப்பு ஆசிரியராக-நூலசிரியராக-அகராதிக் கலைஞராக-உலக இலக்கியங்களை விதந்து காட்டிய வித்தகராக-அரிய செய்யுள்களை இயற்றும் கவிஞராக-அரிய பண்புகள் நிறைத்த சான்றோராக-பன்முகங்களில் பலதுறைகளில் சிறந்து விளங்கினார்.



உண்மையும் அகிம்சையும் மனித வர்க்கம் தினசரி வாழ்க்கையில் உபயோகிக்க வேண்டிய அறங்களாகும்.

-அண்ணல் காந்தியடிகள்



தமது வாழ்க்கையால் பிறர் துன்பம் அடையா வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். இதையே மனித வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு, ஒவ்வொருவரும் வாழ்க்கை நடத்த முயற்சி செய்ய வேண்டும்.

-தந்தை பெரியார்



மனிதருள் இருந்துகொண்டு, சமயம் கிடைக்கும் போதெல்லாம் வெளி வந்து, வெறிச் செயல் புரியும் மிருகத்தை அடக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்

—பேரறிஞர் அண்ணா

பன்மொழிப் புலவர் திராவிட இயக்கங்களிடத்திலும் அளவற்ற பற்றுக் கொண்டவராகத் திகழ்ந்தார். அவர் ஒரு முறை, இந்தி எதிர்ப்பு மும்முரமாக இருந்தபோது கவர்னர் ஜெனரலாகச் சென்னைக்கு வருகை தந்த ராஜாஜி அவர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டிய கூட்டத்தில் பங்கேற்று, தடியடி பட்டுத் தியாகத் தழும்பு பெற்றார். தமிழ்மொழி நலம் பெறப் பல்வேறு போராட்டங்களில் அவர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். அவர் ஆங்கிலத்தில் எழுதிய (India's language Problem) எனும் நூலுக்குத் தமிழ்க் கடல் மறைமலை யடிகள், 64 பக்கங்களில் அரிய முன்னுரை ஆங்கிலத்திலேயே எழுதிக் கொடுத்தார். இச்சிறப்பு வேறு எந்நூலுக்கும் எவ்வாசிரியர்க்கும் கிடைக்கவில்லை! மறைமலையடிகள் தமது நாட்குறிப்பிலும் பலமுறை அப்பாத்துரையாரைக் குறித்துள்ளார்.

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டிலுள்ள மனிதர்கள் இருந்த தூக்கத்தின் காரணமாக, தாங்கள் தமிழர்கள் என்பதையே மறந்து இருந்தனர். 20-ஆம் நூற்றாண்டில் இந்த நிலையை மாற்றித் தமிழ் நாட்டு மனிதர்கள் தாங்கள் தமிழர்கள் என்பதை உணரும்படிச் செய்தார்.

பொது மக்களுக்குப் பெருந் தொண்டாற்ற வேண்டும் என்று அவாவிய அப்பாத்துரையார் 1959-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்டார். ஆனால் வெற்றி பெறவில்லை: என்றாலும் வீடு வீடாகச் சென்று வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி கூறிய அவரது அரும்பண்பு போற்றிப் புகழத்தக்கது.

அன்னைத் தமிழ்மீது அளவற்ற பாசம் வைத்திருந்த அப்பாத்துரையார் அவர்கள் தலைநகர் தமிழ்ச் சங்கம் என்னும் அமைப்பு சென்னை நகரில் 8-4-89 அன்று நடத்திய தமிழ் வழிக் கல்வி மாநாட்டில் பங்கேற்று உரையாற்றினார். இந்தச் சொற்பொழிவு தான் அவரது கடைசிச் சொற்பொழிவாகும்.

கதைகள், கட்டுரைகள். கவிதைகள், நவீனங்கள், மொழிபெயர்ப்புகள் என நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துத் தமிழகத்துக்கு வழங்கிய அப்பாத்துரையார் அவர்கள், பாகனேரி என்னும் சிற்றூரில் ஒரு நூலகத்தில் சிறிது காலம் நூலகராகவும் பணியாற்றியிருக்கிறார்.

தமிழ்த் தாயின் பொன்னுடலுக்குப் பல்வேறு நூல் மாலைகளை அணிவித்த அப்பாத்துரையார்-சிறிது காலம் உடல் நலம் குன்றியிருந்தார். மே மாதம் 26-ஆம் நாளன்று (1989) எதிர்பாராமல் மாரடைப்புக்கு ஆளாகி, இயற்கை எய்தினார்.

பன்மொழிப் புலவர் என்றால் அவர் அப்பாத்துரையார்தான் என்று சொல்லத்தக்க அளவில் அவரைத் தமிழ்மக்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். சென்னை தேனாம்பேட்டையில் ஒரு தெருவுக்கு அவரது பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

தமிழ்கூறு நல்லுலகம் அவரது தமிழ்த் தொண்டினையும் தமிழ் உள்ளத்தையும் தமிழ் ஆர்வத்தையும் ஒருக்காலும் மறக்காது! ●



# பேசும் பொம்மைகள்

பொம்மைகள் என்றால் யாருக்குத்தான் ஆசை வராது?

கண்ணைக் கவரும் வண்ணப் பொம்மைகள் நம் கருத்தையும் கவர்கின்றன.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்புகின்ற அழகிய பொம்மைகளைக் கண்டு மகிழ்கின்ற வாய்ப்பு அண்மையில் கிட்டியது.

நவராத்திரியை முன்னிட்டு சென்னை மாநகரில் மூன்று இடங்களில் 'பொம்மைக் கொலு' நடந்தது.

**காதி கிராப்ட்**

சென்னைக் குறளகத்தில் உள்ள காதி கிராப்டில், வகை வகையான பொம்மைகள் வரிசையாக வைக்கப் பட்டிருக்கின்றன.

மண், காகிதம், மரம், கண்ணாடி ஆகியவற்றாலான பொம்மைகள் நம்மை வெகுவாகக் கவர்கின்றன. திருவிழாக் கோலமாய் விளங்கிய கண்காட்சியைக் காண வந்த மக்கள், எதை வாங்குவது எதை விடுப்பது என்று புரியாமல் தவிப்பதையும் பார்க்க முடிந்தது.

இந்தப் பொம்மைகள் எல்லாம் எங்கு தயாரிக்கப்படுகின்றன?

காஞ்சிபுரம், சென்னைக் கொசப் பேட்டை, தென் ஆர்க்காடு மாவட்டம் வீரப்பெருமாள் நல்லூர், செங்கல்பட்டு ஆகிய இடங்களில்தயாரிக்கப்படுகின்றன.

இந்த ஆண்டு, சிறப்பு வகையாக கம்பராமாயணத் தொகுப்பு பொம்மைகளைக் குறிப்பிட வேண்டும். வெள்ளைக் களிமண்ணாலான மேற்கு வங்காளப் பொம்மையும் நம்மைக் கவரும் வகையாகும்.


பெரிய அளவிலான மீனாட்சி கல்யாணப் பொம்மை நம் கண்களை விட்டு அகலாத கைத்திறம் வாய்ந்தது.

கண்ணாடி, முகம் பார்ப்பதற்கு மட்டுமல்ல, கண்ணைக் கவரும் பொம்மைகள் தயாரிக்கவும் பயன் படுகிறது என்பதை இந்தக் கண் காட்சியில் காண முடிந்தது. சென்னை அமைந்தகரையில் உள்ள ஒரு நிறுவனம், கலையெழில் மிக்க கண்ணாடிப் பொம்மைகளை உருவாக்கியுள்ளது.

அதுமட்டுமல்ல, தக்கையாலான கைவினைப் பொருள்களையும் தக்க சமயத்தில் வைத்திருக்கிறார்கள். விருத்தாசலத்தில் உருவான பீங்கான் பொம்மைகளும் பாங்காய் விளங்குகின்றன.

"காதி கிராப்ட் பொம்மைகளுக்கு, மக்களிடையே நல்ல ஆதரவு இருக்கிறது. அதுமட்டுமல்ல, கதர், கதர்ப் பட்டுத் துணிகளும் பெருமளவில் விற்பனையாகின்றன.

''இவ்வாண்டு 12 இலட்ச ரூபாய்க்கு விற்பனையாகுமென எதிர்







காதிகிராப்டில் மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் பொம்மைகளைப் பார்வையிடுகிறார்.

பார்க்கிறோம்'' என்றார் காதி கிராப்ட் பொதுமேலாளர் திரு. வி. ஜெயராமன்.

**பூம்புகார்**

தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கிளை நிறுவனமாகிய பூம்புகார் விற்பனை நிலையம், சென்னை, தியாகராய நகரில் பொம்மைக் கொலுவைச் சிறப்பாக நடத்தியது. அதுமட்டுமல்ல, சிறப்பாக விற்பனையும் செய்தது.

இந்தக் கண்காட்சியிலும் மண், காகிதம், மரம், கிளிஞ்சல் முதலான வற்றால் ஆன பொம்மைகள் வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையம், கைவினைஞர்களின் நிலைய உயர்த்தவும், அவர்களின் கைத்திறனைப் பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டவும் இக்கண்காட்சியை ஒவ்வோராண்டும் நடத்திக் கொண்டு வருகிறது.

தமிழ்நாடு தவிர, பாண்டிச்சேரி, கல்கத்தா ஆகிய இடங்களிலிருந்து தருவிக்கப்பட்ட பொம்மைகள் கைத்திறனைக் காட்டுவதாக இருந்தன.

மரத்தாலான வண்ணம் தீட்டப்பட்ட சிறிய பொம்மைகள் கர்நாடக மாநிலம் சென்னப் பட்டணம் என்னும் ஊரில் தயாராகுபவை. அவற்றைக் காட்சியில் கண்டு மகிழ்கிறோம்.

இங்குள்ள பொம்மைகள் ஒரு ரூபாயிலிருந்து ஐந்தாயிரம் ரூபாய் வரை விலைக்குக் கிடைக்கின்றன.

''கடந்த ஆண்டு நடந்த கண்காட்சியில் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது. இந்த ஆண்டு மூன்று இலட்ச ரூபாய்க்கு விற்பனையாகுமென எதிர்பார்க்கிறோம். இந்தக் கண்காட்சியில் மக்களைக் கவருகின்ற வகையிலே புதுமையான மலிவு விலை பொம்மைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளோம். பொம்மைகள்,, சிற்பங்கள் முதலியன, ஆர்டரின்பேரில் விரும்பும் வடிவமைப்பில் தயார் செய்தும் தருகிறோம்'' என்றார் பூம்புகார் விற்பனை நிலைய மண்டல மேலாளர் திரு. என். ஆர். இராமலிங்கம்.

**காதி பவன்**

சென்னை அண்ணாசாலையில் உள்ள, காதி கிராமோத்யோக் பவனில் ''பொம்மைக் கொலு'' வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

எந்தப் பக்கம் திரும்பினாலும் பொம்மைகளே காட்சியளித்தன. சின்னஞ்சிறிய விரல்கள் படைக்கும் அற்புதத்தை அங்கே பார்க்க முடிந்தது.

காஞ்சி, கடலூர், கொசப்பேட்டை, தண்டரை ஆகிய ஊர்களில் தயாரான பொம்மைகளும், பிற மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா, கல்கத்தா மற்றும் லக்னோ ஆகிய இடங்களிலிருந்தும் உருவான பொம்மைகளும் நம் சிந்தையைக் கவர்ந்தன.

இந்த ஆண்டின் சிறப்பு வகையாக, சமையலறைச் சங்கீதம், விளக்கு பூஜை, வில்லுப்பாட்டு. கரக ஆட்டம், சாரங்கதாரா, குசேலர் ஆகிய பொம்மைகள்










மக்களைக் கவர்ந்தன. 21 பாகங்கள் கொண்ட இராமாயணத் தொகுதி பொம்மைகள் இராம காதையை நினைவுபடுத்துபவையாக உள்ளன. இந்தத் தொகுப்பின் விலை ரூ. 825.

கோயிலில் காணப்படும் திருவுருவச் சிலைபோல், பெரிய அளவிலான ராஜ ராஜேஸ்வரி சிலை (விலை ரூ. 937), தேவி கருமாரி அம்மன் (விலை ரூ. 875), வெங்கடாசலபதி ஆகியவை நம்மைப் பிரமிக்க வைக்கின்றன.

இவையன்றி காய்கறிகள், பழங்கள், மசாலாப் பொருட்கள், வேர்க்கடலை (எல்லாம் பொம்மைகள் தான்) ஆகியவை தத்ரூபமாகச் செய்யப்பட்டுள்ளன.

அண்ணல் காந்தியடிகள் வாழ்க்கையை உணர்த்தும் பொம்மைகளும், கிரிக்கெட், டி.வி., நவீன உழவு முதலான பொம்மைகளும் நம்மை ஈர்க்கின்ற வகைகளாகும்.

''இந்தப் பொம்மைக் கண்காட்சிக்குப் பொதுமக்களிடையே நிரம்ப ஆதரவு இருக்கிறது. வீட்டுக்கு அழகையும், மனத்துக்கு ஆனந்தத்தையும் தருபவை பொம்மைகள். இந்தக் கண்காட்சி மூலம், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள கைவினைஞர்கள் வாழ்க்கைத் தரம் மேம்பட வழிகோலப்படுகிறது'' என்கிறார் காதி கிராமோத்யோக் பவன் மேலாளர் திரு. சி.டி.வி. ராகவுலு.



காட்சியில் இடம் பெற்றிருந்த இத்தகைய பொம்மைகள், கண்காட்சியோடு போய்விடுவதல்ல; இந்த நிறுவனங்களில் எப்போதும் போய் வாங்கிக் கொள்ளலாம்.

பொம்மைகள் நம்மவரை மட்டுமல்ல, வெளிநாட்டவரையும் வெகுவாகக் கவர்கின்றன. அவர்கள் நம் நாட்டுக் கலைப் பொருள்களின் வேலைப்பாட்டைப் பாராட்டுவது மட்டுமல்ல, விரும்பி வாங்கவும் செய்கிறார்கள். அந்த வகையில் தமிழகத்தின் பெருமை உலகமெலாம் பரவுகிறது.

இந்தப் பொம்மைகள் வெறும் பொம்மைகள் அல்ல, பேசும் பொம்மைகள்!

—பி.வி.கிரி.

# உலகச் சுற்றுலா தினம்

உலகச் சுற்றுலா தினம் தமிழக அரசின் சார்பில் 27-9-89 அன்று மாலை எழும்பூரில் உள்ள அருங்காட்சியக வளாகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு மாண்புமிகு அறநிலையத்துறை மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் தலைமை வகித்தார். உலகச் சுற்றுலா தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, ஓவியப் போட்டி, சமையற் கலைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றோர்க்குப் பரிசுகள் வழங்கினார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரை முருகன் அவர்கள் புகைப்படக் கண்காட்சியினைத் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றினார். அக்கண்காட்சியில் '350 ஆண்டுகளில் சென்னை' என்ற தலைப்பில் பல புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தன. விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பரிதி இளம்வழுதி, திரு. ஆஸ்கார் நிக்லி, தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. எம். கிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப. ஆகியோரும் கலந்து கொண்டு பரிசு பெற்றவர்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

முன்னதாக விழாவுக்கு வந்திருந்தோர் அனைவரையும் செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப. வரவேற்றுப் பேசினார். சுற்றுலாத்துறை இயக்குநர் திருமதி தாசன் மேத்யூ, இ.ஆ.ப., நன்றி கூறினார். பின்னர் கலை நிகழ்ச்சிகளுடன் விழா இனிது நிறைவுற்றது.


TAMIL NADU SIDCO

## தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்

(தமிழக அரசு நிறுவனம்)

60, கிரீம்ஸ் சாலை, சென்னை-600 006.

தொலைபேசி : 472171 தந்தி : TANSIDCO டெலக்ஸ் : 041-7581

### சிட்கோ தொழிற்பேட்டைகளில் தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்தல் சம்பந்தமாக.

சிறு தொழில் முனைவோர்களுக்கு கீழ்கண்ட தொழிற்பேட்டைகளில் தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன :

| வரிசை எண் | இருப்பிடம் | | தொடர்புகொள்ள வேண்டிய சிட்கோ கிளை மேலாளர் |
|---|---|---|---|
| 1 | 2 | | 3 |
| **செங்கை-அண்ணா மாவட்டம்** | | | |
| 1. | கும்மிடிப்பூண்டி | (5 தொழிற்கூடங்கள்) | கிளை மேலாளர், சிட்கோ செங்கல்பட்டு. அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை 58 |
| 2. | மறைமலை நகர் | (15 தொழிற்கூடங்கள்) | |
| 3. | திருமழிசை | (15 தொழிற்கூடங்கள்) | |
| 4. | காக்களூர் (திருவள்ளுவர் அருகில்) | (30 தொழிற்கூடங்கள்) | |
| 5. | காஞ்சிபுரம் | (8 தொழிற்கூடங்கள்) | |
| **வடஆற்காடு மாவட்டம்** | | | |
| 6. | இராணிப்பேட்டை | (12 தொழிற்கூடங்கள்) | கிளை மேலாளர், சிட்கோ தொழிற் பேட்டை காங்கேயநல்லூர் சாலை காந்திநகர், வேலூர்-6. |
| 7. | இராணிப்பேட்டை (பி.எச்.இ.எல் வளாகம், முகுந்தராயபுரம்) | (5 தொழிற்கூடங்கள்) | |
| **திருச்சி மாவட்டம்** | | | |
| 8. | துவாக்குடி | (5 தொழிற்கூடங்கள்) | கிளை மேலாளர், சிட்கோ அரிய மங்களம் தொழிற்பேட்டை, திருச்சி-10. |
| **புதுக்கோட்டை மாவட்டம்** | | | |
| 9. | புதுக்கோட்டை (சிப்காட் வளாகம்) | (5 தொழிற்கூடங்கள்) | கிளை மேலாளர், சிட்கோ 5692/17-சி-16 சத்தியமூர்த்தி சாலை புதுக்கோட்டை. |
| **தஞ்சை மாவட்டம்** | | | |
| 10. | தஞ்சாவூர் | (12 தொழிற்கூடங்கள்) | கிளை மேலாளர், சிட்கோ தொழிற் பேட்டை, நன்ஜி கோட்டை சாலை தஞ்சாவூர்-613 006. |
| **மதுரை மாவட்டம்** | | | |
| 11. | கப்பலூர் | (10 தொழிற்கூடங்கள்) | கிளை மேலாளர், சிட்கோ தொழிற் பேட்டை, கே. புதூர், மதுரை-7. |
| **திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்** | | | |
| 12. | திண்டுக்கல் | (10 தொழிற்கூடங்கள்) | கிளை மேலாளர், சிட்கோ தொழிற்பேட்டை திண்டுக்கல்-624 006. |
| **காமராஜர் மாவட்டம்** | | | |
| 13. | விருதுநகர் | (10 தொழிற்கூடங்கள்) | கிளை மேலாளர், சிட்கோ தொழிற் பேட்டை சூலக்கரை விருதுநகர்-626 003. |
| **பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்** | | | |
| 14. | சிவகங்கை | (9 தொழிற்கூடங்கள்) | |
| 15 | காரைக்குடி | (10 தொழிற்கூடங்கள்) | |
| **திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்** | | | |
| 16. | பேட்டை | (7 தொழிற்கூடங்கள்) | கிளை மேலாளர், சிட்கோ 4/23 திருவனந்தபுரம் நெடுஞ்சாலை முருகன்குறிச்சி, திருநெல்வேலி 627 002. |
| **சிதம்பரனார் மாவட்டம்** | | | |
| 17. | கோவில்பட்டி | (5 தொழிற்கூடங்கள்) | |
| 18. | தூத்துக்குடி | (9 தொழிற்கூடங்கள்) | |
| **கோவை மாவட்டம்** | | | |
| 19. | குறிச்சி | (4 தொழிற்கூடங்கள்) | கிளை மேலாளர், சிட்கோ குறிச்சி தொழிற்பேட்டை கோவை 641 021. |

வரையறுக்கப்பட்ட விண்ணப்ப படிவங்கள் சம்மந்தப்பட்ட சிட்கோ கிளை அலுவலகங்களிலும் மற்றும் சிட்கோ மத்திய அலுவலகம், 60 கிரீம்ஸ் சாலை, சென்னை 600 006லும் ரூபாய் 5/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:
மேலாளர் (தொழிற்பேட்டைகள்)
சிட்கோ மத்திய அலுவலகம்,
60, கிரீம்ஸ் சாலை, சென்னை-600 006.

MAA COMMUNICATIONS DIPR 2729/MS/89




# சிதம்பரனார் மாவட்டத்தில்....

சிதம்பரனார் மாவட்டத்தில், 11.9.89 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற அரசு விழாவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகத் திற்குக் கால்கோள் நாட்டினார். ரூ. 10 கோடி செலவில் அமைய விருக்கும் மாவட்ட ஆட்சியர் அலு வலக வளாகத்தில், பல்வேறு மாவட்ட அலுவலகங்களும், அலு வலர் மற்றும் அலுவலகப் பணி யாளர்களுக்கான 1,356 தொகுப்பு இல்லங்களும் அமைய உள்ளன.

இங்கு குடியமரும் அனைவருக் கும் பொது வசதிகளைச் செய்து தரும் பொருட்டு, தபால் தந்தி நிலையம், காவல் நிலையம், நூல கம், அங்காடி வளாகம், சமுதாயக் கூடம், சுகாதார நிலையம், வங்கிகள், கலையரங்கம், உள் விளையாட்டு அரங்கம், தொலை பேசி இணைப்பகம், பள்ளிகளும் மற்றும் விளையாட்டு மைதானம், விருந்தினர் மாளிகை, பணிபுரியும் மகளிர் விடுதி, மற்றும் அணி வகுப்புத் திடல் ஆகியவற்றை உள் ளடக்கி,300 ஏக்கர் பரப்பளவில் ஒரு 'மாதிரி நகரியமாக உருவாக வுள்ளது என்பது குறிப்பிடத்தகுந்த தாகும்.

மேலும், இவ்விழாவில் ரூ. 134 லட்சம் செலவில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் தமிழ்நாடு அரசு மானிய உதவியுடன் உருவாக விருக்கும் 943 ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகளுக்கும், ரூ. 125 லட்சம் செலவில் வறட்சிக்கு இலக் காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கும், கூட்டுறவுத் துறை யின் மூலமாக எட்டயபுரம் நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து 'ஹட்கோ' திட்டத்தின் கீழ் ரூ. 76 லட்சம் செலவில் கட்டப்படவுள்ள 512 வீடுகளுக்கும், ரூ. 63 லட்சம் செலவில் நெடுஞ் சாலைத்துறையின் மூலமாக மேற் கொள்ளப்படவுள்ள மூன்று பாலங் களுக்கும், தூத்துக்குடி விமான நிலைய அணுகுச்சாலைக்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். மேலும், ரூ. 72 லட்சம் செல விலான திருச்செந்தூர் குடிநீர்த் திட் டத்தையும் , ரூ. 24 இலட்சம் செல விலான கயத்தாறு குடிநீர்த் திட்டத் தையும், ரூ. 17 இலட்சம் செலவி லான செய்துங்கநல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும், ஒருங் கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட் டத்தின் கீழ் ரூ. 20 இலட்சம் செல விலான திருச்செந்தூர் புதிய பேருந்து நிலையத்தையும், ரூ. 20 இலட்சம் செலவிலான கோவில் பட்டி புதிய பேருந்து நிலையத்தை யும் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக ரூ. 9 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 135 ஆதிதிராவிடர் தொகுப்பு வீடு களையும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்ததோடு, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் புதிய வழித் தடங்களையும் தொடங்கி வைத்தார். இதன் மூலம் 12 கிராமங்கள் புதிதாகப் பேருந்து வசதியைப் பெறுவதன் மூலம் 17 ஆயிரம் மக்கள் பயன் பெறுகிறார்கள். மேலும் 32 கிராமங்கள் புதிதாக நகரப் பேருந்து வசதி பெறுவதன் மூலம் 50 ஆயிரம் மக்கள் பயன் பெறுகிறார்கள். சமூக நலத் துறை யின் சார்பில் மூவலூர் இராமா மிர்தம் அம்மையார் நினைவு திரு மண நிதி உதவித் திட்டத்தின் கீழ், 200 மணப் பெண்களுக்கு ரூ. 10 இலட்சம் திருமண நிதி உதவியும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத் தின்கீழ் 1,000 கர்ப்பிணிப் பெண் களுக்கு ரூ. 2 லட்சம் நிதி உதவியும், மற்றும் ஊனமுற்றோர் , கைம் பெண்கள் , நலிவுற்ற மகளிர் ஆக மொத்தம் 227 நபர்களுக்குப் பல் வேறு உதவிகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் , கறவை மாடுகள், கோழி வளர்ப்பு மற்றும் சிறு தொழில் தொடங்க 4,127 நபர் களுக்கு மானியத்துடன் கூடிய கட னாக ரூ.1 கோடியே 83 இலட்சத்து 5,410, 13 நபர்களுக்கு ஜீவன் தாராக் கிணறுகளுக்கு எஞ்சின் வாங்க ரூ.97,500 நிதி உதவியை யும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

1,000 பேருக்கு முதியோர் உத வித் தொகையையும், 4,025 பேருக்கு மனைப்பட்டா, நிலப்பட் டாக்களையும் வழங்கினார். 39 நபர்களுக்கு நலிவடைந்தோர் குடும்ப உதவியையும், 12 பேருக்குப் புதிய ஆட்டோ ரிக்ஷா, 11 பேருக்கு மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா, 11 பேருக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் படித்த இளைஞர்களுக்குத் தொழில் செய் திட மானியத்துடன் கடனுதவி, 2 நபர்களுக்குச் சிறு தொழில் கடன்கள் ஆக மொத்தம் 36 நபர் களுக்கு ரூ.7 இலட்சத்து 41 ஆயி ரத்திற்கான நிதி உதவியையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

வனத்துறைக் கிராம நலக் காடு விற்பனைப் பங்குத் தொகையாக 7 பஞ்சாயத்துக்களுக்கு ரூ.4,31,996., 28 பேருக்குக் கதர் கிராம வாரியத் தின் மூலம் தொழில் தொடங்க ரூ.1 இலட்சத்து 71 ஆயிரம் மானியத்து டன் கூடிய கடன், 4 கலப்பு மணத் தம்பதிகளுக்குச் சேமிப்புத் தொகை யாக ரூ.17,700, முன்னாள் படை வீரர் மகள்களுக்குத் திருமண உத்வி மற்றும் பல்வேறு உதவிகளாக 25 பேருக்கு ரூ.16,500 கடன் நிதி உதவிகள் இவ்விழாவில் வழங்கப் பட்டன.

ஆக மொத்தம் அன்றைய விழாவில், 11,164 பயனாளி களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவிகளை வழங்கினார்.

இறுதியில் விழாப் பேருரையாற் றிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், சிதம்பரனார் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு 'கே.வி.கே. சாமி மாளிகை' எனவும், பெருந்திட்டக் கட்டட வளாகத்திற்கு "அன்னை சிவகாமி பெருந்திட்டக் கட்டட வளாகம்" எனவும் பெயர்களைச் சூட்டினார்.

**தகவல்: ஆர். பரதன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சிதம்பரனார் மாவட்டம்,**
**தூத்துக்குடி.**

# மாதம் ஒரு தொழிற்சாலை-இலக்கை நோக்கி

**தெ**ன் ஆர்க்காடு மாவட்டத்தில் செப்டம்பர் 28, 29 ஆகிய தேதிகளில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மூன்று புதிய தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

### பில்கோ கண்ணாடித் தொழிற்சாலை

28.9.89 அன்று காலை 10 மணியளவில், புவனகிரி அரசினர் மேல்நிலைப் பள்ளித்திடலில், ஆலம்பாடி கிராமத்தில் அமையவிருக்கும் பில்கோ கண்ணாடித் தொழிற்சாலையின் அடிக்கல் நாட்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு தொழில்வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. வெங்கடேசன் இ.ஆ.ப. வரவேற்புரையாற்றினார். அத்தொழிற்சாலையின் பணிகள் பற்றி இயக்குநர் திரு: தேவேந்திரன் அறிக்கை படித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ப. வள்ளல்பெருமான், சட்டமன்ற உறுப்பினர் திரு. சோ. சிவலோகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தேவேந்திரநாத் சாரங்கி இ.ஆ.ப., பேசும்போது, "வருங்காலத்தில் நெய்வேலி மட்டுமல்லாமல், பல்வேறு தொழிற்சாலைகளும் நிறைந்த மாவட்டமாக இம்மாவட்டம் திகழும் என்பதற்கு இது முன்னுதாரணம்" என்றார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி, தமது தலைமையுரையில், "தொழில் துறையில் தமிழ்நாடு முதலிடம் பெறச்செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருமுயற்சி மேற்கொண்டிருக்கிறார்; விரைவில் தமிழகம் தொழில் மயமாகும்; வேலை வாய்ப்புகள் பெருகும்" என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. எஸ். வீரபாண்டி ஆறுமுகம், தமது வாழ்த்துரையில் எங்கள் சேலம் மாவட்டத்தில் 1983-இல் ஒரு தொழிற்சாலைக்கு அப்போது இருந்த முதலமைச்சர் வந்து அடிக்கல் நாட்டினார்; அந்த விழாவோடு அந்தத் தொழிற்சாலை நின்றுபோய்விட்டது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படும் இந்தத் தொழிற்சாலை அப்படியல்ல; விரைவிலேயே உற்பத்தியைக்காட்டி உயர்வடையும்" என்றார்.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. நா. ஆற்காடு வீராசாமி தம்முடைய வாழ்த்துரையில் "பத்தொன்பது கோடி ரூபாய் மூலதனத்தில் துவக்கப்படும் இத்தொழிற்சாலை இந்தப்பகுதி மக்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பளிப்பதாக அமையும்" என்று குறிப்பட்டார்.

'பில்கோ' கண்ணாடித் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்பு உரையாற்றினார். அவர் தம் உரையில்,

"இந்தியாவிலேயே ஐந்து இடங்களில் தான் கண்ணாடித் தொழிற்சாலைகள் இருக்கின்றன; அவையாவும் வட இந்தியாவிலேயே உள்ளன. தென் மாநிலங்களில், முதன்முதலாக அமையும் கண்ணாடித் தொழிற்சாலை இதுதான். புதிய அரசு மலர்ந்ததும், மாதம் ஒரு தொழிற்சாலை அமைப்போம் என்று தெரிவித்தோம். அதன்படி ஏழு தொழிற்சாலைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இன்று மட்டும் இந்த மாவட்டத்தில் மூன்று தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டப்படுகிறது.

"இந்தத் தொழிற்சாலைக்கு முக்கியத் தேவையான எரிவாயுவைத் தருவதாக மத்திய அரசு சார்பில் வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது; அவர்கள் அந்த வாக்குறுதியை மீறமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

"இந்தத் தொழிற்சாலை துவக்கப்படும்போது, இந்தப் பகுதிகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை தரப்படும்; சுமார் 350 குடும்பத்தாருக்கு இதில் வேலை கிடைக்கும்.

"பில்கோ நிறுவனத்தார், இந்தக் கண்ணாடித் தொழிற்சாலையை அமைப்பதற்காக டிட்கோ நிறுவனத்தை அணுகிய தேதி 15-2-89. தொழில்துறைக் குழுவின் ஆய்வுக்குப் பிறகு, அவர்கள் அனுமதி அளித்த தேதி 19-5-89. அரசு இதற்கான ஒப்புதலை வழங்கிய தேதி 22-9-89. இந்தத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டப்படும் தேதி 28-9-89 ஆகும். இதிலிருந்தே, தொழில் வளம் பெருக்குவதில் இந்த அரசு, அதிகாரிகளின் ஒப்புதலோடு விரைந்து துணிந்து செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இந்த நிறுவன உற்பத்தியின் விற்பனை பரவலாக நான்கு மாநிலங்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

விழா முடிவில் திரு. முருகவேள் நன்றி கூறினார்.

### கடலூரில் இரண்டு புதிய தொழிற்சாலைகள்

"உஸ்தா-தே பயோடெக் தொழில் நிறுவனம், டான்டெக் அக்ரோ. கெமிகல்ஸ்" ஆகிய தொழிற்சாலைகளின் அடிக்கல் நாட்டு விழாவும், அரசு தீயணைப்பு நிலையத் துவக்க விழாவும் 28-9-1989 அன்று கடலூர் சிப்காட் தொழில் வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றன.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர். பொன்முடி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், டிட்கோ நிறுவனத் தலைவர் திரு. வெங்கடேசன், இ.ஆ.ப., வரவேற்புரை ஆற்றினார். திரு. தர்மினா உஸ்தாதே, பயோடெக் நிறுவனம் பற்றிய திட்ட அறிக்கையைப் படித்தார். திரு. சந்திரா ரெட்டி, டான்டெக் அக்ரோ கெமிகல்ஸ் நிறுவன அமைப்பு பற்றிய அறிக்கையைப் படித்தார்.

தமிழ்நாடு அரசின் தொழில்துறைச் செயலர், திரு. கே. என். நம்பியார் இ.ஆ.ப., இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. புகழேந்தி வாழ்த்துரை வழங்கினார்.

ரூ. 20 கோடி மதிப்பீட்டில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து பல்வேறு பொருட்கள் தயாரிக்கும் உஸ்தாதே பயோடெக் தொழிற்சாலைக்கும், ரூ.6 கோடி மதிப்பீட்டில் பூச்சி கொல்லி மருந்து தயாரிக்கும் டான்டெக் அக்ரோ கெமிகல்ஸ் தொழிற்சாலைக்கும் அடிக்கல் நாட்டி, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.




மாண்புமிகு முதல்வர் அவர்கள், தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டிப் பேசியதாவது:

"தமிழ்நாட்டைப் பொறுத்த வரை 1976-இல் தொழில் வளர்ச்சியில் மூன்றாவது இடத்தில் இருந்த தமிழ்நாடு, பிறகு பதின்மூன்றாவது இடத்திற்குப் போய்விட்டது. இதை நான் சொல்லவில்லை; 1980-81-இல், இப்போது குடியரசுத்தலைவராக இருக்கும் ஆர். வெங்கட்ராமன் அவர்கள்தான், சென்னையில் நடந்த கூட்டமொன்றில் குறிப்பிட்டார். அப்போது, அதையெல்லாம் புரிந்து கொள்ளக்கூடிய நிலையிலே தமிழ்நாட்டு மக்கள் இல்லை.

"புதிய அரசு மலர்ந்தபின் அந்த நிலை மாறி வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழிலதிபர்களையும், இரண்டாவது கட்டமாக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த தொழிலதிபர்களையும் அழைத்துப் பேசினேன். தனியாக அல்ல; அதிகாரிகள் புடைசூழ. அவர்களோடு தொழில் வளர்ச்சி பற்றிக் கலந்து பேசி, தமிழ்நாட்டில் பெரும் பெரும் தொழில்களைத் தொடங்குங்கள் என்று கேட்டுக் கொண்டேன். தமிழ்நாட்டில் தொழில் தொடங்கவரும் தொழில் அதிபர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்துதர அரசு தயங்காது என்று தெரிவித்தேன். வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களும், இங்கே தொழில் தொடங்க ஆர்வத்தோடு வந்தார்கள். அவர்களில் ஒருவர்தான் இங்கே தொழில் தொடங்கும் திரு. கே. என். தபின்.

"இங்கே இந்த மரவள்ளிக்கிழங்குத் தொழிற்சாலை, இருபது கோடி ரூபாய் மூலதனத்தில், டிட்கோ ஒத்துழைப்போடு தொடங்கப்படுகிறது. மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியில், தமிழகம் இரண்டாவது இடத்தையும் விளைச்சலில் முதலாவது இடத்தையும் பெற்றிருக்கிறது. ஆகவே மூலப்பொருளுக்குப் பஞ்சமில்லை. வறட்சியிலும் தாக்குப்பிடிக்கக் கூடியது மரவள்ளிக்கிழங்கு.

"இந்தியாவில், பூச்சிகளால் பயிர்களுக்கு ஏற்படும் மொத்த இழப்பு ஆறாயிரம்கோடி ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டுதான், இங்கே பூச்சி மருந்து தயாரிப்புத் தொழிற்சாலையும் ஐந்து கோடியே நாற்பத்தெட்டு இலட்சம் ரூபாய் முதலீட்டில் துவக்கப்படுகிறது. ஏறத்தாழ இருநூறு பேர் இந்தப் பகுதியில் இதன் மூலம் வேலைவாய்ப்புப் பெறமுடியும். 1990-இல் இத்தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கும்.

"இத் தொழிற்சாலைக்கான திட்டம் இந்த ஆண்டு மார்ச்சில் அளிக்கப்பட்டது. தொழில் ஆராய்ச்சிக்குழு, அதுபற்றி ஆராய்ந்து 30-6-89-இல் ஒப்புதல் தந்தது. 20-9-89-இல் அரசின் அனுமதி வழங்கப்பட்டது. இன்றைக்கு, 28-9-89-இல் இதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறுகிறது.

"இந்த இரண்டு தொழிற்சாலைகளும் தவிர இந்தப் பகுதியில் பத்து இலட்சம் ரூபாய் செலவில் தீயணைப்பு நிலையம் ஒன்றும் இன்றைக்கு இந்தப் பகுதியில் அமைகிறது.

#### இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி :

"இது போன்ற வெற்றிச் செய்திகள் தொய்ந்துகிடக்கும் தமிழ்நாட்டைத் தலைநிமிரச் செய்யத்தக்கவையாகும். இப்படிப்பட்ட நேரத்தில், உங்கள் கடமை என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்".

-மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் இந்தச் சிறப்புரைக்குப் பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தேவேந்திரநாத் சாரங்கி இ.ஆ.ப., நன்றி கூறினார்.

### விருத்தாச்சலத்தில் கற்குழாய் தொழிற்சாலை மீண்டும் திறப்பு

தென்னார்க்காடு மாவட்டம் விருத்தாச்சலத்தில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் கற்குழாய் தொழிற்சாலை உற்பத்தி 28-9-89 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

டிட்கோ நிறுவனத் தலைவர் திரு. வெங்கடேசன் இ.ஆ.ப., வரவேற்புரை ஆற்றினார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி தலைமை உரையாற்றினார்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ். வீரபாண்டி ஆறுமுகம், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி, நகர மன்றத் தலைவர் திரு. லெட்சுமணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். செல்வராஜ், திரு. ஜி. பூவராகன் எம்.எல்.ஏ., திரு. வள்ளல் பெருமான் எம்.பி., மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தேவேந்திரநாத் சாரங்கி இ.ஆ.ப., ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விருத்தாச்சலம் கற்குழாய் தொழிற்சாலையை மீண்டும் திறந்து வைத்து, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்தினார். விழா தொடங்குவதற்கு முன்பாக சோழன் போக்குவரத்துக் கழக இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

விழா முடிவில் நிர்வாக இயக்குநர் திரு. கே. மாதவன் நாயர் நன்றி உரையாற்றினார்.

# வெண்பாப் போட்டி

## 3. அண்ணாவே சொன்னார் அறிந்து

''அன்புண்டு; பண்புண்டு; ஆளும் திறனுண்டு;
தன்னல மில்லாத சீராசான் - எந்நாளும்
வண்ண மலர்வாசம் போறகலைஞர்
வாழ்க'வென
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*-பாவலர் மு. பாஞ்ச்பீர், ஏழுகிணறு*

''முற்பாதி நானெழுத முக்கனியாம் நற்றமிழர்
பொற்காலக் காவியத்தின் பிற்பகுதி-கற்றாரே
எண்ணி வியக்க எழுதிடுவான் தம்பி''யென்(று)
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*—க. தியாகராசன், நெய்வேலி*

''அண்ணலார் எண்ணத்தை அன்றாடம்
நெஞ்சிருத்தி
வண்ணமிகு நாட்டை வளம்செய்வார்-
பண்புடனே
கண்ணாகக் காத்திடுவார் நற்கலைஞர்''
என்றொருநாள்
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*—கோ. லோகநாதன், இலுப்பூர்*

நல்லதம்பி நற்கலைஞர்; நற்கடமை செய்வதிலே
வல்லான்கட் டுப்பாட்டை வந்திப்பான் -
சொல்லரிய
கண்ணியம் காப்பான்'' எனுமுண்மை முன்பறிஞர்
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*—மு.ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்*

''உடன்பிறப்பே கேளாய் ஒருசொல்; பகையை
விடக்கொடிதாம் நட்பில் துரோகம்-அட இஃதை
எண்ணா திருப்பின் இடர்ப்படுவாய்'' என்றாங்கு
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*—தமிழாலயன், மதுரை*

''வாழ்வில் சிறந்தோங்க வள்ளுவனைப்
பின்பற்று!
ஆழ்ந்த மனத்திட்பம் எய்திவிடு - தேர்ந்துயர்க''
என்னும் கருத்துகளை நெஞ்சின் வெளிப்பாடாய்
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*—இரா. கல்யாணசுந்தரம், மதுரை*

எல்லார்க்கும் நல்வாழ்வு; எங்கும் அறிவொளி;
இல்லாரும் இந்நாட்டில் கல்விபெற-நல்வழியில்
எண்ணமெல்லாம் சென்று எழில்பொங்கத்
திட்டமிட
அண்ணாவே சொன்னார் அறிந்து!'

*—கவிஞர் தேனி முருகேசன், தேனி.*

மாற்றானின் தோட்ட மலரும் மணக்குமே
தேற்றங்காண் ஏழை சிரிப்பே தான் ஏற்றதெனக்
கண்ணியம் காத்துக் கடமையால் வாழ்ந்திட
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*—புலவர் பழ. கோவிந்தன், பழவேற்காடு*

''கடமையொடு கண்ணியம் கட்டுப்பா டேற்றால்
மடமையொடு தாழ்வெல்லாம் மாயும் -
குடியுயரும்''
தண்ணார்ந்த செந்தமிழால் சாகா நறுங்கருத்தை
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*—புலவர் ப.ப. இராமசாமி, காங்கேயம்*

''சோதனைகள், வேதனைகள், ஆயிரமாய்ச்
சூழ்ந்திடினும்
சாதனைகள் ஆற்றச் சலிக்காதே! - மேதினியில்
மேன்மை, எதையும்தாங் கும்இதயத் தாலேயே''
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*—எண்ணமங்கலம் பழனிசாமி, எண்ணமங்கலம்*

பொய்வழியிற் கண்மூடி, புத்தியின்றிச்
சென்றோரும்
மெய்வழி கண்டே வளமெய்த - பெய்வளாய்!
தண்ணார் தமிழ்வேந்தன் தாரணியில் மிக்குயர்ந்த
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*—இரா. பழனிசாமி, முகாசெம்சம்பட்டி*

''சங்கம் வளர்ந்து தமிழ்ப்புலவர் நாவிருந்து
மங்காப் புகழால் மணம்வீசும் - எங்களது
கண்ணான செந்தமிழே! காசினியில் மூத்த''தென
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*—கவிஞர் வ. ஆனையப்பன், புதூர்*

தாழ்ந்த தமிழகம் தான்நிமிர்ந்து ஏற்றமுற
வீழ்ந்த புகழனைத்தும் மீண்டுவர - சூழ்ந்தபகை
மண்ணாகும், நம்ஆட்சி மாட்சியுறும்''என்றறிஞர்
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*—கொட்டப்பட்டு ப. சக்திவேலன்*


நாணயம் நம்பிக்கை நீதிதன் மானமுடன்
காணும் மதபேதம் காணாது - ஆணொடு
பெண்ணும் புவியிதனில் பெற்றியுடன்
வாழ்கவென்(று)
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*—கவிஞர். மு. முத்துக்கிருட்டிணன், கொங்கணாபுரம்.*

''இமிழ்கடல் சூழ்உலகம் ஏற்றிப் புகழும்
அமிழ்தாம்மொழியையேபேசும்- தமிழகத்தைக்
கண்ணாக என்றென்றும் தம்பியரே ஆள்வ''ரென
அண்ணாவே சொன்னார் அறிந்து!

*—கருப்பையா, மேலைச்சிவபுரி*





# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்...

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 12-9-89 அன்று திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு புதிதாகக் கட்டப்பட்ட பாலங்களைத் திறந்து வைத்தும், அரசுக் கட்டடங்களைத் திறந்து வைத்தும், கால்கோள் நாட்டியும், பேருந்து வழித் தடங்களைத் துவக்கி வைத்தும், நலிந்தோர்க்கு உதவிகள் வழங்கியும் விழாப் பேருரை யாற்றினார்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் முதல் நிகழ்ச்சியாக, நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையினரால் கோபாலசமுத்திரத்தில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் திறப்பு விழாவில் கலந்து கொண்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாவில் பேசும் போது, ''ஒரே மாவட்டத்தில் உற்பத்தி ஆகி, அதே மாவட்டத்தில் கடலோடு கலக்கும் பெருமை பெற்ற நதி இந்தியாவிலேயே தாமிரபரணி ஒன்றுதான். இந்தச் சிறப்பு வாய்ந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலங்களைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

இம்மாவட்டத்தில் முக்கிய தொழில் விவசாயமாகும். இப்பகுதியில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்களால் உற்பத்தி செய்யப்படும் விளை பொருட்கள் வணிக மையங்களுக்கு எடுத்துச் செல்லப்படவும், இப்பகுதி வாழ் மக்களின் நீண்டகாலக் கனவு நிறைவேறும் வகையில் கோபாலசமுத்திரம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ரூ. 84 இலட்சம் செலவிலும், அம்பாசமுத்திரம்-பாப்பாக்குடிச் சாலையில் கடலா நதி மற்றும் வௌவால் ஓடையின் குறுக்கே ரூ. 63 இலட்சம் செலவிலும், சேரன் மாதேவி அருகே கன்னடியன் வாய்க்காலின் குறுக்கே ரூ. 11.40 இலட்சம் செலவிலும், வீரவநல்லூர் அருகே கன்னடியன் கால்வாயின் குறுக்கே ரூ.7.5 இலட்சம் செலவிலும் கட்டப்பட்டுள்ள பாலங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். கோபால சமுத்திரத்தில் கட்டப்பட்ட பாலத்திற்கு 'டபிள்யூ. பி.ஏ., சௌந்தரபாண்டியன் பாலம்' என்றும் பெயர் சூட்டினார்.

மேலும் 12-9-89 அன்று மாலை திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் பாளையங்கோட்டையில் நடந்த அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டம் ரூ. 10.12 கோடி செலவில் துவங்க கால்கோள் நாட்டினார். மொத்தமாக அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களின் மதிப்பீடு ரூ.19 கோடியாகும்.

மேலும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, போக்குவரத்துத் துறை, மருத்துவத் துறை, வேளாண்மைத் துறை, காவல் துறை, உள்ளாட்சித் துறை, குடிநீர் வடிகால் வாரியம் போன்ற துறைகளின் சார்பில் ரூ.2.04 கோடி செலவில் கட்டப்பட்ட கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ், 228 படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ. 11.40 இலட்சம், டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ், 3666 பேருக்கு 7.33 இலட்சம், மூன்று சக்கர வண்டி வழங்கும் திட்டத்தின் கீழ், 50 பேருக்கு 75 ஆயிரம், விதவை திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ், 6 பேருக்கு ரூ. 30 ஆயிரம், ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் பட்டப்படிப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ், 413 பேருக்கு 1.12 இலட்சம், மாவட்ட வளர்ச்சி முகமை மூலமாக 5166 பேருக்கு ஒருங்

கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், பெரு வேளாண்மைத் திட்டம் போன்ற திட்டங்களினால் 5166 பேருக்கு ரூ.2.64 கோடி, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வட்டி மானியத் துடன் கடனாகச் சுற்றலாச் சீருந்து, ஆட்டோ ரிக்ஷா, மோட்டார் பொருத் தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா போன்றவை 63 நபர்களுக்கு 15.90 இலட்சம் இப்படிப் பல்வேறு திட்டங்களின்கீழ் 41,000 பேருக்கு ரூ.7 கோடி மதிப் புள்ள நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கி விழாப் பேருரை ஆற்றினார்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்குச் ''சுந்தரலிங்கம் வளாகம்'' என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத் திற்குப் 'புலித்தேவன் மாளிகை' என்றும் சேரன்மாதேவி அரசு மேல்நிலைப் பள்ளிக்குத் 'தந்தை பெரியார்' அரசு மேல்நிலைப் பள்ளி என்றும் பெயர் சூட்டினார்.

இவ்விழாவில் திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். இராசரெத்தினம், இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் தலைமை தாங்கினார்.

விழாவில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே. பி. கந்தசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி, மாண்புமிகு அரசு கொறடா திரு. கா. மு. கதிரவன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. வை. கோபால் சாமி, திரு. தனுஷ் கோடி ஆதித்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஏ.எல். சுப்பிரமணியன், திரு. எஸ். குருநாதன், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு ஆச்சியூர் மணி, திரு. ஆர். ஈஸ்வரன், திருமதி, ரமணி நல்லதம்பி, பாளையங்கோட்டை நகர சபைத் தலைவர் திரு. சுப. சீதா ராமன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். கூடுதல் ஆட்சித் தலைவர் திரு. பா. ராமமோகன்ராவ், இ.ஆ.ப., நன்றி தெரிவித்தார்.

**-எஸ்.எம். பஷீர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருநெல்வேலி கட்டபொம்மன்**
**மாவட்டம்.**

# சம்புவராயர்: கல்வெட்டு கூறும் செய்தி

மருதாடு கிராமம், வந்தவாசியிலிருந்து மதுராந்தகம் வழியாகச் சென்னை செல்லும் சாலையில் 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர் வயல் வளம் நிரம்பியது. பல்லவர் காலத்தில் அமைக்கப்பெற்ற பெரிய ஏரியை அடுத்துள்ளது. எனவே, இவ்வூருக்கு ''மருதநாடு'' எனப் பெயர் அமைந்து, இன்று 'மருதநாடு' - என மருவி வழங்குகிறது.

இங்கு அமைந்துள்ள புரந்தேஸ்வரர் சிவா லயத்தில் உள்ள நான்கு கல்வெட்டுகள் கூறும் செய்திகள்:

1. அக்காலத்தில் 'ஜெயங்கொண்ட சோழ மண்டலம்'-வெண்குன்றக் கோட்டத்தின் துணைப் பகுதியாக இவ்வூர் இருந்தது. அன்று 'விக்கிரம சோழ நல்லூர்' என்னும் பெயர் இவ்வூருக்கு அமைந்திருந்தது. முதல் இராசேந்திர சோழனின் 20-ஆம் ஆட்சியாண்டில் மகாதேவர் ஆலயத் திற்கு விளக்கு எரிக்க 90 செம்மறியாடுகள் தானமாக வழங்கப்பட்டன. கிராமத்திற்குக் குளம் வெட்ட நிலம் விற்கப்பட்ட செய்தியும் இக்கல் வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. அக்கோயிலின் மேற்குப் பீடத்தில் உள்ள மற்றொரு கல்வெட்டு, முதற்குலோத்துங்க சோழ னின் 32-ஆம் ஆட்சி ஆண்டில், சுங்கம் தவிர்த்து, நாட்டின் இருளைப் போக்கி ஆண்டதாகக் கூறுகிறது. மருதாடு வாசிகள் அவ்வூர் உமாஸ் கந்த அவனி முழுதுடைநாயகர் கோயிலுக்கு நிலம் அன்பளிப்பாக அளித்த செய்தியும் இக்கல் வெட்டில் உள்ளது.

3. அதே பீடத்திலுள்ள மற்றொரு கல்வெட்டு இராஜ கேசரி வர்மன் (முதலாம் இராச ராசன்) என்ற சோழ அரசனின் 4-ஆம் ஆட்சியாண்டின் மத்தியில் இக்கோயில் கட்டப்பட்டதாகத் தெரி விக்கிறது. மேலும் இவ்வூரிலுள்ள பெருந்திருக் கோயிலுக்கு விளக்கெரிக்க செம்மறியாடுகள் வழங்கப்பட்டதாகவும் கூறுகிறது.

4. அதே மண்டபத்தின் வட பீடத்தில் ''சகல லோக சக்கரவர்த்தி'' இராஜ நாராயண சம்பு வராயர் தம் 14-ஆம் ஆட்சியாண்டில் வெளி யிட்ட கல்வெட்டில் மருதாடு வாசிகள் வட வூர்நாடு கோட்டையூர் வாசிகளுக்கு ஒரு வாய்க் காலை விற்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

*ஆதாரம்: (சென்னை மாநில ஸ்தல வரலாறு கல்வெட்டு சேகரிப்பு 1915 வரை - திரு. V. ரங்காச்சாரியா, தொகுதி I)*

**தகவல்: ஜி. எழுமலை,**
**உழவியல் ஆசிரியர்,**
**அரசினர் மேல்நிலைப் பள்ளி,**
**தேதூர்**
**திருவண்ணாமலை -**
**சம்புவராயர் மாவட்டம்**



# வன உயிரின வாரத் தொடக்க விழா!

வன உயிரின வாரத் தொடக்க விழா 2-10-89 அன்று காலை சென்னையை அடுத்துள்ள வண்ட லூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

விழாவை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கே. பி. கந்தசாமி அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள், மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் டாக்டர் இராம கிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு மாநில தேசிய சேமிப்பு ஆலோசனைக் குழுத் துணைத் தலைவர் திரு. அ. ரகுமான்கான் எம்.எல்.ஏ. அவர்கள், டாக்டர் திருமூர்த்தி, எம்.எல்.ஏ., ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி, மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு. துரை சுந்த ரேசன் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவுக்கு வந்திருந்தோரை முதன்மை வனத் துறைத் தலைவர் திரு. எஸ். ஜான் ஜோசப், இ.வ.ப., வரவேற்றுப் பேசினார்.

முன்னதாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தப் பூங்காவில் புதிதாக சிங்க உலவிடத்தைத் (Lion's Safari) திறந்து வைத்தார்.

மாண்புமிகு வனத்துறை அமைச் சர் திரு. கே. பி. கந்தசாமி அவர்கள் உரையாற்றும்போது குறிப்பிட்ட தாவது:

இந்த உயிரியல் பூங்காவை முழுதும் சுற்றிப் பார்ப்பதற்கு வசதியாக டிரெயிலர்கள் விடப்படும். இப்பூங்கா வில் பல ஆண்டுகளாகத் தற்காலிக மாகப் பணிபுரிந்து வரும் 200 பேர்களில் முதற்கட்டமாக 72 பேர்கள் நிரந்தரமாக்கப்படுகிறார்கள். மேலும் தினக்கூலி பெறுபவர்களின் ஊதிய விகிதங்களும் உயர்த்தப்பட்டுள்ளன.''

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தமது உரையில்,

''1973-ஆம் ஆண் டில் கழக அரசுதான் இந்த இடத்தைத் தேடிக் கண்டு பிடித்தது. நல்ல வேளை யாக இது நாங்கள் கொண்டு வந்த திட்டம் என்பதை விட்டுவிட்டால் எங் களுக்குப் பிறகு வந்த ஆட்சியாளர்கள் தொடர்ந்து பணிகளை மேற்கொண்ட காரணத்தால், இன்று இந்தப் பூங்கா ஓரளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது. இது மேலும் வளர்ச்சி பெற வேண் டும்.

''களக்காடு, முதுமலை போன்ற இடங்களில் விலங்குகள் சரணாலயங் களும், வேடந்தாங்கல், வேதாரண்யம் போன்ற இடங்களில் பறவைகள் சரணாலயங்களும் அமைந்துள்ளன. அத்தகைய இடங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அரசு ஏற்றிடும் நிலை அண்மைக்காலத்தில்தான் உருவாகி யுள்ளது.

''இங்கே பேசிய திருமூர்த்தி, எம்.எல்.ஏ. இந்தப் பூங்காவில் அதிக இடத்தைச் சேர்க்க வேண்டும் என் றார். இந்த 500 ஏக்கர் பரப்பிலேயே இன்னும் அதிகமான மிருகங்கள், பறவைகள் இடம்பெற வேண்டும். வருகின்ற வரவு செலவுத் திட்டத்தில் இந்தப் பூங்காவின் வளர்ச்சிக்காக நல்ல தொகை ஒதுக்கப்படும்'' என்று குறிப்பிட்டார்''.

இந்த விழாவையொட்டி வனத் துறையால் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவியர்க்கும், கடமை உணர்வோடு பணியாற்றிய வனத் துறைக் காவலர்க் கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசுகள் வழங்கினார். விழா முடிவில் தலைமை வன உயிரினக்காப்பாளர் திரு. பி. பத்மநாபன், இ.வ.ப. நன்றி கூறினார்.

### சமணக் காப்பியங்கள்

ஆசிரியர்: டாக்டர் சு. சுனந்தா தேவி,
வெளியீடு: விஜயலட்சுமி பதிப்பகம்,
88, சி.என். கிருஷ்ணசாமி தெரு,
சென்னை-600 005.

விலை ரூ. 15 பக்கம்:136

சமண சமயம் தமிழ் இலக்கிய உலகிற்கு அளித்துள்ள கொடை அளவற்றது. குறிப்பாக நீதி நூல்களில் பல சமண சமயத்துப் புலவர்களால் உருவாக்கப்பட்டவை. அறத்தை வலியுறுத்துவதில் சமண நூல்களுக்குச் சிறப்பிடம் உண்டு.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சீவக சிந்தாமணி, ஐஞ்சிறு காப்பியங்களின் வரிசையில் இடம் பெற்றுள்ள நீலகேசி, யசோதர, காவியம் ஆகிய நூல்களின் சிறப்பம்சங்களை ஆய்வு செய்து நூலாக்கியுள்ளார் நூலாசிரியர்.

சமண சமயம், கொல்லாமையை மிகவும் வலியுறுத்துகிறது என்னும் உண்மையை 'நீலகேசி' நூலின் வாயிலாக ஆசிரியர் எடுத்துச் சொல்கிறார். தமிழில் தோன்றிய முதல் தர்க்க நூல் இதுதான் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. சமணத் துறவியரின் சிறப்பியல்புகள் இந்நூலின் வாயிலாக, தக்க வகையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப்பொருள்களை சீவக சிந்தாமணி வலியுறுத்துகிறது என்பதை நூலாசிரியர் விளக்கியுள்ளார். சமண தத்துவங்களை எடுத்துச் சொல்லும் ஒப்பற்ற நூல் இது என நூலாசிரியர் வலியுறுத்துகிறார்.

கொல்லாமை நெறியை மிகவும் வலியுறுத்தும் நூல் யசோதர காவியம் என்பதை நூலாசிரியர் சான்றுகளுடன் நிறுவி உள்ளார்.

மூன்று நூல்களின் வரலாற்றையும், நூலாசிரியர்களின் வரலாற்றையும்சுருக்கமான முறையில் குறிப்பிட்டுள்ளார். எளிய, இனிய நடை, இந்நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

-தமிழ்ப்பித்தன்

### இஸ்லாம்

ஆசிரியர்: கிருஷ்ண தத்தபட்
வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்,
காந்தி மியூஸியம்,
மதுரை-625 020.

விலை: ரூ.5 பக்கம்:89

காசி சர்வ சேவா சங்கப் பிரகாசனத்தாரின் வெளியீட்டைத் தழுவி, தமிழில் உருவாக்கப்பட்டுள்ள நூல் இது.

இஸ்லாம் சமயம், நபி நாயகம் முகம்மது, புனிதக் குர்ரான், முகம்மது சாகேபின் அருள் வாக்கு. தஸவ்வுஃப், சூபிகள் திருமொழி ஆகிய ஆறு முக்கிய அத்தியாயங்கள் - 49 உப தலைப்புகளின் கீழான கட்டுரை விளக்கங்களோடு - சிறுசிறு படங்களோடு இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

காந்தி இலக்கியச் சங்கத்தார் - 'உலகச் சமயங்களின் வரிசை'யில் உருவாக்கியுள்ள

## நூல் நயம்

இந்த நூல், இஸ்லாமியத்தின் தனித்தன்மைகளை விளக்குகிறது.

### பாலின் நிறம் வெண்மை

ஆசிரியர்: மன்னார்குடி விசுவநாதன்
வெளியீடு: ஆர். விசுவநாதன்
9.ஏ. 13-வது தெரு
புதுப்பாலம்
மன்னார்குடி-614 001
தஞ்சை மாவட்டம்

விலை ரூ. 15.00 பக்கம்: 160

வறுமை, பொருளாதாரம்,ஏமாற்றம், ஏழ்மை என்ற பல கருக்களை ஒவ்வொரு கதையும் கூறி அவற்றிற்கு முடிவும் சொல்கின்றன.

'ருசி'யில் வரும் சரவணன், 'கண்ணோட்டம்' சுந்தரம் போன்ற பலரும் நாம் தினம் சந்திக்கும் மனிதர்களே. கதைகளில் அதீத கற்பனைகள் இல்லை. எளிமையான, அன்றாட நிகழ்ச்சிகளே. பொழுதுபோக்கப் பயன்படும் கதைத் தொகுப்பு.

-ந. குமாரசாமி.

### கல்விச் சிந்தனைகள்

ஆசிரியர்: ஆச்சாரியவினோபாபாவே
வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்
மதுரை-625020

விலை: ரூ.20 பக்கம்:33

கல்வி கரையில என்பார்கள். அந்தக் கல்வி எந்த முறையில் எந்த வகையில் அமைய வேண்டும்; புதிய கல்வி முறையின் பயன், ஆசிரியர், மாணவியர் கடமை என்பன போன்ற வினாக்களுக்கு விடையாக, வினோபாபாவேவழங்கியுள்ள கருத்துரைகள் நம் சிந்தனைக்கு விருந்தாக உள்ளன.

கல்வியின் மும்முகத் திட்டம் பற்றிய விளக்கமும், குணங்களின் மலர்ச்சியே கல்வி என்பதற்கான காரணங்களும், புதிய கல்வியின் பொறுப்புபற்றியும் வினோபாபாவே அவர்கள் தெளிவுபடுத்துகிறார் இந்நூலில்.

கல்வியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இந்நூலைப் படிப்பதன் மூலம், கல்வி மேம்படவும், பயனுள்ள வகையில் அது பரவவும் வழி ஏற்படும் என நம்பலாம்.

### தேர்வுகளில் வெற்றி பெற தெளிவான யோசனைகள்

ஆசிரியர்: வாசன்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் அவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600098.

விலை: ரூ. 7 பக்கம்:83

தேர்வு என்றாலே பயப்படும் மாணவர்களைப் பார்க்கிறோம். அவர்களுக்கெல்லாம் 'அஞ்சாதே!' என்று அறிவுரைகள் கூறுகிறது இந்நூல்.

தேர்வுகளுக்காகப் படிப்பது எப்படி என்று கூறி, தேர்வுக் காலத்தில் உடல் நலம் பேணும் வழிமுறையையும் விளக்குகிறார் ஆசிரியர். அது மட்டுமல்ல, தேர்வு எழுதும் நுட்பங்களையும் எடுத்துச் சொல்லி, தேர்வில் வெற்றி பெற்ற பலரின்பேட்டியையும்நூலில் சேர்த்திருக்கிறார்.

—பி.வி.ஜி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி நவீன பட்டு வகைகள்



100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள், இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DPR/1766/MS68/HTA


வட ஆர்காடு-அம்பேத்கார்
தென் ஆர்காடு